# திருவள்ளுவர்

## கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,

(மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
சூலப்புரம், எழுமலை - 625 535,
மதுரை மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா

&

## முத்தரசி — கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,

மதுரை - 625016, தமிழ்நாடு, இந்தியா


# தமிழ்ச் சமூகச் சிந்தனைவெளியில் சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

தொகுதி 2


*இதழ்ப் பதிப்பாசிரியர்*
**முனைவர் சு.தங்கமாரி,**
*முதன்மை ஆசிரியர், முத்தரசி ஆய்விதழ்,*
*மதுரை, தமிழ்நாடு இந்தியா*

பதிப்பாசிரியர்
**முனைவர் ச.இந்திராமேரி,**
முதுகலைத் தமிழ்த் துறைத்தலைவர்,
திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சூலப்புரம்

*பதிப்புக்குழு*
திருமதி A. பாண்டிச்செல்வி,
முனைவர் A. ஜீவா,
செல்வி R. சண்முகப்பிரியா,
திருமதி N. சந்திராதேவி,
முனைவர் M. கோமதி

**திருவள்ளுவர்**
**கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,**
**(மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவுபெற்றது)**
**சூலப்புரம், எழுமலை - 625 535, மதுரை மாவட்டம்,**
**தமிழ்நாடு, இந்தியா**
**&**
**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,**
**மதுரை - 625016, தமிழ்நாடு, இந்தியா**

**SPECIAL EDITION : I** **VOLUME - II**

# தமிழ்ச் சமூகச் சிந்தனைவெளியில்
# சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

**இதழ்ப் பதிப்பாசிரியர்**
**முனைவர் சு.தங்கமாரி,**
முதன்மை ஆசிரியர்,
முத்தரசி ஆய்விதழ்,
மதுரை, தமிழ்நாடு,
இந்தியா.

**பதிப்பாசிரியர்**
**முனைவர் ச. இந்திராமேரி,**
முதுகலைத் தமிழ்த் துறைத்தலைவர்,
திருவள்ளுவர் கலைமற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி, சூலப்புரம்.

**பதிப்புக்குழு**

திருமதி A.பாண்டிச்செல்வி,
முனைவர் A.ஜீவா,
செல்வி R. சண்முகப்பிரியா,
திருமதி N. சந்திராதேவி,
முனைவர் M.கோமதி,

**MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal**
**E-ISSN : 2584-1238**

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **தமிழ்ச் சமூகச் சிந்தனைவெளியில் சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம் (பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)** |
| முதற்பதிப்பு | : | மார்ச்சு, 2024 |
| பதிப்புரிமை & வெளியீடு | : | தங்கமாரி சுடலை,<br>12/6, மேலப்பொன்னகரம்<br>8வது தெரு,<br>4வது குறுக்கு, ஆரப்பாளையம்,<br>மதுரை - 625016. |
| மின்னஞ்சல் முகவரி | : | laks@muththarasi.org |
| வலைதளம் | : | https://muththarasi.org/ |
| E.ISSN No | : | 2584 – 1238 |
| புத்தக அளவு | : | A4 |
| பக்கங்கள் | : | 246 |
| விலை | : | ₹ 500/- |
| அச்சிட்டோர் | : | லேசர் பாயிண்ட்,<br>வசந்த நகர் முதன்மைச் சாலை,<br>மதுரை – 625 003 |

# பதிப்புரை

“இன்னா தம்ம இவ்வுலகம் இனிய காண்ப; இதன் இயல் புணர்ந்தோரே” - என்ற பக்குடுக்கை நன்கணியார் வரிகளுக்கு ஏற்ப இவ்வுலகின் இயல்பினை உணரத் தான் ஆசை. ஆனால் இன்னாது யாருக்கு? என்ற கேள்வி இயல்பாக எழும் அல்லவா? சுதந்திரம் வேண்டும் எனக் கேட்போர் பலர்; எது சுதந்திரம்? என்ற இணைக்கேள்வியும் இயல்பாக உடன் வருகின்றது. எழுத்தாளர் ஜெயகாந்தன், “அவரவர் நியாயம் அவரவருக்கு” என்று சொல்வது போல, பெண் சுதந்திரத்தைப் பேசினால், ஆணாதிக்க மனப்பான்மையினர் சமூகக் கட்டுப்பாடுகளைக் காரணமாக்கி, சுதந்திரத்தை மறுதலிப்பர். இங்கே ஆணாதிக்கம் என்று சொல்வது கூட ஒருவித எதிர் வன்முறை தானே! இப்படிச் சமூகத்தின் ஒவ்வொரு கூறிலும் எதிரெதிர் கருத்தாக்கங்களை அடிக்கிக் கொண்டே போகலாம்.

‘சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவம்’ என்ற கருத்தியல் மையமிட்டு மிக நீண்ட தமிழ்ச் சிந்தனைவெளியில் எத்தனை வகையான கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன என்பதைப் பதிவு செய்யும் நோக்குடனே, “தமிழ்ச்சமூகச் சிந்தனைவெளியில் சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவம்” என்ற தலைப்பினைத் தெரிவு செய்து ஆசிரியர்குழு. இந்தத் தலைப்பினை மையமிட்டுக் கருத்தரங்கம் நடத்தலாம் என்று சில கல்லூரிகளை அணுகிய பொழுது, அவர்கள் நடத்த முன்வரவில்லை. மாறாக, ‘ஒருமுனை நோக்கிய தலைப்பாக உள்ளதே!’ - ‘இந்தத் தலைப்பில் கருத்தரங்கம் நடத்தினால் கட்டுரை எண்ணிக்கை வராது’ - ‘பொதுத்தலைப்பில் நடத்தலாம் . . . அப்படி என்றால் தான் ஏதாவது ஒரு தலைப்பில் கட்டுரை வாங்கலாம். ஏனென்றால் இப்பொழுது வாசிப்புக் குறைந்துவிட்டது’. இப்படி இப்படியான பதில்களே வந்தன.

ஒரு கட்டத்தில் தலைப்பைத் தேர்ந்தெடுத்து வைத்தது கூட வன்முறையோ! என்று கூட நினைத்துவிட்டோம். அந்த வேளையில் பெரும் மதிப்பிற்குரிய திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் ச. இந்திராமேரி அவர்களிடம் பேசிய பொழுது கட்டாயம் நடத்துவோம் என்றார். அப்படித்தான் தொடங்கியது இந்தக் கருத்தரங்கப் பணி.

எத்தனைக் கட்டுரைகள் வந்தாலும் சரி என்று தொடங்கிய இக்கருத்தரங்கிற்கு இப்பொழுது 88 கட்டுரைகள் வந்துள்ளன. இந்தத் தமிழ்ச் சமுகத்தின் சிந்தனைவெளியில் முளைத்த இக்கட்டுரையாளர்களுக்கு நன்றிகள் பல.

உங்கள் கையிலே, தவழும் இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கின் ஆய்வுக்கோவை நன்கு மலரக் காரணமான, “முத்தரசி-கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழாய்விதழ்” ஆசிரியர் குழு அனைவருக்கும் நன்றி.

கட்டுரைகளை வாங்கி நன்முறையில் கருத்தரங்கம் நடத்த உதவிய திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் நிர்வாகிகள் முதல்வர் தமிழ்த்துறைத்தலைவர் மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும் நன்றி.

மேலும், இந்தக் கோவையை அழகாக வடிவமைத்துத் தந்த மதுரை லேசர் பாயிண்ட் அச்சகத்தார்களுக்கும் நன்றி.

# THIRUVALLUVAR
## ARTS & SCIENCE COLLEGE FOR WOMEN
Soolapuram-Elumalai-625 535, Madurai Dt,

Govt. of Tamilnadu GO.No:178 Dept.of Higher Edn. (EI) dated : 30-08-2012
MKU Affiliation Order NO: CDC-3/Further Affin./2012-13, dated : 30-11-2002

**Dr. A.Selvakumari** M.A., M.Ed., M.Phil., Ph.D.,
Principal

Date : 16.02.2024

## வாழ்த்துரை

இலக்கியமும், இலக்கணமும் கொண்டு காலத்தை வென்று பல்வேறு நூற்றாண்டுகள் கடந்து இன்றும் இனிமை குறையாமல் கற்போர் நெஞ்சத்தை நெகிழச் செய்யும் அருந்தமிழ் வளர்ச்சிக்கு தன்னிகரற்ற பணியாற்றி வருகின்ற தமிழ்த்துறைக்கு எனது வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறேன்.

உலக மொழிகளுள் முதன்மையான மொழி தமிழ்மொழி அதுபோல் எமது கல்லூரியில் முதன்மையாகவும், பிறதுறைகளுக்கு முன்மாதிரியாகவும் செயல்படுகின்ற தமிழ்த்துறையானது தற்கால மனித சமூகத்திற்கு மிகவும் தேவையான இன்றியமையாத சிந்தனைகளை மையமாகக் கொண்டு தமிழ்ச்சமூகச் சிந்தனை வெளியில் சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம் என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்துவதை பெரிதும் வரவேற்கிறேன்.

ஒரு ஜனநாயக சமூகத்தில் மனிதர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவும் வாழ்வியலை நிலைநாட்டிக் கொள்வதற்காகவும் பின்பற்றப்படும் கருவிகளாகவே சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் காணப்படுகின்றன. தற்கால சமூகங்களில் ஒரு தனி மனிதன் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு சுதந்திரம் எவ்வளவு முக்கியமானதாக காணப்படுகின்றதோ. அதே அளவுக்கு அச்சமூகத்தில் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் பேணுவது ஒவ்வொரு தனிமனிதனுடைய கடமையாகும்.

இன்றைய மனிதன் பொருளாதார வேட்கை கொண்டு வாழ்வியல் விழுமியங்களையும், மனித மதிப்பீடுகளையும் தொலைத்து நிற்கின்ற காலகட்டத்தில், "வாழ்க்கைக்கு பொருள் வேண்டும், வாழுகின்ற வாழ்க்கைக்கும் பொருள் வேண்டும்" என்ற உயரிய நோக்கில் தமிழ்ச்சமூகச் சிந்தனை வெளியில் சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம் என்னும் தலைப்பினை மையப்பொருளாகக் கொண்டு நடைபெறும் இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறக்க வாழ்த்துகிறேன்.

**"வாழ்க தமிழ்! வளர்க தங்களின் தமிழ்ப்பணி!"**

**அன்புடன்,**

அ. செல்வகுமாரி 16/2/24

முதல்வர்

# இதழ் ஆசிரியர்குழு


| | | |
|---|---|---|
| முனைவர் சு.தங்கமாரி,<br>முதன்மை ஆசிரியர்,<br>முத்தரசி ஆய்விதழ்,<br>மதுரை, தமிழ்நாடு, இந்தியா.<br>மின்னஞ்சல் : laks@muththarasi.org<br>கைப்பேசி: (+91)98941 02130 | **Dr.S.THANGAMARI,**<br>Editor-in-Chief,<br>Muththarasi journal,<br>Madurai, tamilnadu, india.<br>E-Mail: laks@muththarasi.org<br>Mobile : (+91)98941 02130 |  |
| முனைவர் கா.ஸ்ரீதர்,<br>தலைவர் & உதவிப்பேராசிரியர்,<br>தமிழ்த்துறை(சுயநிதி),<br>வி.இ. நா. செந்திக்குமார நாடார் கல்லூரி,<br>விருதுநகர்,தமிழ்நாடு, இந்தியா.<br>மின்னஞ்சல் : *sridhar@vhnsnc.edu.in*<br>கைப்பேசி: *(+91) 94434 49595* | **Dr K. SRIDHAR,**<br>Head & Asst. Professor of Tamil (SF),<br>V.H.N.Senthikumara Nadar college,<br>Virudhunagar, Tamil Nadu, India.<br>E-Mail: sridhar@vhnsnc.edu.in<br>Mobile : (+91) 94434 49595 |  |
| **ADVISORY EDITORIAL BOARD** | | |
| முனைவர் பாரதி சங்கர ராஜுலு,<br>விரிவுரையாளர், தமிழ் & தெலுங்கு,<br>கலிபோர்னியா பல்கலைக்கழகம்,<br>பெர்கிலி, அமெரிக்கா<br>மின்னஞ்சல் : *bharathy57@gmail.com*<br>கைப்பேசி : *650-430-2473* | **Dr.Bharathy Sankara Rajulu**<br>Lecturer – Tamil & Telugu<br>University of California, Berkeley. USA.<br>E.Mail : bharathy57@gmail.com<br>Mobile : 650-430-2473 |  |
| முனைவர் சீதாலட்சுமி,<br>இணைப்பேராசிரியர், ஆசிய மொழிகள் மற்றும் பண்பாடுகள் தேசியக் கல்விக்கழகம்,<br>நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்,<br>*1,*நன்யாங் வாக், சிங்கப்பூர்*.637616*<br>மின்னஞ்சல் : *seetha.lakshmi@nie.edu.sg*<br>கைப்பேசி : *+65 9451 0735* | **Dr.SEETHA LAKSHMI,**<br>Associate Professor,<br>Asian languages and cultures,<br>National institute of education,<br>Nanyang technological university, 1,<br>nanyang walk, Singapore.637616<br>E-Mail: seetha.lakshmi@nie.edu.sg |  |
| பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன்,<br>தலைவர்,<br>தமிழ்த் துறை,<br>பேராதனைப் பல்கலைக்கழகம்,<br>இலங்கை.<br>கைப்பேசி : *+94 77 305 3241*<br>மின்னஞ்சல் : *spirashanthan01@gmail.com* | **Prof. Sri.PIRASAANTHAN,**<br>HOD, Dept.of. Tamil,<br>University of Peradeniya<br>Peradeniya. 20400<br>Sri Lanka<br>Cell : +94 77 305 3241<br>E.Mail : spirashanthan01@gmail.com |  |
| முனைவர் பா.பொன்னி,<br>இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,<br>முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,<br>தி ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),<br>சிவகாசி,தமிழ்நாடு, இந்தியா.<br>மின்னஞ்சல் : *ponni-tam@ sfrcollege.edu.in*<br>கைப்பேசி : *(+91)9787800804* | **Dr.B.PONNI**<br>Associate professor and Head<br>PG and Research Department of Tamil<br>The Standard Fireworks Rajaratnam<br>College for women (Autonomous)<br>Sivakasi, Tamilnadu, India.<br>E.Mail : ponni-tam@sfrcollege.edu.in<br>Mobile : (+91)9787800804 |  |
| முனைவர் ரா. ராஜராஜன்<br>உதவிப்பேராசிரியர்<br>தமிழாய்வுத்துறை<br>பிஷப் ஹீபர் கல்லூரி<br>திருச்சிராப்பள்ளி – *620 017* தமிழ்நாடு, இந்தியா.<br>மின்னஞ்சல் – *thanivairams@gmail.com*<br>கைப்பேசி : *(+91) 94427 40363* | **Dr. R. RAJARAJAN**<br>Assistant Professor in Tamil<br>Bishop Heber College<br>Tiruchirappalli – 620 017, Tamilnadu, India.<br>E.mail : thanivairams@gmail.com<br>Mobile : (+91) 94427 40363 |  |
| முனைவர் மு.செந்தில்குமார்,<br>உதவிப்பேராசிரியர்,<br>செந்தமிழ்க் கல்லூரி,<br>மதுரை-*625001*, தமிழ்நாடு,இந்தியா.<br>மின்னஞ்சல் : *mpputhiyavan@gmail.com*<br>கைப்பேசி: *+91 99420 80277* | **Dr.M.SENTHILKUMAR,**<br>Asst. Professor,<br>Senthamil College,<br>Madurai- 625001, Tamilnadu, India.<br>மின்னஞ்சல் : mpputhiyavan@gmail.com<br>கைபேசி: *+91 99420 80277* |  |

| | |
|---|---|
| சந்திரகௌரி சிவபாலன்(கௌசி),<br>வயோதிபர் பராமரிப்பு<br>ஃபெல்ட்ர்ஸ்ர் – 56,<br>சொலிங்கன்,, ஜெர்மனி.<br>மின்னஞ்சல்: c.gowry@yahoo.de<br>கைப்பேசி : +49 1520 9419269 | **CHANDRA KOWRI SIVABALAN(KOWSI),**<br>Alttags Betreuung<br>Felderstr – 56<br>Solingen Germany<br>E.Mail : c.gowry@yahoo.de<br>Mobile : +49 1520 9419269<br> |
| **REVIEW MEMBERS** | |
| முனைவர் செ.ஞானேஸ்வரன்<br>உதவிப் பேராசிரியர்<br>முதுகலைத்தமிழ்த்துறை<br>அரசுக் கல்லூரி<br>மூணாறு – 685612 கேரளா மாநிலம், இந்தியா.<br>மின்னஞ்சல் : gnaneswaran11@gmail.com<br>கைப்பேசி:9943814293 | **Dr.GNANESWARAN.S**<br>Assistant Professor PG Department of Tamil<br>Government College<br>Munnar-685612<br>Kerala State, India.<br>E.mail : gnaneswaran11@gmail.com<br>Mobile-9943814293<br> |
| | |
| முனைவர் ஜ. ஜான்சிராணி,<br>ஆய்வு வளமையர்,<br>உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை,<br>மருத்துவர் தங்கராசு சாலை,<br>சட்டக் கல்லூரி அருகில்,<br>மதுரை – 625020 தமிழ்நாடு, இந்தியா.<br>மின்னஞ்சல் : jansiraniwts1981@gmail.com<br>கைப்பேசி: +91 81100 16911 | **Dr. J. JANSIRANI,**<br>Resource Person,<br>World Tamil Sangam Madurai,<br>Dr. Thangaraj Road,<br>Near by Law College,<br>Madurai – 625020, Tamilnadu, India<br>E.Mail : jansiraniwts1981@gmail.com<br>Mobile : +91 81100 16911<br> |
| **CONSULTANT** | |
| திருமதி ஆ.இலட்சுமி,<br>இதழ் ஆலோசகர்,<br>முத்தரசி ஆய்விதழ்,<br>மதுரை, தமிழ்நாடு, இந்தியா.<br>மின்னஞ்சல் : gandhilakshmi361@gmail.com<br>கைப்பேசி: (+91)9789186545 | **Mrs. A.LAKSHMI,**<br>Consultant,<br>Muththarasi Journal,<br>Madurai, Tamilnadu, India.<br>E-mail: gandhilakshmi361@gmail.com<br>Mobile : (+91)9789186545<br> |

# பொருளடக்கம்


| எண் | கட்டுரையாளர் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 01 | பெருங்கதையின் களவு நெறி<br>முனைவர் அ.செல்வகுமாரி | 1 |
| 02 | புறநானூற்றில் பகுத்தறிவுநோக்கில் சமத்துவம்<br>முனைவர் ச.இந்திராமேரி | 5 |
| 03 | தொழில் நுட்ப வளர்ச்சியும், ஆதிக்க மனப்பான்மையின் கட்டுப்பாடுகளும்...<br>வா. விஸ்வப்பிரியா | 9 |
| 04 | பகுத்தறிவுவாதமும் பாரதியின் கவிதைகளும்<br>முனைவர் சு.மேகலா | 13 |
| 05 | கம்பனில் மும்மைக் கொள்கை<br>முனைவர் சு.வினோத் | 19 |
| 06 | சாதிய அடக்கு முறைகளும் அதற்கான தீர்வுகளும் - 'கருக்கு' புதினத்தை முன்வைத்து<br>முனைவர் செ.சாந்தி | 25 |
| 07 | மீளுருவாக்கம் செய்யப்பட்ட கூத்துக்களில் மேற்கிளம்பும் பால்நிலைச் சமத்துவச் சிந்தனைகள் : ஓர் ஆய்வு<br>து.கௌரீஸ்வரன் | 32 |
| 08 | தொகை இலக்கியங்களில் இடம்பெறும் சமூகச்சிந்தனைகள்<br>முனைவர் கு.சுபா | 37 |
| 09 | பனிமலர் நாவலின் பெண்களின் நிலை<br>முனைவர் ஸ். சில்வியா ஜுலியட், | 42 |
| 10 | தமிழரின்  நீர் மேலாண்மை<br>க.வினோதா | 46 |
| 11 | கீதாரி நாவல் மொழியும் வாழ்வியல் சிந்தனைகள்<br>திருமதி பா.கார்த்திகா | 51 |
| 12 | மதுரைக்காஞ்சி காட்டும் பாலினச் சமத்துவமின்மை<br>பேரா.ஜி.மாரிச்செல்வம் | 55 |
| 13 | சுதந்திர வேள்வியில் பெண் ஆளுமை - பத்மாசனி<br>முனைவர் M.ஜீனதாஸ் | 60 |
| 14 | ஆண்டாள் பாடல்களும் பாலினச் சமத்துவ சமரச முயற்சியும்<br>முனைவர் ஜீ.ரவி | 64 |

| | | |
|---|---|---|
| 15 | காஞ்சிவனம் புரவிஎடுப்பு திருவிழா:<br>ம.ரஞ்சிதா | 69 |
| 16 | சுதந்திரப் போராட்டத் தியாகி பி.எம்.இராமுவின் வாழ்க்கை வரலாறு<br>முனைவர் ந.கவிதா | 74 |
| 17 | போர் இல்லாப் புதுஉலகம் (சங்க இலக்கியத்தை முன்வைத்து)<br>முனைவர். மா.கோமதி | 77 |
| 18 | பெண் சுதந்திரச் சிந்தனைகள்<br>மு.மாரியப்பன் | 81 |
| 19 | ஐங்குறுநூறு: மருதப் பாடல்களில் அம்பலும் அலரும்<br>முனைவர் மு.ஜெகதீசன் | 84 |
| 20 | நாட்டுப்புற இலக்கியங்களில் தொல்காப்பியரின் நோக்கு<br>முனைவர்.பெ.ஹென்றி ஜூலியஸ் | 91 |
| 21 | மலையாளச் சிறுகதையில் உளவியல் போராட்டம்<br>முனைவர் ச.கவிதா த.தேவகி | 95 |
| 22 | அகநானூற்றில் தோழியின் சுதந்திரம்<br>ஜெ.நிவேதா | 102 |
| 23 | கொடுமுடி ஸ்ரீ மகுடேஸ்வரர் கோயில் கட்டிடக்கலை<br>எம்.மாரீஸ்வரன், எம்.அழகுராஜா | 106 |
| 24 | இராணி மங்கம்மாளின் ஆட்சியும் அவரின் சமூக தொண்டும் ஒரு ஆய்வு<br>என். பொன் முத்து, எஸ். தனுஷ் குமார் | 113 |
| 25 | கொங்கு நாட்டு நிலவியல் மக்களின் பண்பாடும் ஓர் ஆய்வு<br>டி.விஷ்ணு, எஸ்.மாதவன் | 118 |
| 26 | வீர மங்கை வேலுநாச்சியாரின் சுதந்திரப்போராட்ட வரலாறு ஒரு ஆய்வு<br>திருமதி.பெ.நாகலட்சுமி | 124 |
| 27 | இந்திய விடுதலை போராட்ட தியாகி கடலூர்<br>மு அஞ்சலையம்மாள், முனைவர்.வை.கதிரவன் | 130 |
| 28 | சோழர் கால சமூகம் ஒரு வரலாற்றுப் பார்வை<br>ஜி .மணிகண்டன், பி.பாஞ்சாலிராஜா | 136 |
| 29 | கொங்குநாட்டு கோவில் கலை வரலாறு<br>ஜே .சின்ன கருப்பன், ஜே .உபையத்துல்லா | 142 |
| 30 | புறநானூறு காட்டும் தொழில்கள்<br>முனைவர். ப.சக்திவேல் | 149 |

| | | |
|---|---|---|
| 31 | கவிதைகள் பேசும் சமத்துவச் சிந்தனைகள்<br>முனைவர் கே.இரா.கமலாமுருகன் | 156 |
| 32 | பெண் சுதந்திரம் - உண்மையா?<br>முனைவர் பெ. சுவாதி | 163 |
| 33 | திருக்கோவிலூர் வீரட்டனேஸ்வரர் கோயில் - ஒரு ஆய்வு<br>மா.தமிழ் செல்வம் | 166 |
| 34 | சித்தர் இலக்கியங்களில் சமத்துவ, சகோதரத்துவச் சிந்தனைகள்.<br>முனைவர் த. மோகன்தாஸ் | 172 |
| 35 | "அறியப்படாத சுதந்திரப் போராட்ட ஆளுமையில் வாழும் கலைமாமணி - கிருட்டிணம்மாள் செகந்நாதன்"<br>திருமதி.மு.சண்முகவடிவு | 181 |
| 36 | புறநானூறு காட்டும் தேசிய ஒருமைப்பாடு<br>முனைவர் தி. மல்லிகா | 186 |
| 37 | 'முதுமை குறித்தும் முதியவர்கள் குறித்தும்' இஸ்லாம் இயம்பும் கருத்தியல்கள் - ஓர் பார்வை<br>முனைவர் கா.மைதீன் | 192 |
| 38 | இலக்கியங்களின் பெண்ணியச் சிந்தனைகள்<br>திருமதி மு. கற்பகச்செல்வி | 199 |
| 39 | பன்முக நோக்கில் பெண் சுதந்திரம்<br>ஊ.சந்தியா | 203 |
| 40 | அற இலக்கியங்களில் அரச சிந்தனைகள்<br>திருமதி ச.சதா, முனைவர் ச.தனலெட்சுமி | 207 |
| 41 | அறியப்படாத சுதந்திரப் போராட்ட ஆளுமைகள்<br>செல்வி செ.பிரியதர்ஷினி | 212 |
| 42 | தமிழ் இலக்கியங்களில் பெண் சுதந்திரச் சிந்தனைகள்<br>மு.வினிதா | 218 |
| 43 | நாவல்களின் வழி சமுதாயக் கட்டமைப்புச் சிந்தனைகள் .<br>பெ செல்வி | 223 |
| 44 | கூலித் தமிழ் காட்டும் சமூகம் நூல் முன்வைத்து தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல்<br>இரா. நந்தினி தேவி | 229 |
| 45 | **இலக்கியத்தில் நாட்டார் பாடல்களில் சமத்துவச் சிந்தனைகள்**<br>மா.பிரதீபா | 235 |
| 46 | சங்ககாலக் குடும்ப உறவுகளும் சமூக உறவுகளும்<br>சூ.வீரமணி | 241 |

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 1. பெருங்கதையின் களவு நெறி

**முனைவர் அ.செல்வகுமாரி,**
முதல்வர்,
திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
தூலபுரம், எழுமலை, மதுரை மாவட்டம்.
DOI 10.5281/zenodo.10726989.

**Abstract :**

The influence of subjective elements is also found in the later Puranic epics from ancient literary grammars onwards. In that way, this article explains about one of the content elements that can be found in the great story.

## முன்னுரை

பண்டைய இலக்கிய இலக்கணங்கள் தொடந்து பின்னைய புராண இதிகாசங்களிலும் அகப்பொருள் கூறுகளின் தாக்கம் காணப்படுகின்றன. அந்த வகையில் பெருங்கதையில் காணப்படக்கூடிய அகப்பொருள் கூறுகளுள் ஒன்றான களவு நெறி குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

## காமப்புணர்ச்சி

காமப்புணர்ச்சி என்பது ஊழ்கூட்ட தலைமகனும், தலைமகளும் நெஞ்சம் கலந்து ஒன்றுபடும் நிலை. இதைத் தொல்காப்பியனார்,

**"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப".(தொல். பொருள். 90 : 1-3)**

என்று கூறிகின்றார். இவ்வாறு பெருங்கதையிலும் கதைத் தலைவனாகிய உதயணனும், தலைவியாகிய பதுமாபதியும் ஒருவரை ஒருவர் கண்டு நெஞ்சம் கலந்து ஒன்றுபடுகின்றனர். ஊழின் காரணமாகவே இருவரும் கண்டு காதலுற்றனர் என்ற செய்தியை,

**"இசைத்த வனப்பினேயர் மகற்கும்**
**பசைந்த காதற் பதுமா பதிக்கும்**
**யாப்பறு பால்வகை நீப்புற வின்றி**
**பிறப்புவழிக் கேண்மையிற் சிறப்புவழி வந்த**
**காமப் பெருங்கடல் கண்ணுறக் கலங்கி**
**நிறைமதி யெல்லைத் துறையிகந் தூர்தர"(பெருங். 3.6 : 61-66)**

என்ற வரிகள் மூலம் அறியலாம். இங்கு பால்வகை என்பது ஊழ்வகை என்பதைக் குறிக்கின்றது. இவ்வாறு ஊழின் காரணமாக இருவரும் ஒன்றுபடுகின்றனர் என்று ஆசிரியர் இப்பாடல் வரிகளில் கூறுகின்றனர்.

இயற்கைப்புணர்சிகளில் தலைவனும், தலைவியும் ஒருவரை ஒருவர் கண்டு காட்சி எய்திய பிறகு இருவரும் தமக்குள் ஐயமுற்றுத் தெளிவர். இவ்வாறு பதுமாபதி உதயணனை கண்டு ஐயுறுகின்ற செய்தியானது காணப்படுகிறது.

**"கரும்புடைச் செல்வன் விரும்புபு தோன்றித்**
**தன்னலங் கதுமெனக் கருதிய தொன்றுகொல்**
**அந்தண வடிவொடு வந்திட் டோன்றி**
**மேவன நுகர்தற்கு மாயையி விழிதரும்**
**தேவ குமரன் கொல்லிவன் றெரியன்"** **(பெருங். 3.6 : 68-73)**

இவற்றில் காமவேள் என்னிறையளத்தற்கு இங்கனம் மானிட வடிவங் கொண்டு வந்தனனோ? அல்லது தேவகுமரன் ஒருவன் இங்குள்ள இன்பங்கள் நுகர எண்ணி மனிதனாய் இங்கனம் வந்தனனோ? என்று பதுமாபதி உதயணனைப் பார்த்து ஐயமுறுவதைக் காணலாம்.

இவ்வாறு இயற்கைப் புணர்ச்சியில் ஒருவர் ஒருவர் கண்டு காதலுற்ற செய்தியை,

**"வெஞ்சின விடலையொடு நெஞ்சுமா றாடி"** **(பெருங். 3.6 : 76)**

என்று பதுமாபதி கூறுவதன் மூலம் அறியலாம். பெருமகனாகிய உதயணன் நெஞ்சில் தானும் தன்னெஞ்சில் அவனுமாக மாறி இருவரும் ஒருவர் நெஞ்சில் ஒருவர் புகுந்து என்று கூறுகின்றாள்.

**இடந்தலைப்பாடு:**

நெஞ்சம் கலந்த இருவரும் காதலாகிய பின்பு முதலில் நாள் கண்ட இடத்திலேயே தொடர்நாளும் கண்டு கூடுவது இடந்தலைப்பாடு. பெருங்கதையில் உதயணனும் பதுமாபதியும் இடந்தலைப்படுவதாச் செய்திகள் காணப்படுகின்றன.

அவை,

**"தேனிமிர் படலைத் திருவமர் மார்பனைத்**
**தானினி தெதிர்ந்த தானத் தருகே**
**அன்று மவாவி நோக்கின னன்றியல்**
**இருவரு மியைந்து பருவரல் காட்டிப்**
**.............................................................**
**.............................................................**
**வந்தும் பெயர்ந்தும் மன்றைக் கொண்டும்**
**காலையும் பகலு மாலையும் யாமமும் "** **(பெருங். 8.8 : 37-44)**

என்பதில் முதல் நாள் கண்ட இடத்தில் ஒருவரை ஒருவர் காணுதலை விரும்பி ஒவ்வொரு நாளும் காலையும் சுடும்பகலும் மாலையும் யாமமும் என்னும் எல்லாப்பொழுதுகளிலும் சந்தித்தனர் என்று கூறுவதின் மூலம் இடந்தலைப்பாடு பற்றிய செய்தியைக் காணலாம்.

**பாங்கற் கூட்டம் :**

தலைமகன் தலைமகளைத் தன் பாங்கனின் உதவி கொண்டு கூடுவது பாங்கற்கூட்டம். பாங்கன் துணையை நாடும் தலைமகன் தன் காதலைப் பங்கனுக்கு உணர்த்தி அதனை நிறைவேற்றித் தருமாறு அவனை வேண்டுவான் (தொல். பொருள். 99 : 10). வேண்டிய நிலையில் பாங்கன் தலைமகனுக்குக் களவு ஒழுக்கத்தின் குற்றங்களை எடுத்துக்காட்ட (தொல். பொருள். 99:9). தலைவன் தலைமைகளின் இயல்பு, அவளிடத்துத் தான் கொண்ட காதல் திறம் ஆகியவற்றைக் காட்டிப் பாங்கனைத் தன் வேண்டுகோளுக்கு இசையுமாறு உடன்படுவான் (தொல். பொருள். 99 : 10) தலைவனுக்கு உதவும் பாங்கற்கூட்டம் பற்றிய செய்தி பெருங்கதையில் காணப்படுகின்றது .

**“இன்னுயிர்த் தோழர்க் கிசைத்தல் வேண்டி**

**..............................................................................**

**என்னுழை நிறீஇத் திண்ணிதிற் கலந்த**

**காம வேட்கைய டானெனக் கூற” (பெருங். 3.8 : 89-98)**

இவற்றில் உதயணன் பதுமாபதி மீது தான் கொண்ட காதலையும்,

**“காணலெ னாயிற் கலங்குமென் னுயிரென**

**...........................................................................................**

**இரப்போன் போல லினியோர்க் குறைகொள்” (பெருங். 3.10 : 27-29)**

என்பதில் பதுமாபதியின் மீது தான் கொண்ட காதல் திறமும் எடுத்துக்காட்டித் தோழர்களிடம் குறையிரந்து நிற்கின்றான் என்ற செய்தியைக் காணலாம். மேலும் இவ்வாறு குரையிரந்து நின்ற உதயணனை நீதிநூற் சான்றுகளோடு எடுத்துக்காட்டித் தோழர்கள் மறுக்கின்றனர். தோழர்களின் அறிவுரையைக் கேட்ட பின்னரும் பதுமாபதியின் மீது காதலுடையவனாய் உதயணன் விளங்குவதோடு தோழர்களை உடன்பட வைக்கின்றான் (பெருங். 3.10 : 51-53.) என்ற செய்தியும் காணப்படுகின்றது.

**பாங்கிற் கூட்டம்:**

தோழியின் உதவியால் தலைமகன் தலைமகளைப் பெற்று மகிழ்வது பாங்கியிற் கூட்டம். இக் கூட்டத்தில் தலைவியும் தோழியும் பயின்றிருந்த இடத்தில் வந்து ஊர், பேர், கெடுதி வினவி நிற்பான் தலைவன் (தொல். பொருள். 99 : 11).

பெருங்கதையில் உதயணன் பதுமாபதியைப் பற்றியும், பதுமாபதி உதயணனைப் பற்றியும் தோழியிடம் வினவுவதாகச் செய்திகள் காணப்படுகின்றன.

**“கூன்மட மகடனைக் கோமகன் குறுகி**
**யாவளிந் நங்கை யாதிவள் மெய்ப்பெயர்” (பெருங். 3.6 : 160-161)**

என்று பதுமாபதியின் தோழியாகிய அயிராதியிடம் உதயணன் வினவுகின்றான். இவ்வாறு பதுமாபதியும் உதயணனைப் பற்றித் தன் தோழியிடம் வினவுததாகச் செய்திகள் காணப்படுகின்றன. (பெருங். 3.8 : 67-69).

**“நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்**
**செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்”**

**(தொல். பொருள். 112 : 1-2)**

என்ற ஏழு வேறுபாடுகள் மூலம் தலைவியின் காதலைத் தோழி அறிந்துகொள்வாள். பெருங்கதையிலும் பதுமாபதி இவ்வேறுபாடுகளுடன் காணப்படுவதைக் கண்டு தோழி ஐயமுற்று வினவுவதாகச் செய்திகள் காணப்படுகின்றன. அவை,

**"நண்ணியேர் முன்னர்த் கண்ணியது மறைந்து**
**வண்ண முகிழு மலருந் தளிரும்**
**நண்ணி யீன்ற நமக்கெனக் கரையா**
**அரும்பெறற் றோழியு மகன்ற செவ்வியுள்" (பெருங். 3.9 : 82-85)**

என்பதாம். இவற்றில் பதுமாபதி தோழியர்களை விட்டுப் பிரிந்து வேறு இடத்திற்குச் சென்றும், பொலிவற்றும் காணப்படுகின்றாள். இவ்வேறுபாடுகளைக் கண்டு பதுமாபதின் தோழியாகிய யாப்பியாயினி பதுமாபதியிடம் வந்து அறியாதவள் போன்று ஐயுற்று வினவுவதாகவும் செய்திகள் கூறப்பட்டுள்ளன (பெருங். 3.9 பக்-116).

தோழியருள் யாப்பியாயினி என்னும் தோழியே பதுமாபதியின் காதலுக்கும் உதயணனுடன் கூடி மகிழ்வதற்கும் பெரிதும் துணைபுரிபவளாகக் காணப்படுகின்றாள்.

**முடிவுரை:**

மேற்கண்ட செய்திகளின் வழி சங்க இலக்கியங்கள் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரை பழந்தமிழரின் அக வாழ்க்கை மரபுகள் குறித்த செய்திகள் காணப்படுவதை அறிய முடிகிறது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 2. புறநானூற்றில் பகுத்தறிவுநோக்கில் சமத்துவம்

**முனைவர் ச.இந்திரமேரி,**
உதவிப்பேராசியர், தமிழ்த்துறை,
திருவள்ளுவர் கலை மற்றும்மகளிர் அறிவியல் கல்லூரி, சூலப்புரம்.
மதுரை மாவட்டம், தமிழ்நாடு.

DOI 10.5281/zenodo.10723908

**Abstract :**

Rationalism is a philosophy of self-awareness, a revivalist struggle for elimination of differences between people, and rationalism. On the basis of this term, while examining the Sangha literature parts, the feelings, characteristics, and dignity of the Tamil people are perceptible.The reason spoken by Sangha literature is to prepare man for an egalitarian life. Rational thoughts can be found in Sangha literature in songs that are not related to God and are not related to nature. This article highlights the fact that such rational thoughts lead a person to an egalitarian lifestyle.

**Key Words:** Sangam Literature – Ancient Tamil – puranaanooru

## முன்னுரை

பகுத்தறிவு வாதம் என்பது சுயஅறிவு சார்ந்து இயங்குவது, மக்களுக்குள் ஏற்படும் வேறுபாடுகள் களையவேண்டும் என்றநோக்கில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய கொள்கை போரட்டம் மற்றும் செயல் தத்துவம் பகுத்தறிவுவாதம் ஆகும். இவ்வாதத்தின் அடிப்படையில் சங்க இலக்கியப் பகுதிகளை ஆராய்கின்ற போது தமிழரின் தன்மான உணர்வுகள், பண்புகள், மாண்புகள் வழியாக உணரத்தக்கனவாக உள்ளன.

சங்க இலக்கியங்கள் பேசும் பகுத்தறிவு மனிதனைச் சமத்துவமான வாழ்வுக்குப் பக்குவபடுத்துவதாக அமைகின்றது. சங்க இலக்கியங்களில் கடவுள் சாராத, அந்தணர் இயல்பு சாராத பாடல்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள் காணமுடிகின்றது. ஒருமனிதனை இத்தகைய பகுத்தறிவுச் சிந்தனைகள் தான் சமத்துவமான வாழ்க்கைமுறைக்கு உட்படுத்துகின்றது, என்பதனை இக்கட்டுரை புறநானூறு வழி எடுத்துரைப்பதாக அமைகின்றது.

## வேறுபாடற்றசமத்துவசமுதாயம்

மக்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடு கிடையாது அனைவருமே ஓரே சமநிலையினர், சாதியால், செல்வத்தால், அதிகாரத்தால் மேம்பட்டவர்கள் எவரும் இல்லை என்ற அடிப்படைக் கருத்து பெரியார் உணர்த்திய பகுத்தறிவு கருத்தாகும். இக்கருத்தின் முன்னோடி இலக்கியமாகச் சங்க இலக்கியம் திகழ்கின்றது.

அந்தணர், அரசர், அனவர், இடையர், இயவர், உப்புவணிகள், உழவர், எய்ற்றியர், கடம்பர், கடைசியர், கம்மியர், களமர், கிணைஞர், கிணைமகள், குறவர், குறத்தியர், குறும்பர், கூத்தர், கொல்லர், கோசர், தச்சர், தடியர், தேதிப்பாகன், நுளையர், பரதலர், பறையர், பாடினி, பாணர், பாணிச்சி, புலையர், பொதுவிலைமகளிர், பொருநர், கடையர், மழவர், மறத்தியர், மறவர், யவனார், யாழ்ப்புலவர், வடவடுகர், வணிகர், வலைஞர், விலைப்பெண்டிர் வேடர், போன்றபலதொழில் பிரிவினர் சங்ககாலத்தில் இருந்ததாக உ.வே. சாமிநாதய்யர்

குறிப்படுகின்றார். இருப்பினும் இத்தொழில் பிரிவினர்களையும் சமத்தன்மை உடையவராகக் கருதும் எண்ணம் இருந்தமைக்கான சான்றுப் பாடல் சங்கப்பாடல்களில் இருந்துள்ளன.

**"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;**
**தீதும் நன்றும் பிறர்தரவாரா;**
**நோதலும் தணிதலும் அலற்றோரன்ன;**
**சாதலும் புதுவதன்றே; வாழ்தல்**
**முறைவழிப் படூஉம் என்பதுதிறவோர்**
**குறட்சியில் தெளிந்ததன்; ஆகலின் மாட்சியிற்**
**பெரியோரைவியத்தலும் இலமே;**
**சிறியோரை இகழ்தம் அதனினும் இலமே" (புறம்** 192)

என்ற பாடலில் பெரியவர் சிறியவர் என்றுஎவரையும் ஏற்றுதலும், தாழ்த்துதலும் இல்லை என்ற சமத்துவம் குறிக்கப் பெற்றுள்ளது.

**"தென் கடல் வளாகம் பொதுமை இன்றி**
**வெண்குடைநிழற்றியஒருமைபோர்க்கும்,**
**நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்**
**கடுமாப் பார்க்கும் கல்லாஒருவற்கும்,**
**உண்பதுநாழிஉடுப்பவை இரண்டே;**
**பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே;**
**செல்வத்துப் பயனேஈதல்,**
**துய்ப்பேம் என்னேதப்புறபலவே. (புறம்** 189)

அரசன் என்றாலும் வேடன் என்றாலும் இருவருக்கும் உண்பது நாழி அளவு உணவு, உடுப்பவை - இரண்டு பகுதி ஆடைகள். மற்றவை எல்லாம் ஒன்றே என்ற சமத்துவ நிலைப்பாட்டினை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

சங்க அகப்பாடல்களில் தலைவனும் தலைவியும் காதல் கொள்ளும் நிலையில் எவ்விதமான சாதிப் பாகுப்பாடும் இடையீடு செய்யவில்லை, தலைவனோ, தலைவியோ, தோழியோ மற்ற எப்பாத்திரமோ சாதிஅடிப்படையில் காதல் கொள்ள வேண்டும் என்பதனை எடுத்துரைக்கவில்லை. களவு வழி வாராக்கற்பிலும் இது பார்க்கப்படவில்லை என்பதை எண்ணும் நிலையில் சங்கச் சமுதாயம் சாதி வேறுபாடற்ற சமத்துவ சமுதாயமாக இருந்தது என்பதனை அறிய முடிகின்றது.

**"யாயும் ருயும் யாராகியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழிஅறிவம்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**என்புடைநெஞ்சந் தாங்கலந் தனவே (குறுதொகை 40)**

இவ்வகையில் சமத்துவசமுதாயத்தின் அடிப்படைக் கூறுக் சங்கச் சமுதாயத்தில் இருந்துள்ளன என்பதற்குக் குறுந்தொகையும் சான்றாக அமைகின்றது.

**நல்லாட்சி நடத்த பகுத்தறிவு**

நாட்டை ஆளுகின்ற அரசன் மக்களைத் துன்புறுத்தாமல் வரிவசூல் செய்யவேண்டும். செங்கோல் வழுவாமல் ஆட்சிசெய்தான் மன்னன் என்றபெயர் சிறக்கவேண்டும் என்பதனை,

**"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி**

**வெண்குடைநிழற்றியஒருமையோர்க்கும்,**

**நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சாள்**

**கடுமாப் பார்க்கும் கல்லாஒருவற்கும்,**

**உண்பதுநாழிஉடுப்பவை இரண்டே,**

**பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே:** **(புறம்** 189)

அளவுடன் பொருள், சொத்துக்களினைவைத்துக் கொண்டுபோதும் என்றமனப்பான்மையுடன் இருக்கவேண்டும். பிறருக்கு உதவிசெய்தல் வேண்டும். செல்வத்தின் பயன் என்பதுகொடுத்தல் எனப்படும். யாராக இருந்தாலும் உணவும் உடையும் எல்லோருக்கும் ஒன்றுதான். எனவே"உதவிசெய்துவாழவேண்டும்"எனஉணர்த்துகிறது. இப்பாடல் பொதுஉடமைக் கொள்கையின் தத்துவம் என்பது எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கவேண்டும். மக்கள் அனைவரும் சமமானவர்கள் என்ற தத்துவார்த்த அடிப்படையினை வைத்துத்தான் பொதுஉடமைக் கொள்கை தொடங்கப்பட்டது.

**தன்மானம்**

மனிதன் யாராக இருந்தாலும் தமக்கு என்று தன்மானம் இருப்பது வழக்கமான ஒன்றுதான், உளவியல் அடிப்படையில் மனிதனை அவனது நிலையிலிருந்து தாழ்த்துகின்ற பொழுது ஏற்படுவதாகும். தன்மானமானது தம்மை இழிவுபடுத்துகின்ற போதோ, தமக்கான ஒன்றினைப் பிறர் எடுத்துக் கொள்ள முயற்சித்தாலோ, தமக்கு உரிய மரியாதைத் தராமல், தம்மைக் குறைத்து மதிப்பிடுகின்ற பொழுதோ இது வெளிப்படுவதாகும் இதனை,

**"குழவி இறப்பினும் ஊன்தடிபிறப்பினும்**

**'ஆள்அன்று' என்றுவாளில் தப்பார்**

**தொடர்ப்படுருமலியின் இடர்ப்படுத்து இரீஇய**

**கேள்அல் கேளிர் வேளாண் சிறுபதம்**

**மதுகை இன்றிவயிற்றுத்தித் தனியத்**

**தாம்இரந்துஉண்ணும் அளவை**

**ஈன்மரோஇவ் வுலகத் தானே.** **(புறம்** 74)

இப்பாடம் தன்மானச் சிறப்புடன் தமதுவீரத்தின் மரபினையும் குறிப்பிடுகின்றது. கணைக்கால் இரும்பொறை சிறையில் இருந்த பொழுது அவன் வெளிப்படுத்திய தன்மான உரையாக இப்பாடல் அமைந்துள்ளது. குழந்தை இறந்து பிறந்தாலும் அதனைக் குழந்தை என்று எண்ணாமல் அதன் மார்பில் வாள் வைத்துக் காயம் ஏற்படுத்திய பின்பே புதைப்போம்.

அந்தக் காயமானது போரில் கலந்து கொண்டு ஏற்பட்ட விழுப்புண்ணாக நாங்கள் எண்ணிக் கொள்வோம்.

வீரம் என்பது சிறுகுழந்தைக்கும் இருக்கவேண்டும் என்ற கருத்து இதன்மூலம் வெளிப்படுகிறது. இத்தகைய வீரமரபில் இருந்து வந்த என்னை நாய் போன்று சங்கிலியால் கட்டிப் போட்டுதண்ணீர் குடிக்கச் சொல்கிறீர். இதனை நான் செய்தால் உலகத்தில் உள்ளோர் என்னை மதிப்பார்களா? என வினா தொடுத்துத் தன்னுடைய தன்மானத்தை வெளிப்படுத்துகிறார். தாம் அழித்தாலும் தம் இனத்தின் வீரம், புகழ், நிலைநிற்கவேண்டும் என்ற கருத்தினை இப்பாடல் உணர்த்துகிறது.

வருணப் பாகுபாடு மனிதனைக் கீழ்நிலைக்குக் கொண்டு வந்துள்ளது அதன் வளர்ச்சியின் கடைசி நிலையாகச் சாதி என்னும் வித்து வேர்விட்டு வளர்ந்துள்ளது. இது மனிதனை மயக்கநிலை நோயாளியாகவே வைத்துள்ளது. இந்நிலையை வலியுறுத்துவதாகப் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய பாடல் அமைந்துள்ளது.

**“ஒருகுடிப் பிறந்தபல்லோருள்ளும்**
**மூத்தோன் வருகஎன்னாதுஅவருள்**
**அறிவுடையயோனாறுஅரசும் செல்லும்**
**வேற்றுமைதெரிந்தநாற்பாலுள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அலன்கட் படுமே” (புறம்** 183)

என்பது ஒரு குடியில் பிறந்தானாயினும் மூத்தோன் என்பதற்காக மதிக்காது அறிவுடையோனையே அரசனும் போற்றுவான். வருணப்பாகுப்பாட்டில் கீழ்க்குலத்தான் கல்வியில் வல்லவனாயின் மேற்குலத்தானும் குலம்பாராது அவனை சமத்துவமாய் மதிக்கவேண்டும் என்ற உண்மையான நிலைப்பாட்டினை இப்பாடப் எடுத்துரைக்கின்றது.

**முடிவுரை**

இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்ட சான்றுகள் அடிப்படையில் புறநானூற்றுப் பாடல்கள் பகுத்தறிவு வழியில் சமத்துவத்தைச் சிந்திக்க வைக்கிறது. மனிதவாழ்வியல் சிறப்பான முறையில் அமைத்தது, பக்குவம் பெற மேற்கண்ட கட்டுரைக் கருத்துக்கள் வழிகாட்டுகிறது.

**மேற்கோள் நூல்கள்**


- புறநானூறு - புலவர் இரா. இளங்குமரன்(உரை)
- பாட்டும் தொகையும், தொல்காப்பியமும் தமிழ்ச் சமுக உருவாக்கமும் - ராஜ்கௌதமன், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.
- குறுந்தொகை - புலவர் இரா. இளங்குமரன்(உரை),

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 3. தொழில் நுட்ப வளரச்சியும், ஆதிக்க மனப்பான்மையின் கட்டுப்பாடுகளும்...

வா. விஸ்வப்பிரியா
ஆய்வு மாணவி,முதுகலை இரண்டாம் ஆண்டு
திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,தூலப்புரம்.

DOI 10.5281/zenodo.10723944

**Abstract :**

Our country has developed in wealth, antiquities, customs, education, sports, space and technology. Every year we celebrate Independence Day very well to celebrate the development of the country. Being a democratic country, India is developing in many fields.

**Key Words :** Democratic – Education - Technology

**முன்னுரை:**

செல்வங்கள், தொன்மைகள், பழக்கவழக்கங்கள், கல்வி, விளையாட்டுதுறை, விண்வெளித்துறை, தொழில்நுட்பம் என அனைத்திலும் நம் நாடு வளர்ச்சி அடைந்துள்ளது. நாட்டின் வளர்ச்சியை கொண்டாடும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் நாம் சுதந்திர தினத்தை வெகு சிறப்பாக கொண்டாடுகிறோம். ஜனநாயக நாடாக இருப்பதால் இந்தியா பல துறைகளிலும் வளரச்சிஅடைந்து வருகிறது.

**தொழில் நுட்ப வளர்ச்சி:**

மனிதனின் வேகத்திற்க்கும், திறனுக்கும் ஈடுகொடுக்கும்படி இந்தியாவில் தொழில்நுட்பம் மிகப் பெரிய அளவிற்கு வளர்ந்து உள்ளது என்றே சொல்லலாம். கணனி, தொலைபேசி, பொறியியல் துறை, விவசாயதிற்கு நீர்பாய்ச்சவும், களையெடுக்கவும், அறுவடை செய்யவும் தொழில் நுட்பம் பயன்பட்டு வருகிறது.

**“தொழில் நுட்பம்
எப்போதுமே
பிரச்சனையல்ல - அது
எப்படிப்பட்ட
தொழில் நுட்பமாக
இருந்தாலும், இது தான்
நிஜம் ! கேள்வி
என்னவெனில், நாம்
அதை விழிப்புணர்வோடு
உபயோகிக்கிறோமோ?**

**இல்லை கட்டாயத்தின்**

**அடிபடையில் (அ) வாணிகத்திற்காக**

**உபயோகிக்கிறோமா?**

**என்பதுதான்..”**

நமது மரபு ரீதியான ஆயிர்வேத வைத்தியத்தினால் ஆயிர்வேதத்தின் மூலமாகக் கூட குணமாக முடியாத பல நோய்களை நவீன மருத்துவத்தின் மூலம் குணமாக்க முடியும். பரந்த இவ்வுலகமானது தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணத்தால் மிகவும் சுருங்கியதாக காணப்படுகிறது.

ஒரு மனிதன் காலை எழுந்தது முதல் இரவு தூங்கும் வரை அனைத்தும் செயற்பாடுகளிலும், தொழில் நுட்பம் காணப்படுகிறது. வீட்டில் சமைக்கும் போது பயன்படுத்தும் மின்அடுப்பு, சலவை இயந்திரம் வரை தொழில் நுட்ப வளர்ச்சியின் வெளிப்பாடேஆகும்.மேலும்,தொலை தொடர்பு சாதனங்களான தொலைபேசி,தொலைக்காட்சி என்பன மனித வாழ்க்கையில் இருந்து பிரிக்க முடியாத விஷயங்களாக மாறிவிட்டன.

**பொருளாதார வளர்ச்சி:**

பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டை கவனியுங்கள். 2013-14 ஆம் வருடத்தில் ஒரு வட்டாரத்தில் 110குவிண்டால் நெல் உற்பத்தி செய்யப்பட்டதாக கருதவும்.ஆனால்,2014-15 நிதி ஆண்டில் நெல் உற்பத்தி 110 குவிண்டாலாக உயர்ந்து உள்ளது. முந்தைய ஆண்டைப் பொறுத்த வரையில் 2014-15 இல் 10% உற்பத்தி வளர்ச்சி அடைந்துள்ளது,என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இது பொருளாதார வளர்ச்சிஏற்படும் போது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான நாட்டினுடைய திறன் வளருகிறது. பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதைக் கீழே கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு கண்டறியலாம்.

**“வருமானம் உயர்கிறது.**

**வேளாண் உற்பத்தி பெறுகிறது.**

**தொழில் துறை உற்பத்தி பெறுகிறது.**

**வாங்கும் திறன் அதிகரிக்கிறது.”**

தொழிற்துறைகளும், தொழில்நுட்ப வளர்ச்சியும், கைத்தொழில்களும், விவசாயம், போக்குவரத்து துறைகளும், அதிகரித்தால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் மட்டுமின்றி கல்வி வளர்ச்சியிலும் இந்தியா சாதனைப் படைத்துள்ளது.

**அறிவியல் வளர்ச்சி:**

விண்கலங்களை உருவாங்கியதன் மூலமாக பூமியில் வாழ்கின்ற நாம் இந்த பூமியை விட்டு விண்வெளியில் வசிக்கும் அளவிற்கு அறிவியல் வளர்ச்சி இந்தியாவில் யாரும் எட்ட

முடியாத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. படிப்படியாக அறிவியலில் ஏற்பட்ட மாற்றங்கள் மனித வாழ்க்கைய மிகவும் எளிமையாக மாற்றிவிட்டன.

**“அறிவியலால் எதையும் தீர்க்க முடியாது என்பவர்கள் மூடர்கள்தான்”.**

**“அறிவியல் இயற்கையை நகலெடுப்பதில்லை;**

**மாறாக மறு உருவாக்கம் செய்கிறது.”**

**“இந்த உலகில் உண்மையான கவிதைகள் உண்டென்றால்;**

**அறிவியலோ உண்மைகளின் கவிதை வரிகள்.”**

“சமய நம்பிக்கையை ஏற்றுக் கொள்ளும்போது அறிவியல் தற்கொலை செய்து கொள்கிறது”.

விஞ்ஞான உலகில் பெரிய நோக்கங்களுக்காக சுயநல ஆசைகளின்றிச் சிரத்தையுடன் வேலைகள் செய்ததை நான் காண்கிறேன். இந்த முறை மனிதர்களின் மற்ற முயற்சிகள் அனைத்திலும் பரவும் என்று நான் நம்புகிறேன். விஞ்ஞானம் முறைப்படுத்தித் தொகுக்கப் பெற்ற அறிவாகும். மேலும், விஞ்ஞானமானது பழைய புராணக் கதைகளிலுள்ள அற்புதங்களையும். மிஞ்சிவிடுகிறது.

மனிதர்கள், விஞ்ஞான முன்னேன்றம் மனித சமூகத்திற்க்கு ஒரு வரபிரசாதமாகவே இருக்குமென்று சில சமயங்களில் பேசுகின்றனர். இது,பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்டிருந்த மயக்கங்களுள் ஒன்று. அறிவு பெருக்கியுள்ள இந்தக் காலத்தில் இந்தக் கருத்து தள்ளப்பெற வேண்டும்.

உலகின் எந்தப் பாகத்தில் நிகழும் நிகழ்வையும் அறிந்து கொள்வதோடு பணபரிமாற்றம், இணைய வழிக் கல்வி மற்றும் உணவைக் கூட கட்டளை அனுப்புவதன் மூலம் வீட்டிற்கே வரவழைத்துக் கொள்கின்றோம். இதற்கெல்லாம் ஆணிவேராய் அமைவது அறிவியல். இவ்வுலகில் அறிவியல் இல்லையேல் மனித வாழ்க்கையே இல்லை என கருதுமளவிற்கு அறிவியலானது மனித வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து காணப்படுகிறது.

மருத்துவம், போக்குவரத்து, வானிலை, வேளாண்மை என அறிவியல் ஊடுருவாத் துறைகளே இல்லை எனலாம். இக்கட்டுரையில் மென்மேலும் அறிவியல் வளர்ச்சியைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம்.

மனிதனானவன் என்று அவனது வாழ்க்கையை இலகுபடுத்தும் ஒவ்வொரு விஷயத்தையும் கண்டுபிடிக்கத் தொடங்கினானோ அன்றே அறிவியலானது தோற்றம் பெற்று விட்டது. பல்வேறு நோய்களை குணப்படுத்தும் மருத்துவ முறைகள்,மற்றும் கட்டட கலை வடிவங்கள் போன்றன இன்றைக்கு பல நூற்றாண்டுகளிற்க்கு முன்னரே தோற்றம் பெற்றுவிட்டன.அறிவியலின் தோற்றதைக் கணக்காக நாம் கணிக்க முடியாதுள்ள போதும் நவீன அறிவியலானது பதினேழாம் நூற்றாண்டு அளவிலேயே தோற்றம் பெற்றது.

ஆதிகாலம் தொட்டே கடவுளால் இந்த உலகம் படைக்கப்பட்டதாகவும், பூமியில் நடைபெருக்கின்ற அனைத்துமே கடவுளின் செயல்களே என்ற மனித மூட நம்பிக்கையை மறுத்து இயற்கை மற்றும் ஏனைய பொருட்களின் தோற்றத்திலுள்ள அறிவியலை இந்த உலகத்திற்க்கு எடுத்துரைத்தவர்கள் அறிவியாளர்களே!

**ஆதிக்க மனப்பான்மையின் கட்டுப்பாடு:**

இன்றைய தலைமுறையினரிடையே தமிழப் பற்றும்,இலக்கிய நாட்டமும் உள்ளதா? என்று அவர் கூறிய பதில் இது. தமிழின் நிகழ்காலம் குறித்து வருந்துகிறேன். இது தமிழுக்கு மட்டுமான பின்னடைவாக இல்லாமல் தேசிய மொழிகள் அனைத்துக்குமான பின்னடைவாகக் கருதுகின்றனர்.

ஒரு தமிழன் என்பதனால் தமிழ்மொழி குறித்துக் கூடுதல் கவலை அடைகிறேன். எழுத்து, பேச்சு என்ற இரண்டு வடிவங்களில் தான் ஒரு மொழி நிலை கொள்கிறது. தமிழ் படித்தால் என்ன பயன் என்று கருதுகிற ஒரு கூட்டம் தங்கள் பிள்ளைகளை ஆங்கில வழிக் கல்விக்கு ஆற்றுப்படுத்துகிறது. காலப்போக்கில் தமிழ் எழுத்து அடையாளத்தை இழந்துவிட்டு பேச்சு மொழியாக மட்டும் சுருங்கி விபத்து நிகழாது என்பதற்க்கு காரணங்கள் குறைவாக உள்ளது. தாய் நாட்டிலேயே தமிழன் ஆகமட்டுமல்லாது தாய் நாட்டிலேயே தமிழன் மொரிசீயஸ் தமிழன் ஆகி விடுவானோ என அஞ்சுகிறேன். இலங்கைத் தமிழன் நாட்டை இழந்தான் என்றாகிவிட்டால் செவ்வாய்க் கிரகத்தில் குடியேறுபவனா தமிழ் பேசப் போகிறான்? தாய்மொழி என்பது வயிற்றுப் பாட்டுக்கான தல்ல; பண்பாட்டுக்கானது என்று தமிழனும் புரிந்து கொள்ள வேண்டும்.

**இராணுவ வளர்ச்சி:**

நாம் இன்று எந்தக் கவலையும் இல்லாமல் இருப்பதற்கு, அயல்நாட்டவரின் தாக்குதல்களிலும் இருந்து விடுபடுவதற்குக் காரணம் இராணுவத்துறை போரிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றுவதற்காக இந்திய இராணுவம் தனது இராணுவபலத்தை உயர்த்தி கொண்டே உள்ளது.

**முடிவுரை:**

இந்தியாவில் கல்வி வளர்ச்சி,அறிவியல் வளர்ச்சி,பொருளாதாரவளர்ச்சி என அனைத்திலும் முன்னேறி கொண்டு இருந்தாலும் ஏழை மக்களின் வாழ்வில் வளர்ச்சி என்பது இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளது. இந்தியா வல்லரசாக மாற்ற வேண்டும் என்றால் இந்த திருநாட்டில் லஞ்சம் ஊழல் என்பது இல்லாமல் போக வேண்டும். இவை, இல்லாமல் போனால் இன்னும் பல உயர்ந்த இடைத்தை அடைய வேண்டும்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 4. பகுத்தறிவுவாதமும் பாரதியின் கவிதைகளும்

முனைவர் சு.மேகலா,
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை - 02

DOI 10.5281/zenodo.10724099.

**Abstract :**

The ideas against religion, ritual and formalism appear as a sign of the fact that many of the theories that originated in the Western countries had an impact on India. Rationalism was the basis of Renaissance thought in Europe. Analyzing means approaching with reason. The three problems of the world, man and God have been the problems of philosophy since time immemorial. Humans must first doubt what they believe the world to be. Absolute truth has never existed. Rationalism is often thought of as antithetical to libertarianism. But it can be seen that most of the people who accepted the concept of God were rationalist thinkers. Reasoning refers to the techniques of cognition. It contains thoughts about the world, man and God.

## முன்னுரை

மேலைத் தேய நாடுகளில் தோன்றிய கோட்பாடுகள் பலவும் இந்தியாவில் தாக்கத்தை செலுத்தின என்பதன் அடையாளமாகவே சமயம், சடங்கு, சம்பிரதாயம் ஆகியனவற்றுக்கு எதிரான கருத்துக்கள் தோன்றுகின்றன எனலாம். ஐரோப்பாவில் தோன்றிய மறுமலர்ச்சி காலச் சிந்தனைகளுக்கு அடிப்படையாக அமைவது பகுத்தறிவு வாதம் ஆகும். பகுத்து அறிதல் என்பது காரண காரியத்தோடு அணுகுதல் என்பதாகும். உலகு, மனிதன், கடவுள் என்னும் மூன்று பிரச்சினைகள் தத்துவத்தின் பிரச்சினைகளாக காலங்காலமாக இருந்து வந்துள்ளன. மனிதர்கள் தாம் உலகினை உண்மை என நம்புவதை முதலில் சந்தேகிக்க வேண்டும். அறுதியிட்ட உண்மை என்பது எப்போதும் இருந்ததில்லை. பகுத்தறிவு என்பதை கருத்துமுதல்வாத கருத்திற்கு எதிரானது எனக் கொள்வது வழக்கம். ஆனால் கடவுள் கொள்கையை பெரும்பாலும் ஏற்றுக் கொண்டவர்களே பகுத்தறிவுவாத சிந்தனையாளர்களாக இருந்தார்கள் எனக் காணமுடிகிறது. பகுத்தறிவு என்பது அறிதலின் நுட்பங்களைக் கூறுவதாகும். உலகு, மனிதன், கடவுள் பற்றிய சிந்தனைகளைக் கொண்டது. பொதுவாக மனிதர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைகள் அனைத்தும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவையாக உள்ளன. கடவுள் கருத்திற்கு அடிப்படையாக அமைவது முழுமையான தூய பொருள் என்ற ஒன்று பற்றிய மனிதர்களின் சிந்தனையே ஆகும். அதாவது மனிதன் முழுமையற்றவன் மற்றும் முழுமையானத் தூய்மை கொண்டவன் எனக் கூறப்படுவதில்லை. தனித்திருக்கின்ற சாரம் எனவும் கடவுளைக் குறிப்பிடலாம். மனிதர்கள் ஏதேனும் ஒன்றைச் சார்ந்திருக்கின்றனர். இறுதியாக கடவுளையேனும் சார்ந்திருக்கின்றனர். எனவே பகுத்தறிவு என்பது அறிவுவயப்பட்டது. புலனறிதல் மூலம் அறியப்படுவதை உண்மையெனக் கொள்வதே பகுத்தறிவாகும். இதனைக் கரணியம் என்றும் அழைக்கின்றனர். மேலை நாடுகளில் தோன்றிய பகுத்தறிவு வாதம் தமிழகத்தில் உலகாயதம் என்றும் பௌத்தம், சமணம், ஆசீவகம் என்றும் அழைக்கப்பட்ட சமயங்கள், தத்துவங்களிலும் காணப்படுகின்றன. காரண காரிய விளைவினை உடைய தத்துவப் பின்புலத்தினை சமண, பௌத்த சமயங்களில்

காணப்படுவதை மணிமேகலை, குண்டலகேசி, நீலகேசி காப்பியங்கள் எடுத்துரைக்கின்றன. ஆனால் மேலை நாடுகளில் தோன்றிய பகுத்தறிவுவாதமானது உலகியல் சார்ந்தவற்றிற்கே முதன்மை அளிக்கின்றன. எனவே அவை சமயத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவை எனலாம்.

**பகுத்தறிவு**

மனிதர்கள் தம்மை உணர்தல் என்னும் நிலையே பகுத்தறிவாகும். தொல்காப்பியத்தில் கூறப்படுகின்ற உயிர்களின் அறிவு நிலைகளில் ஆறாம் அறிவு பற்றிய விளக்கத்தினைக் காணலாம்.

"ஆறறிவதுவே அவற்றொடு மனனே" (தொல்.பொருள்.மரபு.577)

என்னும் நூற்பாவடி மனதால் அறிதல் என்று குறிப்பிடுகிறது. மனது மனிதர்களுக்கு மட்டுமே உள்ள ஒன்றாகும். உளவியலில் மனம் இரண்டு வகையாகக் கூறப்படுகிறது. நனவு மனம், நனவிலி மனம் எனவாகும். நனவிலி மனம் மூன்று தளங்களைக் கொண்டு விழைவு மனம், அறிமனம், நெறி மனம் என்பவை அவை. உள்ளத்தால் உணர்தல் என்பது கண்ணால் பார்ப்பது என்பது புறவயமாக கண்டு, கேட்டு, உணர்தல் ஆகும். அதனை படிமமாக, குறியீடாக மாற்றிக் கொள்வது உள்ளத்தின் பணியாகும். உள்ளத்தில் படிந்திருக்கும் புறவய நிகழ்ச்சிகள் யாவும் அகவயப் பரிணாமத்தை அடைகின்றன. பின்பு அவை அறிவாக வெளிப்படுகின்றன. அதைத்தான் மனத்தால் உணர்தல் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. அறிவு என்பது புறவய நிகழ்வுகளின் அகவயப் பரிமாணம் ஆகும். உலகு என்பது புறவயமாக இருக்கும் ஒன்றாகும். மனிதர்கள் இதனை உணர்கின்றனர். அதனால் அவற்றோடு வினைபுரிகின்றனர். பருப்பொருள் உண்மை என இதனைக் கொள்வர். சமயங்கள் முதற்பொருள் என இறைவனைக் குறிக்கின்றன. ஆனால் தமிழர் தம் அறிவு மரபு நிலம்பொழுதிரண்டென்ப என முதற்பொருளைக் குறிக்கின்றன. நிலத்தை முதற்பொருளாகக் குறித்தலால் நிலம் என்பது புறவயமாக நிகழ்வதாகும். மனிதன் அதனோடு வினைபுரியும் போது அது அறிவாக மடைமாற்றம் பெறுகிறது. நிலத்தின் தன்மை, அது விளைவிக்கும் பொருட்கள், விளைவிக்கும் முறைகள், விளையும் காலங்கள் என யாவும் அறிவாக சேகரமாகின்றன. இவ்வறிவு மரபே தமிழரின் தத்துவச் சிந்தனையாக இருக்கின்றன. அதாவது புறவய மெய்ம்மையை உணர்தல் ஆகும். இதனை மனதால் அறிந்து கொள்ளுதல். மேலை நாடுகளில் தோன்றி பகுத்தறிவுச் சிந்தனையாளர்கள் பலரும் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆவர். ஆனால் ரெனே டெக்கார்ட்டே தத்துவத்தைக் கடவுளிடமிருந்து பிரித்து விடுகிறார்.

**பாரதியின் பகுத்தறிவுச் சிந்தனைகள்**

பாரதியார் தமிழில் விடுதலைக் கனலை வீறு கொள்ளச் செய்தவர் எனப் போற்றப்படுகிறார். அவரிடம் காலனியாதிக்கத்தின் மீதான ஒவ்வாமை இருந்த போதிலும் சிந்தனைகளை மேலை இலக்கியங்களின் மூலம் பெற்றார். அதன் வெளிப்பாட்டினை அவரது கவிதைகள் கூறுகின்றன. குறிப்பாக தீண்டாமை என்னும் கொடுமை பற்றிய அவரது

வெளிப்பாடு பகுத்தறிவுவாதத்திற்கு அடிப்படையாக அமைவது. தீண்டாமை குறித்த இந்தியச் சிந்தனை மரபான வேதம், உபநிடதம் ஆகியன இன்றியமையாத வழக்கம் எனக் கூறும் போது அதனை எதிர்த்து அதன் மூடத் தன்மையை கட்டவிழ்த்தார் எனக் காணமுடிகிறது. சுதந்திரப் பள்ளு பாடலில்,

**“எல்லோரும் சமமென்ப**
**துறுதி யாச்சு**
**சங்கு கொண்டே வெற்றி**
**யூது வோமே இதைத்**
**தணிக்கெல்லா மெடுத்துத்**
**தோது வோமே” (பாரதியார் பாடல்கள். ப.159)**

என்ற பாடல் இந்திய சமூகத்தில் நிலவி வரும் சமமின்மை அல்லது தீண்டாமை பற்றிய அவரது கருதுகோள் அமைவதைக் காணலாம். பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே என்று கூறுவதன் மூலம் அடிமைத்தனத்திற்குக் காரணமாக விளங்கு சாதிய ஏற்றத் தாழ்வினை சாடுகிறார் என்பதைக் காணமுடிகிறது. சமயத்தின் பொருட்டு இத்தகைய ஏற்றத் தாழ்வுகள் நியாயம் செய்யப்படுகின்றன. சமயத்தின் புனிதத்தை விட மனிதன் இன்றியமையாதவன் என்னும் கருத்து நிலையில் இவ்வாறு யாவரும் சமமென்று கூறுவதனைக் கொள்ளலாம்.

மணம் செய்தலையும் சாத்திரங்கள், கிரியைகள் செய்வதை மூடத்தனம் என்று கூறுவதை,

**“சாத்திரங்கள், கிரியைகள், பூசைகள்**
**சகுண மந்திரத் தாலி மணி யெலாம்**
**யாத்தெ னைக் கொலை செய்தன ரல்லது**
**யாது தர்ம முறையெனக் காட்டிலர்**
**தீந்திரன் கொளறிவற்ற பொய்ச்செயல்**
**செய்து மற்றவை ஞான நெறியென்பார்**
**மூத்த வர்வெறும் வேடத்தி னிற்குங்கால்**
**மூடப் பிள்ளை யறமென னோர்வதே” (பாரதியார் பாடல்கள், ப.186)**

என்ற பாடலில் தாலியினால் நடந்த கொலையாக திருமணத்தைக் கூறுகிறார். அதற்கு சாத்திரங்கள், கிரியைகள், பூசைகள், சகுணம், மந்திரம் ஆகியனவற்றைப் பயன்படுத்தினர். ஆனால் முறையான செயல் யாதெனக் காட்டவில்லை இவையெல்லாம் பொய்யானவை ஆனால் இவற்றைத்தான் ஞான நெறியென்று மூத்தவர்கள் கூறுவதால் அவர்தம் பிள்ளைகளும் அதனை அறமென கருதுகின்றனர் என்று சாத்திரங்கள் என்று கருதுபவற்றை

பொய்யென்கிறார். பகுத்தறிவால் இவை பகுத்தாயப்படுமானால் அதன் உண்மைத் தன்மை யாதென அறிந்து கொள்ளப்படும். பகுத்தறிவு என்பது அனுபவத்தால் பெறக் கூடியதாக இருந்தாலும் அவையும் பகுத்தறியத் தக்கதேயாகும். ஏனெனில் அனுபவத்தால் ஒருவர்க்கு நன்மை செய்யக் கூடிய செயல்கள் என்று கருதுவனவற்றை ஆராய்நது பார்த்தால் அதன் பொய்த் தன்மை விளங்கும். காலங்காலமாகக் கடைபிடித்து வருவதாலேயே சிலவற்றை ஞான நெறியென்று பொய்யாக கடைபிடிக்கின்றனர் என்று இதில் கூறுகிறார்.

கல்லும் கற்சிலையும் மதிப்புப் பெறும் விதத்தினை பாஞ்சாலி சபதம் இரண்டாம் பாகம், பராசக்தி வணக்கத்தில் கூறுகிறார். ஒரு கல் சிற்பியால் கடவுளாவதும் கோயிற் படியாவதும் நிகழ்கிறது. இதன் தன்மையினை உணர்ந்து கொள்ளல் வேண்டும் என்ற அடிப்படையிலேயே,

**“ஆங்கொரு கல்லை வாயிலிற் படியென்**
**றமைத்தனன் சிற்பிமற் றொன்றை**
**ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்**
**றுயர்த்தினான் உலகினோர் தாய்நீ**
**யாங்கணே எவரை எங்ஙனஞ் சமைத்தற்**
**கெண்ணமோ அங்ஙனம் சமைப்பாய்”** (பாரதியார் பாடல்கள்.264)

என்ற பாடலில் கற்சிலையாக இருப்பதும் படிக்கல்லாய் இருப்பதும் சிற்பியின் கைகயில் இருக்கிறது என்பதைக் கூறுகிறார். எனில் கடவுள் என்று உரைப்பதும், ஒரு கற்பிதமே என்று உணர்கிறார். அதே வேளை அதைக் கடவுளின் செயல் என்றும் தப்பிச் செல்கிறார் எனக் காணமுடிகிறது. இவ்வுலக வாழ்வினைச் சிறந்த முறையில் வாழ்வதற்கே இறைவனிடம் வேண்டும் தன்மை பாரதியிடம் காணப்படுகிறது. கடும் தவம் புரிந்து, விரதமிருந்து, இறைவனைத் தொழுது, வணங்கி சொர்க்கம் கிட்டுமெனக் கருதவில்லை. மாறாக இப்புவியில் மகிழ்ச்சியாக வாழ்வதற்கே காணி நிலம் வேண்டும் பராசக்தி என்று கேட்கிறார். இச்சக வாழ்வையே முதன்மையாகக் கருதினார் ஆதலின் இவ்வாறான சிந்தனை அவருள் முகிழ்த்தது எனலாம். ஏனெனில் இறைவனைத் தொழுது வாழ்தலின் பேறு இறந்தபின் கிட்டும் மகிழ்ச்சி அல்லது பேரின்பமே என்று சித்தாந்திகள் உரைப்பர். ஆனால் பாரதியார் அவ்வாறு இறப்பிற்குப்பிந்தைய சொர்க்கம் வேண்டாம் என்பதையே காணி நிலம் வேண்டும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு என்று கூறுகிறார். அவருடைய வேண்டுதல்கள் இச்சக வாழ்வை முதன்மைப்படுத்துகின்றன ஆதலின் பொருள்முதல்வாதத் தன்மை கொண்டவை எனலாம்.

**“காணிநிலம் வேண்டும் பராசக்தி**
**காணி நிலம் வேண்டும் அடி**
**தூணி லழகியதாய் நன் மாடங்கள்**
**துய்ய நிறத்தினதாய் அந்தக்**

**காணி நிலத்தினிடையே யொர் மாளிகை**

**கட்டித் தர வேண்டும் - அங்கு**

**கேணி யருகினிலே தென்னை மரம்**

**கீற்று மிள நீரும்" (பாரதியார் பாடல்கள், ப.565)**

என்ற பாடலடிகள் அவரது விருப்பதினை நிறைவேற்றித் தருவதற்கு பராசக்தியை அழைக்கின்றார். அவருடைய எண்ணங்கள் இதுவென வெளிப்படுத்துவது படைப்பின் தன்மையையாகும். அடிப்படையில் பராசக்தி என்பதை பேராற்றலாகக் கருதும் மனப்போக்கினைக் காணமுடிகிறது. அது இயற்கை என்னும் ஆற்றலாகவும் வடிவமைகிறது. அவ்வாற்றல் தனக்கு இவ்வுலக வாழ்விற்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தால் நன்றாக வாழ இயலும் என்பதைக் கூறுவதாக அமைகிறது. உலகில் உள்ள மனிதர்களை முதன்மைப்படுத்த வேண்டும். இறைவன் அடுத்த நிலைக்கு உரியவன் என்னும் தொடக்க காலப் பகுத்தறிவுவாத சிந்தனையினை பாரதியின் பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே என்னும் பாடலில் காணலாம்.

**"எவ்வுயிர் தன்னிலு மீசனுள் ளானென**

**எப்பொழு துங்க தைப்பாய் நன்னெஞ்சே**

**தெவ்வுயிர் தன்னிலுஞ் சிவனி ருப்பதைச்**

**சிந்தனை செய்யாயோ - நன்னெஞ்சே" (பாரதியார் பாடல்கள், ப.571)**

என்ற பாடலடிகள் இதனை உணர்த்துகின்றன. அப்பாலைத் தத்துவத்தில் இறைவனை மேலுலகில் தேட வேண்டாம் பூமியில் வாழும் அனைத்து உயிர்களிலும் இறைவன் உளான் எனக் கூறுவதிலும் பகுத்தறிவு சிந்தனை மேலீடாகத் தெரிகிறது. இறைவன் எனப்பட்டோரெல்லாம் இறப்பார் என்னும் சிந்தனையை,

**தீயதொரு கணையாலே கண்ணன் மாண்டான்**

**பலர்புகழு மிராமனுமே யாற்றில் வீழ்ந்தான்" (பாரதியார் பாடல்கள், ப.781)**

என்னும் பாடலடிகள் இறைவன் எனப்பட்டோருக்கு இறப்புண்டு என்று கூறுவதன் மூலம் அவர்கள் மனிதர்கள் என்று கருத்துரைக்கிறார். இதன் மூலம் அவர் இறைவன் என்ற பொருள் பற்றிய சிந்தனையினை புறந்தள்ளுகிறார். படைத்தளித்தல் செயல்தான் இறைவன் என்றாலும் இறைவன் அழியாப்பொருள் என்றால் தானும் அத்தகையவனே என்று கூறுகிறார். அவரும் படைப்பாளியாக தன்னை கூறுவதால் படைப்புத் தொழில் உடையோர் இறையைப் போல் என்றும் வாழ்வர் என்று கூறுகிறார். இவ்வாறு பகுத்தறிவு சார்ந்த சிந்தனையை பாரதியாரின் பாடல்கள் பலவற்றிலும் காணமுடிகிறது.

அவருடைய சிந்தனையில் கண்ணன், லட்சுமி, பராசக்தி, சிவன், திருமால் எனப் பல தெய்வங்கள் பற்றி கூறப்படுகிறது. ஆயினும் அவர்கள் அப்பாலையில் வாழ்வோராவன்றி தம்மோடு இணைந்து வாழ்வோரே என்னும் சிந்தனை கொண்டவராக இருக்கிறார். இதுவே

பகுத்தறிவின் தன்மையாகும். அப்பாலையில் இறைவனை அடைதல் என்னும் சிந்தனைக்கு பாரதியிடம் இடமின்மையைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

தமிழ் இலக்கியத்தில் சீரிய சிந்தனைக்கும் தமிழ்ப் புதுக்கவிதைக்கும் விடுதலை வேட்கைக்கும் உதாரணமாகக் கூறப்படுபவர் பாரதியார் ஆவார். அவருடைய பல்வேறு கவிதைகள் விடுதலைக் கனலை மிகுவித்தன என்பதால் ஆங்கில அரசால் குற்றவாளியாகத் தேடப்பட்டவர் ஆவார். இவருடைய கவிதைகள் ஐரோப்பிய தத்துவ மரபில் உருவாகி வளர்ந்த பகுத்தறிவுச் சிந்தனையை மேலதிகமாகக் கொண்டு இலங்குவதைக் காணமுடிகிறது. பகுத்தறிவுச் சிந்தனை என்பது கடவுள், மனிதன், உலகு என்பவை பற்றி பகுப்பாய்வு செய்வனவாகும். உலகு உண்மையா அல்லவா. வாழ்வு உண்மையா அல்லவா என்னும் கேள்விகளைத் தொடர்ந்து எழுப்புவதாக அமைவதாகும். பகுத்தறிவு பகுப்பாய்வினை உலகியல் சார்ந்த ஒன்றாகக் கருத இடம் தருகிறது. கடவுள் பற்றிய கவிதைகளை எழுதினாலும் இவ்வுலக வாழ்வையே பெரிதும் விரும்பினார் பாரதியார். இவ்வுலகச் சிந்தனைகளுக்கே முதன்மையளித்தார் என்பதை அவரது பாடல்களில் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

# 5. கம்பனில் மும்மைக் கொள்கை

**முனைவர்சு.வினோத்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

DOI 10.5281/zenodo.10724971.

**Abstract:**

The phrase 'Liberty, Equality, Fraternity' was coined and popularized during the French Revolution (1790). A combination of three words, the phrase presents a dream of an ideal country. The year of discovery and background of the term is recorded historically. However, Kambar can be mentioned as the pioneer who thought all three together in Tamil and expressed them in writing.

**Key Words:** Kampan – Triple Principle – French Revolution

'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்னும் சொற்றொடரானது பிரெஞ்சுப்புரட்சிக் (1790) காலகட்டத்தில் உருவாக்கப்பட்டு மக்களிடையே புகழ்பெற்றுள்ளது. மூன்று சொற்களின் கூட்டான இப்பொன்மொழி ஓர் இலட்சிய நாட்டைக் குறித்த கனவினை முன்வைக்கிறது. இப்பொன்மொழி கண்டறியப்பட்ட ஆண்டும் பின்னணியும் வரலாற்று நோக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் தமிழில் இம்மூன்றையும் ஒரு சேர சிந்தித்து எழுத்தில் வெளிப்படுத்திய முன்னோடியாகக் கம்பரைக் குறிப்பிடலாம்.

**"வண்மையில்லையோர்வறுமையின்மையால்**
**திண்மையில்லைநேர்செறுநரின்மையால்**
**உண்மையில்லைபொய்யுரையிலாமையால்**
**ஒண்மையில்லைபல்கேள்வியோங்கலால்"** (பால.நாட்டுப் படலம்.53)

என்ற பாடல் கோசலம் என்னும் இலட்சியக் கனவு நாட்டை முன் வைக்கிறது. இதில் சொல்லப்பட்டவாறு கோசல நாடு இருந்தது என்பது பொருளல்ல. இதில் கவிஞர் தனது விருப்பத்தை விதைத்திருக்கிறார். ஒரு நாடு வறுமை இன்றி, போர் இல்லாமல், பொய்மை நீங்கி, அறிவில் தழைத்து ஓங்குமானால் அந்நாட்டில் சுதந்திரமும் சமத்துவமும் சகோதரத்துவமும் செழித்திருக்கும் என்பது பொருள்.

அவ்வகையில் கம்பனில் இடம்பெற்றுள்ள இம்மும்மைக் கொள்கை குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

### இறை வாழ்த்தில் சமத்துவம்

மதம், இனம், சாதி, பால் மற்றும் பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருவர் மற்றொருவர் மீது பாகுபாடு காட்டக் கூடாது. இதனை மீறுவது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி குற்றமாகும். மனிதர்கள் சமமாகப் பார்க்கப்பட வேண்டும் என்பதே இச்சட்டத்தின் நோக்கம். மிகப் பெரிய மக்களாட்சி நாடாக இந்தியா திகழ்வதற்குக் காரணம் மக்களின் மனங்களில் காணப்படும் வேற்றுமையில் ஒற்றுமை என்னும் பண்பே ஆகும்.

மக்களிடையே நிலவ மறுக்கும் சமத்துவத்திற்கு அவரவர்கள் கண்டடைந்த கடவுளையே காரணமாக்கி விடுகின்றனர். கடவுளைக் காரணமாக்கி மனிதர்கள் தமக்குள் உள்ள சமத்துவத்தை அழித்துக் கொள்கின்றனர். மதம், சாதி எனப் பல்வேறு வேற்றுமைகளின் அடிப்பபடையில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி சமத்துவத்தை இழக்கின்றனர். இதனை உணர்ந்த பெருங்கவிஞர்கள் தமது கடவுள் வாழ்த்துப் பாடலில் குறிப்பிட்ட ஓர் இறைவனைப் பாடாது எச்சமயத்துக்கும் பொருந்தும் பொதுவான இறை வாழ்த்தைப் பாடியுள்ளனர். திருவள்ளுவர் ‘ஆதிபகவன்’ என்று குறிப்பிடும் இறைவனைக் குறிப்பிட்ட ஒரு சமயக் கடவுளாகக் கொள்ள வேண்டியதில்லை. அது போல் அவர் கடவுள் வாழ்த்தில் குறிப்பிடும் ‘தனக்குவமை இல்லாதான்’, ‘வாலறிவன்’, ‘எண்குணத்தான்’, ‘வேண்டுதல் வேண்டாமை இலான்’ போன்றவை சமயப் பொதுமைக்குஉரிய இறைவனையே ஆகும். அதன் தொடர்ச்சியாகக் கம்பரும்,

**“உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்**
**நிலைபெறுத்தலும் நீக்கலு நீங்கலா**
**அலகிலா விளையாட்டுடை யாரவர்**
**தலைவ ரன்னவர்க்கே சரணாங்களே” (பால.பாயிரம்.1)**

என்று உலகைப் படைத்துக் காத்து அழிக்கும் இறைத் தன்மையை வாழ்த்துகின்றார். இப்பாடலில் உருவ அடையாளப்படுத்துதல் இல்லாத சமத்துவப் பார்வையில் கம்பர் இறைவனைக் குறிப்பிட்டுள்ளார். இக்கடவுள் வாழ்த்துப்பாடலை அவரவர் தமது இறைவனை நினைத்துக் கொண்டு பாட முடியும். அவ்வகையில் மதவேறுபாடு களைந்த சமத்துவத்தைக் கடவுள் வாழ்த்தில் முன்வைக்கிறார். ஆறு காண்டங்களின் தொடக்கத்திலும் கம்பர் கடவுள் வாழ்த்துப் பாடல்களை இடம் பெறச் செய்துள்ளார். அவ்வகையில் கம்பனில் ஆறு கடவுள்வாழ்த்துப் பாடல்கள் அமைந்துள்ளன. ஆறுபாடல்களும் சமயப் பொதுமைநோக்கில் அமைந்திருக்கக் காணலாம். ஆறு பாடல்களிலும் சமயங்களிடையிலான சமத்துவத்தை விரும்பும் கம்பரின் உள்ளம் இயங்கக் காணலாம்.

**“மூன்றுரு வெனக்குண மும்மையா முதல்**
**தோன்றுரு வெவை யுமம்முதலைச் சொல்லுதற்கு**
**ஏன்று ருவமைந்த வுமிடையி னின்றவும்**
**சான்றுரு வுணர்வினுக்கு வந்ததா யினான்” (கிட்கிந்தா.கடவுள்.1)**

என்பது கிட்கிந்தா காண்டத்தில் காப்புச் செய்யுளாக அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப்பாடல். கவிஞன் தான் பாடத் தொடங்கிய காண்டம் சிறப்புற முடிய வேண்டி பாடியது என்று உரையாசிரியர் விளக்கம் தருகிறார். மூன்று நிறம், மூன்று குணம் எவ்வுருவிற்கும் அடிப்படையாவது போல் உயிராக அமைபவன் இறைவன் என்கின்றார் கம்பர்.

“கம்பன் திருமால் பக்தன் என்பதிலே ஐயமில்லை. அவன் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டான் என்பது குறிப்பிடத்தக்கது. சடையன், சடையப்பன், சடையாண்டி என்பன

சிவபெருமானைக் குறிக்கும் பெயர்கள். சிவபெருமானைக் குறிக்கும் பெயரைக் கொண்ட சடையப்ப வள்ளல் சைவ சமயத்தைப் பின்பற்றுகிறவராகவே இருந்திருக்க வேண்டும். இவர் வைணவனாகிய கம்பனை ஆதரித்ததிலிருந்தே கம்பன் எல்லா மதத்தாராலும் போற்றப்படக் கூடிய சமரச நோக்கம் கொண்ட வைணவனாக இருந்தான் என்பதைக் காணலாம். கம்பன் தன் காலத்திலிருந்த சூழ்நிலையை நன்றாக அறிந்தவன். தமிழர்களுக்குள் மதம், தெய்வம் காரணமாக ஒற்றுமைக் குறைவு உண்டாகக் கூடாது என்று எண்ணியவன்." (சாமி.சிதம்பரனார், கம்பன் கண்ட தமிழகம், ப.44) என்கின்ற கருத்தும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

**சரயு ஆறும் சமத்துவமும்**

மலையில் அருவியாகத் தோன்றும் சரயு நதியானது முல்லை நிலத்தில் பெருவெள்ளமாக ஓடி மருத நிலமாகிய வயல்களை வளமூட்டி குளங்களையும் ஏரிகளையும் நிறைத்து நெய்தல் நிலமாகிய கடலில் சென்று சேர்கிறது. அவ்வகையில் சரயு நதி நிலங்களிடையே சமத்துவத்தை உருவாக்குவதாகக் கம்பர் பாடுகின்றார்.

**"முல்லையைக் குறிஞ்சியாக்கி மருதத்தை முல்லையாக்கி**
**புல்லிய நெய்தல் தன்னைப் பொருவறு மருதமாக்கி**
**எல்லையில் பொருள்களெல்லா மிடைதடு மாறுநீரால்"**
**(பால.ஆற்றுப்படலம்.17)**

நிலங்களுக்கிடையிலான வேறுபாடு என்பது அந்நில அமைப்பு மற்றும் அங்குள்ள பயன்படு பொருட்களின் அடிப்படையிலேயே ஆகும். அத்தகைய வேறுபாட்டை நீக்கும் செயலைச் சரயுநதி செய்வதாகக் கம்பர் குறிப்பிடுகிறார்.

**"கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்**
**எல்லையின் மறைகளா லுமியம்பரும் பொருளீதென்னத்**
**தொல்லை யிலொன்றேயா கித்துறைதொறும் பரந்தசூழ்ச்சிப்**
**பல்பெருஞ் சமயஞ்சொல்லும் பொருளும்போற் பரந்ததன்றே"**
**(பால.ஆற்று.19)**

மலையில் தோன்றி கடலில் சென்று சேரும் நதியின் வெள்ளமானது இடத்திற்கு ஏற்ப குளம், ஏரி என்று பல பெயர்களில் அழைக்கப் பெறுவதைப் போன்று பல சமயத்தவர்களால் பல்வேறு பெயரிட்டு வழிபடும் பரம்பொருள் தன்மையை இப்பாடலில் குறிப்பிடுகின்றார். சமயங்களிடையிலான சமத்துவத்தை நதியை உதாரணமாக்கி உரைக்கின்றார். ஏரி, குளம் என்று பெயர் பெறினும் நதி ஒன்றே அதுபோல் பல சமயத்தினர் பல பெயர் இட்டு வணக்கினாலும் இறைவன் ஒருவரே என்பது பாடலின் குறிப்புப்பொருள்.

**சுதந்திரச் சிந்தனை**

"ஒரு மனிதன், தன்னுடைய சுதந்திரத்தைத் துறந்து விட்டானென்னு சொன்னால், அவன் தன்னுடைய மனிதத் தன்மையையும் துறந்து விட்டானென்பது அர்த்தம். அது மட்டுமல்ல, மானிட ஜாதியின் ஓர் அம்சத்தினன் என்ற முறையில் அவனுக்கு

ஏற்பட்டிருக்கிற உரிமைகளையும் கடமைகளையுங் கூடத் துறந்து விட்டான் என்று கொள்ள வேண்டும். அவன் எல்லாவற்றையும் துறந்தவனாகின்றான். அவனிடத்தில் எந்த விதமான நற்குணங்களையும் கொண்டு புகுத்தி அவனுடைய மனிதத்தன்மையை நிரப்ப முடியாது. சுருக்கமாகச் சொல்லப் போனால் அவன் மனிதனேயல்ல" என்று ரூஸ்ஸோவின் வாசகத்தை வெ.சாமிநாதசர்மா தமது 'சுதந்திரமுழக்கம்' நூலில் குறிப்பிடுகிறார்.

மனிதன் மிருகமாக வாழும் அடிமைத்தனத்திலிருந்து மீண்டு அன்பு செலுத்தி வாழும் வாழ்க்கையை அடைவதே சுதந்திரம் என்று கொள்ளலாம். போரில் வென்று பெறுகின்ற சுதந்திரத்திற்கு மாற்றாக போரே இல்லாது பெறும் சுதந்திரத்தைக் கம்பர் குறிப்பிடுகிறார். போர் என்பது அரசர்களின் வெற்றிக் கொண்டாட்டத்திற்கும் புகழ் வேட்கைக்குமாகவே பெரும்பாலும் நடந்துள்ளது. போர் இல்லை என்றால் எப்படிப் புகழ் கிடைக்கும் என்று அரசர்கள் ஐயுற்றதன் விளைவாகவே பெரும் போர்களைப் புரிந்துள்ளனர். இவ்உண்மை வரலாற்றை உற்றுநோக்கினால் தெரியவரும். போரின் விளைவாக மனிதர்கள் மனிதத்தன்மையை இழப்பதை எவ்வாறு சுதந்திரம் எனக் கொள்வது.

**"யாரொடும்பகைகொள்ளலன்என்றபின்,**
**போர்ஒடுங்கும்; புகழ்ஒடுங்காதுதன்**
**தார்ஒடுங்குல்செல்லாதுஅதுதந்தபின்,**
**வேரொடும்கெடல்வேண்டல்உண்டாகுமோ?"**

**(அயோத்.மந்தரை.சூழ்ச்சிப்படலம்.21)**

யாருடனும் பகைகொள்ளாது இருந்தால் நாட்டில் போர் ஒழியும் அரசனின் புகழ் ஒழியாது என்பது பாடலின் பொருள்.

இப்போர் இல்லாத சுதந்திர உலகத்தை விரும்பும் சிந்தனையின் வெளிப்பாடாகவே காப்பியத்தலைவனான இராமனைக் கம்பர் படைத்துள்ளார். தனக்கு உரியநாட்டைத் தம்பிக்கு வழங்கிக் காடு செல்லத் துணிகின்ற கதைத்தலைவன் தன் பகைவனான இராவணனைப் போரில் வீழ்த்த உள்ள இடத்தில் அத்தகைய உள்ளத்தையே வெளிப்படுத்துகிறான். இராமன் இராவணனிடம் கூறுவதாக,

**"ஆளையாஉனக்கமைந்தனமாருதமறைந்த**
**பூளையாயினகண்டனைஇன்றுபோய்ப்போர்க்கு**
**நாளைவாவெனநல்கினன்நாகிளங்கமுகின்**
**வாளைதாவுறுகோசலநாடுடைவள்ளல்"**

**(யுத்த.முதற்போர்புரிபடலம் : 256)**

என்னும் பாடலைக் கம்பர் அமைத்துள்ளார்.' போருக்கு எனில் நாளை வா' என்பது பாடலின் கருத்து. போர் வேண்டாம் எனில் பகை ஒழிய உயிர் வாழலாம் என்பது பாடலின் குறிப்பு.

எனவே, கம்பர் காப்பியத்தில் தம் கருத்தாகவும் காப்பிய நாயகனின் உள்ளக் கருத்தாகவும் போர் அற்ற சுதந்திர வாழ்வையே முன் வைக்கின்றார்.

**சகோதரத்துவத்தின் மேன்மை**

கம்பராமாயணம் சகோதரத்துவத்தின் மேன்மையை உலகிற்கு உணர்த்த வேண்டி எழுதப்பட்ட காப்பியம் என்றே கூறிவிடலாம். கோசல நாட்டில் மலர்ந்து மணம் வீசும் சகோதரத்துவத்தை இராமன், இலக்குவன், பரதன், சத்ருக்கனன் ஆகிய நான்கு சகோதரர்கள் மூலம் கம்பர் காட்சிப்படுத்துகிறார். பரதனுக்காகத் தான் ஏற்க இருந்த அரசாட்சியைத் துறந்து இராமன் காடு செல்கிறான். இராமன் வந்து அரசபாரம் ஏற்கும்வரை நந்தியம் பதியில் தங்கி அரியணையில் அமராது பரதன் காத்திருக்கிறான். இலக்குவன் வாழ்க்கை இன்பங்களை ஒருத்து இராமனுடன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் அலைகிறான். இப்படிக் கோசல நாடு முழுவதும் சகோதரத்துவம் மலர்ந்து மணம் வீசக் காணலாம். இதில் இருந்து மாறுபட்டுச் சகோதரத்துவம் போற்றாத காரணத்தால் கிட்கிந்தாவும் இலங்கையும் வீழ்ச்சியைத் தழுவியதைக் கம்பர் குறிப்பால் உணர்த்துகிறார்.

இராமனின் சகோரதத்துவம் அயோத்தியில் தோன்றி ஆரண்யத்திலும், கிட்கிந்தையிலும் வளர்ந்து இலங்கையில் மணம் வீசக் காணலாம். வேடர்குலம், வானரர்குலம், அரக்கர்குலம் என்று வேறுபாடு நோக்காது அனைவரையும் சகோதரத்தால் தழுவும் கரம் இராமனுடையது.

**“குகனொடுமைவரானேமுன்புபின்குன்றுசூழ்வான்**
**மகனோடுமறுவரானேம்எம்முழையன்பின்வந்த**
**அகனமர்காதலையநின்னொடுமெழுவரானேம்**
**புகலருங்கானந்தந்துபுதல்வராற்பொலிந்தானுந்தை”**

**(யுத்த.விபீடணன்அடைக்கலப்படலம் : 146)**

என்பது கம்பனில் இடம் பெற்றுள்ள உலக சகோதரத்துவம் உரைக்கும் புகழ் பெற்ற பாடல். மனிதர்களிடையிலான வேறுபாடுகளைக் கடந்து உறவு கொள்வதன் மூலம் இராமன் புகழ் உயர்ந்தது என்பது குறிப்பு.

**மானுடம் என்னும் சொல்**

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மும்மைக் கருத்தை உள்ளடக்கிய ஒற்றைச் சொல்லாக ‘மானுடம்’ என்ற சொல்லைக் கம்பர் முன் வைக்கின்றார் என்று எண்ணத் தோன்றுகிறது.

**“தேறின னமரர்க்கெல்லாந்தேவராந்தேவரன்றே**
**மாறியிப்பிறப்பில்வந்தார்மானுடராகிமன்னோ**
**ஆறுகொள்சடிலத் தானு மயனுமென்றிவர்களாதி**
**வேறுளகுழுவையெல்லாம்மானுடம்வென்ற தென்றே”**

**(கிட்கிந்தா.நட்புகோட்படலம்: 146)**

என்பது பாடல். இராமன் மனிதனாகத் தோன்றி சடைமுடியில் ஆற்றைச் சூடிய இறைவன் முதலான அனைத்துத் தேவர்களையும் தன் மானுடப் பண்பால் வென்றான். எனவே,இது கடவுக்குஉரிய வெற்றி அல்ல மானுடத்தின் வெற்றி என்கின்றார் கம்பர்.

இதில் ஒலிக்கும் 'மானுடம்வென்றது' என்பது அனைவருக்குமான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தின் வெற்றி என்பதே பொருள்.

கம்பராமாயணத்தின் நிறைவுப் பாடல்கள் இராமன் முடி சூடியதை விவரிக்கின்றன. அதில் ஒரு பாடலில் உலக மக்களின் உணர்வுகளை,

**"ஒத்தமூ வுலகத் தோர்க்கு மூவகையி னுறுதி யுன்னில்**
**தத்தமுச் சியின்மேல் வைத்த தொத்ததத் தாம மௌலி"**

**(யுத்த.திருவடிசூட்டு படலம் : 146)**

என்பார் கம்பர். உலகத்தவர் யாவரும் தமது தலையில் முடியைச் சூட்டியதைப் போல் மகிழ்ச்சி அடைந்ததைக் கம்பர் குறிப்பிடுகிறார். இங்கு கோசல நாடு குறித்த இலட்சியக் கனவு நிறைவடைந்தது என்பதைக் கம்பர் மக்கள் மன உணர்வு வ்ழி வெளிப்படுத்துகிறார். கோசல நாடெங்கும் சுதந்திரமும் சமத்துவமும் சகோதரத்துவமும் மலர்ந்தது என்பது பாடலின் குறிப்பு.

**முடிவுரை**

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்கின்ற மும்மைச் சொல்லை வரலாற்றில் உலகம் அறிவதற்கு முன்பே அதன் ஆழ்ந்த பொருளைக் கம்பன் தமது காப்பியத்தில் உரைத்துள்ளான்.

கம்பன் படைத்த காப்பியமும் காப்பிய நாயகனும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போற்றும் பண்புடன் திகழக் காணலாம்.

கம்பராமாயணத்தைச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் மும்மைக் கொள்கையின் விவரிப்பாகவே கருதலாம்.

**துணை நூல்கள்**

- கோபாலகிருஷ்ணமாச்சாரியார்,வை.மு.,(உ.ஆ),கம்பராமாயணம்,உமா பதிப்பகம், சென்னை, 2006
- சாமி.சிதம்பரனார், கம்பன்கண்டதமிழகம், ஸ்டார்பிரசுரம், சென்னை. 1955.
- சாமிநாதசர்மா,வெ., சுதந்திரமுழக்கம், தமிழ்ப்பண்ணை, சென்னை, 1963.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 6. சாதிய அடக்கு முறைகளும் அதற்கான தீர்வுகளும் கருக்கு புதினத்தை முன்வைத்து

**முனைவர் செ.சாந்தி.**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்.
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூாி,சிவகாசி. 626124.

DOI 10.5281/zenodo.10724984

**Abstract :**

There is no evidence of caste differences in the period when the primitive people who lived in a hunting society hunted animals and burned them to eat. After the rituals of Yagya and Yajna appeared, some people who learned about the movement of the universe learned Shastra and Mantra tantras without engaging in labor and claimed to be the blessed children of God and convinced people that living in submission to them is the way to go to heaven. The king and the people who ruled the country believed in it, paid gifts and tributes, bowed down to them and allowed them to live. Divisions and differences began to take root among the people. Thus, the dark novel is written with the aim of bringing a new dawn to the lives of people who are trapped in the clutches of caste, degraded and marginalized.

**Key Words :** Garukku, Dalit Literature, Dalitism, Caste Oppression, Writer Bama,

## முன்னுரை

வேட்டைச் சமூகத்தில் வாழ்ந்த ஆதிக்குடிகள் மிருகங்களை வேட்டையாடித் தீயிலிட்டு ஆடிப்பாடி உண்டு வாழ்ந்த காலத்தில் சாதிய வேறுபாடு இருந்தமைக்கான சான்றுகள் காணக்கிடைக்கவில்லை. யாகம், யக்ஞம் என்ற சடங்குகள் தோன்றிய பின்னர், பிரபஞ்ச இயக்கம் குறித்து அறிந்து கொண்ட சிலர் உழைப்பில் ஈடுபடாமல் சாஸ்திரம், மந்திரம் தந்திரங்களைக் கற்றுத் தங்களைக் கடவுளின் அருள் பெற்ற பிள்ளைகள் என்று கூறிக் கொண்டும், அவர்களை அடிபணிந்து வாழ்வதே சொர்க்கத்திற்குச் செல்லும் வழி என்றவாறும் மக்களை நம்ப வைத்தனர். நாட்டை ஆளும் அரசனும் மக்களும் அதனை நம்பிப் பரிசுகள், காணிக்கைகளைச் செலுத்தி அவர்களுக்குப் பணிந்து அடி வருடி வாழத்தலைப்பட்டனர். மக்களிடையே பிரிவினைகளும் வேற்றுமைகளும் வேரூன்றத் தொடங்கின. இவ்வாறாக, சாதியின் பிடியில் சிக்கிச் சீரழிந்தவர்கள், விளிம்பு நிலைக்கு விரட்டப்பட்ட மக்களின் வாழ்வில் தாக்கத்தைப் புது விடியலை ஏற்படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட கருக்கு நாவலில் காணலாகும் சாதிய அடக்கு முறைகளையும் அதற்கான தீர்வுகளையும் எடுத்துரைப்பதே இதன் நோக்கமாக அமைகின்றது.

## நூலும் நூலாசிரியரும்

1992 ஆம் ஆண்டில் வெளிவந்த நாவல் கருக்கு.உற்று நோக்குதலால் எழுதப்பட்ட படைப்பாக இல்லாமல் உற்றதை எடுத்துரைக்கும் படைப்பாகவிளங்குகிறது. எதிர்காலம் குறித்த பயம் நிகழ்காலத்தைத் துரத்தத் தன்னுள் நிகழ்ந்த மாற்றங்களை முன்வைத்து இந்நாவலைப் படைத்திருப்பதாக முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். பற்பல விமர்சனங்களைக் கொண்டதாகிலும் “கருக்கு பாமா“ என்ற அடையாளத்தை தலித் இலக்கிய

வரிசையில் பெற்றுத் தந்ததை மறுக்க இயலாது. தீண்டாமை ஒரு பாவச்செயல். பெருங்குற்றம். அது தண்டனைக்கு உரியது என்றவாறு சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும் கூட தலித் இன மக்களின் மீதான அடக்கு முறைகளும் வன்முறைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன என்பதனைத் தன்னுடைய படைப்பின் வழி வெளிப்படுத்தியுள்ளார்.

**தலித்தியம் விளக்கம்**

நானில வர்ணப் பிரிவிற்குப் பின்னால் வைத்து எண்ணப்படுபவர்கள் சாதியற்றவர்கள், பஞ்சமர், அருணர், இழிகுலத்தோர், தீண்டத்தகாதவர், தாழ்த்தப்பட்டவர் என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டோர் தற்போது தலித் என்று அழைக்கப்படுகின்றனர். " ஆதிக்கச் சாதியினரால் ஏதோ ஒரு வகையில் தீண்டாமை ஒதுக்கல்களுக்கு உள்ளாகும் சாதிகளைச் சேர்ந்தவர்களை நாம் தலித்துகள் என்று வரையறுக்கலாம்" என்பது மார்க்சு தரும் விளக்கம் ஆகும்.(தலித் அரசியல், ப-107), மகாத்மா பூலே என்றழைக்கப்படும் ஜோதி பாபூலே என்பவர் தலித் என்ற சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தியுள்ளார்.தமிழகத்தில் தலித் என்ற சொல்லாட்சி தாழ்த்தப்பட்டவரைக் குறிப்பதாக உள்ளது. "தலித் என்பதைத் தமிழகச் சூழலில் தாழ்த்தப்பட்டோர் என்று அழைத்தலே பொருத்தமாகும்" என்கிறார் கோ.கேசவன் (தாழ்த்தப்பட்டோர் இலக்கியம், ப-3)

"தலித்தியம் என்பது தாழ்த்தப்பட்ட மக்கள் சார்ந்த அவர்களது பிரச்சனைகள், வாழ்க்கை அவலங்கள், அனுபவித்து வரும் கொடுமைகள் முதலானவைகளை முன்வைத்து அவற்றுக்கான தீர்வைச் சொல்லும் ஒரு இயல் என்பதாகக் கொள்ளலாம்"(பரமேஸ்வரன்.கு., தலித் இலக்கியம்,ப-9) "அடக்கப்பட்டவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள், வன்முறைகளுக்கு ஆளானவர்கள், பெண்கள் இவர்களை ஒட்டு மொத்தமாக தலித் என்ற பொதுச் சொல்லால் குறிக்கின்றனர்."( முனைவர் பத்மாவதி விவேகானந்தன், தலித் இலக்கியம், ஓர் பார்வை,தொகுதி -1.ப-15)இவற்றின் அடிப்படையில் தலித்தியம் என்பது ஆதிக்கச் சாதியினாரின் ஆதிக்க எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, தலித் ஒற்றுமை எனச் சில கூறுகளை உள்ளடக்கியது என்ற முடிவுக்கு வரலாம்.

**தலித் இலக்கியம்**

தலித் இலக்கியம் 19 ஆம் நூற்றாண்டில் மகாராஷ்ராவின் இலக்கியப் படைப்பாளர்களால் உருவாக்கப்பட்டது.சமூக அரசியல் பொருளாதார நிலைகளில் ஒடுக்கப்பட்ட தலித்திய மக்களின் வாழ்வில் நிகழும் அவலங்கள், சிக்கல்கள் முதலானவற்றை முன்னிருத்தி அம்மக்களின் அடிமைத்தனத்தை நீக்கி விடுதலைக்கு வித்திடுவது தலித் இலக்கியம் என்றழைக்கப்படுகிறது." சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் அடிப்படையிலமைந்த சனநாயக சோசலிசம், புதிய அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், இன்றைய புரட்சிகரத்திறன் ஆகியவை தலித் இலக்கியத்தின் சாராம்சங்களாக அமைகின்றன." (தலித் இலக்கியம், ப- 30) தலித்துகளின் விடுதலை, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை என்பதே தலித் இலக்கியத்தின் முக்கிய நோக்கமாக அமைகின்றது.

சமுதாயத்தின் தொற்று நோயாக சாதிக்கட்டமைப்பு அமைகின்றது. தொழிலைப் பிறப்பின் அடிப்படையில் தீர்மானிப்பது.தீட்டு, இரட்டைக் குவலை முறை, போலியான குற்றங்களைச் சுமத்துவது முதலானவைகள் தற்காலத்தில் தலித்துகளைத் துரத்தும் அவலங்களாகும்.காலம் காலமாக மண்ணுடன் பிணைந்திருக்கும் தலித் மக்களின் வாழ்க்கை விலங்குகளைக் காட்டிலும் கீழாய் அமைந்துள்ளது.இவர்களது குடியிருப்புகள் கூட பெரும்பாலும் ஊருக்கு வெளியே கடைக்கோடியில் இருப்பதனை இன்றும் காண முடிகிறது.இவை தவிர மிக நூதனமான வழிகளிலும் தலித்துகள் மீது வன்முறைகள் தினிக்கப்படுகின்றன.சாதியத்தின் வீரியம் நூற்றாண்டு பல கடந்தும் குறைந்தபாடில்லை.இவர்களுக்கு எதிரான ஒடுக்குமுறை உடல் ரீதியாகவோ பொருள் மற்றும் உளவியல் ரீதியாக இடையிறாது நிகழ்ந்து கொண்டிருக்கிறது.”தலித்துகள் மீது உளவியல் ரீதியாகத் தொடுக்கப்படும் தாக்குதல்களை வன்முறையாக உணர்ந்து கொள்ள முடியாதபடி பொதுசன உளவியலைச் சாதியம் கலங்கடித்திருக்கிறது.”(தமிழகப் பண்பாட்டுச் சூழல். ப-53)என்ற கூற்றும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கதே ஆகும்.

**ஓயாத வேலையும் பழையசோறும்**

பொழுது விடிந்தால் நாயக்கமாரு வீட்டுக்குப் போயி மாட்டுத் தொழுவம் பெருக்கி, சாணி சகதி அள்ளிப்போட்டு முந்தின நாள் மிஞ்சிப்போன சோறு, கொழம்பு வாங்கிட்டு வந்து அதனை அமிர்தமாக நினைத்து உண்ணும் வழக்கம் தலித்திய மக்களிடம் காலங்காலமாகத் தொடர்கிறது. மீந்து போனதை வாங்கிச் சாப்பிட்டாலும் அதைக் கௌரவக் குறைச்சலாகக் கருதாமல் ” நமக்குச் சோறு போடுற மகராசனுக அவுக இல்லைன்னா எப்பிடி நாம பொழைக்க முடியும்? பரம்பரை பரம்பரையா அவுக மேச்சாதி, நம்ம கீழ்ச்சாதின்னு இருக்குதுல்ல அதை மாத்த முடியுமா?”(கருக்கு,ப-19) அதையும் மீறி, சுள்ளி பொறுக்க,சாணி பெறக்கி எரு தட்டி வைக்க, தீப்பட்டி ஆபிஸ்க்குச் செல்ல, கடல புடுங்கி ஆய, ஈராங்க பொறக்க என்று கிடைக்கும் சின்னச் சின்ன கூலி வேலை செய்து கிடைக்கும் குறைந்த பணத்தில் குருனை அரிசி வாங்கி கஞ்சி காய்ச்சிக் குடிக்கின்றனர்.

வேலை இல்லாத போது காட்டுக்குள் சென்று விறகு பொறக்கச் சென்று மழையிலும் வெயிலிலும் பாடுபட்டாலும் காலு வயிறு கூழு கூட கிடைக்காத அவல நிலையே காணக்கிடைக்கின்றது. ”தலித்களுக்கு அடிப்படை உணவாகக் குருநாக் கஞ்சியும் கூழும் பயன்படுகிறது. அரிசிச் சோறு அரிய உணவாகவுள்ளது. வருமானம் குறைவதால் இவர்கள் வாழ்க்கையில் வறுமை சூழ்ந்துவிடுகிறது.எனவே இவர்களுடைய உணவு மிகவும் கடைநிலை உணவாக உள்ளது.”(பரமேஸ்வரன்.கு, தலித் இலக்கியம், ப- 38). பண்டிகைக் காலங்களில் மட்டும் உயர் சாதியினர் தருகின்ற உயிர் மற்றும் இறந்த மாட்டுக் கறி, பன்றிக் கறி உணவினை உண்ணுகின்றனர்.

**தீண்டாமையும் தீட்டும்**

1944 இல் நடைபெற்ற ஒடுக்கப்பட்ட வகுப்பு மாநாட்டில் அம்பேத்கர்,

> **“தீண்டாமையின் வேர் சாதியமைப்பில் இருக்கிறது**
> **சாதியமைப்பின் வேர் வருணாசிரமத்தில் இருக்கிறது**
> **வருணாசிரமத்தின் வேர் பார்ப்பனியத்தில் இருக்கிறது….”**
>
> **(தலித் அரசியல்,ப-133)**

என்றார். நாயக்கமாரு வீட்டுக்குப் போகும்போது அவர்களது புழங்கு பொருட்களையோ தலித்துகள் தொடக்கூடாது. அவர்கள் இருக்கும் பக்கத்தில் கூடப் போகக் கூடாது, ஓதுங்கியே நிற்கணும் மீறிப் போனால் தீட்டு என்கிற வழக்கமும் அவர்கள் வரும் வழியில் ஒதுங்கி நிற்பதும் தொடர்கிறது. கீழ்ச்சாதிக்காரர்கள் வாங்கித்தரும் பலகாரங்களைச் சாப்பிடும் உயர்சாதியினர் அதனைத் தொடாமல் கொண்டுவரச் செய்வது தீண்டாமையின் உச்சமாக உள்ளது. இதோடு, பள்ளிக்கூடத்திலோ பொது இடத்திலோ ஏதாவது திருட்டு, தப்பு நேர்ந்தால் உடனே கீழ்ச்சாதிக்காரங்க தான் காரணம் என்றுகூறி விசாரிப்பதும், தண்டனை கொடுப்பதும், வயது வித்தியாசம் இன்றி மரியாதை இல்லாமல் பேசுவது இன்றும் தொடரும் வழக்கமாய் உள்ளது. ”வயல் வரப்புல பாட்டி வேலை செய்யும் போது நேத்துப் பெறந்த சின்னப்பிள்ளை கூட அது நாயக்கமாரு சாதிங்கிறதுனாலே பாட்டியைப் பேரு சொல்லி மரியாதை இல்லாம கூப்பிட்டு வேலை ஏவும். (கருக்கு, ப-19) உயர்ந்த சாதிப் பெண்கள் தண்ணிய நாலு அடிக்கு ஒசரப் பிடித்து ஊத்த தலித் பெண்கள் வாய்க்கிட்ட வச்சி தண்ணி வாங்கி குடிப்பாங்க என்பதாகவும் பாமா பதிவு செய்துள்ளார்.

சாதியம் பொருளாதார, சமூகப் பண்பாட்டுத்தளத்தில் மட்டும் தனது இயங்குதலைக் கொண்டிருக்கவில்லை. மாறாக அதுவொரு நுட்பமான உளவியலையும் கட்டமைத்திருக்கிறது. எனது தலையை ஆயிரம் கால்கள் அழுத்தினாலும் எனது காலடியில் மிதிபடஇன்னும் ஒரு தலை மிச்சமிருக்கிறது என்ற திருப்தியைப் பலருக்குச் சாதியம் தந்து கொண்டே இருக்கிறது.எனவே சாதியத்தின் வடிவம், நிறம், உற்பத்தி நிலை மாறினாலும் சாதியம் தன் பிடியை இழந்து விடுவதில்லை.

**தொழில்**

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அந்நாட்டின் தொழில் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது.நாட்டிற்காக உழைக்கும் உழைப்பாளிகளை அமைப்பு சார்ந்த தொழிலாளர்கள், அமைப்பு சாரா தொழிலாளர்கள் என்று இரு வகையாகப் பிரிப்பர். அந்த வகையில் தலித் மக்களுக்குச் சொல்லிக் கொள்ளும் அளவிற்குப் பெரிய தொழில் ஒன்றும் இல்லை என்பதால் அவர்கள் எவ்வித அமைப்பும் சாராத நிலையிலேயே வேலிமுள்ளு, விறகு பிறக்குதல், பனைமட்டை, தென்னை மட்டைகளை எரிப்பதற்குப் பொறுக்குதல். காட்டு வேலைக்குச் செல்லுதல், கடல புடுங்க, கடல ஒடைக்குச் செல்லுதல் முதலான வேலைகளைக் காலை முதல் இரவு வரை செய்கின்றனர். இருந்தாலும் கூலி வெறும் 5

ரூபாய்க்கு மேல கிடைக்காது.சிலர் விடியல் காலையிலே தீப்பெட்டி ஆபிசுக்குச் சென்று இரவு 7 மணி வரை வேலை பார்த்து கிறுகிறுத்து வீடு திரும்புகின்றனர். "கோழி கூபிட எந்திருச்சு இம்புட்டுக்கான புள்ளகூட தீப்பெட்டி ஆபிசு பஸ்ஸில போய் மசங்குற வரைக்கும் வேல பாக்குதுங்க." (கருக்கு,ப-50) தலித் மக்கள் செய்யும் தொழில்களைத் தலித் படைப்பாளர்கள் பின்வருமாறு தங்கள் படைப்புகளில் பட்டியலிடுகின்றனர். பண்ணைத் தொழில், இழவுச் செய்தி சொல்லுதல் தப்பு அடித்தல், பிணம் எரித்தல், துப்புரவு மற்றும் செருப்புத் தைத்தல் இவையனைத்தும் பரம்பரைத் தொழிலாக கடைபிடிக்கப் படுகிறது என்பதும் இன்று வரை தொழில் முறையில் சாதிய அடக்குமுறை தொடர்கதையாக இருப்பதுதான் பெரும் அவலம்.

**பொழுதுபோக்கு**

தலித் மக்களுக்கென்று தனிப்பட்ட பொழுதுபோக்கு ஏதும் கிடையாது. அறியாப்பருவமுடைய சிறு குழந்தைகள் சிறு சிறு விளையாட்டுகளை விளையாடுவர் பொம்பள பிள்ளைங்க தாயம், நொண்டி, பன்னாங்குழி, தட்டாங்கல் விளையாட்டும் ஆம்பலபயலுக பம்பரம், செல்லாங்குச்சி, கோலிக்குண்டு விளையாடுகின்றனர்.எப்பவாவது ஓய்வு காலங்களில் சிலம்பம், இளவட்டக்கல் தூக்குவது, கபடி விளையாட்டு என்று ஆண்கள் மட்டும் பொழுதுபோக்கிற்காக விளையாடுவர். பெண்களுக்கென்று எவ்வித பொழுதுபோக்கு அம்சமும் கிடையாது."மத்த சாதிப்பிள்ளைக கம்மாக்கர வழியா சோடிச்சிக்கிட்டு சினிமாப் பாக்கப் போவாக. ஆனா எங்க தெருவுல பொம்பளைங்க யாரும் சினிமாவுக்குப் போகக் கூடாதுன்னு ஊர்ச் சட்டம். ஏன்னா பல சாதிப்பயலுக சினிமாக் கொட்டகையில எங்க சாதிப் பொம்பளப் பிள்ளைகள புடுச்சி இழுப்பானுகளாம். பெறகு மல்லுக்கெட்டு வந்துரும்." (கருக்கு,ப-50) தலித்துகள் கையால் தொடும் பொருட்கள் தீட்டாம், ஆனால் தலித் இனப்பெண்கள் கையைப் பிடித்து இழுப்பது மட்டும் ஆண்மையின் அடையாளம், உயர் சாதியின் பெருமை என்கிற நிலையை என்னவென்று சொல்லுவது. "சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்" என்ற பாம்பாட்டிச் சித்தர் வரிகளைக் கைக்கொள்வதே இங்கு சாலச் சிறந்தது.

**சமயம்**

தலித்துகள் பெரும்பாலும் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். அவர்கள் சாதிக்குள் மட்டும் வரிப்பிரித்து கிறிஸ்துமஸ், ஈஸ்டர் பண்டிகைகளைக் கொண்டாடி மகிழ்கின்றனர். இந்த இரண்டு பண்டிகையின் போது மட்டும் புதுத்துணி எடுத்துக் கொண்டாடுகின்றனர். ஆட்டம் பாட்டம், கும்மி, சடுகுடு விளையாட்டுடன் நன்ம வாங்குவதை முக்கியக் கடமையாகக் கருதுகின்றனர்.அன்று மட்டும் அசைவ உணவினைச் சமைத்து உண்ணும் நிலை காணப்படுகிறது.நல்ல நாட்களில் சமைக்கும் உணவினை செபம் செய்து முடித்த பிறகே உண்ணும் நிலை காணப்படுகிறது.

கிறித்தவ சமயத்தில் கன்னிப் பெண்கள் சிலர் கடவுளுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து கன்னியாஸ்திரி (சிஸ்டர்) ஆகும் வழக்கம் இன்றும் கூட நடைமுறையிலிருக்கிறது. மடத்தினுள் செல்லும் பெண்களில் பலருக்கு மூளைச்சலவை செய்யப்படுகிறது. அதனால் அவர்கள் சிஸ்டராகும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அவர்களும் சிஸ்டராகும் போது

கடவுளது வார்த்தைக்கு அடிபணிவேன், எளிமையாக வாழ்வேன், ஏழைகளுக்கு உதவுவேன் என்று வார்த்தைப்பாடு எடுத்துவிட்டு பின்னர் அந்த வாக்கினை மறந்து வசதியான வாழ்க்கையினை வாழும் முறையை ஆசிரியர் பதிவு செய்யத்தவறவில்லை. ”சும்மானாலும் பக்தி, துறவறம், பரிசுத்த ஆவி, தேவ அழைத்தல், கற்பு, தரித்திரம், கீழ்ப்படிதலுன்னு சொல்லிக்கிட்டு இவுக வாழுற வாழ்க்கையைப் பார்த்தா.....இன்னைக்கு சேசு வந்தார்னா அப்ப சொன்னதைவிட இன்னும் காரசாரமா கேப்பாரு” (கருக்கு,ப-86) வெறும் அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு ஏழை எளிய மக்களை அடக்கி, அவர்களிடம் பக்தி, விசுவாசம் அதுஇதுன்னு சொல்லி அடிமைகளாக்கி சொகுசு வாழ்க்கை வாழும் கன்னியாஸ்திரிகளின் போலித்தன்மையைத் தோலுரித்துக் காட்டியுள்ளார். சாதி பார்த்துப் பழகுதல், தாழ்ந்த சாதியினரைப் பார்ப்பது போல் தமிழ்க்காரங்களைப் பார்ப்பது போன்ற இழி செயல்கள் சமயச்சாயம் பூசிக்கொண்டு அரங்கேற்றும் நிலையே காணக்கிடைக்கின்றது. இதனை உணர்ந்ததாலே பொரியாரும் “மதம் மனிதனை மிருகமாக்கும், சாதி மனிதனைச் சாக்கடையாக்கும்“ என்றார்.

**தீர்வுகள்**

சாதி ஒழிய வேண்டும், எல்லாரும் எல்லாவும் பெரும் நிலையை அடைய வேண்டுமாயின் அதற்கு ஒரே தீர்வு கல்வி மட்டுமே.வரப்பு உயர நெல் உயரும் என்ற ஔவையின் வாக்கினைப் போல கல்வியறிவு உயர்ந்தால் மட்டுமே சாதி ஒழியும், சமூக மாற்றம் நிகழும்.சங்க நூலான புறநானூறும் கல்வியின் சிறப்பினைக் கூற விழையும் போது,

**“ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்**
**மூத்தோன் வருக என்னாது அவருள்**
**அறிவுடையான் ஆறு அரசும் செல்லும்”** ( புறம்-183)

என்றுரைக்கிறது. அரச தர்மமாகிய மூத்தவனுக்கே அரசுரிமை என்ற கட்டமைப்பினைக் கட்டுடைக்கும் இப்பாடல் சற்று சிந்திக்கத்தக்கது ஆகும்.இதனை அடியொற்றியே, “நாற்பாற் குலத்தின் மேற்பால் ஒருவன், கற்றில னாயின்----- கற்றோரை மேல் வரு கென்பர்” (நறுந்தொகை, பா- 37) சேரி மனிதர்கள் என்றவுடன் மரியாதை குறைவாக நடத்தும் போக்கு காணக்கிடைக்கிறது. அதுவே படித்தவர்கள் என்கிற விடயம் தெரியவரும் போது ஸ்டூல் கொடுத்து உட்கார வைத்து சார் சார் என்று அழைக்கும் மன மாற்றம் நிகழ்கிறது. பள்ளிக்கூடத்தில் கூட தலித் பிள்ளைகள் நன்றாகப் படித்தால் அவர்களிடம் ஆசிரியரும், மற்ற பிள்ளைகளும் விரும்பி வந்து இயல்பாகப் பேசும் நிலையைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.ஆக, சாதியற்ற சமுதாயம் மலர கல்வியாகிய வெளிச்சமே சாலச் சிறந்த கருவியாகும்.

**முடிவுரை**

தலித்தியம் என்பது ஆதிக்கச் சாதியினாரின் ஆதிக்க எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, தலித் ஒற்றுமை எனச் சில கூறுகளை உள்ளடக்கியது. தலித் இலக்கியம் 19 ஆம் நூற்றாண்டில்

மகாராஷ்ராவின் இலக்கியப் படைப்பாளர்களால் உருவாக்கப்பட்டது.காலம் காலமாக மண்ணுடன் பிணைந்திருக்கும் தலித் மக்களின் வாழ்க்கை விலங்குகளைக் காட்டிலும் கீழாய் அமைந்துள்ளது. ஓயாது வேலை செய்தாலும் கால் வயிறு கஞ்சிக்குக் கூட வழியற்ற நிலையும், தீண்டாமையும் தொட்டால் தீட்டு என்கிற போக்கும் தொடர்கதையாகத் தொடரும் அவலநிலையே காணப்படுகிறது. இந்த நிலையை மாற்றும் பேராயுதம் கல்வி மட்டுமே ஆகும்.

**துணைநூற் பட்டியல்**

1. பத்மாவதி விவேகானந்தன், தலித் இலக்கியம் ஓர் பார்வை,(திறனாய்வுக் கட்டுரைகள்)தொகுதி-1,

வள்ளி சுந்தர் பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை. முதற்பதிப்பு டிசம்பர் 2001.

2. பரமேஸ்வரன்.கு., தலித் இலக்கியம்.நல்நிலம் பதிப்பகம், சென்னை 17, முதற்பதிப்பு செப்டம்பர்

3. புலியூர்க்கேசிகன், (உ.ஆ) புறநானூறு, பா - 183

4. மார்க்ஸ்.அ, தலித் அரசியல், எதிர் வெளியீடு, பொள்ளாச்சி, முதற்பதிப்பு டிசம்பர் 2009.

5. தமிழகப் பண்பாட்டுச் சூழல், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்

மாநிலக்குழு, முதற்பதிப்பு நவம்பர் 2013.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 7. மீளுருவாக்கஞ் செய்யப்பட்ட கூத்துக்களில் மேற்கிளம்பும் பால்நிலைச் சமத்துவச் சிந்தனைகள் : ஓர் ஆய்வு

து. கௌரீஸ்வரன்,
விரிவுரையாளர், நுண்கலைத்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

DOI 10.5281/zenodo.10725017.

**Abstract :**

In Tamil culture, the local performing art of khoots is found in many varieties. These groups are gaining momentum in Tamil cultures even in modern times. The songs of these groups are mostly based on epic and mythological stories. Thus these groups are often studied as having absorbed patriarchal ideologies and rehabilitated them. At the same time, the social arena contributions of Kootsu who have avoided the patriarchal theme are considered very noteworthy in today's times. Therefore, activities that do not reject internal groups and free them from the occupation of patriarchal ideas have been taking place since 2002 in Batticaloa, Eelam, as a participatory research activity for group regeneration. In other words, the basic function of this revival is that the patriarchal song material is brought into question and regenerated and carried forward towards the modern age with the participation of those who learn the Kookut at the social level. Thus, the dialogues for gender equality have been very strong during these reforms. Thus, this article tends to highlight the ideas of gender equality that emerge in the re-created stories in Batticaloa's Seelamuna.

**Key Words**: Unchaining, discussion, feminism, equality, empowerment

**அறிமுகம்**:

மனிதகுலவரலாற்றில் மனிதர்கள் குழுக்களாக உணவுதேடி வாழ்ந்த காலத்தில் அக்குழுவினரைத் தலைமையேற்று வழிப்படுத்தியவர்களாகப் பெண்களே விளங்கினர். இவ்வாறு ஒவ்வொரு மனிதக் குழுமங்களையும் வழிப்படுத்திய ஆதித்தாய்மார்களை அக்குழுவினர் காலப்போக்கில் தெய்வங்களாக வழிபட்டனர் என்பர் ஆராய்ச்சியாளர். மனிதகுலத்தின் நீண்ட வரலாற்றுப் பயணத்தில் மனிதர்கள் நதிக்கரையோரங்களை அண்டி நிலையாக வாழத் தொடங்கிய காலகட்டத்திலிருந்து பெண்களிடமிருந்த தலைமைத்துவத்தை ஆண்கள் தம் வசமாக்கினர். இவ்வாறு அதிகாரத்தைத் தம்வசமாக்கிய ஆணாதிக்கம் தமது நலன்களுக்குரியவாறு பண்பாடுகளையும் அதற்கானவாழ்தல் முறைமைகளையும் கட்டமைக்கத் தொடங்கியது. இவ்வாறு கட்டமைக்கப்பட்ட பண்பாடுகளில் ஆணாதிக்கம் முதன்மையானதாகவும் பெண்களுக்கான இடம் இரண்டாவதாகவும் ஆக்கப்பட்டது. இதனையே குடும்பம், தனிச்சொத்துடமை, அரசு ஆகியவற்றின் தோற்றம் குறித்த பிரற்றிக் ஏங்கல்சின் ஆய்வுகள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

ஆண்களுக்கு முதலிடத்தையும் பெண்கள், மாற்றுப் பாலினத்தார் ஆகியோருக்கு அடுத்தடுத்த இடங்களையும் கொடுத்துக் கட்டமைக்கப்பட்ட நாகரிக காலப்பண்பாடுகள் அதன் இயல்பாகப் பால்நிலை ஏற்றத்தாழ்வு எனும் விடயத்தைக் கடத்துவனவாகத் தொடர்ந்து வந்துள்ளன. இந்தப் பால்நிலை ஏற்றத்தாழ்வை அடிப்படையாகக் கொண்டே உலகத்தின் மனிதப் பண்பாடுகளின் பல்வேறு கூறுகளும் கட்டி வளர்க்கப்பட்டு வந்துள்ளன.

**மரபுக் கலைகளும் பால்நிலை ஏற்றத்தாழ்வும்:**

இந்தவகையில் மனிதர்கள் கண்டுபிடித்துக் கட்டமைத்த கலை வடிவங்கள் பலவும் பால்நிலை ஏற்றத்தாழ்வினை அனுசரித்தே அமைந்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. அதிலுங் குறிப்பாக, உலகில் பழங்குடிகள் அல்லாத வர்க்கசமூகங்களாகப் பரிணமித்த மனிதப் பண்பாடுகளில் உருவாக்கம் பெற்ற மரபுக் கலைகளாக இனங் காணப்படுவவற்றில் பால்நிலை ஏற்றத்தாழ்வு வலுவாகப் பின்பற்றப்படுவதனைப் பார்க்கின்றோம். இக்கலைகளில் மிகப்பெரும்பாலும் பெண்களுக்கான இடம் மறுக்கப்பட்டதாகவே இருந்து வருகின்றது. பெண்கள் பார்வையாளர்களாக மாத்திரமே இருக்க அனுமதிக்கப்பட்டு வருகின்றார்கள். பெண்களுக்காக ஆண்களே வேடமிட்டு ஆடுகின்றார்கள். மரபுக் கலைகளின் அடிப்படைப் பண்புகளுள் ஒன்றாக இது காணப்படுகின்றது. மிகப் பெரும்பாலும் ஆண்களை மையமிட்டு உருவாக்கப்பட்டுள்ள மரபுக் கலைகளில் நிபுணத்துவமிக்க கலைஞனாக ஓர் ஆண் தன்னை நிலைப்படுத்த அவன் பெண் வேடமிட்டு ஆடிப் பெயரெடுக்க வேண்டும் என்ற நியதி பின்பற்றப்படுவதனைக் காண்கின்றோம். ஒட்டுமொத்தத்தில் மரபுவழிக் கலைகளில் பெண்களுக்கான இடம் மறுக்கப்பட்டதாகவே இருந்துவருகின்றது.

இதேபோல் மிகப்பெரும்பாலான மரபுவழிக் கலைகளின் பாடுபொருள் ஆண்களால் ஆக்கப்பட்டவைகளாகவும், ஆணாதிக்கநலன் சார்ந்தவைகளாகவும் இருப்பதனையுங் காண்கின்றோம். ஆணாதிக்க, வர்ணப்பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்ட இதிகாச, புராணீகக் கதையாடல்களைப் பாடுபொருளாகக் கொண்டனவாகவே தென்னாசியச் சூழலில் மரபுவழிக் கலைகள் விளங்கிவருகின்றன.

இத்தகைய காரணங்களால் மரபுவழிக் கலைகளை நவீனகாலத்தில் காலங்கடந்த பாரம்பரியக் கலைகளாகவும், நூதன சாலைக்குரிய கலைகளாகவும், அருகிவரும் தன்மை கொண்ட கலைகளாகவும் நவீன ஆய்வறிவாளர் வியாக்கியானஞ் செய்துள்ளனர். இத்தோடு இக்கலைகளிலுள்ள ஆற்றுகை நுட்பங்களை ஆய்ந்தெடுத்து நவீன கலையாக்கங்களில் பயன்படுத்தவும் எத்தனித்தனர்.

இவ்விதமாக நவீன காலத்தில் பல்கிப் பெருகிய நவீன நடுத்தர வர்க்கத்தினரைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஆய்வறிவாளர்களும் கலைஞர்களும் நகர்மையப்பட்டு இயங்கியவாறு மரபுவழிக் கலைகளைக் காலங்கடந்தவையாக, அருகி வருபவையாக மதிப்பிடுகின்ற சூழலில், இதற்கு மாறாக உள்ளூர்களில் மரபுவழிக் கலைகள் வீரியத்துடன் அதன் இயக்கத்தை நிகழ்த்தி வருவதனையும் காண்கின்றோம். நவீன யுகத்திலும் உள்ளூர்களில் இதிகாச, புராணீகக் கதைகள் ஆடப்படுகின்றன இதன் வழியாக உள்ளூர்களில் உருவாகும் புதிய தலைமுறைகளுக்கு ஆணாதிக்க வர்ணப்படிநிலை நியமங்கள் மீண்டும் மீண்டும் கடத்தப்படுகின்றன. இந்த எதார்த்தமான நிலைமைகளின் புரிந்துகொள்ளலின் பின்புலத்திலேயே உள்ளூர்ச் சமூகங்கள் மத்தியில் சென்று பங்குகொள் ஆய்வுச் செயற்பாடுகள் வாயிலாகக் காலத்திற்கு ஒவ்வாத கதையாடல்களைக் கலைகளுக்கூடாக

மீளமீள நிகழ்த்தி வரும் பண்பாட்டைக் கேள்விகளுக்குள்ளாக்கி மீளுருவாக்கம் செய்யும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**கூத்துமீளுருவாக்கம்** :

காலனிய நீக்கத்திற்கான ஆய்வறிவு அனுபவங்களின் புரிந்து கொள்ளலுடன் இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சீலாமுனைஎனும் ஊரிலுள்ள மரபுவழிக் கூத்துக் கலைஞர்களுடன் இணைந்து இந்தமீளுருவாக்கத்திற்கான முன்னோடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையின் விரிவுரையாளரான சி.ஜெயசங்கர் அவர்களின் முதுதத்துவமாணிப் பட்டப்படிப்பிற்கான ஆராய்ச்சி நடவடிக்கையாக 2002-ஆம் ஆண்டளவில் இது நடைபெற்றது. பல மாதங்களாகத் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்கள், வாதவிவாதங்கள் எனப் பல வழி முறைகளுடாக உள்ளூர்க் கலைஞர்களுடன் இவ்வேலை த்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதனூடாக உள்ளூர்க் கலைஞர்கள் தாம் ஆடும் கூத்துக்களின் பாடுபொருள் பெண்களுக்கு எதிரானதாகவும், விளிம்புநிலைச் சாதிகளுக்கு எதிரானதாகவும், ஆணாதிக்கக் கருத்தியல்களை உரமூட்டி வளர்ப்பனவாகவும் இருக்கின்றன என்பதை ஆய்ந்தறிந்ததுடன் இதற்கு மாறாகப் பால்நிலைச் சமத்துவத்தையும், மனிதர்களுக்கான நியாயத்தை வலுப்படுத்துவதனையும் இலக்காகக் கொண்டு கூத்துப் பனுவல்களின் பாடுபொருளை மாற்றியமைத்தார்கள். இப்பனுவல்களில் பால்நிலைப் பாராபட்சங்களுக்கு எதிரான குரல்கள் மேலோங்கி ஒலிக்கத் தொடங்கின.

இந்த வகையில் 2002-ஆம் ஆண்டளவில் வழமையாக ஆடப்படும் தருமபுத்திரன் எனும் வடமோடிக் கூத்துப் பனுவல் கட்டவிழ்க்கப்பட்டு அதன் பாடுபொருள் கேள்விகளுக்குட்படுத்தப்பட்டு அக்கூத்து சிம்மசனப் போர் என்று மீளுருவாக்கப்பட்டிருந்தது. இதில் வரும் துரோபதிபாத்திரம் தனக்கு நேர்ந்த அநீதிகளையிட்டுக் கேள்வி கேட்கின்ற பாத்திரமாக மீளுருவாக்கப்பட்டிருந்தார். அதாவது தருமன் சூதாட்டத்தில் துரோபதியைப் பந்தயப் பொருளாக வைத்து ஆடித் தோற்றதன் பின்னர் துரோபதையிடம் இந்தச் செய்தியைத் தூதுவன் சென்று கூறுகின்றான். அப்போது துரோபதை மிகுந்த கோபங் கொண்டவளாக மாறி

**என்ன சொன்னாயடா ஏது சொன்னாயடா**
**மூடா அட மூடா**
**எந்த அரசருமே மனைவி தனை வைத்து ஆடுவரோ சூது**
**சொல்வாய் அடாசொல்வாய்**
**தன்னைத் தோற்றபின்புஎன்னைத் தோற்றாரோதான்**
**சொல்வாய் அடாசொல்வாய்**
**என்னைத் தோற்றபின்புதன்னைத் தோற்றாரோதான்**
**கேளாய் கேட்டுவாராய்”**

என்று பதிலுரைத்துப் பாடுகின்றாள். இது மரபுவழிக் கூத்துப் பனுவலில் இருப்பதில்லை மரபுவழியாகத் தருமனின் செயலைக் கேள்விக்குட்படுத்தாத கணவனுக்குக் கட்டுப்பட்ட பெண்ணாகவே துரோபதைச் சித்திரிக்கப்படுவாள். அதாவது கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் எனும் ஆணாதிக்கக் கருத்தியலுக்குக் கட்டுப்பட்டு வாழுவதற்கு வலியுறுத்தும் பாத்திரமாகவே மரபுவழிக் கூத்துக்களில் துரோபதை கட்டமைக்கப்பட்டிருந்தார். ஆனால் மீளுருவாக்கப்பட்ட பனுவலில் தனது கணவன் செய்தது பிழை என்று பால்நிலைப் பாராபட்சத்தை வலியுறுத்தும் முற்போக்குக் குணாதிசயத்தை வெளிக்காட்டும் பெண்ணாகத் துரோபதி சித்திரிக்கப்பட்டிருக்கிறார். இதனூடாக மரபுவழிக் கூத்து சமகாலத்திற்கேற்ப தகவமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம் இத்தகவமைப்பிற்குப் பால்நிலைச் சமத்துவச் சிந்தனைகளின் செல்வாக்கு அடிப்படையாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து 2004-ஆம் ஆண்டில் வாளவிமன் நாடகம் என்றுஅறியப்படும் வடமோடிக் கூத்துப் பனுவல் உள்ளூர்க் கலைஞர்களினால் கட்டவிழ்க்கப்பட்டு மீளுருவாக்கப்பட்ட போது அங்கே தந்தைமார்களான கௌரவரும் பாண்டவர்களும் தமது இருப்பிற்காகத் தங்களது இளம் பிள்ளைகளையே போரிற்கு அனுப்பிய விதம் எடுத்துக் காட்டப்படல் வேண்டும் என்பதும் இதில் பெண் பாத்திரங்களுடாகப் போருக்கு எதிரான குரல்கள் மேலோங்க வேண்டும் என்பதும் உள்ளூர்க் கலைஞர்களால் உணர்ந்து கொள்ளப்பட்டு அதற்கேற்ப இக்கூத்து அபிமன்யு இலக்கணன் வதம் என்று மீளுருவாக்கஞ் செய்யப்பெற்று ஆற்றுகை நிகழ்த்தப்பட்டது. இதில் வரும் அபிமன்யுவின் மனைவியான உத்தரை வழமையான பெண் கூத்தர்களைப் போன்று தன்னை அறிமுகப்படுத்தாது

**“வந்தாள் இதோஉத்தரையாளும் - நல்ல**
**நிமிர்ந்தநடையுடையாள் தெளிந்தமொழியுடையாள்**
**வாறாள் இதோஉத்தரையாளும்”**

**என்று அறிமுகஞ் செய்தாள் இத்துடன் நில்லாது,**

**“மனிதர்களை மனிதர் கொல்லும் வாழ்க்கைதன்னைவெற்றியென்றோம்**
**மனிதருடன் மனிதர் வாழும் வாழ்க்கையல்லோவெற்றியாகும்”**

என்று சமகாலப் பெண்ணிலைவாத அறைகூவலைப் பாடுகின்றாள். தனது துணைவனான அபிமன்யு போர்க்களம் போவதனை எதிர்த்துப் பின்வருமாறு போருக்கு எதிராகக் குரல் கொடுக்கிறாள்.

**“மெத்தத் துணிந்தமனமே உன் வீரம் காட்டநேரம் இதுவோ!**
**சித்தம் குழம்பிநீயும் ஏகாதேபோர்க்களமே - 2**
**இந்த வேளை என் பக்கம் இருப்பீர் என் பிராணநாதா”**

இவ்வாறாக இதன் பின்னர் மீளுருவாக்கஞ் செய்யப்பெற்றுள்ள "சீதை சூர்ப்பனகை வதை", "அல்லியின் எதிர்வாதம்", "சுபத்திரைகல்யாணம்", "சீதையின் துயரம்" முதலிய கூத்துப் பனுவல்களில் பால்நிலைச் சமத்துவத்தினைவலியுறுத்தும் கருத்துக்களும் அதற்கேற்ற பாடல்களும் ஆக்கப்பட்டு அவை ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டில் பெண் பாத்திரங்களுக்குப் பெண்களே ஆடும் நிலைமை வலுவாக்கஞ் செய்யப்பட்டிருந்தது. நாடகஅரங்கில் ஆர்வத்துடன் ஈடுபடும் உள்ளூர்ப் பெண்கள் இதில் இணைத்துக் கொள்ளப்பட்டு இக்கூத்துக்கள் ஆடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**முடிவுரை:**

இவ்வாறாக கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வினூடாக பால்நிலைச் சமத்துவச் சிந்தனைகள் உள்ளூர் மட்டத்தில் உரையாடலுக்கும் பிரயோகத்திற்கும் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. விசேடமாக ஐம்பது வருடங்களைக் கடந்த மூத்த தலைமுறையினைச் சேர்ந்த உள்ளூர்க் கலைஞர்கள் பால்நிலைச் சமத்துவச் சிந்தனைகளைக் கூத்துப்பனுவல்களை மீளுருவாக்கஞ் செய்த நடவடிக்கையூடாக நன்கு விளங்கிக் கொண்டதும் அதன்படி கூத்துக்களை மீளுருவாக்கி ஆடுவதில் ஆர்வஞ்செலுத்தி வருவதும் முக்கியமான சமூக மாற்றமாக அவதானிக்கப்பட்டுள்ளது. உள்ளூர்க் கூத்துக்களின் மீளுருவாக்கம் என்பது உள்ளூர் மட்டத்தில் பால்நிலைச் சமத்துவச் சிந்தனைகளைப் பிரயோகத்திற்குக் கொண்டுவரும் நடவடிக்கையாக மேற்கிளம்பி நிற்கின்றது.

**சான்றாதாரங்கள்** :


- "சிம்மாசனப்போர்" மீளுருவாக்கியவட மோடிக் கூத்துப் பனுவல் - கையெழுத்துப் பனுவல் - எழுதியவர் ஏட்டண்ணாவியார் - செ.சிவநாயகம் (குழுநிலைக் கலந்துரையாடல்கள் ஊடாக ஆக்கப் பெற்ற பனுவல்)
- "அபிமன்யு இலக்கணன் வதம்" வடமோடிக் கூத்துப் பனுவல் - கையெழுத்துப் பனுவல் - எழுதியவர் ஏட்டண்ணாவியார் - செ.சிவநாயகம் (குழுநிலைக் கலந்துரையாடல்கள் ஊடாக ஆக்கப் பெற்ற பனுவல்)

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 8. தொகை இலக்கியங்களில் இடம்பெறும் சமூகச்சிந்தனைகள்

**முனைவர் கு.சுபா**
கௌரவ விரிவுரையாளர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி.

DOI 10.5281/zenodo.10725033.

**Abstract :**

Literature blossoms out of life. Sangam literature is one of the various literatures that highlight the antiquity and excellence of ancient times. Such literatures reveal the psychological nature of Tamils. Sangam literature is the expression of the realities, consumptions, thoughts and wishes of the people of the Sangam period in their lives. This research paper aims to take the social thoughts that are present in the Sangam literature to the society.

**Key Words :** Sangam literature – Relatives – society -

## முன்னுரை

இலக்கியம் என்பது வாழ்க்கையிலிருந்து மலர்கிறது. பண்டைய காலத்தின் தொன்மையினையும், மேன்மையினையும் எடுத்துக் காட்டும் பல்வேறு இலக்கியங்களுள் ஒன்றாக, சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. அத்தகைய இலக்கியங்கள் தமிழரின் உளஇயல்புகளை வெளிக்காட்டுவனவாக அமைகின்றன. சங்க கால மக்கள் தங்கள் வாழ்க்கையில் கண்ட உண்மைநிலைகள், நுகர்ச்சிகள், எண்ணம், விருப்பம் போன்றவற்றை எழுத்துருவத்தில் வெளிக்காட்டுவது சங்க இலக்கியமாகும். சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகையில் இடம்பெறும் சமூகச்சிந்தனைகளை சமுதாயத்திற்கு எடுத்தியம்பும் நோக்கில் இவ்ஆய்வுக்கட்டுரையானது அமைகின்றது.

## சமூகம்

சமூகம் என்பது சமூக உறவுகள் அனைத்தையும் வெளிக்காட்ட வல்லதாகும். தங்களைப் பேணிக்காத்துக் கொள்வதற்கும் நிலைநிறுத்திக் கொள்வதற்கும் ஒன்றுபட்டு வாழும் மக்கட் குழுவானது ‘சமூகம்’ எனப்படுகிறது.

> **“இனக்குழுச் சமுதாயம் அழிந்து அரசு என்னும் நிறுவனம்**
> **கட்டமைந்த காலம் சங்ககாலம்”**

என நா.வானமாமாலை குறிப்பிட்டுள்ளார். சமூகத்தின் தேவைகருதிப் பண்பாட்டை மனத்தில் கொண்டு மனிதன் சமூகத்திற்கு ஆட்படுகிறான். மனிதனின் செயல்பாடுகளினால் பெருமையுறும் வண்ணம் சமூகம் அவனை முழுமையாக இயக்குகிறது. பல மனிதர்கள் சேர்ந்த கூட்டமைப்பு சமூகமாகும். சமூகம் என்பது பண்பாட்டை வளர்க்கும் களமாகும். எந்த உயிரும் பிற உயிர்களின் சார்பின்றி வாழ்தல் இயலாது. மனிதனும் பிறப்பிலிருந்தே, பிற உயிர்களைச் சார்ந்து வாழ்வதை இயல்பான பண்பாகப் பெற்றுள்ளான்.

சமூகத்தின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் அதன் உறுப்பினர்களே காரணமாகின்றன. உணவு தேடுதல், புறப்பகையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுதல், இனப்பெருக்கம் செய்தல்

ஆகிய இன்றியமையாத செயல்கள் மனிதனுக்குக் குடும்பம், சமூகம் போன்றவற்றில் மூலம் கற்று தரப்பட்டுள்ளது.

"சார்லசு டார்வின் கிரிகோர் மெண்டல் ஆகிய இருவரும் கண்டறிந்த அறிவியல் கோட்பாடுகள் சமூக வளர்ச்சி காரணிகளைத் தெளிவாக்கிக் கொள்ளப் பயன்படுகின்றன. உயிரினங்கள் இனக்குழுவின் மரபு வழியில் பல படிமுறை மாற்றங்களைப் பெறக் கூடியன என்றும் இயற்கைச் சூழலுக்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்ளவும், இயற்கையோடு போராடவும் வல்ல உயிரினம் வாழுமென்றும் டார்வின் கருதினர்" எனும் கூற்றின் மூலம் மனிதன் ஒரு சமூக விலங்கு ((Man is a Social Animal)) எனக் கருதப்படுவது உள்ளுதற்குரியது.

**சமூகப் பின்னணிகள்**

சங்ககால நிகழ்வுகள் யாவற்றிலுமே வீரத்தின் தன்மை பரவியிருந்துள்ளது. மேலும் இல்லறத்தை திறமையோடும் முறையோடும் கருத்தொருமித்து நடத்துதலை உயர்வானதாகக் கருதியதை,

**"மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு மருவின்**
**இனியவும் உளவோ"- (குறுந் -322)**

எனும் அடிகள் உணர்த்துகின்றன. இல்வாழ்வு முறைக்கு செல்வம் பெறுவதற்காகச் சென்றிருக்கும் தலைவன், நோயின்றி நன்றாகத் திரும்பிவரப் பிராத்தனை செய்யும் உள்ளன்புமிக்க தலைவியின் அன்பை,

**"ஆய்நலம் தொலையினும் தொலை**
**நோயிலாராக நம் காதலர்" - (அகம் -115)**

எனும் அடிகள் வெளிப்படுத்துகின்றன.

நெல் விளைந்து, இரவலர் வருத்தம் போக்க வேண்டும் என்பதலிருந்து இரவலரையும், இதயத்துள் வைத்து இறையிடம் வேண்டும் சமூகப் பண்பும் இங்ஙனம் புலப்படுகின்றது.

**"நல்லோர் குழிஇய நாநவில் அவையத்து**
**வல்லராயினும் புறம் மறைத்துச் சென்றோரைச்**
**சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கு**
**நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத் தொழுக்கமே"**
**- (மலைபடு - 77-80)**

என்றளவில் மன்னன் துணை நிற்கும் சான்றோர்கள், மக்கள் நலம் காக்கும் வல்லமையுடன் அரசனை வழி நடத்துவோராய் வாழ்ந்துள்ளனர். மக்களின் வாழ்க்கையானது. சமூகப் பின்னணிகளுடன் இணைத்துக் காட்டப்பட்டுள்ளன. மேலும், சங்க இலக்கியங்களில், "ஆற்றுப்படை நூல்கள் மிகப்பெரிய சமுதாய மாற்றத்தைக் காட்டும் பாடல்கள் அடங்கியதாய்

உள்ளன" என்ற பே.மாதவையன் கூற்றினைப் பார்க்கும் போது, சமூகப்பின்னணிகளின் ஓர் அங்கமாய் ஆற்றுப்படை இலக்கியங்கள் இருந்த பாங்கு விளங்குகிறது.

பண்டைக்காலத்தில் ஏறுதழுவி ஏற்றினை அடக்கிவெற்றி கொள்ளும் ஆண்மகனையே, ஆயர்குலமகள் மணம் புரிவாள். அஞ்சும் ஆண்மகனை இம்மையில் மட்டுமின்றி, மறுமையிலும் மணம் செய்யமட்டாள் என்பதலிருந்து தமிழ்மக்களின் மணமுறை, வீரத்தின் பின்னணியில் மலர்ந்த விதத்தை கலித்தொகை வழி அறியமுடிகிறது. புலவர்கள் நாட்டுப்பணியில் அக்கறையோடு இருந்து தம்மைப் போன்று, பிறபுலவர்களின் நலத்தையும் காத்துள்ளனர் என்பதை தொகை நூல்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

**சமூக உண்மைகள்**

காலாட்படை, யானை, குதிரை, தேர் என எத்தனை படைகள் இருப்பினும் ஒரு அரசாட்சியின் வெற்றியைத் தூக்கி நிறுத்துவதாய் இருப்பது அரசின் அறநெறியே என்ற சமூக உண்மைநிலையினை,

**"கூலம் பகர்நர் குடிபுறந் தராஅ**
**குடிபுறந் தருநர் பார மோம்பி**
**பூத்தன்று பெரும் நீ காத்த நாடே"**

**-(பதி.ப-13-22)**

எனும் அடிகள் உரைப்பதுடன், மக்களை மன்னன் பாதுகாக்கும் வழியிடத்து, நாடானது வளம் பெற்று பெருமை விளங்கும் என்ற நிலையையும் சுட்டிக் காட்டுகின்றன. சோழமன்னன் கரிகாலனின் சிறப்பை,

**"காடுகொன்று நாடாக்கிக்**
**குளந்தொட்டு வளம் பெருக்கிய" - (பட்.பா-283-284)**

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன. சேரன் தன் தொண்டி நகர கோட்டை வாயிற்கதவில் மூவன் என்பானை வென்று, அவன் பல்லை பதித்து வைத்தான் என்ற வரலாற்று உண்மையினை பொய்கையார் மெய்ப்பித்துள்ளார். கோசர்குலப் பெண்ணை, மாம்பிஞ்சிற்காகக் கொன்ற குறுநிலமன்னன் நன்னன் பற்றிய செய்தியை,

**"மண்ணியச் சென்ற ஒள்நுதல் அரிவை**
**பெண்கொலை புரிந்த நன்னை போல"**

**- (குறுந் - 292)**

எனும் அடிகள் தெளிவாக்குகின்றன. தம் குலப்பெண்ணின் இறப்பிற்காக நன்னனின் காவல் மரத்தை அழித்து அவனைப் போருக்கு அழைத்த கோசரின் வஞ்சகத் திறனை,

**"மகிழ்நன மார்பேவெய்யையால் நீ**
**அழியல் வாழி தோழி நன்னன்**

**நறுமா கொன்று ஞாட்பில் போக்கிய**
**ஒன்றுமொழிக் கோசா கோல,**
**வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே”**

**- (குறுந் - 73)**

எனும் பாடலடிகள் விளக்குகின்றன. காவல் மரமானது ஆண்மையின் வீரத்தின் அடையாளமாகப் பார்க்கப்பட்டுள்ளது. மேலும்,

“காவல் மரத்தினை வெட்டி வீழ்த்திய வெற்றி பெற்ற அரசர்கள், அதன் அடிமரத்தைக் கொண்டு, தங்கள் படைக்குரிய இசைக்கருவியான, முரசினை செய்து கொள்வது ஒரு பெருமைக்குரியப் பொருளாகக் கருதப்பட்டது”

என்ற உண்மையை சங்ககால வாழ்வியல் எனும் நூலில் காணும் போது, தொகை இலக்கியங்களின் மேன்மை வெளிப்படுகின்றது.

**சமூகச்செயற்பாட்டு சிந்தனைகள்**

தலைவனானவன், தன்னைப் போன்று தம் மண்ணின் மக்களைக் காக்கும் நிலையை,

**“தன்னுயிர் போலத் தழீஇ உலகத்து**
**மன்னுயிர் காக்கும் மன்னன்”**

**- (கலித் - 143)**

என்னும் அடிகள் முன்னிருத்துகிறது.

**“பகுத்தூண் தொகுத்த ஆண்மைப்**
**பிறர்க்கென வாழ்தி நீ ஆகன் மாறே”**

**- (பதி.பத் -38)**

எனப் பிறர் நன்மைக்காக வாழ்வது, ஆண்மையின் அடையாளம் என்பதை இப்பாடலடிகள் ஆணித்தரமாய் உரைத்து நிற்கின்றன.

கல்விக்கான அடித்தளத்தை அறிவுமிக்க புலவர்கள் வாயிலாக அவர்களுக்கு வேண்டியவற்றையும், தாம் விருப்பப்படுவதையும் அளித்து ஆதரித்து, அறிவு நலம் காத்த சமூகச் செயற்பாடுகளை பதிற்றுப்பத்து பாடல்கள் வெளிக்கொணர்கின்றன.

**“பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய**
**சான்றோர் பாலர் ஆப**
**சாலார் சாலார் பாலர் ஆகுபவே”**

**- (புறம் - 218)**

எனும் பாடல் சான்றோர்கள் எங்கெங்கு இருப்பினும், அறிவுடையோர் அவரது பக்கமே இருப்பர். சான்றாண்மை இல்லாதவர் தீயவர் பக்கமே இருப்பார்கள். இது பொன், பவளம், முத்து போன்றவை எங்கெங்கோ தோன்றினும், ஒன்றாய் சேர்ந்து மாலையாகுவது போலச் சான்றோர் செயற்பாட்டை விளக்குவதாக அமைகின்றது.

**சமூகப் பழக்கவழக்கங்கள்**

கற்பு, கல்வி, ஒழுக்கம் உள்ளிட்டவை இருபாலர்க்கும் பொதுவாக இருந்துள்ளன. மகளிரும் மன்னரிடத்து அறிவுறுத்தும் உரிமை மாண்பு அளிக்கப்பட்டிருந்தது. அரசர்களுக்குள் அறப்போர் நடந்துள்ளன. அவர்கள் பிறகலைகளிலும் ஆர்வம் கொண்டிருந்தனர். நெய்தல்நில மக்கள் புளிக்கறி, மீன்சோறு உண்ணும் வழக்கத்தை பெற்றிருந்தனர். பாணர்கள் பலாக்காய்கள் தொங்குவதுபோல இசைக்கருவிகளைச் சுமந்து சென்றுள்ளனர்.

**"காழ்வரை நில்லாக கடுங்களிற் றொருத்தல்**

**யாழ்வரைத் தங்கி யாங்கு"**

**- (கலித் -1)**

எனும் அடிகளின் மூலம் இனிய யாழிசையால், மதம் பிடித்த யானையை அடக்கினர் என்றறியப்படுகிறது. வாணிபப் பொருட்களை பொதி மூட்டைகளாகச் சுமப்பதற்கு எருது, கழுதை போன்ற விலங்குகள் பயன்பட்டுள்ளதை,

**"அணர்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்" - (பெரும்.பா-80-81)**

என்ற அடி சுட்டுகின்றது. திருப்பரங்குன்றத்துக் கோயிலில் ஓவியச்சாலை அமைந்திருந்ததை பரிபாடல் வெளிக்காட்டியுள்ளது. **"பாம்பின் சட்டை மூங்கினில் உரித்த மெல்லியத்தோல் புகை, பால்நுரை போன்றவை போன்று ஆடைகளை அணிந்த விதத்தையும், அருவிநீர் வீழ்ச்சி போன்று தெளிந்த வெண்ணிற ஆடை அணிந்ததையும், கொட்டைக் கரைய பட்டுடை நல்கி"** என்பதன் மூலம் பட்டாடை நெய்யப்பட்டது குறித்த கருத்துக்கள் பொருநராற்றுப் படையில் இடம் பெறுதலை அறிய முடிகிறது. குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி அணிவித்தது போன்ற,

**"பனையோலையில் உணவு கோடல்"**

**- (புறம் -177)**

**"தாழியிட்டு பிணத்தை புதைத்தது"**

**- (புறம் -2381)**

பழக்கவழக்கங்களைத் தொகை பாடல்கள் வாயிலாக உய்த்துணர முடிகிறது.

**முடிவுரை**

சமூகம் என்பது சமூக உறவுகள் அனைத்தையும் காட்டவல்லது. சமூக வளர்ச்சிக்கும், தோல்விக்கும் அதன் உறுப்பினர்களே காரணமாக அமைகின்றனர். அறிவுமிக்க புலவர்களின் வாயிலாக சமூக உறுப்பினர்களுக்கு வேண்டியவற்றையும், விருப்புவதையும் அளித்து, ஆதரித்து அறிவுநலம் காத்த சமூகச் செயற்பாடுகளையும், அத்தகு சமூகச்செயற்பாடுகளில் வெளிப்படும் சிந்தனைப் போக்குகளையும் எட்டுத்தொகைப் பாடல்கள் மொழிந்துள்ளன.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 9. பனிமலர் நாவலின் பெண்களின் நிலை

முனைவர் ஸ். சில்வியா ஜூலியட்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

DOI 10.5281/zenodo.10725038.

**Abstract :**

Until the twentieth century, women continued to suffer oppression in the name of tradition. Women's patience was the basis for maintaining the family. But her life was not complete. There were violences like sleeping after her husband and writing first, eating only after her husband ate, giving up to her husband even if he didn't, and living in subjugation to men. This article explores how women in Panimalai Budinum, despite the barriers, are overcoming them and working with feminist thinking.

**Key Words :** Novel – Women’s Literature – Feminism

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் வரை பெண்கள் மரபின் பெயரால் அடக்குமுறைகளைத் தொடர்ந்து அனுபவித்து வந்தனர்.குடும்பத்தைக் கட்டிக் காப்பதற்கு பெண்ணிடம் இருக்கும்பொறுமை அடிப்படையாக அமைந்தது. ஆனால் அவள் வாழ்வு நிறைவடையவில்லை.கணவனுக்குப் பின் தூங்கி முன் எழுதல், கணவன் உண்ட பின்பே தான் உண்ணுதல், இல்லாவிடினும் கணவனுக்கு விட்டுக்கொடுத்தல், ஆண்களுக்கு அடங்கி வாழ்தல் போன்ற வன்முறைகள் இருந்தன. பனிமலை புதினத்தில் பெண்களுக்குத் தடைகள் இருந்தபோதிலும்,அதை அகற்றி பெண்ணிய சிந்தனையுடன் செயல்படுகின்றனர் என்பதை இக்கட்டுரை ஆய்ந்துரைக்கிறது.

## பெண்மையின் சிறப்பு

பெண்மையின் சிறப்பை எண்ணிய நம் முன்னோர்கள் வாழ்விற்கு இன்றியமையாதகல்வி, செல்வம், அறிவு முதலியவற்றை பெண்ணெனக் கொண்டனர்.

**“இன்ப உரைகள்தருபவர் ஆர்-வீட்டை**
**இன்னகை யாலொளி செய்பவர் ஆர்”**

அன்பின் உருவாய், கணவனின் உறைவிடமாய், வாழ்வின் துணையாய், மனையின்விளக்காய் மாண்புறுபவள் பெண் என்கிறார் கவிமணி.

**“பாலையினைத் தன்டனுடலிற் பாதியாக்கும்**
**பகுத்தறிவால் பரமசிவன் வலிமை பெற்றான்”**

என்ற குலோத்துங்கன் கவிதை வரிகள் மூலமாக பெண்ணை தன் உடலில் சரிபாதியாககொண்டு பகுத்து பரமசிவன் வலிமை பெற்றான் என கூறியுள்ளார்.

**குடும்ப வளர்ச்சியில் பெண்களின் பங்கு**

குடும்ப வளர்ச்சியில் பெண்களின் பங்கு இன்றியமையாததாக கருதப்படுகின்றது.பெண் என்பவள் இனிமையானவளாகவும், இன்சொல் பேசுபவர்களாகவும்; சகிப்புத்தன்மை கொண்டவளாகவும்; பொறுமையின் சிகரமாகவும், அன்பில் இருப்பிடமாகவும் திகழ்பவள்.பெண் என்பவள் பிறர் நலனில் அக்கறை கொண்டவராக இருப்பவர். பிறருக்குத் துன்பம் வந்தாலும் தன்னை பற்றி கவலைப்படாமல் உதவுவதற்கு முன் நிற்பவள்.; அதுமட்டுமில்லாமல் ஒரு குடும்பம் சந்தோசமாகவும் நிம்மதியாகவும் ஆணும் பெண்ணுமாக இணைந்து வாழும்இல்லற வாழ்வில் ‘கணவனே கண்கண்ட தெய்வம்’ என்கின்ற கோட்பாடு பெண்களுக்குக்கற்பிக்கப்படுகிறது. இந்நிலையில் பெண் அவளைப் பற்றியும் அவளுடைய வாழ்வைப்பற்றியும் சிந்திக்கவே மறந்து விடுகிறாள். கல்விகற்றாலும், கற்காவிட்டாலும் இதேநிலைதான் காணப்படுகின்றது. பனிமலை புதினத்தில் அனுராதாவின் அம்மா அன்னபூரணி ஏழைக் குடும்பத்தில் இருந்து வந்தவள். கணவனை கடவுளுக்குச் சமமாக வழிபட்டு வந்தாள். அன்னபூரணி எப்போதும் சமையலறையில் வேலை செய்பவர், யாரும் எந்தக் குறையும்சொல்ல கூடாது என்று எண்ணுபவர். தான் சாப்பிடாமல் இருந்து கொண்டு பிள்ளைகளுக்குக்கொடுப்பவள். தன்னுடைய குடும்பம் எவ்வளவு வறுமையில் இருந்தாலும் அந்தச்சூழ்நிலைக்கு ஏற்றார்போல் தன்னுடைய குடும்பத்தை காப்பாற்றி வழிநடத்தி வந்தாள். பனிமலை புதினத்திலும் அன்னபூரணியின் செயல்கள் இத்தகைய நிலையிலேயே இருக்கின்றன.

**காதல் திருமணம்**

தன்னார்வம் அறிந்து பிறர் பொருட்டு என்னும் எண்ணமே காதலாகும். அத்தகு காதல்தூயது. ஆணும் பெண்ணும் ஒருவர் தம்மை மற்றவரில் கலக்கும் நிலையே காதல்என்பதனை

> **“மாமலை நாடனொடு மறுவின்றாகிய**
> **காமம் கலந்த காதல்”**

என்ற அகநானூற்றுப் அடிகள் ஆணும் பெண்ணும் கொள்ளும் காதலை கூறுகின்றது.

பனிமலை புதினத்தில் வைஜெயந்தியும் காதல் திருமணம் செய்து கொள்கிறாள். முதன்முதலில் இரயிலில் பயணம் செய்யும்போது சரத்தினை சந்தித்ததை மன்மதன் தான்மலர் அம்பு எய்தானோ தெரியாது அவனைப் பார்த்து அப்படியே நின்றுவிட்டாள். யாரோதன்னை உற்றுப் பார்ப்பது போல் தோன்றவே அவன் கண்களைத் திறந்து பார்த்தான்இருவரின் பார்வையும் ஒரு வினாடி சந்தித்தன.

வைஜெயந்தி கலவரம் அடைந்து சட்டென்று பார்வையை திருப்பிக் கொண்டாள், என்ற வரிகள் மூலம் அறிந்துகொள்ளலாம்.

சரத் வைஜெயந்தியின் பெற்றோர்களிடம் தங்களது திருமணத்திற்கு சம்மதம் வாங்கிவிட்டான். இருவரும் கடிதங்கள் மூலமே தங்கள் காதலை வளர்த்தனர். இருவரும் ஒருவரை ஒருவர் முழுமையாக புரிந்து கொண்டனர். பின்பு திருமணம் செய்து கொண்டார்கள்.

**உடன்போக்குச் செல்லுதல்**

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் காதலை ஏற்காத போது காதலர்கள் ஊரைவிட்டு நீங்குதல் (உடன்போக்கு) முறை பழங்கால முதலாகவே இருந்து வருகின்றது. **“பெற்றோரின் சம்மதம் கிடைக்காவிடில் அவர்கள் அறியாதவாறு காதலர்கள் வீட்டை விட்டுச்சென்று மணம் முடித்துக் கொள்வதுண்டு.”** இதனைச் சங்க இலக்கியங்கள் ‘உடன்போக்கு’ என்று கூறுகின்றன. பனிமலை புதினத்தில் அனுராதா உடன்போக்குச் சென்றாள.; அனுராதா, மோகன் என்பவரை காதலித்து திருமணம்செய்து கொண்டார். இருவரும் தினமும் சந்தித்து பேசிக் கொள்வார்கள். இருவருக்குமிடையே நான் உன்னை காதலிக்கிறேன். நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது போன்ற உரையாடல்கள் ஏதும் நிகழவில்லை. ஆனால் ஒருவர் மனதை ஒருவர் புரிந்து கொண்டனர். ஆனால் அப்பெண்,

**“அப்பா! நான் முதலிலேயே சொல்லி விட்டேன்.எனக்கு உங்க சொத்து தேவையில்லையின்னு. இப்படியே கட்டிய புடவையோட கிளம்பி போகிறேன். என் முடிவு சரியானது தான் என்றும், சந்தோசமாக இருப்பேன் என்றும் எனக்கு நம்பிக்கை இருக்கு.அதை புரிந்து கொண்ட பிறகு நீங்களே என்னை வீட்டிற்கு அழைப்பீர்கள்” (ப.ம., ப. 196)**

என்று கூறி உடன்போக்குச் சென்றாள்.

**குடும்பத்தில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்னைகள்:**

சமூகத்தில் குடும்பம் என்ற அமைப்பு வெளிப்பார்வைக்கு தெரியக்கூடிய வகையில், ஆழங்களை முடியாத செய்திகளை உள்ளே அடக்கி வைத்திருப்பதாகும். இது ஆணுக்கு அதிகமான உரிமைகளை கொடுப்பதுடன், பெண்ணை அவனுடன் ஒத்துப் போக வேண்டும் என்ற நிலையிலேயே வைத்திருக்கிறது.

பனிமலை புதினத்தில், அனுராதாவின் மாமியார் மிகவும் கொடுமைக்காரியாகச் சித்திரிக்கப்படுகிறார். அனுராதா அம்மா இறந்ததற்கு கூட நீ போகக்கூடாது. ஒரே மகள் இவ்வளவு நாளாக எப்படி இருந்தால் என்று கூட விசாரிக்கவில்லை. நீஏதற்காகப் போகணும் போகக் கூடாது என்றாள். அனுராதா அதையும் மீறி போகிறாள்.

**வேலைக்குச் செல்லும் பெண்களின் நிலை**

பெண்கள் மீதான ஒடுக்கு முறை குடும்பம் என்ற எல்லைக்குள் மட்டுமே நின்றுவிடுவதில்லை. மாறாக தொழில், அரசியல் தளம் என சமூகம் முழுக்க பெண்கள் மீதான ஒடுக்குமுறை பரவிக்கொண்டே காணப்படுகின்றன. பெண்களைப் பொறுத்தவரை வரங்களும் கூட சாபங்களாக மாறிவிடும் நிலை காணப்படுகின்றன. மனிதர்களில் ஒருவரான மகளிர் மற்றொரு பாலின ஆண்களாலேயே பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்பதை,

**“சில ஆண்கள்**

**ஆரோக்கியமில்லாத பார்வைகள்**

**கம்பளிப் பூச்சியாய் உன் முதுகில் ஊரும்.**

**சிலர்**

**கோப்புகளை வாங்கும் போது**

**அவர்கள் விரல்களையும் விசாரிப்பார்கள்”13**

கவிஞர் வைரமுத்துவின் வரிகள் பணிபுரியும் பெண்களுக்கு அலுவலகத்தில் பாதுகாப்பற்றநிலை உள்ளதை எடுத்து மொழிகிறது.

அனுராதா முதலில் வேலைக்குச் செல்லும்போது வெளியுலகத்தில் ஆணின்ஆதிக்கத்தில் பெண்கள் படும்பாடுகளைப் பற்றி தெரிந்து கொள்கிறாள். வேலைஇல்லாவிட்டாலும் அடிக்கடி உள்ளே அழைத்து உட்கார வைத்து தேவையில்லாமல் பேசிக்கொண்டிருக்கும் மேலதிகாரி சுந்தர். ஆண்களுக்குப் பெண்களைப் பார்த்தால் இந்தயோசனையை தவிர வேறு எண்ணங்கள் தோன்றாதா? என்று எண்ணிக்கொண்டாள் போல்விட்டிற்குச் செல்கிறாள் அனுராதா.

**ஒடுக்கப்படும் சூழலை எதிர்க்க கூடியவள் பெண்**

பெண்கள் தம்மை ஒடுக்க முயலும் சமூகத்தில் தம் ஆற்றலை உணர்ந்து ஒருகுறிக்கோளோடு செயல்பட்டால் எத்தகைய சூழலிலும் நிலைத்து நிற்கமுடியும். சமுதாயத்திற்கும் தனிப்பட்ட இழப்புகளுக்கும் அஞ்சாமல் உறுதியாய் நின்று சாதிக்கமுடியும் என்பதை இப்புதினம் காட்டுகிறது.

இப்புதினத்தில் வைஜெயந்தியின் கணவன் சரத் தன்னை விட அதிகமாகப் பெண்படித்தால் தன்னை மதிக்க மாட்டாள் என்று எண்ணி வைஜெயந்தியை இந்திய காவல்துறைஉயர் அதிகாரிக்கு படிக்கக்கூடாது. அது உன்னால் முடியாது மிகவும் கஷ்டம் என்றுஅடக்க எண்ணினான். ஆனால் வைஜெயந்தி “ஆண்களுக்கு பெண்கள் எந்த விதத்திலும்குறைந்தவர்கள் இல்லை என்று நிரூபிக்க எனக்கு இந்த வேலை ஒரு வாய்ப்பாக இருக்கும்.நான் ரொம்ப யோசித்து பார்த்து விட்டுத்தான் முடிவுக்கு வந்திருக்கிறேன்” என்றுநம்பிக்கையுடன் கூறினாள்.

**முடிவுரை**

குடும்பத்தில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்னைகளும், அதை சமாளித்து கொண்டு வாழும் பெண்களின் மனநிலையையும் இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது. ஒடுக்கப்படுகின்ற சூழலில் ஆண்களை எதிர்த்து முன்னேறிய நிலை இன்று காணப்படுகிறது. பெண்கள் இன்றைய காலகட்டங்களில் வேலைக்குச் செல்கிறாள். அவ்வாறு செல்லும்போது பல்வேறு இடர்பாடுகளை அவர்கள் சந்திக்கின்றனர். எதையும் தன் குடும்பத்திற்காக பொருட்படுத்தாது வேலைக்குச் செல்வதுடன், இன்றைய சமூகச் சூழலைப் பெண்கள் எவ்வாறு சமாளிக்க வேண்டும் என்பதையும் நேரடியாக வலியுறுத்துகிறது.

# 10. தமிழரின் நீர் மேலாண்மை

**க.வினோதா,**

கணினி அறிவியல்துறை, முதுகலை இரண்டாம் ஆண்டு,

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

DOI 10.5281/zenodo.10725055

**Abstract :**

It is water that makes the soil flourish, the seed sprouts and grows into a tree and helps everyone live. It is our responsibility and duty to conserve water and give it to the next generation. At the same time, let's learn about the water management and the way our ancestors saved water for us.

**Key Words :** Tamilar – Water Management – idealogy

**முன்னுரை:**

**"நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**

**வானின்று அமையாது ஒழுக்கு" (குறள்: 20)**

என்ற திருவள்ளுவரின் குறள்படி இவ்வுலகம் நீரால் இயங்குகிறது. நீரால்தான் மண் செழித்து விதை முளைத்து விருட்சமாக வளர்ந்து அனைவரும் வாழ உதவுகிறது. நீரை நாம் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு அளிப்பது நம் பொறுப்பு மற்றும் கடமை ஆகும். அதே நேரத்தில் நமக்காக நீரை சேமித்து பாதுகாத்து அளித்த நமது முன்னோர்களின் நீர் மேலாண்மைத்திறனையும் நீரை சேமித்த முறையும் அறிந்து கொள்வோம்.

**நீரின் அவசியம்:-**

அதிகாலை விழித்தெழும் கணம் முதல் இரவு தூங்கச் செல்லும் வரை தமிழும் நீரும் (தண்ணீரும்) நம் வாழ்க்கையில் இன்றியமையாதது.

அதிகாலை வேளாண் நிலத்திற்கு உழைக்கச் செல்வோர் நீராகாரம் குடிப்பார்கள். வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு அன்பான வரவேற்பின் அடையாளமாக நீரே வழங்கப்பட்டது.

இவ்வாறு தமிழக மக்களின் குடும்பம் தொடங்கி சமூகம் வரை அனைத்திலும் நீரே முதன்மையாக உள்ளது.

**நீர் வளமும் சொல்வளமும்:-**

தமிழர்கள் சொல்வளம் மற்றும் நீர் வளமும் நிறைந்தவர்களாக திகழ்ந்தனர். மொத்தம் 47 வகையான நீர் நிலைகளை தமிழர்கள் பராமரித்தனர். சான்றாக கூவல், ஊற்று, அகழி, ஆழிக்கிணறு, உறைக்கிணறு, அணை, ஏரி, ஆறு, குளம், குட்டை, ஊரணி, கண்மாய், கேணி என பல்வேறு பெயர்களில் நீர் நிலைகளை உருவாக்கி நீரை சேமித்தனர். இந்தச் சொற்கள் அனைத்தும் ஒன்று போல தெரிந்தாலும் ஒவ்வொரு சொல்லுக்கும் தனி அர்த்தம் உள்ளது.

**சான்றாக:-**

- அகழி : கோட்டையின் புறத்தே அகழ்ந்தமைக்கப்பட்ட நீர் அரண்
- ஆழிக்கிணறு : கடல் அருகே தோண்டிக் கட்டிய கிணறு
- ஆறு : இருகரைகளுக்கு இடையே ஓடும் நீர்ப்பரப்பு
- ஊரணி (குறள்: 215): மக்கள் பருகும் நீர் உள்ள நீர் நிலை
- ஊற்று : அடியில் இருந்து நீர் ஊறுவது
- ஏரி : வேளாண்மை பாசன நீர் தேக்கம்
- கண்மாய் : பாண்டி மண்டலத்தில் ஏரிக்கு வழங்கப்படும் பெயர்
- கூவல் : உவர்கண் நிலத்தில் தோண்டப்படும் நீர் நிலை
- கேணி (குறள்: 396): அகலமும், ஆழமும் உள்ள பெரிய கிணறு

இவ்வாறு தமிழர்கள் 'நீரை' பல வகைகளிலும் சேர்த்து வைத்துள்ளனர்.

**கரிகாலச் சோழனும் கல்லணையும்:-**

தமிழக வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு முன் கரிகாலச் சோழன் காலத்தில் கட்டப்பட்ட கல்லணையின் நீளம் 1080 அடி ஆகவும் அகலம் 40 முதல் 60 அடியாகவும் உயரம் 16 முதல் 18 அடியாகவும் இருக்கிறது. கல்லணை வலுவான கட்டுமானத் தொழில்நுட்பத்தால் இன்றும் பயன்படுவதோடு நமது வரலாற்றுப் பெருமைக்கும் சான்றாக நிலைத்து நிற்கிறது.

**தமிழரின் அணைகட்டும் திறன்:-**

காவிரி ஆற்றின் மீது பெரிய பாறைகளைக் கொண்டு வந்து போட்டனர். அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன, அவற்றின் மேல் மற்றொரு பாறையை வைத்து நடுவே தண்ணீரில் கரையாத ஒருவித ஒட்டும் களிமண்ணைப் புதிய பாறைகளில் பூசி இரண்டையும் ஒட்டிக்கொள்ளும் விதமாக செய்தனர் இதுவே கல்லணையைக் கட்டிய தமிழரின் தொழில்நுட்பம் ஆகும்.

**குமிழித்தூம்பும் சோழர்களின் நீர் மேலாண்மையும்:-**

குமிழித்தூம்பு (மலைபடுகடாம்: 474) முறை சோழர்களால் அணைகளை கட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது செயல்படும் முறையானது மழைக்காலங்களில் ஏரி நிரம்பும் போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீருக்குள் சென்று கழிமுகத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலே தூக்குவார். அடியில் இரண்டு துளையில் இருந்து நீர் வெளியேறும், கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும். இதனால் தூர்வார வேண்டிய அவசியம் இல்லை இவ்வாறு அன்றைய தமிழர்கள் நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கினர்.

**பாண்டியர்களின் நீர் மேலாண்மை:-**

காவிரி என்னும் ஒரே ஒரு ஜீவநதியைக் கொண்டு தமிழர்கள் மழைக்காலம் முதல் கோடை காலம் வரை நீரை வற்றாமல் சேமித்தனர். அதற்காக பாண்டியர்கள் பயன்படுத்திய முறை சங்கிலித் தொடர் ஏரிகள், இதன் சூத்திரம் முதலில் நீர் வரும் ஏரி இறுதியாக நிறையும், கடைசியாக நீர்வரும் ஏரி முதலில் நிறையும், முதல் ஏரி பாதி நிறைந்ததும் நீரை திறந்துவிடுவர் அடுத்த ஏரிக்கு நீர் வரும். இவ்வாறு செய்வதால் கடைசி ஏரியும் முதல் ஏரியும் சரியான அளவில் நீரை சேமிக்க முடியும்.

**அகழி:-**

அரசர்கள் பெரிய அரண்மனைகளையும் கோட்டைகளையும் கட்டும்போது பெரும் மழைநீரைச் சேமிப்பதற்காக கோட்டையைச் சுற்றி பெரிய பள்ளத்தை ஏற்படுத்தினர். இந்த அமைப்புதான் அகழி.

இதனுடைய மற்றொரு பயன்பாடு கோட்டைக்கு மிகப்பெரிய பாதுகாப்பு. 100 அடி ஆழமுள்ள அகழி கோட்டையை சுற்றி இருப்பதால் பகைவர்கள் யாரும் உள்ளே வரமுடியாது. தஞ்சை பெரிய கோவிலைச் சுற்றி உள்ள அகழி தற்போதும் உள்ளது.

**ஏரிகளில் கரை அமைப்பதில் கைதேர்ந்தவர்கள் தமிழர்கள்:-**

ஏரிகளின் கரையமைக்கும் போது களிமண்ணால் ஆன உட்சுவரை எழுப்புவார்கள் நீர்க்கசிவை தடுக்கும். இந்த இடத்தில் கிடைக்கும் மண்ணை வைத்து ஏரியின் இருபுறமும் பூசி கரையை மேலும் வலுப்படுத்துவார்கள் பொதுவான ஏரிக்கரை அமைக்கும் முறை இதுவாகும்.

ஆனால் தமிழர்களின் முறை வேறுபட்டது. ஏரிக்கரைகட்டும் இடத்தில் கிடைக்கும் மண்ணோடு ஒரு பொருளை சேர்த்து அரைக்கும் போது கிடைக்கும் பொருள்தான் அரைமண், கரைக்கு இறுக்கத்தைக் கொடுக்கிறது. ஈர்க்கசிவைத் தடுக்கிறது.

**சான்று:**

வீராணம் ஏரியில் புதிய மதகு அமைப்பதற்காக அதன் கரையை உடைத்த போது பாறை மாதிரி இறுகி இருந்தது அதன் உட்புறத்தில் களிமண் உட்சுவர் இல்லை என்பதை அறிய முடிந்தது.

போர் மூலம் நேரடியாக வெற்றி பெற முடியாத மன்னர்கள் நாட்டில் ஏரிக்கரையை உடைத்துவிட்டனர். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை அசைத்தனர்.

**ஏரியின் வடிவமும் எட்டாம்பிறையும்:-**

ஏரியின் வடிவம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்காக சங்ககாலப் புலவர் கபிலர் பாடிய பாடல்.

**“அறையும் பொறையும் மணந்த தாய
எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெள் நீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ
கூர்வேல குவைஇய மொய்ம்பின்
தேர் வண் பாரி தண் பறம்பு நாடு” (118)**

**பாடலின் பொருள்:-**

ஏரிக்கரையின் நீளம் குறைவாகவும் அதிக நீர் கொள்ளளவு உடையதாகவும் இருக்க வேண்டும். ஏரிகள் எட்டாம்பிறை வடிவில் இருக்க வேண்டும். இதுதான் ஏரிஅமைப்பில் சிக்கனமான வடிவமைப்பாகும். மூன்றாம் ராஜசிம்மன் கட்டிய ராஜசிங்கமங்கலம் உட்பட பல ஏரிகளும் எட்டாம் பிறை வடிவில் தான் உள்ளன. பாண்டிய மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியைக் கண்மாய் என்று அழைப்பர். கம்மாய் என்பது வட்டார வழக்குச் சொல்லாகும்.

**பனையின் பயன்:-**

ஆரம்ப காலத்தில் பனைமரத்தை தான் மடையாக பயன்படுத்தினர். பனைமரத்தின் நடுத்தண்டை குடைந்து எடுத்து விட்டால் நீளமான குழாய் கிடைக்கும். குழாயின் ஒரு பகுதியை ஏரிக்குள்ளேயும் மறுபகுதியை கால்வாயின் பகுதிலேயும் பொருத்திவிடுவர். ஏரிக்குள் இருக்கும் குழாய் ஓட்டையில் நாணல், களிமண், கோரை எல்லாம் கலந்து அடைத்துவிடுவார்கள். பிற்காலத்தில் தான் பாறை, மரச் சட்டம் எல்லாம் கொண்டு மடையாக பயன்படுத்துகின்றனர்.

**மடையர்கள்:-**

நீந்துவதில் வல்லவர்களான வீரர்கள் ஆற்றில் குதித்து மடையை திறந்துவிடுவார்கள். மடை திறப்பதற்க்குமுன் மக்கள் அனைவரும் ஊருக்கு வெளியே பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டனர். மடையர்களுக்கு பிரிவு உபச்சாரம் செய்து மாலைபோட்டு திலகம் இட்டு வழியனுப்புவர். ஏனென்றால் இந்தநாள் அவர்களின் வாழ்நாளின் இறுதிநாளாக அமைவதற்கும் வாய்ப்பு உள்ளது. ஓர் ஏரியானது நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கும். 20 அடி ஆழத்தில் தண்ணீரின் வேகம் அதிகமாக இருக்கும். நீரின் வேகத்தில் மீண்டு வந்தவர் சிலர், மாண்டு போனவர் பலர். அவர்களை ஏரிக்கரை ஓரத்தில் மடை கருப்பன், மடை இருளன் என நடுகல் இட்டு தெய்வங்களாக வழிபாடு செய்கின்றனர். இவர்கள் அனைவரும் மடை திறக்கச் சென்று மாண்டு போனவர்கள்.

**புலவரும் நீர் மேலாண்மையும்:-**

விண்ணிலிருந்து மழைத்துளி விழுந்தாலன்றி மண்ணில் பசும்புல் தலை காண்பது அரிதான ஒன்றாகும் என்ற குறட்பாவின் வழி மழை இல்லாமல் நீர் இல்லை நீர் இல்லாமல் வாழ்வே இல்லை என்று வள்ளுவர் கூறுகிறார்.

**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடைய தரண். (குறள் 742)**

என்னும் குறட்பாவில் நாட்டின் சிறந்த பாதுகாப்புகளுள் நீருக்கே முதலிடம் தரப்படுகிறது.

**நிலத்தோடு நீரே (புறம்.18)**

என்ற சங்கப் பாடலும் நீரின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது.

**மறந்துபோன நீர்மேலாண்மை:-**

தமிழர்கள் ஆகிய நாம் இன்று நமது நீர் மேலாண்மை முறையை மறந்து ஏரிகளையும், குளங்களையும் ஆக்கிரமித்து கட்டிடங்களாகவும் வீடுகளாகவும் கட்டியுள்ளோம் 47 வகையான நீர் நிலைகளை அமைத்து நீரை சேமித்தனர் நமது முன்னோர்கள் ஆனால் நாம் இன்று மழைநீர் சேமிப்பு முறையையே மறந்து விட்டோம். சொல்வளமும் நீர்வளமும் வளர்த்த நாம் இன்று சொல்வளத்தையும் நீர் வளத்தையும் மறந்து வாழ்க்கையில் நீருக்காக போராடுகிறோம்.

**"இதுவரை மறந்தது போதும்**
**இனி மறவாமல் இருப்போம்!**
**நீரையும் உயிரையும் காப்போம்,**
**தமிழை வளர்ப்போம்!"**

**முடிவுரை:-**

உலகில் பல்லுயிர் பாதுகாப்பிற்கு அடிப்படைத் தேவையாக உள்ள தண்ணீரைப் பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும். நமது முன்னோர்கள் கண்டுணர்ந்த மரபார்ந்த அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும். குளம், ஏரி, கால்வாய், கிணறு போன்ற நீர் நிலைகளின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்க வேண்டும். பணம் கொடுத்தால் உணவை விலைக்கு வாங்கி விடலாம் என்னும் மேலோட்டமான கருத்தோட்டத்தை மாற்றிக் கொள்வோம். உணவு உற்பத்திக்கான அடிப்படை 'நீரே' என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே,

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூவும் மழை. (குறள்.12)**

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். மூன்றாம் உலகப்போர் ஒன்று உருவானால் அது தண்ணீருக்காகத்தான், உருவாகும் என்ற நிலைமைக்கு முடிவுரை எழுதுவோம்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 11. கீதாரி நாவல் மொழியும் வாழ்வியல் சிந்தனைகள்

**திருமதி பா.கார்த்திகா**

உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி.

DOI 10.5281/zenodo.10725062.

**Abstract :**

Tamil novels are remarkably outstanding in world novel literature. In this way, the novel Geethari refers to the life of the Ayar (Intermediate) people who live with goat herding as a clan occupation. Through this novel, the life conditions of the people of Ayar tribe during the Sanga period through the land of Mullai and their customs and rituals of life during this period are discussed.

## முன்னுரை

உலக நாவல் இலக்கியங்களில் தமிழ் நாவல்கள் குறிப்பிடத்தக்க வகையில் சிறந்து விளங்கி வருகின்றன. அவ்வகையில் கீதாரி என்னும் நாவல் ஆடுகள் மேய்ப்பதையை குலத்தொழிலகாகக் கொண்டு வாழ்கின்ற ஆயர் (இடையர்) இனமக்களின் வாழ்வியலைக் குறிப்பிடுகிறது. இந்நாவலின் வழியாக ஆயர் இனத்தவர்,சங்ககாலத்தில் வாழ்ந்த வாழ்வியல் நிலைகளை முல்லை நிலத்தின் வழியாகவும், இக்காலத்தில் அவர்களின் பழக்கவழக்கங்கள், வாழ்வியல் சடங்குகள் போன்றன குறித்து எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## முல்லை நிலம்

முல்லை என்பது பண்டைத்தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். காடும் காடு சார்ந்த இடங்களும் முல்லை நிலமாகும். கார்காலத்தை பெரும் பொழுதாகவும், மாலை சிறுபொழுதாகவும் கொண்டது. அவ்வாறான “முல்லை நிலத்தில் காட்டாறு, கொன்றை மரம், முல்லைப்பூ, மயில், முயல், மான், ஆடு போன்ற விலங்குகள் மரம், பூ, கருப்பொருளாகக் காணப்படுகின்றன. முல்லை நிலத்தில் வாழும் மக்களை ஆயர், ஆய்ச்சியர், இடையர், இடைச்சியர் என்றும் அவர்களின் தொழில் ஏறுதழுவுதல், பசுமேய்த்தல் ஆகும். இவர்கள் தெய்வமாக திருமாலையும் வணங்குகின்றனர் என்பதனை தொல்காப்பியர் தன் நூற்பாவின் வழிக்கூறுகிறார்.

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையான் சொல்லவும் படுமே” - (தொல்.நூ-5)**

மாயோனாகிய திருமால் விரும்பி வாழும் காடாகிய முல்லை நிலமும், சேயோனாகிய முருகன் விரும்பி வாழும் மலையாகிய குறிஞ்சி நிலமும், வேந்தனாகிய இந்திரன் விரும்பி வாழும் நன்னீர் நிறைந்த மருத நிலமும், வருணன் விரும்பி வாழும் பெருமணல் உலகமாகிய நெய்தல் நிலமும் என இவை முன்னோரால் முறையாக வகுக்கப்பட்ட நிலமாகும்.

'ஐந்திணைகளில் ஒன்றான் முல்லையில்' ஆயர்கள் புலி முதலிய கொடிய விலங்குகளிடமிருந்து தம் பசு, ஆடு முதலிய உயிரினங்களைக் காக்க வேண்டிய நிலையில் இருந்தனர். "முல்லை நிலத்தில் வாழும் மக்களை ஆயர்கள், ஆய்ச்சியர், இடையர், இடையச்சியர் என்று முல்லைத்திணை கருப்பொருளில் கூறுகின்றன"

"ஆகாத்தோம்பி ஆப்பயன் அளிக்கும் கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடில்லை" என இளங்கோவடிகள் கூறுகிறார். கவுந்தியடிகள் மாதரி என்னும் இடைக்குல மடந்தையிடம் கண்ணகியை அடைக்கலமாக கொடுத்ததும் ஆயர்தம் செவ்விய தன்மையை எடுத்துரைக்கும்.

ஆயமகளிர் கற்பிற்சிறந்தவர். கற்பினுக்கும் அடையாளமாக மகளிர் முல்லை மலரினை அணிவது வழக்கம். முல்லை சான்ற கற்பின் மெல்லியற் குறுமகள் என ஆய்மகள் குறிப்பிடப்படுகிறாள்.

**'முல்லை சான்ற கற்பின்**
**மெல்லிய குறுமகள் உறைவின் ஊரே'** - **(நற்-24)**

முல்லை நிலத்திலே பூக்கும் மலர் முல்லைப் பூவாகும். அந்நிலத்தில் வாழ்மகளிர் தம்கற்பு மிகுதி போன்ற முல்லைப்பூச்சூடுதல் மரபு. முல்லை என்ற சொல்லுக்கே 'கற்பு' என்ற பொருளும் உண்டு. இதனை நற்றிணை எடுத்துரைக்கின்றது.

ஆய்ச்சியர் திருமாலைப் பாடி போற்றும் கூத்து ஆய்ச்சியர் குரவை எனப்படும். மகிழ்ச்சி மிகுந்தாலும், துன்பம் மிகுந்தாலும் ஆய்ச்சியர் குரவையாடித் திருமாலைப் பாடுவது வழக்கமாகும். இவ்வாறு இருந்த இடையர்களை பற்றி கீதாரி நாவல் பலவாறு மொழிகின்றது.

**கிடை போடுதல்**

கிடை போடுதல் என்பது விளைநிலங்களில் ஆடுகளையோ, மாடுகளையோ இரவில் அடைத்து வைத்து அவற்றின் கழிவுப்பொருள்களை உரங்களாக மாற்றுவது ஆகும். இதனை பழங்காலத்தில் மந்தை அடைத்தல் என்று குறிப்பிட்டனர். இவர்களில் ஒரு சிலர் 'கிடை போடுதல்' காலம் வரை இருந்துவிட்டு மீண்டும் தங்கள் ஊருக்குத்திரும்பி விடுவோரும் உண்டு. அவ்வாறன்றி ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கி ஆண்டுக்கொருமுறை மட்டும் தங்களது சொந்த ஊருக்குச் சென்று வருவோரும் உண்டு. அவ்வகையில் பட்டுக்கோட்டை பகுதியில் கிடை போட்டுள்ள கீதாரிகள் பெரும்பாலும் அங்கேயே தங்கிவிட்டவர்களாவர். 'ராமுகீதாரியின் குடும்பம் மேலப்பெருமழை கோட்டத்திற்கு வந்து நான்கைந்து நாட்கள் தான் ஆகியிருந்தது. வளசைக்கும் அருகிலிருந்து கொல்லைகளில் கிடை கட்டியிருந்தார்கள்'

பிறநாட்டு இலக்கியங்களைவிட நமது சங்க இலக்கியங்கள் கால்நடை மேய்போரை முல்லைப்பாடல்களில் குறிப்பிட்டுள்ளன.

**“பல் ஆ நெடுநெறிக்கு அகன்று வந்தென்ப**
**புன்தலை மன்றம் நோக்கி மாலை**
**மடக்கண் குழவி இணம் வந்தன்ன**
**நோயம் ஆகுதல் அறிந்தும்**
**சேயர் தோழி சேய்நாட் டோரே” -(குறுந்-64)**

இப்பாடலில் நெடுந்தொலைவு சென்று தங்கியிருக்கும் தாய்பசுவிற்குத் தலைவனும், தாய்பசுவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் கன்றுக்குத் தலைவியும் ஒப்புமை கூறப்பட்டிருக்கின்றது. வேற்று நிலத்திற்குக் கால்நடைகளை ஓட்டிச்செல்லும் பொழுது நீண்ட தொலைவு நடக்க முடியாத கன்றுகளை வீட்டிலேயே விட்டுச் சென்றிருக்க வேண்டும். அக்கன்றுகளை வீட்டில் இருந்த பெண்கள் கவனித்திருக்க வேண்டும். அவ்வாறான சூழலில் ஏங்கும் கன்றின் வருத்தத்தோடு ஒப்பிட்டு இப்பாடலில் கூறுகிறார் எனலாம்.

**சமுதாயம்**

மனிதன் ஒரு குழுவாக ஒற்றுமையுடன் வாழ்வதே சமுதாயம் ஆகும். “ஆனால் இன்று காலிலும், கையிலும் தளைகளை மாட்டிக்கொண்டு ஒலிம்பிக்போட்டிக்குப் பயிற்சி பெறுவரைப் போல இருக்கிறது நமது சமுதாயம்” என்று வா.செ.குழந்தைசாமி கூறுகிறார். இருபத்தோராவது நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும் நாம் என்றோ காலாவதியாகியிருக்க வேண்டிய எத்தனையோ சுமைகளைத் தோளில் தாங்கிக் கொண்டிருக்கிறோம். சுமையென்று தெரிந்தவற்றையும் இறக்கி வைக்கவில்லை. தள்ளாடி நடக்கும் நமக்குத்தடைகள் எண்ணில் அடங்காதவை என்று வா.செ.குழந்தைசாமி கூறியுள்ளார். ஆனால் இதனை தொல்காப்பியர் ஆயர்இன மக்களை வைத்து தன்நூலில்,

**“ஆயர் வேட்டுவர் ஆடு உத்திணைப்பெயர்**
**ஆவயில் வரூஉம் கிழவரும் உளஆர” - (தொல்.நூ-23)**

என்ற தொல்காப்பிய நூற்பாவின் வாயிலாக பண்டையத் தமிழ் நூல்கள் இவர்கள் ஆயர்கள் என்றும், இடையர்கள் என்றும் குறிப்பிடுகிறது. மனிதன் தனித்து வாழும் இயல்புடையவன் அல்லன். அவன் சேர்ந்து வாழும் இயல்பினன். மனிதர்கள் பலரால் உருவாக்கியதே சமுதாயம் ஆகும்.

**திருமணச் சடங்குகள்**

‘திருமணம்’ என்பது மணமக்களின் பெற்றோர், உறவினர் ஆகிய எல்லோரும் மனமொப்பி நடத்தும் புனித நிகழ்ச்சியாகும். திருமணங்களிலே சடங்குகள் ஒவ்வொரு மதத்தவராலும் அவரவர் வேத மொழியில் தான் நடத்தப்படுகின்றன. ஆனால் கீதார் நாவலில்,

கரிச்சாவில் திருமணம் நடந்தது. அதாவது வேத மொழியில் திருமணம் நடக்கவில்லை. கரிச்சாவில் திருமணத்திற்குக் கூண்டின் வரிசையில் தடிக்கம்பு செருகியிருந்தது. அந்த "கம்புத்தான் மனையில் அவளுடன் மாப்பிள்ளையாய் உட்கார்ந்திருந்தது. அவளுக்கு தாலி கட்டிய கணவன் அது" என்பதிலிருந்து திருமண நிகழ்வில் மணமகன் வேலை நிமித்தமாக வெளியிடங்களில் தங்கியிருக்க வேண்டிய சூழலின் போது மணமகன் ஆடு மேய்க்கப் பயன்படுத்தும் கம்பை மணமகனுக்குப் பதிலாக வைத்து திருமணம் செய்து கொள்ளும் முறை இருந்ததை அறிய முடிகிறது. பெண்களுக்குச் சிறிய தந்தை உறவுமுறையில் உள்ளவாகும். திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் உள்ளது. "தாய்,தகப்பனார் இரண்டு பிள்ளைகளை வளர்த்து தானே அவர்களுக்கு நல்லதொரு வாழ்க்கையும் ராமுகீதாரி அமைத்துக் கொடுத்தார்". நகையுடன் வசதிக்கேற்ப ஓராண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை வரதட்சணையாக வாங்கிக் கொடுப்பார். "பாத்திர பண்டங்கள் நகைநட்டோடு போன்ற வீட்டிற்கு தேவையான மளிகை சாமான்களையும், சீதனமாய் கொடுப்பதும் ஓராண்டுக்குத் தேவையானது அல்லது இரண்டு,மூன்று ஆண்டுகளுக்குத் தேவையான மளிகைப்பொருட்களை வாங்கிக் கொடுப்பார்கள் என்று ராமுகீதாரி கூறியுள்ளார்.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் முல்லை நிலத்தில் வாழும் ஆயர்கள் ஆடுகளை வளர்ப்பதைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். அவ்வழித் தோன்றல்களான இடையர்களை பலப்பிரிவுகளாக இனம் காணப்பட்டுள்ளனர். மேலும், அவர்களது வாழ்வியல் நெறிமுறை சிந்தனைகளை பற்றியும் இவ்ஆய்வுக்கட்டுரையானது மொழிகின்றது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 12. மதுரைக்காஞ்சி காட்டும் பாலினச் சமத்துவமின்மை

**பேரா.ஜி.மாரிச்செல்வம்,**

உதவிப்பேராசிரியர் - வரலாற்றுத்துறை,

வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.

DOI 10.5281/zenodo.10725082.

**Abstract :**

Kavimani said, "Mama, you need a good month to be born as a bridegroom." But today the atrocities on women are happening to the extent that the eyes of Mother India are bleeding. About the chastity of women, chastity like Arundhati can be seen in many Kalidiya hymns as “Vadameenbol Poshhuthetha Wayangiya Karpali” (Kalidiya:P.2). At that time, only wives married to men lived in bondage. Men have no control. Men married many women. They consorted with prostitutes. They were known as Kanikaiyar, Bharathiyar, Dhilimakalir. Their relationships with men do not last. Hence it was considered as a temporary relationship which should be discarded. This article tries to emphasize that by studying about them and those relationships continuing today, they should not continue, they should be eradicated from the society and the gender equality that prevailed in this society.

“மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்லமாதவம் செய்திடல் வேண்டும் அம்மா” என்றார் கவிமணி. ஆனால் இன்று பாரதத் தாயின் கண்களில் இரத்தம் வரும் அளவிற்குப் பெண்களின் மீது கொடுமைகள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. பெண்களின் கற்பைப் பற்றி, அருந்ததி போன்ற கற்பினள் என்பதை, “வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்” (கலித்தொகை:பா.2) எனக் கலித்தொகைப் பாடல்கள் பலவற்றில் காணலாம். அக்காலத்தில் ஆடவர்களை மணந்து கொண்ட மனைவிமார்கள் மட்டுந்தான் கட்டுப்பட்டு வாழ்ந்தனர். ஆண்களுக்கு எத்தகைய கட்டுப்பாடும் இல்லை. ஆண்கள் பல பெண்களை மணந்தனர். பரத்தையர்களுடன் கூடிக்களித்தனர். அவர்கள் கணிகையர், பரத்தையர், விலைமகளிர் என அழைக்கப்பட்டனர். ஆண்களுடன் இவர்கள் கொண்ட உறவு நீடிப்பதில்லை. எனவே இது நிலையற்ற உறவாகக் களையப்பட வேண்டிய உறவாகக் கருதப்பட்டது. அவர்களைப் பற்றி ஆய்வதோடு அவ்வுறவுநிலைகள் இன்றும் தொடர்வதால், அவை நீடிக்கக் கூடாது, அவை சமூகத்தில் களையப்பட வேண்டியவை என்பதையும் இந்தச் சமூகத்தில் நிலவிய பாலினச் சமத்துவமினைையயும் விளக்கி இக்கட்டுரை வலியுறுத்த முயல்கின்றது.

**மதுரைக்காஞ்சி:**

இது பத்துப்பாட்டுள் ஆறாவது பாட்டு. பெரியது. 782 அடிகளைக் கொண்டது. மதுரையை ஆண்ட மன்னனான பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் உலகமும் உலக இன்பமும் அழியக்கூடியவை என்பதை அறிவிப்பதே காஞ்சித்திணை (புறத்திணையுள் ஒருதிணை). இந்நூலாசிரியர் மாங்குடிமருதனார். பல்லாண்டுகளுக்கு முன்னிருந்த மதுரையை இவர் தன் திறத்தால் அப்படியே வரைந்துள்ளார் எனலாம்.

**ஆண்கள் கற்பு:**

பண்டைத்தமிழர்கள் பலதாரமணம் புரிந்துவந்தனர். அவர்கள் பலமனைவியர்களை மணந்து கொள்வதோடு மட்டும் நிற்கவில்லை. செல்வமுடையவர்களும், சிறந்தவீரர்களும் பரத்தையர்களுடனும் சேர்ந்து வாழ்ந்தனர். இதற்காகவே பரத்தையர் சேரி என்ற இடங்களும் இருந்தன. கணவன் கணிகையர் வீட்டுக்குச் சென்று வந்ததை அறிந்தால் காதலி வருந்துவாள். இச்செய்தி மருதத்திணை பாடல்களில் கூறப்பட்டுள்ளது. ஆண்களுக்கு இங்ஙனம் தவறுசெய்யும் காலத்தில் கூட அவர்களிலே பலர் கட்டின மனைவிமார்களிடம் காதலும் கற்பும் உடையவர்களாகவே நடந்துகொண்டனர். மனைவிவருந்தினாள் கூடக்கவலைப்படாமல் பரத்தையர் நாடும் ஆண்கள் சிலர் எந்த ஒரு கட்டுப்பாடும் பயமும் இன்றிபரத்தையருடன் வாழ்ந்து வந்தனர்.

**பரத்தையர் இயல்பு:**

பரத்தையர் - கணிகையர் - விலைமாதர்கள் என்பவர்களோடு கூடிக் குலவும் பழக்கம் பண்டைத் தமிழர்களிடம் இருந்தது உண்மைதான். எனினும் அதனை அறிஞர்களும் குலமகளிரும் ஆதரிக்கவில்லை. இது ஆகாதசெயல் என்றே வெறுத்து வந்தனர். பரத்தையர் கூட்டுறவால் ஏற்படும் பழியையும் அவ்வப்போது எடுத்துக்காட்டி அறிவுறுத்தி வந்தனர் என்பதற்குச் சான்றாகக் கீழ்காணும் நிகழ்வு ஒன்றினைக் கூறலாம். பரத்தை வீட்டிலே தங்கிவிட்டு வந்தான் ஒருதலைவன். அவனைப்பார்த்து தலைவியின் தோழிபின்வருமாறு கூறுகின்றாள்.

“புதிய வருவாய்களையுடைய ஊரின் தலைவனே! உன்னுடைய சிறந்த ஆபரணங்களை அணிந்த காதல் மகளிரை எமது வீட்டுக்கு அழைத்துவந்து, நீ அவர்களை தழுவிக்கொண்டு வாழ்ந்தாலும், பிறர்செல்வத்தை பெரிதாகவிரும்பும் அற்பமனத்திலே உண்மைக்காதல் பிறப்பது அரிது. அவர்களும் பசுமையானவளையல்யணிந்த உமதுமனைவிமார்களுடன் சேர்ந்து வாழ்ந்து குழந்தைகளைப் பெற்றெடுத்து நன்மை நிறைந்த கற்புடன் எம்மைப் போன்ற கற்புடைமகளிர் என்ற பெருமையுடன் வாழ்தல் அதைக்காட்டிலும் அரிதாகும்.” என்பதை,

**“யாணர் ஊர் நின்மாண் இழைமகளிரை**
**எம்மனைத் தந்துநீதழீஇயினும்,அவர்தம்**
**புன்மனத்து உண்கை சிறுவர்பயந்து**
**நன்றிசான்;ற கற்பொடு எம் பாடுஆதல் அதனினும் அரிதே”**

**(நற்றிணை: 330)**

விலைமகளிரிடம் உண்மையான காதலை எதிர்ப்பார்க்க முடியாது. ஆதலால் அவர்கள் தொடர்பு வேண்டாம் என்ற உயர்ந்த கருத்து இப்பாடலி;ல் அமைந்திருக்கின்றது.

**விலைமகளிர்:**

மதுரை நகரத்தில் விலைமகளிர் பலர் இருந்தனர். பழந்தமிழ் நாட்டில் விபசாரமும் நிலைத்திருந்தது. செல்வக்;குடியினரே விபசாரம் நிலைத்திருப்பதற்குக் காரணமாயிருந்தனர். பழங்காலத்தில் பெண்ணுரிமை இல்லை. பெண்கள் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். ஆண்கள் பலமனைவியரை மணப்பதும் விலைமாதர் வீட்டிற்குப் போய் வருவதும் ஆகிய இவை தவறாகக் கருதப்படவில்லை. இதனால் விலைமாதர், கணிகையர், பரத்தையர் என்று சொல்லக்கூடிய வகுப்பினர் இருந்தனர். மதுரைக்காஞ்சி பாடிய மாங்குடிமருதனாரும் இப்பெண்களின் இயல்பை எடுத்துக்காட்டி பொதுமக்களுக்கு அறிவுரை கூறுகின்றார்.

**விலைமாதர்களின் இயல்பு:**

விலைமாதர்கள் மழைக்காலத்திலே மலர்ந்திருக்கும் புதரைப் போலத் தலைநிறையப் பூச்சூடியிருப்பார்கள். வந்தவரை மார்பிலேவடுபடும்படி அழுந்தத் தழுவிக்கொள்வார்கள். வந்தவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்வார்கள். தம் உண்மை உள்ளத்தைக் காட்டமாட்டார்கள். மறைப்பார்கள். யாராக இருப்பினும் தம் அழகை விரும்பிவந்த ஆண்களின் செல்வம் முழுதும் பறித்துக்கொள்வர். பின் வண்டுகள் ஒருமலரில் உள்ள தேனை உண்டபின், அம்மலரை விட்டுவிட்டுத் தேனுள்ள வேறுமலரை நாடிச்செல்வது போல,தம்மைப் புணர்ந்தவர்களின் நெஞ்சகம் வருந்தும்படி தூக்கத்திலேயே அவர்களை விட்டுப் பிரிந்து விடுவார்கள். இதுவே விலைமாதர்களின் இயல்பு என்று காட்டுகிறார். இதனை,

> **“கொண்டல் மலர்ப்புதன் மானப் பூ வேய்ந்து**
> **நுய்பூண் ஆகம் வடக்கொளமுயங்கி,**
> **----------------------------------------------------------------------**
> **நெஞ்சு ஏமாப்ப இன்துயில் துறந்து.”** (**மதுரைக்காஞ்சி**:568-575)

என்ற அடிகளால் அறியலாம்.

விலைமாதர்கள் இசை, நடனம் முதலிய கலைகளில் தேர்ந்திருந்தனர். இளைஞர்களை மயக்கும்படி தங்களை அலங்கரித்துக் கொள்ளும் திறமையுடையவர்களாகவும் தேவலோகத்துப் பெண்களைப் போலவும் காட்சியளித்தனர். இத்தகைய பரத்தையர்களை வெற்றி கொண்ட வேந்தன் பகைவர் நாட்டிலிருந்து சிறைபிடித்து வருவதும் உண்டு. இப்படிச் சிறைப்பிடிக்கப்பட்டு வந்த மகளிர்க்குக் “கொண்டி மகளிர்” என்ற பெயர் வழங்குவதும் உண்டு. இக்கொண்டி மகளிர்ப் பற்றியும் மாங்குடிமருதனார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“இவர்கள் நல்ல விளக்கு வெளிச்சத்திலே பல பெண்களுடன் நெருங்கி நிற்பார்கள். நீல வானத்திலே விளையாடும் தெய்வ மகளிர் போல் காணப்படுவார்கள். தம்மைக் காணும் இளைஞர்களின் நெஞ்சத்தை கலக்கி விடுவார்கள். இவர்கள் யாழோடு இசைந்து நின்ற

மத்தளத்திற்கு ஏற்ப நடனமாடுவார்கள். ஆழமான நீர்த்துறையின் மணல் திட்டுகளின் மரக்கொம்புகளில் தளிர்களைக் கொய்வார்கள். நீர் நிறைந்த மலர்களுடன் நீண்டதாகத் தொடுத்த குவளை மலர்மாலையைப் பாதம் வரையிலும் தொங்கும்படி அணிந்து கொள்வார்கள். நறுமணம் வீசும் வீடுகள் தோறும் சென்று இளைஞர்களுடன் விளையாடுவார்கள்."

இதனை,

**"ஒண்சுடர் விளக்கததுப் பலருடன் துவன்றி,**

**நீனிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும்**

**வானவர் மகளிர் மானக்,கண்டோர்**

**நெஞ்சு நடுக்குறும் கொண்டி மகளிர்**

**..........................................................**

**மணங்கமழ் மனைதொறும் பொய்தல் அயர"** (580-589)

என்ற பாடல் மூலம் காட்டி, கற்புடைய மகளிரை மணந்து வாழ்க்கை நடத்தும் இல்லறமே நல்லறம் என்பதை உணர்த்துகின்றார். மேலும் இவை சமூகத்தில் களையப்பட வேண்டியவை என குறிப்பால் உணர்த்துகின்றார். இன்றும் இவை தொடர்வதை நினைத்தால் வேதனையாக உள்ளது. சில கிராமங்களிலும் வட மாநிலங்களிலும் இது ஒரு குறிப்பிட்ட இனத்தவரின் குலத்தொழிலாகவே இருந்து வருகின்றது. 2012ல் 'இந்தியா டுடே' நடத்திய கருத்துக்கணிப்பில் 4 நிமிடத்திற்கு ஒருமுறை ஒரு பெண் அல்லது சிறுமி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறாள் என்று குறிப்பிடுகின்றது.

**அறங்கூர் அவையம்:**

நீதிமன்றத்திற்கு அறங்கூர் அவையம் என்று பெயர். அக்காலத்தில் மக்கள் நேர்மையாக வாழ்ந்;தனர். மன்னன் உண்மையைக் கண்டறிந்த பின்னரே தீர்ப்பு கூறுவான். துலாக்கோல் போல் நடுநிலையில் நின்று தீர்ப்பு வழங்கினர் என்பதன் மூலம் விலைமகளிர் நாடாமல் மக்கள் நேர்மையாய் வாழவேண்டும் என்பதை குறிப்பால் உணர்த்துகின்றார். இதனை,

**"அச்சமும்....ஞெமன்கோல் அன்ன செம்மைத்தாகிச்**

**சிறந்த கொள்கை அறங்கூர் அவையமும்"** (489-492)

மாதவி கணிகை குலப் பெண்ணாய் இருந்தும் கற்பில் சிறந்து விளங்கினாள் தன் மகள் மணிமேகலைக்கு உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் சிறந்த அறத்தை மேற்கொள்ளச் செய்ததால், அறிஞர் மு.வ. அவர்கள் மாதவியைச் சேற்றில் பூத்தச் செந்தாமரை மலர் என்றார். வாழ்க்கையின்பம் என்பது, அளவோடு பெற்ற உன் வாழ்நாளை நல்ல மகளிருடன் இனிது வாழ்க என மதுரைக்காஞ்சியின் இறுதியில் பாண்டிய மன்னனை மாங்குடிமருதனார்

வாழ்த்துவதன் மூலம் விலைமகளிர் களையப்படவேண்டிய உறவு என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றார்.

“கிழிசல் உடை - ஏழை அணிந்தால் பிச்சைக்காரி நடிகை அணிந்தால் பேசுஷன் உடை” என்றும் “ அந்த எமனின் வீட்டிற்கு ஏன் இளமையில் கடிதம் - எயிட்ஸ்” என்ற கவிதைகளும் சிந்தனைக்குரியவை. கணிகையர் கனிகள் அல்ல, காயும் அல்ல. ஆனால் நோய் தரும் களங்கள் மட்டுமல்ல. களையப்படவேண்டிய தளங்களும் கூட. சமூகத்தில் குடும்பத்தில் அந்தஸ்தை குறைக்கும் நோய் மட்டுமல்ல தீராத பல (எயிட்ஸ்) நோய்களையும் தரக்கூடியவை. இதனைப் பண்டைக்காலத்திலிருந்தே மன்னனுக்கும் மக்களுக்கும் சான்றோர் எச்சரித்து வந்தனர் மேலும் இவை களையப்படவேண்டியவை என்பதை மேற்காணும் செய்திகள் மூலம் மதுரைக்காஞ்சி நமக்கு நன்கு உணர்த்துகின்றது.

**துணைமை நின்றவை** :

- பாட்டும் தொகையும்,(தொகுப்பு), நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.

**MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL**
**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்**
**E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1**
**MARCH – 2024**

# 13. சுதந்திர வேள்வியில் பெண் ஆளுமை - பத்மாசனி

**முனைவர் M.ஜீனதாஸ்,**
உதவிப்பேராசிரியர்-வரலாற்றுத்துறை,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.

DOI 10.5281/zenodo.10725124.

**Abstract :**

The sacrifices of many faceless people in India's freedom struggle have gone unrevealed. On closer reading it becomes clear that their sacrifice is in no way less than the sacrifice of many elders we know. The freedom movement swept across India. Madurai was also strongly concentrated in that wave. The people of Madurai, who had seen many regime changes throughout history, kept watching the intricacies of the British rule. Maruthu Pandyas, Kattabomman, Velu Nachiyar, Quili, voices of continuous resistance, protests and uprisings were established in this land. In this situation, no one would have heard of the small sacrifices that happened here and there after the arrival of the great personality Gandhiji. One such martyr, Padmasini Ammaiyar and her sacrifice will never be forgotten for the rest of their lives. This article is a short introduction about him.

**Key Words :** Personality – Women's democracy – Struggle

## முன்னுரை

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் முகம் தெரியாத பலரின் தியாகங்கள் வெளியில் வராமலே போய்விட்டன. ஆழ்ந்து படிக்கிற போது அவர்களின் தியாகம் நாம் அறிந்த பல பெரியவர்களின் தியாகத்தை விட எந்த வகையிலும் குறைந்ததில்லை என்பது தெளிவாகிறது. விடுதலை வேள்வி இந்தியாவெங்கும் பெரும் அலையாக வீசியது. மதுரையிலும் அந்த அலை தீவிரமாக மையம் கொண்டிருந்தது. தொடர்ந்து பல ஆட்சி மாற்றங்களை வரலாறு நெடுகிலும் பார்த்து வந்த மதுரை மக்கள் பிரித்தானிய ஆட்சியின் நுணுக்கங்களை உற்றுப் பார்த்துக் கொண்டுதான் இருந்தனர். மருது பாண்டியர்கள், கட்டபொம்மன், வேலு நாச்சியார், குயிலி என்று தொடர்ச்சியான எதிர்ப்பின் குரல்கள், போராட்டங்கள், எழுச்சிகள் இந்த நிலத்தில் நிலைபெற்றிருந்தன. இந்த நிலையில் காந்தியடிகள் என்னும் என்னும் பெரும் ஆளுமை வந்ததற்குப் பிறகு ஆங்காங்கே நிகழ்ந்த சிறுசிறு தியாகங்கள் யாரும் கேள்விபட்டிருக்க மாட்டார்கள். அப்படியான தியாகிகளுள் ஒருவரான பத்மாசினி அம்மையாரையும் அவரது தியாகத்தையும் வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டார்கள். அவரடைப் பற்றிய சிறிய அறிமுகமாக இக்கட்டுரை அமையப்பெறுகின்றது.

## ஒரு வீரத்தாயின் வரலாறு;

இவர் தேசத்தின் விடுதலைக்காக மாபெரும் அர்ப்பணிப்பை அளித்தவர். சும்மா வந்துவிடவில்லை சுதந்திரம். 200 ஆண்டுகளுக்கு மேலாக அந்நியர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த இந்தத் தேசத்தின் சுதந்திரம் பல்லாயிரக்கணக்கான தியாகிகளின் தியாகத்தால் உருவானது. பத்மாசனி சுதந்திர போராட்டத்தில் தன் குழந்தைகளையே பலியிட்ட ஒரு வீரத்தாயின் வரலாறு இன்று பலருக்கும் தெரியாது. அந்த தாயின் பெயர் பத்மாசனி. விடுதலைக்காக சிறை சென்ற முதல் பெண். பாரதியாரின் பாடல்களை பட்டிதொட்டி எல்லாம்

பரப்பிய முதல் பெண்ணும் இவர்தான். மதுரைக்குப் பக்கத்தில் இருக்கும் சோழவந்தானில் 1897-ல் பிறந்தவர் இவர். மதுரையைச் சேர்ந்த சீனிவாசவரதன் என்பவரை திருமணம் செய்து கொண்டவர். மதுரையின் மருமகள். சீனிவாசவரதனும் மகாகவி பாரதியாரும் மிக நெருங்கிய நண்பர்கள். ஒருமுறை பாரதியார் 'உன் சொத்தை விற்றேனும் பத்திரிக்கை நடத்த பணம் அனுப்பு' என்று கடிதம் எழுதியிருந்தார். மறுநாளே தனது சொத்தை விற்று பாரதியாருக்கு பணம் அனுப்பிவைத்தவர் வரதன். அத்தனை நெருக்கம். இன்றைக்கு வேண்டுமானால் பாரதியார் பாடல்களை நாம் எல்லா இடங்களிலும் கேட்கலாம். ஆனால் அன்றைக்கு அப்படியில்லை. பாடல்கள் வெறும் காகிதத்தில் மட்டுமே இருந்தன. அதை தெரு தெருவாக பாடி, பஜனைகளில் பாடி மக்கள் மத்தியில் எழுச்சி ஊட்டியவர்கள் சீனிவாசவரதனும் பத்மாசனியும்தான்.

**கள்ளுக்கடை மறியல்** :

1922-ல் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டதற்காக வரதன் கைது செய்யப்பட்டார். சேதி கேட்டு ஓடிவந்த பத்மாசனி தனது கணவருக்குத் திலகமிட்டு மாலை அணிவித்து சிறைக்கு அனுப்பி வைத்தார். அதுவரை கணவருக்கு உறுதுணையாக இருந்த பத்மாசனி முழுமூச்சாக நாட்டின் விடுதலைக்காக தனந்தனி ஆளாக போராட்டத்தில் குதித்தார். தமிழ்நாட்டில் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட முதல் பெண்மணி என்ற பெருமை இவரை வந்து சேர்ந்தது. கணவர் சிறைக்கு சென்றபின் தன்னை முற்றிலுமாக மாற்றிக்கொண்டார். தன்னுடைய தங்க நகைகள் அனைத்தையும் கழற்றி வைத்துவிட்டார். தலைக்கு என்னை தேய்த்துக்கொள்ள மாட்டார். ஏகப்பட்ட வசதியிருந்தும் ஒருவேளை மட்டுமே உணவருந்தினார். அதுகூட மோர் சாதமும் பட்டமிளகாய் துவையலும்தான். தான் செல்வந்தராக இருந்தும் அந்த வருவாயில் சாப்பிடாமல் ராட்டையில் நூல்நூற்று அதில் வரும் வருமானத்தின் மூலமே சாப்பிட்டார். தினமும் மாலை நேரத்தில் பாரதியார் பாடல்களை பாடியபடியே வீடுவீடாகச் சென்று கதர் விற்று வருவார். சுதந்திரத்திற்கு எதிராக இருப்பவர்களையும், ஆங்கிலேய அரசிடம் வேலைப் பார்ப்பவர்களையும் கூட கதர் வாங்க வைத்துவிடுவார். அவர் பேச்சில் அத்தனை வல்லமை இருந்தது.

**சுதந்திரத்தில் பெண்ணாக முன்னின்றமை** :

பெண்கள் என்றாலும் ஒரு முழம் ரவிக்கைத்துணி வாங்க வேண்டும் என்பார். பெண்களும் விடுதலைப் போரில் ஈடுபட வேண்டும் என்றார். "சாவித்திரி பிறந்த நாடு. சந்திரமதி, சீதை வாழ்ந்த நாடு, தன்னை மானபங்கம் படுத்திய துரியோதனன் ரத்தத்தை எடுத்து சடை முடிந்து வீரசபதம் நிறைவேற்றிய பாஞ்சாலி வாழ்ந்த நாடு என்று பழம் பெருமை பேசுவதில் அர்த்தமில்லை. இப்பெண்மணிகள் வாழ்ந்த நாட்டில் பிறந்த நாம் இனி கிழவிகள், தவசிகள் போல் பேசுவதில் மகிமையில்லை. இந்தியா முழுவதும் விடுதலை அக்னி ஜுவாலையில் எரிகிறது. இந்தியப் பெண்களே! இந்த அக்னியில் நீங்களும் இணைந்திடுங்கள்." இவரின் பேச்சு பல பெண்களை சுதந்திர போராட்டத்திற்கு இழுத்து வந்தது. 1930-ல் மூன்று மாத கர்ப்பிணியாக இருந்த பத்மாசனி மதுரை ஜான்சி ராணி பூங்கா முன் பேசிய பொதுக்கூட்டத்தில், "போலீஸார் தங்கள் வேலையை ராஜினாமா செய்துவிட்டு தேசிய இயக்கத்தில் பங்கு பெற வேண்டும்." என்றார். இப்படி பேசியதை கேட்ட பின் ஆங்கிலேய அரசு சும்மா இருக்குமா பத்மாசனியை கைது செய்து 6 மாத சிறையில்

தள்ளியது. சிறை உணவு அவருக்கு பிடிக்கவில்லை. மூன்று மாத கர்ப்பம் என்பதால் குமட்டலும் வாந்தியும் இருந்தது. சிறையில் தானே சமைத்துக்கொள்ள அனுமதிகேட்டு ஒரு வாரம் உண்ணாவிரதம் இருந்தார். கர்ப்பவதிக்கான ஊட்டச்சத்து உணவு இல்லாததாலும் உடல்நிலை மோசமாக இருந்ததாலும் கர்ப்பம் கலைந்தது. சிறையில் இருந்து வெளிவந்ததும் மீண்டும் போராட்டத்தில் குதித்தார்.

**இரு பெரும் நிகழ்வுகள்** :

அன்றைய காலகட்டத்தில் பொதுக்கூட்டம் என்றால் இரண்டு விஷயங்கள்தான் பெரிதாகப் பேசப்படும். ஒன்று ஜாலியன்வாலாபாக் படுகொலை, மற்றொன்று வெள்ளையர்கள் லாலாலஜபதிராயை தடியால் அடித்துக் கொன்றது. இந்த இரண்டு சம்பவங்களுமே இந்தியர்கள் நெஞ்சில் நெருப்பாக கனன்று கொண்டிருந்தன. இதைப் பற்றி பத்மாசனி பேசும் போது அனல் தெறிக்கும். இவரின் பேச்சு என்றாலே அக்கம் பக்க ஊர்களில் இருந்தெல்லாம் மக்கள் ஒன்று கூடிவிடுவார்கள். அவரது குரல் வெண்கலம் போல் கணீரென்று இருக்கும். பேச்சில் உணர்ச்சியும் வேகமும் குவிந்துக் கிடக்கும். மரக்கட்டைக் கூட வீறுகொண்டு எழும். தொண்டர்கள் பாதி கூட்டத்திலே ஆவேசமாக எழுந்து, இப்போதே வெள்ளையர்களை கூண்டோடு அழித்துவிடுகிறோம் என்று புறப்படுவார்கள். அத்தகைய வீரம் அவரது பேச்சில் இருக்கும். நாட்டின் விடுதலையைத் தவிர வேறு எதைப்பற்றியும் சிந்தனை செய்யாத பத்மாசனிக்கு ஏற்கனவே இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்து இறந்திருந்தன. தேச சேவைக்காக தன்னை அர்பணித்துக் கொண்ட அவருக்கு தன் செல்வங்களை கவனிக்க நேரம் கிடைக்கவில்லை. அதனால் இரண்டு குழந்தைகளுமே ஒரு வயதை அடையும் முன்னே இறந்து போயிருந்தனர். அப்போது நான்காவது முறையாக கர்ப்பம் தரித்திருந்தார். சுப்பிரமணியசிவம் காவிரி நடையாத்திரை ஒன்றை ஏற்பாடு செய்த போது கரு 8 மாதமாக வளர்ந்திருந்தது. எப்போது வேண்டுமானாலும் குழந்தைப்பிறக்கலாம் என்ற நிலை. தலைவர்கள் எல்லாம் தடுத்தார்கள். நடைபயணத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்றார்கள். விடுதலையைத் தவிர எனக்கு வேறு எதுவும் பெரிதல்ல என்று கலந்து கொண்டார். வழிநெடுக சுதந்திரப் பிரச்சாரம், பாரதியார் பாடல்கள், சுதந்திரத்திற்காகத் தங்கள் இன்னுயிரை தந்த தியாகிகளின் வரலாறு என்று நடைப் பயணம் முழுவதும் சுதந்திர வேட்கை ஜோதி சுடர்விட்டு எரிந்தது. எட்டு மாத கர்ப்பத்துடன் 48 மைல் தூரம் நடந்தே வந்தார். ஒகனேக்கல் வரை ஒன்றாக சென்ற காவிரி யாத்திரை அதன்பின் இரண்டாக பிரிந்தது. ஒன்று திருப்பத்தூர், வாணியம்பாடிக்கும், மற்றொன்று தர்மபுரிக்கும் சென்றன. பத்மாசனி தருமபுரி, பாலக்கோடு, மாரண்டஹள்ளி, ஓசூர் வரை சென்று பிரச்சாரம் செய்தார். அந்த நேரத்தில் அவருக்கு பிரசவம் ஆனது. அழகான பெண் குழந்தை பிறந்தது. கடுமையான குளிர், பாதையோரம் தங்குவதற்கு நல்ல இடம் வேறு இல்லை. பிறந்த மூன்றாவது நாளில் அந்த குழந்தையும் இறந்தது. அம்மையாரின் உடலும் மோசமாக பாதிக்கப் பட்டது. ஓய்வுக்காக உடல் கெஞ்சத் தொடங்கியது. சில நாட்கள் மட்டும் ஓய்வெடுத்தார். உடலில் கொஞ்சம் தெம்பு வந்ததும் மீண்டும் நடக்கத் தொடங்கினார்.

**பத்மாசனியின் பேச்சு** :

பத்மாசனியின் பேச்சு மகாத்மா காந்தியடிகளையும் கவர்ந்திருந்தது. பெல்காமில் காந்தி தலைமையில் நடைப்பெற்ற கூட்டத்திற்கு சிறப்பு பேச்சாளராக பத்மாசனியை காந்தி அழைத்திருந்தார். விடுதலைக்காகவே தனது மூன்று குழந்தைகளையும் பலிகொடுத்த இந்த தாய் இந்தியாவின் விடுதலையை பார்க்காமலே இந்த மண்ணை விட்டு மறைந்தார். தன் உடல்நிலையைப் பற்றி கவலைப் படாமல் நாட்டைப்பற்றியே சிந்தித்த இவர் கடைசியில் கடுமையான ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டார். 14.1.1936 அன்று மக்களை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு விண்ணுலகம் சென்றார். இப்படி நாம் அறியாத பல தியாகிகளின் மதிப்புமிக்க தியாகத்தால்தான் இந்த சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறோம் என்ற எண்ணமே மனதை அழுத்துகிறது.

**நிறைவு** :

அறியப்படாத ஆளுமையான பத்மாசினி அம்மையார் இந்தச் சமூகத்தில் மீண்டும் மீண்டும் அறியப்பட வேண்டும். வருகின்ற புதிய தலைமுறையினர் சிறப்பு வாய்ந்த இந்த அம்மையாரின் தியாகத்தைப் போற்ற வேண்டும் என்பதற்கான கட்டுரை இது ஆகும்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 14. ஆண்டாள் பாடல்களும் பாலினச் சமத்துவ சமரச முயற்சியும்

முனைவர் ஜீ.ரவி,
இணைப்பேராசிரியர்,வரலாற்றுத்துறைத் தலைவர்,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி),விருதுநகர்.

DOI 10.5281/zenodo.10725181.

**Abstract :**

The songs sung by Andal, who is known as Sudigkodutha Sudark Kodhi, are Tirupavai and Nachiyar Thirumozhi. Among these Tirupavai consists of thirty songs. It has the distinction of being sung in Vaishnava temples during the month of Margazhi. Similarly Nachiyar Thirumozhi has 143 songs. It signifies a woman's marriage dreams and desires in the month of Thai. Kannan is featured in these songs. This article examines how Kannan Andal, the beloved Ramana of the Gopis, writes poetry with gender equality in mind.

**Key Words:** Andal – Genter Equality – Kannan -

## முன்னுரை

சூடிக்கொடுத்த சுடர்க் கொடி என்று அழைக்கப்படும் ஆண்டாள் பாடிய பாடல்கள் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகும். இவற்றுள் திருப்பாவை முப்பது பாடல்களைக் கொண்டது. இது மார்கழி மாதத்தில் வைணவத் தலங்களில் பாடப்படும் சிறப்பினைப் பெற்றது. அவ்வாறே நாச்சியார் திருமொழி 143 பாடல்களைக் கொண்டது. இது தை மாதத்தில் பெண் ஒருத்தியின் திருமணக் கனவுகளும் விரக தாபங்களையும் கொண்டு விளங்குகின்றது. இப்பாடல்களில் கண்ணன் சிறப்பிக்கப்படுகின்றான். கோபியர்கள் கொஞ்சும் ரமணனாகிய கண்ணன் ஆண்டாள் பாடல்களில் எத்தன்மையில் பாலினச் சமத்துவ நோக்குடன் கவிதை மொழிகின்றாள் என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை விளங்குகிறது.

## ஆண்டாள்

பன்னிரு ஆழ்வார்களில் ஒரே ஒரு பெண் ஆழ்வார் ஆண்டாள் மட்டுமே இவரது காலம் கி.பி எட்டாம் நூற்றாண்டு ஆகும். இவர் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் ஆவார். கோதை என்ற இயற் பெயரை உடைய இவர் கண்ணனையே கணவனாகப் பாவித்து வழிபட்டு பாவை நோன்பு இருந்து இறுதியில் ஸ்ரீரங்கத்தில் அவனுடன் ஐக்கியமாகின்றார்.

## திருப்பாவை

பாவை என்ற சொல்லுக்குப் பெண் என்றும் பொம்மை என்றும் பொருள். கன்னிப் பெண்கள் அழகிய பெண் பொம்மை ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு மார்கழித் திங்களில் வைகறைப் பொழுதில் நீராடி கண்ணனின் பெருமையைப் பாடுகின்றனர். சங்க காலத்தில் தமிழர் மரபாக இருந்த தை நீராடல் ஆண்டாளால் மார்கழி நீராடலாக இங்கே இடம் பெற்றுள்ளது. நெய் உண்ணாமலும், பால் உண்ணாமலும் கண்ணுக்கு மை தீட்டாமலும் விரதம் இருக்கும் பெண்கள் கண்ணனை வணங்கி வழிபட்டு அவனைப் போன்ற நல்ல

கணவன் கிடைக்க வேண்டும் என்பதே இந் நோன்பின் நோக்கமாகும். ஏனைய பெண்கள் இவ்வாறு நினைப்பதாகக் குறிப்பிடும் ஆண்டாள், தனக்கு கண்ணனே கணவனாக வரவேண்டும் என்று மார்கழியின் நோன்பும் தை மாதத்தில் வழிபாடும் மேற்கொள்கிறார்.

பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாள் நீங்களாக ஏனைய பதினொரு பேரும் ஆடவர்கள். அவர்கள் நாலாயிர திவ்யபிரபந்தத்தில் நாயகன் நாயகி பாவனையோடு தம்மைப் பெண்ணாகவும் கடவுளை ஆணாகவும் பாவித்து வழிபடுகின்றனர். ஆனால், செயற்கையாகப் பாவிக்கும ;பாவனையை விட பிறப்பால் பெண்ணாகப் பிறந்த ஆண்டாள் பாடும் பாடல்களில் பக்தி உணர்வு காதலாக வெளிப்படுகிறது. மார்கழித் திங்கள் என்று தொடங்கும் முதல் பாடல் முதல் வங்கக் கடல் கடைந்த மாதவனை என்ற முப்பதாவது பாடல் வரை திருப்பாவை முழுவதும் தூய தமிழ்ச் சொற்களால் கண்ணனை வேண்டும் பாமாலையாகவே ஆண்டாளால் பாடப்பட்டுள்ளது. கண்ணன் பகவத் கீதையில் மாதங்களில் நான் மார்கழி என்று கூறியுள்ளான.; அதனால் தான் மற்றவர்களால் சற்றே வெறுக்கப்படும் மார்கழியை ஆண்டாள் சிறிதும் வெறுக்காமல் கண்ணனைப் போற்றும் மாதமாக நினைக்கின்றார். தான் பிறந்து வளர்ந்த ஸ்ரீவில்லிப்புத்தூரை ஆயர் பாடியாகவே ஆண்டாள் கற்பனை செய்கிறார். திருப்பாவை வேதம் அனைத்திற்கும் வித்து என்று ராமானுஜரால் பெருமையோடு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 'நாராயணனே நமக்கே பறைதருவான்" என்றும்

**'நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்**
**போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்"**

என்றும் ஆண்டாள் கண்ணனை பக்தி யோடு பாடுகிறார். இப்பாடலில் கண்ணன் நாராயணன் என்னும் திருமாலின் அவதாரம் என்பதும் அவன் நமக்கே அருள் புரிவான் என தேற்றேகாரத் தோடு ஆண்டாள் உறுதிபடப் பாடுகிறார். இத் திருப்பாவையில் ஒன்பது பாடல்களில் பறை என்ற சொல்லை ஆண்டாள் எடுத்தாண்டுள்ளார். அக்காலத்தில் செய்தியை பறை அறைந்து மக்களிடம் தெரிவிக்கும் வழக்கம் இருந்துள்ளது. இன்று தகவல் அல்லது செய்தி என்று கூறுவதையே ஆண்டாள் அன்று பறை என்ற சொல்லால் குறிப்பிட்டு;ள்ளார் எனலாம். மேலும் கண்ணனை நெருப்பென்ன நின்ற நெடுமாலே, கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா என்றெல்லாம் அடைமொழிகளால் பக்தியுடன் பாடி வழிபடுகிறார்.

இறைவனைக் காண்பதற்காக வழிபடுபவர் பக்தர். இறைவனைக் கண்டு தெளிந்தவர் சித்தர். இவ்வகையில் தம்மை வருத்திக் கொண்டு நோன்பு இருந்து கடவுளை வழிபடுவது என்பது பக்தியின் சிறந்த அம்சமாகும். அத்தகைய நோன்பு காலத்தில் யாரைப்பற்றியும் மற்றவர்களிடம் புறம் கூறுதல் கூடாது, தவறான தீய செயல்களை செய்யக் கூடாது. என்பது பொது விதி ஆகும். தெய்வப் புலவர் திருவள்ளுவர் புறங்கூறாமை என்று தனி அதிகாரம் அமைத்துள்ளார். இதையே திருப்பாவையில்

**'செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்"**

என்று ஆண்டாள் குறிப்பிடுவதைக் காணலாம். மேலும் இளம் பெண்ணாக இருந்தும் கண் மை தீட்டுதல் கூந்தலில் மலர் சூட்டுதல் ஆகிய செயல்களைச் செய்யாமல் நோன்பு காலத்தில் தியாக மனப்பான்மையோடு இருக்க வேண்டும். இதனை,

**'மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்"**

என்கிறார் ஆண்டாள். இவ்வாறு இறைவனை எண்ணி நோன்பு இருந்தால் நாடு நலமாகும். உலகம் செழிக்கும் என்னும் கருத்து திருப்பாவையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிப் பெய்து"**

**(திருப்பாவை. 3)**

மேலும் கண்ணனை பல்வேறு பெயர்களால் ஆண்டாள் போற்றுகிறார் எனலாம்.

**'மாயனை மன்னு வடமதுரை மைந்தனை**
**தூய பெருநீர் யமுனைத் துறைவனை**
**ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்கை**
**தாயை குடல்விளக்கம் செய்ததா மோதரனை**
**தூயோமாய் வந்துநாம் தூமலர்தூவித் தொழுது**
**வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்க**
**போய பிழையும் புகுதருவோன் நின்றளவும்**
**தீயினில் தூசாகும் செப்பாலோ ரெம்பாவாய்"**

**(திருப்பாவை. 5)**

இப்பாலில் மைந்தன் என்ற சொல் இடம்பெற்றுள்ளது. தன் குடும்பத்தை மட்டும் காப்பவன் மகன்;ஞ பல குடும்பங்களைக் காப்பவன் மைந்தன் என்பர். அதனால் கண்ணன் பல குடும்பங்களைப் பாதுகாக்க வந்த கடவுள் என்னும் பொருளில் ஆண்டாள் அவனை மைந்தன் என்கிறார். திருப்பாவையில் முனிவர்களும் யோகிகளும் என்று வெவ்வேறு சொற்களால் ஆன்மிகவாதிகளைக் குறிப்பிடுகின்றார் ஆண்டாள்.

**'வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை**
**உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்**
**மௌ;ள எழுந்து அரியென்ற பேரரவம்**
**உள்ளம் புகுந்து குளிர்ந்தே லோ ரெம்பாவாய்"**

**(திருப்பாவை. 6)**

சினத்தை அடக்குபவனை முனி என்றும் பசியை அடக்குபவனை யோகி என்றும் அழைப்பர். இவ்வேறுபாடுகளை ஆண்டாள் நன்கு அறிந்து வைத்துள்ளார் எனலாம். புராணச் செய்திகள் பல திருப்பாவையில் இடம்பெற்றுள்ளன. அதனை உறுதிப் படுத்தும் வகையில் கண்ணனை கேசவன் என்றும் மாதவன் என்றும் தேவாதி தேவன் என்றும் வைகுந்தன் என்றும் மாயன் என்றும் வெவ்வேறு சொற்களால் ஆண்டாள் வர்ணிக்கிறார்.

இறைவனை இசைப்பாடல்கள் பாடி வழிபடுவது ஒருவகை மரபாகும். இசைக்கு வசமாகாத இதயம் ஏதும் இல்லை என்பர்.

**'ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாய்"**

என்று சிவபெருமானை சிறப்பிக்கிறார் சுந்தரர்.

**'நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன் மூர்த்தி**
**கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ"**

**(திருப்பாவை. 7)**

**'சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்**
**பங்கயக் கண்ணானைப் பாடலோ ரெம்பாவாய்"**

**(திருப்பாவை. 14)**

இப்பாடல்களில் கண்ணனை இசையோடு பாடியது குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஒளி வழிபாடு**

இறைவனை 'ஜோதி வடிவானவன்" என்கிறார் வள்ளலார். அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை என்பது அவர் வாக்காகும். உலகில் ஒளியிலிருந்தே அனைத்துப் பொருட்களும் தோன்றின என்பது அறிவியல் கருத்தாகும். நேசமுள்ள வான்சுடரே என்பது மகாகவி பாரதியின் பாடலடியாகும். ஒளியிலிருந்தே அனைத்தும் தோன்றின என்னும் இச்சிந்தனைக் கருத்து ஆண்டாள் பாடலில் வெளிப்பட்டுள்ளது. உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே என்று இறைவனைக் குறிப்பிடுகின்றார் ஆண்டாள். கண்ணனின் இருகண்கள் திங்களும் ஆதித்தனும் ஒருசேர எழுந்ததாக ஆண்டாள் வருணிக்கின்றார். இதையே பாரதியார்,

**'சுட்டும் விழிச்சுடர் தான் கண்ணம்மா**
**சூரிய சந்திரரோ"**

என்கிறார்.

**'திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்**
**அங்க ணிரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்**
**எங்கள்மேல் சாபம் இழிந்தலோ ரெம்பாவாய்"**

**(திருப்பாவை. 22)**

**நாச்சியார் திருமொழி**

தன் திருமணத்தைப் பற்றி தானே கனவு கண்டு பாடுவதாக ஆண்டாளால் இயற்றப்பட்டதே நாச்சியார் திருமொழி ஆகும். உமறுப்புலவர் இதனை அடியொற்றியே சீறாப்புராணத்தில் கதீஜா கனவு கானும் படலத்தை எழுதி உள்ளார் எனலாம். காதல் கை கூட உதவும் கடவுள் மன்மதன் என்பதால் மன்மதனை வேண்டுவதாக நாச்சியார் திருமொழி

அமைக்கப்பட்டுள்ளது. மன்மதனுக்கு மறு பெயர் காமன். அவனது தம்பியின் பெயர் சாமன். காமன், சாமன் இருவரையும் வேண்டுவதாக முதல் பாடல் அமைக்கப்பட்டுள்ளது.

**'உன்னையு மும்பியை யுந்தொழுதேன்**
**வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை**
**வேங்கட வற்கென்னை விதிக்கிற்றியே"**

**(நா. திரு. 1)**

மேலும் தை மாதத்தில் குளிரைப் போக்கும் விதமாக தீ மூட்டி மன்மதனை வழிபடும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது.

**'முள்ளுமில் லாச்சுள்ளி யெரிமடுந்து**
**முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா"**

மேலும் திருமாலிருஞ்சோலை என்று வைணவர்களால் அழைக்கப்படும் அழகர் கோவிலிலுள்ள திருமாலுக்கு 100 அண்டாக்களில் வெண்ணெய்யும், சர்க்கரைப் பொங்கலும் படையல் வைத்து வணங்கி வழிபாடு செய்வதாக ஆண்டாள் வேண்டுகிறார். ஆனால் ஆண்டாள் தன் வாழ்நாளில் இந்த நேர்த்திக்கடனை நிறைவேற்ற இயலவில்லை அதனால் ஆண்டாளுக்குப் பின் அவதரித்த ராமானுஜர் இந்நேர்த்திக் கடனை நிறைவேற்றினார். அதனால் ஆண்டாளே மனமுவந்து ராமானுஜரை கோயில் அண்ணா என்று அழைத்ததாக அவருக்கு ஒரு பிரமை ஏற்பட்டது.

**'நூறு தடா நிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்**
**ஏறு திருவுடையான் இன்று வந்திவை கொள்ளுங் கொலோ"**

கருந்தெய்வம், பரமன், ஆயர்பாடிக்கு அணிவிளக்கு, பெருந்தாளுடைய பிரான் என்றெல்லாம் ஆண்டாள் கண்ணனைப் போற்றுகிறார்.

திருமால் கருணை நிரம்பியவர் என்ற பொருளில் அளிநன் குடைய திருமால் என்றும் அவரை வாழ்த்துகிறார் ஆண்டாள்.

**முடிவுரை**

இவ்வாறு திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழியிலும் கடவுள் திருமாலின் அவதாரமாகிய கண்ணனை பக்தி நோக்கிலும் காதல் நோக்கிலும் ஆண்டாள் பாலினச் சமத்துவப் போக்கில் தன் உணர்வுகளைப் பகிர்ந்து மிகவும் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

**துணைநின்ற நூல்கள்**

1. திருப்பாவை, கௌரா பதிப்பகம்,திருச்சி.
2. நாச்சியார் திருமொழி, கௌரா பதிப்பகம்,திருச்சி.
3. தேவாரம், கௌரா பதிப்பகம்,திருச்சி.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 15. காஞ்சிவனம் புரவி எடுப்பு திருவிழா

**ம.ரஞ்சிதா,**

தமிழ் ஆர்வலர்.

சூரக்குண்டு,மதுரை.

DOI 10.5281/zenodo.10725205.

**Abstract :**

It can be assumed that the people must have worshiped in awe of the miracles of the five natural forces, and the worship must have arisen to protect themselves from the wrath of nature."The Lord should be worshiped with fear and love," says the Upper Devaram. It is said that they should have appeared and flourished spontaneously on the basis of fear as far as universal belief, worship and worship of God is concerned. The fear of God and the belief that life will be healthy, prosperous, comfortable and carefree if they do not violate the customs of their ancestors motivate people to perform these rituals.

**முன்னுரை:**

இயற்கை சக்திகளான ஐம்பூதங்களின் அற்புதங்களைக் கண்டு மக்கள் வியந்து வணங்கிருக்க வேண்டும் என்றும், இயற்கையின் சீற்றத்திற்கு அஞ்சி அதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் வழிபாடு தோன்றியிருக்க வேண்டும் என்றும் கருதலாம்.

“இறைவனை அஞ்சியாகினும் அன்பு கொண்டாகினும், துதித்து வழிபட வேண்டும்” என்று அப்பர் தேவாரம் கூறுகிறது. உலகளாவிய கடவுள் நம்பிக்கை, வழிபாடு, பூசை ஆகியவற்றைப் பொறுத்த அளவில் அவை அச்ச அடிப்படையிலும் தன்னிச்சையாகத் தோன்றித் தழைத்திருக்க வேண்டும் என்பர். கடவுளிடம் கொண்ட அச்சமும், முன்னோர் வழக்கமும் மீறாமல் நடந்து கொண்டால்தான் வாழ்க்கை நலமானதாய்,வளமானதாய், வசதியானதாய் கவலையற்றதாய் அமையும் என்ற நம்பிக்கையும் சேர்த்து இச்சடங்குகளை விடாமல் செய்ய மக்களைத் தூண்டுகின்றன என்பர் சோமலெ.

**நாட்டுப்புற வழிபாட்டின் தோற்றம் :**

மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்து இருந்த போதிலும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாவாகும். தமிழகத்தில் 2000 ஆண்டுகளாக விழாக்கள் நடைபெற்று வருவதைக் காணமுடிகிறது. சமுதாய கலை அனுபவமே மேலோங்கி வளர்கின்றது. கலைகளின் வளர்ச்சிக்குத் திருவிழா தான் முக்கிய காரணிகள் ஆகும். கடலோடு கலக்கும் ஆறுகள் போல் எல்லாத் தெய்வ வணக்கமும் என்னையே அடைகிறது என்று கண்ணபிரான் சொன்னது உண்டு. ஆறுகளைக் கூட எண்ணிவிடலாம் ஆனால் தெய்வங்களையும் தேவதைகளையும் வழிபாடுகளையும் எண்ணுவதும் எழுதுவதும் அரிதினும் அரிதாகும் என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது. இயற்கை வழிபாட்டோடு காலப்போக்கில் பண்டைய மக்கள் இறந்து போன தமது முன்னோர்களையும், தாய் தந்தையரையும் வழிபடத் தொடங்கினர். அவர்களை அடக்கம் செய்த இடங்களில் கல்லை நாட்டி அக்கல்லின்கண் தங்களின் முன்னோர்களை வணங்கி வந்தனர். வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த முன்னோர்களின் நடுகல்லின் மீது அவர்களின்

சிறப்புகளை எழுதிப் பெருமையும் அடைந்தனர். இவ்வழக்கத்தினை எடுத்துரைப்பதாகப் புறத்திணையியல் நூற்பா,

**“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**
**சீர்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று**
**இம்மூன்று மரபிற் கல்லொடு புணரச்**
**சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே”**

(தொல். பொரு. புறம்:63)

என அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பண்டைத் தமிழர்களிடம் நிலைபெற்றிருந்த நடுகல் வழிபாடே பிற்காலத்தில் சிறுதெய்வ வழிபாடாக மாறியது எனலாம்.

**கோவில் மரம் வழிபாடு:**

இயற்கையை வழிபடத் தொடங்கிய மக்கள் சிலவகை மரங்களில் தெய்வம் குடியிருப்பதாகவும் சிலவகை மரங்களுக்குத் தெய்வீக சக்தி இருப்பதாகவும் நம்பினர். ஆதலால், அவ்வகை மரங்களை வணங்கத் தொடங்கினார்கள். தொடக்க காலத்தில் இயற்கைத் தெய்வங்களுக்கும், நடுகல் தெய்வங்களுக்கும் அத்தகைய மரங்களின் நிழலில் கோவில்களை ஏற்படுத்தினர். இதில் குறிப்பிட்ட மரத்தொடு, குறிப்பிட்ட தெய்வத்தைத் தொடர்புபடுத்தி வழிபடுவதே இன்றும் காணலாம்.

வழிபாடு என்பது இலக்கியம் சாராத வகையில் அடங்கும். இவ்வழிபாட்டு முறைகளைப் பற்றி ஆய்வு செய்தால் நாட்டுப்புறச் சமயம் பற்றியும், அவர்களின் பழக்க வழக்கங்கள் பற்றியும் அறியலாம். நாட்டுப்புற மக்கள் தங்களுக்கு நன்மை ஏற்பட்டால் அது தெய்வத்தால் வந்தது என்றும் தீமை ஏற்பட்டால் அதுவும் தெய்வத்தின் கோபத்தால் நேர்ந்தது என்றும் நினைத்துத் தெய்வங்களுக்கு பலியிட்டும், காணிக்கை செலுத்தியும் தங்களைக் காத்து அருளுமாறு வேண்டிக் கொள்வார்.

**காஞ்சிவனம் கோவில் வரலாறு**

மதுரை மாவட்டம் மேலூரில், 18 பட்டி கிராமங்களை உள்ளடக்கிய நடுவ நாட்டின் காவல் தெய்வமாக காஞ்சிவனம் உள்ளது. தொண்டை மண்டலத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் முதன்முதலாக குடியேறிய நாடு மேலூர். இதற்கு பழைய நாடு, நடுவ நாடு, தன்னரசு நாடு என்ற பெயரும் உண்டு. காஞ்சிபுரத்திலிருந்து வேட்டையாடிக் கொண்டே வந்த முன்னோர் கையில் வளரியும் வேட்டை நாயுடன் வளமான பகுதியான மேலூரில் குடியேறியதால் அவர் காஞ்சிவனம் என்றும் நடுவனாட்டின் காவல் தெய்வமாகவும் விளங்குகிறார். காஞ்சிவனம் கோவிலே நடுவ நாட்டின் பொதுக்கோவில் ஆகும். நடவ நாடு பூர்வீகமாக 18 பட்டிகளை உள்ளடக்கியது. அவை,மேலூர், தெற்குப்பட்டி, சொக்கம்பட்டி, மலம்பட்டி, கட்டகன்பட்டி, ஒத்தவீடு, மேல தெரு, நடுவளவு, புதுசுக்காம்பட்டி, பழைய

சுக்காம்பட்டி, பல்லவராயன் பட்டி, நொண்டிக் கோவில்பட்டி, வெள்ளநாதன் பட்டி, கொண்டப்ப நாயக்கன்பட்டி, உசிலம்பட்டி, சின்னரசம்பட்டி இவற்றில் மேலூர் தலைமை

கிராமமாக உள்ளது. தந்தை வழியில் 12 கரைகள் உள்ளதாகவும், இவை ஏழு கரை ஐந்து கரைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

**ஏழு கரை** :

1.சொக்கன் கரை

2.சேராப்புலி கரை

3.வீராச்சிக்கரை

4.கள்ளன் கரை

5.வெள்ளப்பரப்பய கரை

6.வழக்கன்கரை

7.வலங்கை கரை

இவற்றில் தலைமை கரையாக சொக்கன் கரை உள்ளது. ஏழு அம்பலக்காரர்கள் தலைமை கரையான சொக்கன் கரையிலிருந்து தேர்வு செய்யப்படுவர்.

**ஐந்து கரை** :

1.இளமன்கரை

2.வெள்ளநாதன் கரை

3.ஒஞ்சிக்கரை

4.வன்னியன் கரை

5.கண்ணம்பட்டியான் கரை

இந்த ஐந்து கரையில் தலைமை கரையாக இளமன்கரை உள்ளது. ஐந்து அம்பலகாரர்களும் இந்த இளமனக்கரையில் இருந்து தேர்வு செய்யப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

**புரவி எடுப்பு திருவிழா** :

13 ஆண்டுகளுக்குப் பிறகு காஞ்சிவனம் கோவிலில் புரவி எடுப்பு திருவிழா நடைபெற்றது.மேலூர் மந்தையில் 18 பட்டி கிராமங்களுக்கு பாத்தியப்பட்ட ஏழு கரை, ஐந்து கரை அம்பலக்காரர்கள் கிராம மக்கள் இளங்கட்சிகள் சேர்ந்து திருவிழாவை நடத்த முடிவு செய்தனர்.காஞ்சிவனம் கோவிலில் இருந்து புறப்பட்ட 18 பட்டி அம்பலக்காரர்கள் மற்றும் இளங்ச்சிகள் மேள, தாளம் முழங்க பலியிடப்படும் ஆட்டுக்குட்டிகளை நகரின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அதனைத் தொடர்ந்து மலம்பட்டி கோட்டைக்கிணறு பகுதியில் உள்ள பலியிடங்களில் கிராம மக்கள் புடைசூழ, பெண்கள்

குலவையிட ஆட்டுக்குட்டிகள் பலியிடப்பட்டது. பலியிடப்பட்ட ஆடுகளின் இரத்தத்தை மக்கள் நெற்றியில் திலகமிட்டுக் கொண்டனர். இதனை தொடர்ந்து புரட்டாசி மாதத்தில் புரவி எடுப்பு விழா நடத்தப்பட்டது.

செப்டம்பர் 19-ஆம் தேதி பிடிமண் கொடுத்து குதிரைகள் தயார் செய்யும் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. அன்றிலிருந்து 15 நாட்களும் காஞ்சிவனம் கோவிலில் மந்தை மற்றும் 18 பட்டி ஊர் மந்தைகளிலும் இரவில் கும்மியடித்து வழிபாடு செய்கின்றனர்.

கும்மி பாடலில் காஞ்சிவனம் வர்ணனை, பிடிமண் கொடுத்தல் போன்றவை பாடலாகப் பாடப்படுகிறது.

**வேட்டை நாயும் துணையிருக்க வேதமெல்லாம் தலைவணங்க**
**அண்டமெல்லாம் நடுநடுங்க**

**எங்க வேட்டைக்காரனே வாருமையா மண்ணையாலும் மன்னவரே!**

**மாயமதுர வீரவரே**

**அண்டமெல்லாம் சதிராட**

**மேலூர் கோட்டையாலும்**

**எங்கள் காஞ்சிவனமே வாருமையா!**

**குருத்துப்பட்டி வேளாருமே கும்பிட்டு பிடிமண்ணு வாங்குறாங்க**

**மந்தையில் இருந்து வாரும் ஐயா!**

குதிரைகள் தெற்குப்பட்டி மந்தையில் செய்யப்படுகிறது. முதலாவதாக காஞ்சிவனம் சிலை, வேட்டை நாய், மற்றும் சேமண் குதிரை செய்யப்படுகிறது. அதற்குப் பின் கிராமத்திற்கு ஒன்று என 18 குதிரைகளும் நேர்த்திக்கடன் குதிரைகளும் செய்யப்படுகின்றன. 15-வது நாள் காஞ்சிவனம் கோவிலில் 18 பட்டி சாமி ஆடுபவர்கள், அம்பலக்காரர்கள் இளங்கச்சிகள்,கிராம மக்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி மந்தையிலிருந்து நொண்டி கோவில் தெரு, திருவாதவூர் ரோடு வழியாக தெற்குப்பட்டி செல்கின்றனர். அவர்களை வரவேற்கும் விதமாக வான வேடிக்கை,மேளதாளம் முழங்க தெற்குப்பட்டி மந்தையில் சாமியாட்டம் தொடங்கி அம்பலக்காரர்கள் சாமி சிலைகளுக்கும் குதிரைகளுக்கும் மரியாதை செய்து பட்டாடைகள் மற்றும் குதிரைகளுக்கு கண்ணாடி அணிந்து சாமி கும்பிடப்படுகிறது. காஞ்சிவனம் கோவிலில் இருந்து வரும் 18 பட்டி அம்பலகாரர்கள் குதிரைகளுக்கு மரியாதை செய்யும் வரும் வரை யாரும் குதிரைகளுக்கு மாலை போடக்கூடாது என்ற கட்டுப்பாட்டையும் காணலாம். காஞ்சிவனம் தலைமைதாங்க முதலாவதாக சேமண்குதிரையும் மற்ற குதிரைகளும் தெற்குப்பட்டி மந்தையிலிருந்து புறப்படுகின்றன. சேர்மண் குதிரையை முதல் கரையான தெற்குப்பட்டி கிராம மக்களே தூக்குவார்கள் என்றும், மற்ற குதிரைகளை அந்தந்த கிராமத்துக் கரைகாரர்கள் தூக்குவார்கள் என்றும் சொல்லப்படுகிறது. தெற்குப்பட்டியில் இருந்து திருவாதவூர் ரோடு வழியாக நொண்டு கோவில் வந்து சேர்கின்றனர். அங்கிருந்து மேலூர் மெயின் ரோடு வழியாக காஞ்சிவனம்

மந்தைக்கு மேற்கு நுழைவுவாயில் வழியாக கொண்டுவரப்படுகிறது. அன்று இரவு காஞ்சிவனம் மந்தையில் நாடகம் வைத்து மறுநாள் மாலை நான்குமணி அளவில் குலத்துக்காரர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் அனைவரும் காஞ்சிவனத்தை வழிபட்டு, வானம் வேடிக்கையும், மேளதாளமும் முழங்க ஆட்டம் பாட்டத்துடன் கிழக்கு நுழைவு வாயில் வழியாக சூரக்குண்டு மாத்திக்கம்மாய் கரையில் உள்ள அய்யனார் கோவிலுக்கு கொண்டுவரப்படுகின்றது. தற்போது 2023 அக்டோபர் மாதம் 4-ம் தேதி புரவி எடுப்பு விழா நடைபெற்றதை தெரிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு மேலூர் காவல் தெய்வமான காஞ்சிவனம் சாமியை வழிபடுவதால் மக்கள் பிணி நீங்கி, போதிய மழை பெய்து விவசாயம் செழிக்கும் என்பது மேலூரைச் சுற்றியுள்ள மக்களின் நம்பிக்கையாக இருப்பதை உணர முடிகிறது.

**தொகுப்புரை :**

உருவாய், அருவாய், உளதாய், இலதாய் இருக்கக்கூடிய தன்மை சிறு தெய்வங்களுக்கும் உண்டு. காவல் தெய்வங்கள் ஊரைக் காப்பதாக மக்கள் நம்புகின்றனர். திருவிழா சாதி, மத, இன, வேறுபாடு இன்றி அனைவரும் ஒன்று கூடி வழிபடுவது ஒற்றுமையின் வெளிப்பாடாகவே விளங்குகின்றது. விழாக்கள் என்பன ஆதி மக்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் கூட்டு சடங்கில் இருந்து தோன்றியவை ஆகும். இவை மக்களை ஒற்றுமைப்படுத்தி மதக்கொள்கைகளை இறவாமல் பாதுகாக்கும் ஆற்றல் உடையன என்பதே காஞ்சிவனம் கோவில் வழிபாட்டிலும் திருவிழாக்களிலும் காண முடிகிறது. குலதெய்வமாக இருந்து, ஊர் தெய்வமாக மாறி அனைவரும் வழிபடும் பொது தெய்வமாக இருப்பது மேலூர் மக்களின் ஒற்றுமையை பறைசாற்றும் விதமாக உள்ளது என்பதை அறியலாம்.

**ணைநூற்பட்டியல் :**

- கைலாசபதி. கா - பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்,நியூ செஞ்சுரி புத்தக நிலையம் சென்னை.
- சக்திவேல். சு - நாட்டுப்புற இயல் ஆய்வு,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை.
- தமிழண்ணல் - தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்.
- கலைக்களஞ்சியம் தொகுதி 4 - தமிழ் வளர்ச்சி கழகம் சென்னை.
- நாட்டார் தெய்வங்கள் ஆய்வு கட்டுரைகள் - கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி திருச்செங்கோடு.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 16. சுதந்திரப் போராட்டத் தியாகி பி.எம் இராமுவின் வாழ்க்கை வரலாறு

**முனைவர் ந.கவிதா,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அமெரிக்கன் கல்லூரி,மதுரை.

DOI 10.5281/zenodo.10725240

**Abstract :**

We are singing Bharati's lines of 'Ananda shribhat vavem' - we have forgotten many people who were responsible for our independence. Many more hidden than we have forgotten live and hide among us. Martyr P.M., who participated in the protest led by Netaji Subhas Chandra Bose, suffered many hardships and did not care about his life. We will see about Rama in this article.

## முகவுரை

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் - என்ற பாரதியின் வரிகளைப் பாடிக்கொண்டிருக்கும் நாம் சுதந்திரம் பெறக் காரணமாக இருந்த பலரை மறந்துவிட்டோம். மறந்து விட்டோம் என்பதை விட மறைக்கப்பட்ட பலரும் நம்மிடையே வாழ்ந்து மறைந்துள்ளனர். பல இன்னல்களையும் பெற்று தமது உயிரையும் பெரிதாகப் பொருட்படுத்தாமல் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட தியாகி பி.எம். இராமு அவர்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## பிறப்பு

தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியைச் சேர்ந்த வெங்கிடகுறிச்சி கிராமத்தைச் சேர்ந்த பி.முத்து யாதவ் அவர்களின் மகன் பி.எம் இராமு யாதவ் அவர்கள் 1918 ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் தொழில் காரணமாக மலேசியா சென்றுள்ளார். 1937-ல் மலேசியாவில் பினாங்கு மாகாணத்தில் சாக்கு, இரும்பு, உலோக வியாபாரம் பெரிய அளவில் செய்து வந்துள்ளார்.

## நேதாஜி மீது கொண்ட பற்று

நமது நாட்டின் இந்திய விடுதலைப் போராட்டத்தைத் தனி வழியில் நின்று நடத்திச் சென்றவர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள். தனது இருபத்து ஐந்தாவது வயதில் லண்டனில் படிப்பை முடித்துத் திரும்பிய இவரை சித்தரஞ்சன் தாஸ் அவர்கள் நிறுவிய தேசியக் கல்லூரிக்கு நேதாஜியைத் தலைவராக நியமித்தார். அங்கு பயிலும் மாணவர்களுக்கு சுதந்திர உணர்வைத் தூண்டும் உரைகளை உணர்சி பொங்க முழங்குவதைக் கேட்ட பலரும் நேதாஜியின் படையில் சேர்ந்துள்ளனர். பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளை அறிந்த நேதாஜி இந்திய இராணுவத்தை உருவாக்குவதற்கு இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் போர்க்கைதிகளாய் இருந்த நூற்றுக்கணக்கான இந்தியர்களை ஒன்று திரட்டியுள்ளார். இந்தியாவை ஆக்கிரமித்த ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து நடத்தினார்.

நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் படையில் மிகுந்த ஆர்வம் கொண்டு 1942ல் ராஜ்பிகாரி கபாஸ் அவர்கள் திரட்டிய சர்வாம்ச படையில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றுள்ளார். 1943ல் கிழக்காசியாவில் நேதாஜி பிரச்சாரம் செய்து வந்த இந்திய தேசிய இராணுவத்தில்(ஐNயு) ; சேர்ந்து பயிற்சி பெற்றார். ஓட்டம் முதலான அனைத்து போட்டிகளிலும் முதலாவதாக வந்த காரணத்தினால் பயிற்சி கமெண்டராகச் சேர்ந்தார். இம்பால் கபாரில் நேதாஜி அவர்கள் நேர்முகத் தேர்வு செய்து கப்பல்படை அதிகாரியாக அனுப்பப்பட்டார்.

இம்பால் கபார்முனைக்குச் செல்லும் போது மணிப்பூர், சிட்டாங், கமால் கின் சூன், ஐராவதி ஆறுகள், மலைகள், காடுகள் இவைகளை எல்லாம் கடந்து சென்றுள்ளனர். இம்பால் அருகே நெருங்கிய போது ஆங்கிலேயர்களால் தாக்கப்பட்டு விமானங்களின் மூலம் அணுகுண்டுகள் வீசப்பட்டன. பல நாட்கள் பசி, பட்டினியால் அவதிப்பட்டுள்ளனர். குடிப்பதற்கு நீரின்றி சிறுநீரைக் குடித்துள்ளனர்.



நேதாஜியின் ஆசாத் ஹிந்த் சான்றிதழ் ஐம்பதாவது பொன்விழா ஆண்டில் ஜான்ஸி ராணி பெண்கள் பட்ட பிரிவின் கேப்டன் இலட்சுமி சாகரால் 21.10.1993 அன்று வழங்கப்பட்டது.

**சிறை வாழ்கை**

மணிப்பூர், அசாம், நாகலாந்து போன்ற இடங்களில் வெற்றி பெற்ற நிலையில், ஆங்கிலேயர்கள் 72 நாட்டு இராணுவப்படைகளைக் கொண்டு வந்து குவித்துள்ளனர். ஆறு மாதங்கள் கனமழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு 3000த்திற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். அமெரிக்கா விதிகளை மீறி ஜப்பான் மீது குண்டுகளை வீசியது. இதனால் உணவுப்பொருட்கள், ஆயுதப் பொருட்கள் கிடைப்பது தடைபட்டது. நேதாஜி படையில் இருந்தவர்கள் ரங்கூனில் கைது செய்யப்பட்டு பர்மாவில் 3 மாதம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

**பெற்ற விருதுகள்**


RECOGNIZED BY
TAMILNADU
INDIAN NATIONAL
ARMY LEAGUE
CENTRAL SECRETARIAT
MADURAI

1973ல் தமிழக அரசு தியாகச் சுடர் விருது வழங்கியது. 1997ல் வங்க அரசு, தமிழக அரசு கவுரவித்தது.

**MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL**
**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்**
**E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1**
**MARCH – 2024**

தமிழக அரசு பி.எம் முத்து அவர்களுக்கு 1973ல் தாமிரப் பட்டயம் கொடுத்து கௌரவித்தது. 1918ஆம் ஆண்டு பிறந்து 2001அக்டோபர் 14 ல் தமது 84 வயதில் திடீர் இயற்கை மரணம் அடைந்தார். தம் வாழ்நாள் முழுவதும் தம் தாய்நாட்டையும் மண்ணையும் நேசித்தவர். நீதி, நேர்மை, வீரம், துணிவு என வாழ்ந்து மறைந்தவர். இத்தனைப் போராட்டங்களைத் தம் வாழ்நாள் முழுக்க அனுபவித்தார். அவர் மட்டுமல்லாது இவர் தம் மனைவி பி.எம்.ஆர் மீனாள் அவர்களும் 1942 ஞரவைந ஐனெயை ஆழளநஅநவெ படையில் சேர்ந்து சிறை சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களது குடுப்பத்தில் மொத்தம் ஐந்து நபர்கள் சுதந்திரப்போராட்டத்தில் கலந்து கொண்டு தம் இன்னுயிரைத் துறந்துள்ளனர்.















**உண்மைச் சான்றுகள்:**

பேட்டி: திரு. கதிரேசன் அவர்கள் (பி.எம்.முத்து அவர்களின் பேரன்)

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 17. போர் இல்லா புது உலகம்

## (சங்க இலக்கியத்தை முன் வைத்து)

**முனைவர்.மா.கோமதி,**

உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,

திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சூலப்புரம்.

DOI 10.5281/zenodo.10725264.

**Abstract :**

There is always enmity and war in this world. Although evolved from animals, the feeling of enmity has not left man. Desire is the basis for enmity. Desire for earth, women and gold is the cause of suffering. Conflict comes from that desire. This,"Being close to each other and getting away from each other "The nature of this world to renew" (pg. 76). Purananuthuvar says. War is a part of people's lives. Although many literatures have been created with the focus on war, Kalapahi Papath is one of the most admired literatures. Does the book glorify war? Or indirectly describing the brutality of war? It cannot be said for sure, says K. Kailasapathy. This article aims to investigate the fact that Poikaiyar's soul wanted to see a new world without war, even though Kalapahi claimed the victory of the forty Cholas.

### முன்னுரை:-

பகையும் போரும் எந்நாளும் இவ்வுலகில் உண்டு. விலங்கிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்தாலும் பகை உணர்வு மனிதனை விட்டு அகலவில்லை. பகை உணர்வுக்கு அடிப்படை ஆசை. மண், பெண், பொன் ஆகிய ஆசையே துன்பத்திற்குக் காரணமாகிறது. அந்த ஆசையால் வருவது பூசல். இதனை,

**"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்**
**புதுவதன்று இவ்வுலகத்தை இயற்கை"** (புறம்.76)

என்கிறார் புறநானூற்றுப் புலவர். போர் என்பது மக்களது வாழ்க்கையில் ஓர் அங்கம் வகிக்கிறது. போரை மையமாக வைத்து பல இலக்கியங்கள் படைக்கப்பட்டாலும் சிறப்பாகப் போற்றப்படும் இலக்கியங்களில் களவழி நாற்பதும் ஒன்று. இந்நூல் போரின் சிறப்பைப் போற்றுகின்றதா? அல்லது போரின் கொடுமையை மறைமுகமாக விவரிக்கிறதா? என்று நிச்சயமாகக் கூற முடியாதுள்ளது, என்கிறார் க.கைலாசபதி. களவழி நாற்பது சோழனின் வெற்றியை வெளிப்படையாகக் கூறினாலும் போரற்ற புது உலகம் காணவே பொய்கையாரின் உள்ளம் விரும்பியது என்பதை ஆராயும் நோக்கிலே இக்கட்டுரை அமையப்பெறுகிறது.

### களவழி நாற்பது அறிமுகம்:-

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று களவழி நாற்பது. புறப்பொருள் பற்றி நாற்பது பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இதன் ஆசிரியர் பொய்கையார். போர்க்களத்தை மையமாக வைத்து 40 பாடல்கள் பாடியமையால் களவழி நாற்பது என்னும் பெயர் பெற்றது. இந்நூல் கடைச்சங்க காலத்தில் தோன்றியது என்றும் சங்கம் மருவிய காலத்தில் தோன்றியது என்றும் கருதுகின்றனர். ஆனால் களவழி நாற்பதின்

செப்பத்தை பார்க்கும் பொழுது அது சங்க இலக்கியத்தோடு சேர்க்கப்பட வேண்டும், தொகுத்தவர்கள் களவழி நாற்பதைச் சங்கம் மருவிய கால இலக்கியங்களோடு சேர்த்து தொகுத்து விட்டனர் போலும்.

இக்களவழி நாற்பது சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும் சோழன் கோச்செங்கணானுக்கும் இடையே நடந்த போரைப் பற்றிப் பாடுகிறது. தமிழ் இலக்கியத்தில் போரை மையமாக வைத்துப் பல இலக்கியங்கள் படைக்கப்பட்டாலும் அவற்றுள் போர்க்களத்தை மையமாகக் கொண்டு தனியொரு நூலாகப் படைத்தவர் பொய்கையார் ஆவார். இன்று வரை தமிழ் இலக்கியத்தில் களவழி நாற்பதுக்கென்றே தனி இடம் உண்டு. இக்களவழி நாற்பதை அடிப்படையாகக் கொண்டே பிற்கால பரணி நூல்கள் படைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கலிங்கத்து பரணி தொன்மையானதாகவும் சிறப்பானதாகவும் போற்றப்படுகிறது.

**பொய்கையார்:-**

சங்கப் புலவர்கள் ஒரு மன்னனின் கீழ் வாழ்ந்தவரில்லை. '**பழுமரம் தேடும் பறவை போல**" அவர்கள் பல நாட்டிற்க்கும் சென்று வரக் கூடியவர்களாக இருந்தனர். எத்திசைச் சென்றாலும் அத்திசையில் அவர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். அத்தகைய சமுதாயத்தில் வாழ்ந்தவர் பொய்கையார். ஒரு மன்னரின் புகழை மட்டும் பரப்பாது பல மன்னர்களின் புகழை பரப்பும் பிரச்சாரக் கருவிகளாக புலவர்கள் விளங்கியுள்ளனர். சேரனின் அவைக்களப் புலவரான பொய்கையார் சோழனின் வெற்றியைப் புகழ்ந்து பாடக் காரணம்.

1. சேரன் கணைக்கால் இரும்பொறையைச் சிறைலிருந்து மீட்க வேண்டும்.
2. போரின் கொடுமைகளைச் சோழனுக்கு அறிவுறுத்த வேண்டும். இவை இரண்டுமே பொய்கையார் பாடல்களில் வெளிப்படும் உண்மைகள்.

எனவே போரின் கொடுமைகளை நாற்பது பாடல்களில் சோழனுக்கு அறிவுறுத்தி சேரன் கணைக்கால் இரும்பொறையைச் சிறையில் இருந்து மீட்க எண்ணி இக்களவழி நாற்பதை இயற்றினார். பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான பொய்கை ஆழ்வார் இவரினும் வேறானவர்.

**அவலச் சுவை:-**

உணர்ச்சிகளை மையமாகக் கொண்டே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. போர் என்றாலே பெருமிதம் என்னும் சுவை தான் மேலோங்கி இருக்கும். '**போர்க்குறி காயமே புகழின் காயம்**' என்ற கருத்தும் புறப்பாடல்களில் மிகுதியாக காணப்படினும் அதில் அவலம் என்னும் சுவை இழையோடிக் கொண்டிருக்கும் என்பதே உண்மை. போர் நிகழ்ச்சிகளில் பெரும்பான்மையான சினமும், அச்சமும், அவலமும், பெருமிதமும், மிகுதியாக வெளிப்படும். களவழி நாற்பதில் அவலம், அச்சம், இளிவரல், சினம் என்ற மெய்ப்பாடுகளே மிகுதியாக காணப்படுகின்றன. இக்களவழி நாற்பதில் பெருமிதம் தோன்றுவதற்கு பதிலாக

பெண்களின் அவல நிலையும் வீரர்களின் அவல நிலையையும் படம் பிடித்து காட்டுகிறார் பொய்கையார். களவழி நாற்பதில் ஒரு காட்சி,

போர்க்களத்தில் யானைகள் கொன்று குவிக்கப்பட்டன. அவற்றின் உடல்களில் இருந்து ரத்தம் வெள்ளமாய் ஓடியது. யானைகள் ரத்தத்தை கலக்கியதால் அது சேராகியது. அதை கடக்க இயலாத வீரர்கள் தளச்சியுற்றனர். வெட்குண்டு கிடந்த யானையின் கொம்புகளைத் துணையாகக் கொண்டனர். போர்க்களத்தில் வீரர்கள் சினத்தால் வெட்டி வீழ்த்திய யானையின் கொம்புகளை ஊன்றுகோலாய் கொண்டு எழுவது போர்க்களத்தில் வீரர்களுக்கு ஏற்பட்ட அவலத்தைக் காட்டுவதாகும். அக்குறுதிச் சேற்றில் வீரர்களின் கால்கள் அகப்பட்டு வழுக்கி விழுவதும் எழுவதுமான செயல் அவல நிலையைச் சுட்டுகின்றது.

மேலும் கண்ணுக்குத் தெரிந்த தூரம் வரையிலும் வீரர்கள் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்போர்க்களத்தில் யானைக் கூட்டங்கள் இறந்தும் தங்கள் உறுப்புகளை இழந்தும் தத்தளித்து கொண்டிருக்கின்றன. எண்ணற்ற வீரர்கள் இறந்து கிடக்கின்றனர். இரத்தம் வெள்ளமாக ஓடிக்கொண்டு இருக்கிறது. போர்க்களத்தில் தங்கள் கணவரை இழந்தோம் என்ற செய்தியை கேட்டதும் அஞ்சு நடுங்கி தங்கள் கணவன்மார்கள் எத்திசையில் இறந்து கிடக்கின்றனர் என்பதை அறியாமல் நாற்றிசையும் அழுத கண்களோடு பெண்கள் ஓடுகின்றனர். நாற்றிசையும் ஓடி தங்கள் கணவரை கண்டு புலம்பும் பெண்களின் அழுகையைக் காட்டிலும் போர்க்களத்தில் முகம் தெரியாத அழுதப் பெண்களின் புலம்பல் மிகக் கொடியதாக அமைந்திருக்கிறது. கணவரைக் கண்டும் காணாதும் அங்கும் இங்கும் ஓடி அழும் அப்பெண்களின் கண்ணீரும் அப்போர்க்களத்தில் ஓடும் இரத்தத்தோடு கலந்து இருக்குமோ? என்று எண்ணத் தோன்றுகிறது. இதனை,

**“கடிகாலிற் காற்றுற் றெறிய வெடிபட்டு**
**வீற்றுவீற் றோடு மயிலினம்போல் நாற்றிசையும்**
**கேளி ரிழந்தா ரலனுபவே செங்கட்**
**சினமால் பொருத களத்து” (க.நா. 29)**

என்னும் பாடல் உணர்த்துகிறது. போர்க்களத்தில் உடல் உறுப்புகள் வெட்டுண்டு கிடக்கின்றனர் வீரர்கள், அவ்வீரர்களின் கைகளை நரிகள் வாயில் கவ்விக்கொண்டுச் செல்கின்றன. என்னும் (க.நா.28) காட்சிகளில் அவலம் தான் தோன்றகின்றதே தவிர பெருமிதம் என்னும் சுவை தோன்றவில்லை. சோழனுக்குப் போரின் கொடுமையை இது போன்று யாரும் காட்சிப்படுத்தி இருக்க மாட்டார்கள். கோச்செங்கணான். பிற்காலத்தில் சிவ பக்தனாக மாறி ஆலயங்கள் பல எடுத்தான் என்பதற்கு அடித்தளம் இட்டவர் பொய்கையாராக இருக்கலாம். எனவே பொய்கையாரின் களவழி பாடலைக் கேட்டு மனம் திருந்திய சோழன் சேரனைச் சிறையிலிருந்து மீட்பதற்குள், அவன் மானம் கருதி உயிர் நீத்திருக்கலாம். அதற்குப் பின் சோழன் சேரஅரசு கட்டிலுக்கு கோக்கோதை மார்பனை முடிசூட்டி சான்றோர்களை மகிழ்வித்தான் என்னும் செய்தி வரலாற்றில் அறியக் கிடைக்கிறது.

மன்னரின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவது புலவரின் தொழில் என்றாலும், மன்னர்கள் தவறிழைக்கும் போது அதை சுட்டிக் காட்ட புலவர்கள் தவறுவதில்லை என்பதற்குப் பல சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன.

தன் மக்களே தன்னுடன் பகைத்து போருக்குப் புறப்பட்டதை எண்ணி கோப்பெருஞ்சோழன் போருக்குக் கிளம்பினான். அதனை தடுத்து நிறுத்தினார் புல்லாற்றூர் எயிற்றியனார் (புறம்:213) அதைப்போல சோழன் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் நடக்க இருந்த போரைத் தடுத்து நிறுத்தினார் புலவர் கோவூர்கிழார். மலையமான் மக்களைத் தேர்க்காலில் இட்டுக் கொல்லத் துணிந்தான் நெடுங்கிள்ளி அதனைத் தடுத்து நிறுத்தினார் கோவூர்கிழார், குழந்தைகளை காப்பாற்றினார் (புறம்:46) அதனைப்போல ஔவையார் தொண்டைமானுக்கும் அதியமானுக்கும் நடக்கவிருந்த போரைத் தம் கவித்திறமையால் தடுத்து நிறுத்தினார் போர் இல்லா புது உலகம் காணவே விரும்பினர் புலவர் பெருமக்கள்.

சேர, சோழ, பாண்டியர், மூவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தவர் இல்லை. அவர்களுக்கிடையே போரும் பூசலும் இருந்து கொண்டு தான் வந்திருக்கிறது. இம்மூவரும் ஒருங்கே இருந்தக் காட்சியைப் பார்த்து அவ்வைக்கு எல்லை இல்லா மன மகிழ்ச்சி. உடனே தம் கருத்தை ஒரு பா வடிவில் தந்தார்(புறம்:367). தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடிமருதனார் பாடுகின்ற பொழுது போர் வாழ்வை நீக்குக; இல்லறத்தில் சிறந்து விளங்குக என்கிறார். இதனை மதுரை காஞ்சியில் (பாடல் வரி 780) உணர்த்துகிறது.

**முடிவாக:-**

சங்கப் பாடல்கள் 2381ல் அதிக பாடல்கள் அகப் பாடல்கள் என்பதிலிருந்தே இல்லற வாழ்க்கையாகிய காதல், அன்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதை வைத்தே புலவர்கள் வீரத்தை விட காதலுக்கே முதன்மை தந்துள்ளனர் என்பது புலனாகிறது. மேலும் போர் வாழ்க்கையை விட இல்வாழ்க்கை சிறந்தது என்று விரும்பினர் போலும். அதனால்தான் போரற்ற புது உலகம் காணவே புலவர்கள் மனம் விரும்பியது. யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின் போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது (கம்ப:1419) என்ற கம்பரின் வாக்கும் இக்கட்டுரைக்கு அரண் சேர்க்கிறது.

E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 18. பெண் சுதந்திரச் சிந்தனைகள்

**மு.மாரியப்பன், M.A., B.Ed., M.Phil.,**

முதுகலை ஆசிரியர் ஆங்கிலம்,

அரசு மேல்நிலைப்பள்ளி, நடையனேரி,விருதுநகர்.

DOI 10.5281/zenodo.10725317.

**Abstract:**

In the creation of nature, man and woman are called human beings in common thought. There is no sense of size for men and women. Feminine is equal in all respects like anger, love and compassion. After society draws her into its cycle, she becomes an equal understanding of the social structure. But the expression of her inner feelings through writings and speeches has been prohibited by the patriarchal society for a long time. While there are innumerable male poets, women poets have existed in the number of women poets who can be counted on the fingers of the Sangha literature period itself.

## முன்னுரை

இயற்கையின் படைப்பில் ஆணும் பெண்ணும் பொது சிந்தையில் மனிதர் என்றே அழைப்படுகிறன்றனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் உணர்வின் அடிப்படையில் அளவு என்பது கிடையாது. கோபம், காதல் அன்பு இரக்கம் என எல்லாவிதத்திலும் சமமாக உள்ள இணை இனம் பெண்ணினம். சமூகம் அவளை தனது சுழரற்சியில் உள்ளிழுக்கப்பட்டப் பின் சமூக கட்டமைப்பினை சமமாக புரிந்தவளாக மாறுகிறாள். ஆனால் அவளின் உள் உணர்வின் வெளிப்பாட்டை எழுத்துக்கள் மூலமாகவோ, பேச்சுக்கள் மூலமாகவோ எடுத்துரைக்க ஆணாதிக்க சமூகம் காலம் காலமாக தடை போட்டு வந்துள்ளது. எண்ணிலடங்கா ஆண் புலவர்கள், உள்ள நிலையில் சங்க இலக்கிய காலத்திலயே விரல்விட்டு எண்ணும் எண்ணிக்கையில் தான் பெண்பார் புலவர்கள் இருந்திரிக்கிறார்கள். இன்னும் ஆதிக எண்ணிக்கையில் இருந்திருக்கலாம், அல்லது இருந்தவர்களின் அடையாளங்கள் மறைக்கப் பட்டோ, அல்லது சங்க இலக்கிய பாடல்கள்களை வரலாற்றில் தொகுத்தவர்களின் பார்வையிலிருந்து விலகியிருந்திருக்கலாம். எழுத்தில் தன் மறையா எழுத்தாணியின் காலடிகளை பதித்த பெண் எழுத்தாளர்கள் காலம் தாண்டி எழுத்துக்களில் வாழ்கிறார்கள்.

சிந்தனைச் சுதந்திரம் அல்லது உள்ளுணர்வுக்கான சுதந்திரம் என்பது ஒருவர் சுதந்திரமாக ஒரு உண்மையை, கருத்தை, பார்வையை வைத்திருக்க, கருத்தில் கொள்வதற்கான சுதந்திரம் ஆகும். இத்தகைய சிந்தனை சுதந்திரம் என்பது உளவியல் சார்ந்து பாலினக் கட்டுப்பாடுகளற்றது ஆகும்.

உலகில் உள்ள அனைத்து மொழிகளின் இலக்கிய விழுமியங்கள் பெண்ணை கடந்த சில நூற்றாண்டுகளாக மட்டுமே பொது வெளிக்கு அனுமதித்து இருக்கிறது. தமிழ் இலக்கிய சான்றுகள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே ஔவையார் எனும் மூதாட்டியின் தத்துவ முன்மொழிவுகளை வழி மொழிவு செய்துள்ளன.

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"**

எனும் தொல்காப்பியர் பெண்களுக்கு உரியனவாய் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என நான்கு வகையான நற்பண்புகளுக்குள் அடைத்தாலும்.

**"நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே"**

புறநானூறு 187 வது பாட்டில் ஔவையார் தனது ஆய்வறிந்த உண்மையை ஆண்களுக்கே எடுத்துரைக்கிறார்.

காதல் வலிக்கு வழி சொல்லாத தூங்கும் ஊரை கூச்சலால் தட்டி எழுப்ப துணியும் ஔவையார் பெண் உணர்வை ஆண் வெளிப்படுத்துவது ஆண் உணர்வை பெண் வெளிப்படுத்துவது என்பது உணர்வு உண்மையால் இயலாத காரியம்.

ஆண்டாளின் இயற்கையான பெண்பேச்சு தமிழ் இலக்கிய மரபிலிருந்து விலகிய மாற்று மரபை முன்னிறுத்துகிறது. பெண் சுதந்திரம் சார்ந்து ஆண்டாளின் படைப்புகளை நோக்கும்போது இவ்வுண்மை புலப்படுகின்றது. ஒரு பெண்ணின் நனவிலித் தளத்தில் உருவாகும் உணர்வுகளை வெளிக்காட்டுவதற்குப் பல்வேறு சமூகத் தடைகள் மரபுகளின் பேரில் உருவாக்கப்பட்டிருந்தன. பெண்ணின் இயற்கைக் குணாம்சத்தை, இயற்கைக் காதலை, இயற்கைக் காமத்தை, இயற்கை களிப்பையெல்லாம் எக்காரணம் கொண்டும் ஒரு பெண் வெளிப்படுத்தக் கூடாது என்கிற கட்டுப்பாடுகள் பெண்ணை இறுக்க நிலையிலே வைத்திருந்தன. இந்நிலையில்தான், பக்திநிலை என்ற வெளிப்பாட்டுத்தளம் மூலமாக மடைமாற்றம் செய்து கொள்ளுதலைப் பெண்கள் மேற்கொள்ளத் தொடங்கினர்.

தன் காதல் சார்ந்த உணர்வுகளை கடவுள் மேல் வைக்க அவள் யாரிடத்திலும் சுபாரிசுக்கு நிற்கவில்லை, அவளாகவே முழு சுதந்திரத்தை எடுத்துகொண்டாள்.

**"கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ**
**திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்தி ருக்குமமோ**
**மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்**
**விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே"**

என '**பெரிதினும் பெரிது**'காதலை கடவுளிடத்தில் வைக்கும் ஆண்டாள் உயரினும் உயரிய இயற்கை சங்கிடம் இன்னுயிர் காதலன் இதழ் சுவை கேட்டுக்கொள்கிறாள்.

**முடிவுரை**

வாழ்வின் அனைத்து அங்கங்களிலும் அவள் பங்களிப்பின்றி ஆண் உலகம் சுற்றாது. அவள் உள்வாங்கிக் கொண்ட அனுபவங்களை, அனுபவித்த வலியை, மெல்லிய உணர்வுகளை எடுத்து இயம்பும் ஊடங்கள் ஆண்களின் கட்டுப்பாட்டில் இருந்தது எனலாம். 21 ம்

நூற்றாண்டின் தொழில் நுட்ப காலத்திலும் அவள் சுரண்டப் படுகிறாள். அவள் இயல்பை அவள் எடுத்துரைக்க மதம் சாதி என்று ஆணாதிக்கம் முட்டுக்கட்டை இட்டே செல்கிறது.நெடிய போராட்டத்திற்கு பின் சில பெண் ஆளுமைகள் தங்கள் எழுத்து சுதந்திரத்தை கருத்து உரிமையை அரசியல் விழிப்புணர்வை சமுக வளை தளத்தில் தடையின்றி வெளிப்படுத்தும் வாய்ப்பினை பெற்றிருக்கிறாள். அந்த வகையில் அவள் சுதந்திரத்தை கல்வி தந்தது அதனை தொழில்நுட்பம் விரிவடையை செய்தது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 19. ஐங்குறுநூறு: மருதப் பாடல்களில் அம்பலும் அலரும்

**முனைவர் மு.ஜெகதீசன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம் - 627425

DOI 10.5281/zenodo.10725294.

**Abstract :**

Ambal and Alarum is a social event. While the Agamandas hide their love from the society, the society is aware of that love. When egomaniacs who are engaged in violence are alarmed in the society of love, they are afraid of the alarm. As a result of that fear, they tend to prepare for marriage. It becomes socially acceptable. Grammarians explain that alar is divisive. Not mentioned as sacred. In the songs about prostitutes, the interlocutors point to and explain the meaning of 'alar' in the reading method of domestic, meat and allusive language. The textual commentary mentions that prostitutes love Alar. When the leader married the leader and lived in a household, the adulterers wanted aler. She takes Alar to inform Bharatha Pendir that the said leader loves her. This article tries to explain how the concept of 'alar' becomes a social understanding in different contexts in the prostitute section.

## முன்னுரை

அம்பலும் அலரும் சமூகத்தை எதிர்நோக்கி நிகழ்வதாகும். அகமாந்தர்கள் தாமுற்ற காதலைச் சமூகத்திடம் மறைத்திருக்கும் நிலையில், சமூகம் அக்காதலை அறியும் நிலையே அலராகும். களவில் ஈடுபட்டுள்ள அகமாந்தர்கள் தாமுற்ற காதல் சமூகத்தில் அலராகுகையில், அலரால் உண்டாகும் அச்சமுறுகின்றனர். அவ் அச்சத்தின் விளைவு மணமுடித்தலுக்கு ஆயத்தமாதலுக்கு ஆட்படுகின்றனர். இது சமூக அங்கிகாரம் ஆகிறது. இலக்கணகாரர்கள் அலர் களவுக்குரியது என்றே விளக்கமளிக்கின்றனர். கற்பிற்குரியதாக குறிப்பிடப்படவில்லை. பரத்தையர் குறித்த பாடல்களில் உள்ளுறை, இறைச்சி, குறிப்புமொழியிலான வாசிப்பு முறையில் உரையாசிரியர்கள் அலர் என்னும் பொருண்மையைச் சுட்டி விளக்கமளிக்கின்றனர். உரை விளக்கத்தில் பரத்தையர் அலரை விரும்புவதாகக் குறிப்பிடுகின்றனர். தலைவியை மணமுடித்து இல்லறமேற்று வாழும் தலைவன், பரத்தமை ஒழுக்கம் நாடுகையில் பரத்தையர் அலரை விரும்புகின்றனர். குறித்த தலைவன் தன்னை விரும்பவதைப் பிற பரத்தைப் பெண்டிருக்கு அறிவிப்பதற்கு அலரைக் கைகொள்ளுகிறாள். அலர் என்னும் கருத்தாக்கம் பரத்தையர் பிரிவில் மாறுபட்ட பொருண்மையில் சமூகப்புரிதலாக அமைவதை விளக்க இக்கட்டுரை முயலுகிறது.

## அம்பலும் அலரும்

அலர் என்பது களவு.[1] அம்பலும் அலரும் வேறு வேறல்ல. இரண்டும் இயைந்ததாகும். அலர் ஆண், பெண் இருவருக்கும் பொதுவெனினும் அலரால் பெண்களே மிகுதியான அச்சமும் பாதிப்பும் அடைவர். இப்பாதிப்பினைக் குறிப்பிடுகையில் அம்பலுக்கும் அலருக்குமான வேறுபாட்டை உணரலாம். “ஒரு குமரியின் காதலொழுக்கம் பற்றி ஊர் மகளிர் வாய்க்குள் பேசிக் கொள்வது அம்பல் எனவும், வெளிப்படையாகப் பேசுவது அலர் எனவும் பெயர் பெறும்.”[2] “அம்பல் சிலரறிந்து புறங்கூறு மொழி; அலர் பலருமறிந்து கூறும்

புறங்கூற்று."[3] அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தும் கருவிகள். தலைவனின் செயலினால் களவு பிறருக்குப் புலனாகிறது.[4] எனினும் அம்பலும் அலரும் பிரிக்க முடியாத களவின் தூண்டலால் புலப்படுகின்றன.

**"அம்பல் என்பது முகிழ் முகிழ்த்தல் எனில் அலரில் சொல் நிகழும்.**
**அம்பலில் சொல் நிகழ்ந்தால் அலரில் இல் அறியும்.**
**அம்பலில் இல் அறிந்தால் அலரில் அயல் அறியும்.**
**அம்பலில் அயல் அறிந்தால் அலரில் சேரி அறியும்.**
**அம்பலில் சேரி அறிந்தால் அலரில் ஊர் அறியும்.**
**அம்பலில் ஊர் அறிந்தால் அலரில் நாடு அறியும்.**
**அம்பலில் நாடறிந்தால் அலரில் தேசம் அறியும்."[5]**

என அம்பலின் அடுத்த நிலையாக அலர் கூறப்பெற்றுள்ளது. "அலர் என்பது இன்னானோடு இன்னாளிடை இது போலும் பட்டதென விளங்கச் சொல்லி நிற்பது. அம்பல் என்பது பெரும் போதாய்ச் சிறிது நிற்க அலரும் என நிற்பது."[6] களவில் அலரச்சம் இன்றியமையாதது. களவில் அன்பினை மிகுதிப்படுத்துவதற்கும், வரைவினை நிகழ்த்துவதற்கும் இவ்வச்சம் வழிகோலுகிறது. அலரச்சம் தலைவனை விடத் தலைவியை மிகுதியாகப் பாதிக்கிறது. களவு அலர்ப்படுகையில் தலைவி ஆற்றொணாத் துயருறுதலைப் பசலையுறுதல் என்பர்.

**அலரும் மணம்முடித்தலும்**

பரத்தையருள் பலரைத்தலைவன் புணருகையில் ஒரு பரத்தையின் மீது ஆறாக்காதல் கொண்டு மணம்முடித்த மரபும் உண்டு. பரத்தையர் குலத்தில் வாழ்ந்த பெண்ணொருத்தி தன்னை நாடிய தலைவன் ஒருவனைத் தன் காமம் காரணமாக மணம் செய்தவளைக் காமக்கிழத்தி என்ற பொதுச்சொல்லால் அழைத்தமை முன்னர் கூறப்பட்டது. களவில் தலைவன் தலைவி சந்தித்து தாமுற்ற களவினை வளர்க்கையில் அலருக்கு அஞ்சியுள்ளனர். ஆனால் கற்பில் ஈடுபட்ட தலைவன் பரத்தையிடம் செல்கையில் பரத்தைப் பெண்டிருடன் களவு மேற்கொள்கிறான். அத்தகைய சூழலில் அலர் ஏற்பட்டபோது பரத்தையர்கள் அலரை விரும்பியுள்ளனர். காமக்கிழத்தியான பின்பும் அலர்என்பது, "இன்னானோடு இன்னாளிடை இதுபோலும் பட்டதென விளங்கச் சொல் நிற்கும் தன்மைத்தது."[7] இது மெல்லிய பெரிய பழிச்சொல்லாகும். இதனைப் "பரத்தமையால் கற்பில் அலர் பரவும்"[8] என வ.சுப. மாணிக்கனார் குறிப்பிடுகிறார். கற்பில் அலரைப் பரத்தையர் உருவாக்க நினைக்கின்றனர். தலைவனை மணம்முடித்தல், புனலாடுதல் போன்றவை இவ்வலரை உருவாக்கும் நிகழ்வுகளாகும்.

**"பஞ்சாய்க் கூந்தற் பசுமலர்ச் சுணங்கிற்**

**றண்புன லாடித்தன் னலமேம் பட்டனள்**

**----------------------------------------**

**யார்மக ளாயினு மறியாய்**

**நீயார் மகனை யெம்பற்றி யோயே" (ஐங்.79)**

என்ற பாடல்களில் தலைவன் வேறொரு பரத்தையரை நாடுவதைத் தடுப்பதற்கும், பிற பரத்தையர் இவனைத் தம்பால் ஈர்க்க முயற்சிக்காமல் இருப்பதற்கும், தலைவன் தம்முடன் உறவாடுகிறான் என்பதைத் தலைவிக்கும் பரத்தைக்கும் அறிவித்தற்கே பரத்தையர் அலரை விரும்பியுள்ளமை கூறப்பட்டுள்ளது.

**“நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம்**

**நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்” (ஐங்.61)**

என்ற பாடலடிகளில் தீம்பழம் பொய்கையில் விழும் ஓசை அலர் என உள்ளுறையால் உவமிக்கப்படுகிறது.

**“பேரூ ரலரெழ நீரலைக் கலங்கி**

**நின்னொடு தண்புன லாடுதும்” (ஐங்.77)**

**“பலரிவணெவ்வாய்மகிழ்நவதனால்**

**அலர்தொடங் கின்றா லூரே மலர**

**தொன்னிலை மருதத்துப் பெருந்துறை**

**நின்னோடாடின டண்புன லதுவே” (ஐங்.75)**

என்ற பாடலடிகள் பரத்தையருடன் தலைவன் புனலாடுதலைக் குறிப்பிடுகின்றன. இப்புனலாடுதல் பரத்தையர்க்கும், தலைவிக்கும் தலைவனது பரத்தமை ஒழுக்கம் அலர்ப்படும் வாய்ப்பாகிறது. தலைவன் பரத்தையரை நாடிய சூழலில் அப்பரத்தையர் அவனைத் தலைவிபால் செல்லவிடாமல் தம் அழகில் மயங்கித் தம்முள் இருப்பதற்கு இவ்வலர் குறிப்புக்கள் காரணமாகின்றன.

**“நல்லோர் நல்லோர் நாடி**

**வதுவை யயர விரும்புதி நீயே” (ஐங்.61)**

எனத் தலைவனைப் பழித்துத் தலைவி கூற்றுரைக்கிறாள். இக்கூற்று அலரால் எழுந்த கருத்தோட்டமாகும். தலைவனுடன் ஊடலுற்றிருந்த போதிலும் அவன் பரத்தையருள் பலரை மணம்முடித்தலைத் தலைவி விரும்பாமல் துன்புறுகிறாள் என்பதை உணர்த்துகிறது. எனினும் பரத்தையர் சமூகத்தில் அலரைக் கண்டு அஞ்சாமல் அவ்வலரை விரும்பி ஏற்றுள்ளனர் எனத் தெரிகிறது.

புனலாடுதல் களவிலும் கற்பிலும் இன்பத்தினை உறுதிப்படுத்தவும் மிகுதிப்படுத்தவும் காரணமாகிறது. இந்நிகழ்வு இருவரின் அன்பினைப் பலரறியச் செய்யும். சங்க அகச் சமூகத்தில் புனலாடுதல் பொழுதுபோக்காகவும், இன்பப் பெருவாழ்வில் பங்கெடுக்கும் முக்கிய நிகழ்வாகவும் இருந்துள்ளது. மருதத்திணையில் 11 பாடல்களில் இந்நிகழ்வும் அது குறித்தான சிந்தனையும் பாடப்பட்டுள்ளன. இதில் புனலாட்டுப் பத்து எனத் தனியேயும் ஓரம்போகியார் பாடியுள்ளார்.

புனலாடுதல் ஒத்த அன்புடன் நிகழும் இன்ப நிகழ்வு.புனலாடுதல் தலைவி தன் அழகு நலத்தையும் மனவோட்டத்தையும் தலைவனுக்கு அறிவித்தலாகவும் அமையும். தலைவனின் அன்பையும் உரிமையையும் தனக்கானதாக மாற்றிக் கொள்ளும் சூழலாகவே கருதுகிறாள். அதனால் பரத்தையர் நலம் நாடிய தலைவன் பரத்தையருடன் புனலாடச் சென்ற சூழலில் தலைவி வாயில் மறுத்தலுக்குப் புனலாடுதல் நிகழ்வு சுட்டப்படுகிறது. தலைவன் புனலாடுதலில் அவர்களுடன் உண்டான தொடர்பு மிகுதிப்பட்டு அலர் உண்டாகச் செய்யும். பரத்தையோடு புனலாடுதல் அலர்ப்படுதலால் தலைவியின் புலத்தல் ஊடலாகின்றது.

**“சூதார் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து**
**நின்வெங் காதலி தழீஇ நெருநை**
**ஆடினை யென்ப புனலே யலரே**
**மறைத்த லொல்லுமோ மகிழ்ந**
**புதைத்த லொல்லுமோ ஞாயிற்ற தொளியே” (ஐங்.77)**

என்று தலைவி கூற்றில் வாயில் மறுத்தல் புலப்படுகிறது. குறு வளையல்களையும், மெல்லிய நடையினையும் உடைய காதற் பரத்தையை விருப்பத்துடன் தழுவிப் புனலாடுதலை நிகழ்த்திய தலைவனைப் பற்றிக் கண்டோர்வழி செய்தியறிந்தத் தலைவி வாயில் மறுக்கிறாள். புலத்தலிலிருந்து தலைவியைத் தேற்றுதலின் பொருட்டுப் புனலாடிய நிகழ்வினைத் தலைவன் மறுத்தாலும் அதனால் எழும்பிய அலரையும் பழிச்சொல்லையும் மறைக்க இயலவில்லை. ஞாயிற்றின் ஒளி உலக வெளிச்சம். அது மங்கும் வரையில் ஒளிதான். அவ்வொளியை மறைத்தல் எளிதல்ல எனக் கூறிப் பரத்தையொடு ஆடிய புனலை ஏற்காத நிலையே புலத்தலைத் தோற்றுவிக்கிறது. தலைவியை விடுத்துப் பரத்தையோடு ஆடிய புனலாடலால் தோன்றும் அலர் புலத்தலின் உணர்வினைக் கிளரும் வேராகும்.

**“அலர்தொடங் கின்றா லூரே மலர**
**தொன்னிலை மருதத்துப் பெருந்துறை**
**நின்னோ டாடின டண்புன லதுவே” (ஐங்.75)**
**“பேரூ ரலரெழ நீரலைக் கலங்கி**
**நின்னொடு தண்புன லாடுதும்” (ஐங்.77)**

என வரும் பாடல்களில் புனலாடுதல் குறித்த உரிப்பொருள்கள் அலரை மையமிட்டன. பரத்தைக்கும் தலைவனுக்கும் உடனான புணர்வையும் அதனால் எழும் அலரையும் இப்பாடல்கள் குறித்துள்ளன. மருதத்துப் பெருந்துறையில் நீரலைக் கலங்கி, நலத்தகு பரத்தை மகளிரின் தோளினைத் துணையாகக் கொண்டு கருங்குவளை மலர்க்கூட்டம் நிரம்பிய புனலில் புனலாடியதால் ஊர் அலருற்றது. தலைவனின் மீதான அலரைக் கேள்வியுற்ற தலைவி தன் களவுக்காலப் புனலாட்டத்தினை நினைவுறுகிறாள்.

**“ஒண்ணுதல ரிவை பண்ணை பாய்ந்தெனக்**
**கண்ணறுங் குவளை நாறித்**
**தண்ணென்றிசினே பெருந்துறைப் புனலே”** (*ஐங்.* 73)
**“கரைசேர் மருத மேறிப்**
**பண்ணைப் பாய்வோ டண்ணறுங் கதுப்பே”** (*ஐங்.* 74)

இதனால் தன்னுணர்வு மிகுந்து தலைவன் மீதான புலத்தல் ஊடலாக உருவெடுக்கிறது. இவ்வுணர்வினை ஊடல் உணர்த்தல்[9] எனத் தொல்காப்பியர் விளக்குகிறார். தலைவனைக் கூடும் அருமையினாலே களவுப் புணர்ச்சி நினைவுகூரப்படுகிறது. கூடலின் ஏக்கத்தினை,

**“மலரார் மலிர்நிறை வந்தெனப்**
**புனலாடு புணர்துணை யாயினளெமக்கே”** (ஐங்.72)

எனக் குறிப்பிடுகிறாள். களவுக் காலத்தில் தாமுற்ற களவு வளர்வதற்குத் துணையாயிருந்த புனலாடுதலையும் அதனால் உண்டான அன்பினையும் எண்ணுகிறாள். அவ்வன்பினைத் தலைவன் பரத்தமையிடம் காட்டுகிறான் என எண்ணி வருந்திப் புலக்கிறாள்; வாயில் மறுக்கிறாள் என உணரமுடிகிறது.

காமக்கிழத்தியான பரத்தை தலைவனோடு உரிமை பூண்டு புனலாடுகிறாள். இவள் தன்னைத் தலைவியாகப் பாவிக்கிறாள். தலைவன் பிற பரத்தையோடு புனலாடுதலை மறுக்கிறாள். அச்சூழலில் புலப்பதுடன், அப்புலத்தல் தீரத் தன் தோழியை வாயிலாகக் கொண்டு கூற்று நிகழ்த்துகிறாள். இக்கூற்றில் தலைவனைத் தன்வயப்படுத்துவதன் முயற்சிகள் நிகழ்த்தப் பெறுவதாகக் கீழ்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**“எம்மொடு சென்மோ செல்லனின் மனையே”** (ஐங்.77)
**“எம்மொடு கொண்மோவெந் தோள்புரை புணையே”** (ஐங்.78)

இப்புனலாட்டம் அலரை எதிர்நோக்கியதாகும்.

**“பேரூ ரலரெழ நீரலைக் கலங்கி**
**நின்னொடு தண்புன லாடுதும்”** (ஐங்.77)
**“சிறையழி புதுப்புன லாடுகம்”** (ஐங்.78)

காமக்கிழத்தி தனக்கும் தலைவிக்குமுள்ள தொடர்பினைப் புலப்படுத்த அலரை விரும்புகிறாள். அதனால் அலரை எண்ணி அஞ்சாமல் புனலாட்டத்தினால் தலைவன் தரும் மகிழ்வை மட்டும் எய்தும் நிலையில் அமைகிறாள். இவ்வலர் தனக்கும் தலைவனுக்குமான நெருங்கிய சூழலை உருவாக்கும் என நம்பியுள்ளாள் எனப் பாடல்கள் உணர்த்துகின்றன.

பரத்தையோடு ஆடும் புனலைக் கற்புநெறி உள்ள தலைவி விரும்புவதில்லை. 'புலக்குவே மல்லேம் பொய்யா துரைமோ' (ஐங்.80) என்பதனால் தலைவனை அச்சுறுத்தி ஊரார் தூற்றும் அலரை நம்பாது உண்மை அறிய முயன்றுள்ளனர் என அறியலாம். தலைவி, தலைவன் மீது கொண்ட காதலையும் உரிமையையும் புனலாட்டம் அவளுக்கு வெறுப்பைத் தந்தமையைப் பாடல்கள் வழிக் காணமுடிகிறது.

சேற்றில் அளைந்த நண்டு அச்சேற்றோடு செல்லுதல், ஊர் தூற்றும் பழிக்கும் நாணாது பரத்தையர் இல்லம் செல்லுதலை உணர்த்துகிறது (ஐங்.22).

**"நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம்**
**நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்**
**கைவண் மத்தி கழாஅ ரன்ன**
**நல்லோர்நல்லோர்நாடி**
**வதுவை யயர விரும்புதி நீயே" (ஐங்.61)**

பழுத்த மாம்பழம் நெடுநீர்ப் பொய்கையில் துடுமென விழும் ஓசை அலரை உணர்த்துகிறது. தலைவன் பரத்தையோடு கூடியதை ஊர் மக்கள் அறிந்து இங்கு உணர்த்தப்பட்டுள்ளது. திருமணமான ஆடவர்கள் பல பெண்டிரைச் சேர்தல் இழிவுடையது என்பதும் உணர்த்தப்படுகிறது.

**முடிவுரை**

அலரைப் பரத்தமைச் சமூகம் விரும்புகிறது. தன்னைச் சேர்ந்த தலைவன் தன்னைத் தவிர பிற பரத்தையை நாடுவதை விரும்பவில்லை. சமூகத்தவர்கள் ஒன்று கூடும் நீர்நிலைகளில் தலைவனுடன் புனலாட்டத்தை விரும்பும் பரத்தை, தனக்கும் தன்னை நாடிய தலைவனுக்குமான நட்பை உணர்த்த அலரை உருவாக்குகிறாள். அலரின் மூலம் தலைவனை மணமுடித்து சமூகத்தில் தான் அங்கீகாரமிக்க மேன்மை பொருந்திய இல்லற வாழ்க்கை வாழ விரும்புகிறாள் என்றே அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கங்கள்**

1. 'அம்பலும் அலரும் களவு' (இறையனார் களவியல் உரை., நூற். 22).
2. வ. சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 62.
3. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி, பக். 95, 146.
4. "அம்பலும் அலருங் களவுவெளிப் படுத்தலின் ஆங்கதன் முதல்வன் கிழவ னாகும்" (தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற். 137).
5. உ. வே. சாமிநாதய்யர் (ப.ஆ), இறையனார் களவியல் உரை, ப. 132.
6. மேலது, ப.132.

E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

7. வை. சாத்தையா, சங்க இலக்கியத்தில் அம்பலும் அலரும், ப. 12.
8. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 234.
9. “உறலருங் குரைமையின் ஊடன்மிகுத்தோளைப்
பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கன்னும்” (தொல். பொருள்., நூற். 144).

**MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL**
**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்**
**E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1**
**MARCH – 2024**

# 20. நாட்டுப்புற இலக்கியங்களில் தொல்காப்பியரின் நோக்கு

**முனைவர்.பெ.ஹென்றி ஜூலியஸ்,**
**அமெரிக்கன் கல்லூரி, மதுரை.**

DOI 10.5281/zenodo.10725333.

**Abstract :**

Secularism is the eighth branch of archaeological economics and it is so named because it deals with the grammars of Secularism. In this theory only the objective which is one of the elements of action is considered for the study related to this article.

**Key Words :** Folklore – Tholkappiyam - Grammar

தொல்காப்பியப் பொருளாதாரத்தில் எட்டாவது இயலாக செய்யுளியல் அமைந்துள்ளது செய்யுளுக்குரிய இலக்கணங்களைப் பற்றிக் கூறுவதால் இவ்வியல் இப்பெயர் பெற்றது. இச்செய்யுளியலில் செய்யுளின் உறுப்புகளுள் ஒன்றான நோக்கு என்பது மட்டுமே இக்கட்டுரைத் தொடர்பான ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**நோக்கு தொல்காப்பியர்:-**

**மாத்திரை முதலா அடிநிலை காறும்**
**நோக்குதற் காரணம் நோக் கெனப்படுமே (பொருள் இளம் 409)**

**உரையாசிரியர்கள் கருத்து:**

இளம்பூரணர் மாத்திரை முதலாக அடிநிலையளவும் நோக்குதலாகிய கருவி நோக்கென சொல்லப்படும் காரணமெனின் கருவியெனினும் ஒக்கும் நோக்குதற்கு காரணம் என்பதனை உண்டற்தொழில் என்றாற் போலக் கொள்க.

நச்சினார்க்கினியர் மாத்திரை முதலிய உறுப்புக்கொண்ட அடிநிரம்புத் துணையும் கேட்டோர் மீண்டும்நோக்கிப் பயன் கோடலையுடையவாகச் செய்யும்கருவியை நோக்கு என்று பெயர் கூறப்படும்.

**பேராசிரியர்:**

செய்யுளுக்கான இயல்பான பொருள் கூறி நோக்குதற் காரணம் பற்றி விளக்குகின்ற போது கேட்போர் மறித்து நோக்கியப் பயன் கொள்ளுங் கருவியை நோக்குதற் காரணமென்றாமென்பது. மேற்கண்ட உரையாசிரியர்களின் கருத்துக்களின் அடிப்படையில் நோக்கு என்பதனை கீழ்க்கண்டவாறு ஆராய்ந்துப் பார்க்கலாம் இங்கு உரையாசிரியர்கள் வெளிப்படுத்துகின்ற கருத்துக்களில் சில குறிப்பிட்ட சொற்றொடர்களை இவ்விளக்கத்திற்கான சான்றாதாரமாகக் கொள்வோம் இவ்வடிப்படையில் பார்க்கின்ற போது நச்சினார்க்கினியர் பேராசிரியரும் நோக்குதல் என்பதற்கு பயன் கொள்ளும் கருவி என்று குறிப்பிடுகின்றனர். இளம்பூரணர் பயன்கொள்ளும் கருவி என்ற கருத்துடன் ஒத்து மேலும் நோக்கு என்பதனை உண்டற்தொழில் என்பதோடு ஒப்பிட்டு குறிப்பிடுகின்றார்.

இளம்பூரணர் உண்டற்தொழில் என்று குறிப்பிடுவதனுள் ஏதேனும் சமூகப் பின்புலம் சார்ந்த கருத்துக்கள் வெளிப்படுகின்றனவா என்று நோக்குகின்ற போது மாத்திரை முதலாகச் சொல்லப்பட்ட செய்யுள் உறுப்புக்களினால் ஆக்கப்பட்ட கவிதை என்பதுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம் இளம்பூரணாரின் இக்கருத்து படைப்பாளியையும் அப்படைப்பு எத்தகைய சமூகச் சூழலில் உருவாக்கப்பட்டது என்பதனைப் பற்றியும் குறிப்பாக சொல்ல வேண்டுமேயானால் கவிதைகளின் புறக்காரணிகளைப் பற்றி கவலைக்கொள்ளாது வாசகனையும் வாசகனின் வாசிப்பு. தன்மையினையும் வாசிப்பிற்கு காரணமாக அமைகின்ற படைப்பினையும் மையமிட்டதாக உள்ளது.

நோக்கு என்பதனை வாசிப்புக் கோட்பாட்டினை மையமிட்டு விளங்குகின்ற சில மேலைநாட்டு அறிஞர்களின் கருத்துகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம் இங்கு ரோலன் பார்த்தஸ் ஜூலியா கிறிஸ்தவா என்ற இரண்டு அறிஞர்களுடைய கருத்துக்கள் மட்டுமே இக்கட்டுரைத் தொடர்பான ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விளக்கப்படுகின்றது.

**ஜூலியா கிருஸ்தவா:-**

இவர் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த உளப்பகுப்பாய்வு அறிஞர் இவர் தன்னுடைய கோட்பாட்டினுள் பிரதி குறியியல் என்பதனை விளக்குகின்றார். மனிதனுடைய சிந்தனையானது மொழியின் அமைப்பைப் பொறுத்தே அமைகின்றது. அல்லது மொழியின் தூண்டப்படுகின்றது. என்பது இவருடைய கருந்து மேலும் சமூகத்திற்கும் மொழிக்கும் தொடர்பு உண்டு என்ற கருத்தினையும் குறிப்பிடுகின்றார். இவருடைய கருத்தினுள் முக்கியமான ஒன்றான பனுவல் இடை உறவு என்பதே இக்கட்டுரைத் தொடர்பான ஆய்விற்குப் பயன்படத்தப்படுகின்றது.

ஜூலியா கிறிஸ்வா தன்னுடைய கருத்தினை இரஷ்ய நாட்டு அறிஞரான மிக்கேல் பக்தியின் உரையாடலியம் என்பதிலிருந்து எழுத்து பயன்படுத்துகின்ற பக்தினுடைய சில கருத்துக்களைப் பார்ப்போம்.

பக்தின் கருத்துப்படி உரையாடல் என்பது பேச்சு செயலை மட்டும் உரையாடல்களாகவே கருதுவதாகவும் மேலும் இலக்கிய வடிவங்களையும் நடவடிக்கைகளையும் வெளிப்பாடுகளையும் உரையாடல்களாகவே கருதுவதாகவும் இ.முத்தையா அவர்கள் குறிப்பிடுவதன் வழியாக பக்தினுடைய உரையாடல் என்பதனை ஓர் உரையாடல் புரிந்துக்கொள்ளலாம். (1996-37) மேலும் இவர் பக்தினுடைய உரையாடலியம் பற்றி விளக்குகின்ற போது தனித்த உரையாடல் என்று எதுவும் இல்லை ஓர் உரையாடல் சமூகத்திலுள்ள மற்ற உரையாடல்களோடுத் தொடர்புடையது இதனால் தான் ஒவ்வொரு உரையாடலும் பொருண்மையுடையதாக விளங்குகிறது. உரையாடல்களுக்கு இடையிலான இத்தகைய தொடர்பை உரையாடலிடைத் தொடர்பு என்றும் இருவேறு உரையாடல்களுக்கு இடையேயான தொடர்பிகள் பொருண்மை வெளிப்படுவதால் இத்தொடர்புச் செயலை உரையாடலியம் என்றும் பக்தின் குறிப்பாக விளக்கியுள்ளார். (1996-38)

ஜூலியா கிறிஸ்தவா இக்கருத்தினையே சற்று விரிவுப்படுத்திப் பேசுகின்றார். இவருடைய கருத்துப்படி பனுவல் என்பது இரண்டு நிலைகளில் உருவாக்கப்பட்டது. 1. அக உள்ளடக்கம் 2. புற உள்ளடக்கம் என்பதாகும் இதனுள் முக்கியமானது அக உள்ளடக்கம் என்று சொல்லப்படுகின்ற என்பதாகும் தீர்மானிக்கப்படுகின்றதோ அதனைப் போன்றே மனிதன் வெளிப்படுத்துகின்ற ஒவ்வொரு பனுவலிலும் மரபு சார்ந்த நடத்தைகள் பழக்க வழக்கங்கள் சமூகச் சூழல் போன்றவை மனித மனதிற்குள் புதைந்துக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான பனுவல்களை ஊடாடவிட்டு புதியதொரு பனுவலை உருவாக்குவதனை அகப்பனுவல்களை சுட்டலாம் இவ்வாறாகத் தேர்வு செய்து ஊடாட விட்டு பெறப்பட்ட பனுவல்களை ஒரு மொழியின் படைப்பாக வெளிப்படுத்தவது புறப்பனுவலாகும்.

ஒரு பனுவலை அர்த்தம் கொள்வது என்பது வாசகனின் மனதினுள் புதைந்துள்ள பனுவல்களுடன் ஊடாட்டம் செய்வதனையே பனுவல் இடை உறவு எனச் சுட்டலாம்.

முன்னர் விளக்கிய உரையாசிரியர்களின் கருத்துக்கள் மற்றும் மேலை நாட்டு அறிஞர்களின் கருத்துக்களை போன்றவற்றினைக் கொண்டு நோக்கு குறித்தான நூற்பா விளக்கத்தினை அணுகும் போது உரையாசிரியர்கள் சுட்டும் பயன்கொள்ளும் கருவி என்பது மொழி மட்டுமன்று; அது மேலும் பண்பாடும் சார்ந்து அமையும் என்பதனை அறியலாம். இதனடிப்படையில் இனி நாட்டுப்புற வழக்காறுகளைப் பொருந்திப் பார்க்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர் வட்டாரத்திற்குட்பட்ட வெள்ளலூர் கிராமத்தில் நடைபெறும் முகமூடி அணிதல் என்னும் சடங்கே இவ்வாய்விற்கான சான்றாதாரமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இச்சடங்கு ஏழை காத்த அம்மன் என்ற தெய்வத்திற்காகச் செய்யப்படும் நேர்த்திக்கடன் சடங்காகும். இந்த நேர்த்திக்கடன் சடங்கானது குறியீட்டு மொழியின் மூலமாக உருவாக்கப்படகின்றது. அல்லது. பல்வேறு குறியீட்டுச் செயல் வடிவங்கள் இணைந்து இச்சடங்கினை உருவாக்குகின்றது எனலாம் முகமூடி அணிதல் சடங்கு என்பது பல்வேறு குறியீட்டு வடிவங்களால் இணைக்கப்பட்ட கருத்துக்களின் செயல் வடிவம் சடங்கு என்பது குறியீட்டுமொழியாக கருத்துகளின் கூட்டுச் செறிவாக செயல்பாட்டுத் தன்மை உடையதாக இருக்கின்ற காரணத்தினால் முகமூடி அணிதல் சடங்கினை ஒரு பனுவலாகக் கொள்ளலாம்.

வெள்ளலூர் நாட்டில் முகமூடி அணிதல் சடங்கு ஆண்களால் மட்டுமே செய்யப்படுகின்றது. இதில் ஆண்கள் தங்களுடைய உடல் முழுவதும் பிரிகளைச் சுற்றிக்கொண்டு முகத்தினில் பெரும்பாலும் மாடு போன்ற முகமூடிகளைப் பயன்படுத்துகின்றனர். இச்சடங்கினை மேலோட்டமாக பார்க்கின்ற போது வளமைக்கான குறியீட்டு வடிவமாக வெளிப்பட்டாலும் முகமூடி அணிவதற்கான காரணம் தொன்மைக் கதை வடிவத்தில் வெள்ளலூர் பகுதி மக்களால் வழங்கப்பட்டு வருகின்றன. அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஏழைகாத்த அம்மன் திருவிழாவினைத் தடுத்து நிறுத்துவதற்காக அசுரர்கள் வானுலகிலிருந்துகீழே இறங்கி வருகின்றனர். தங்களை விட மிகக்

கொடியவர்களாக இருக்கக்கூடும் என்று கருதி இவர்களுடன் போர் புரியாமல் மீண்டும் தம் இடத்திற்கே சென்று விடுவதாகக் குறிப்பிடுகின்றனர். (பெ.ஹென்றி ஜூலியஸ் 2000 - 40) இந்த தொன்மைக்களை குறித்தான கருத்துப் பனுவல் வடிவமே செயல் வடிவமாக்கப்பட்டுத் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இரண்டாயிரமாவது ஆண்டின் போது நடைபெற்ற ஏழைகாத்த அம்மன் திருவிழாவின் போது வீரப்பன் உருவ முகமூடி பயன்படுத்தப்பட்டது அணிந்து வந்த முகமூடிகளுள் புதுமையான தோற்றத்தினை இம்முகமூடி ஏற்படுத்திய காரணத்தால் ஆய்வாளர் அந்த முகமூடி நிகழ்த்துனரை அணுகி அதற்கான காரணத்தினை கேட்டறிந்தார். அதற்கு நிகழ்ந்துனர். வீரப்பனைக் கண்டால் அனைவரும் பயப்படுவதுப் போல எங்களுடை திருவிழாவினைத் தடுக்க வரும் அசுரர்களும் பயத்து செ ன்று விடுவார்கள் என்று பதிலளித்தார்.

இதன் மூலமாக அம்முகமுடி நிகழ்த்துனர் அந்நிகழ்த்துதலுக்கான பனுவலினை அறிந்தவராக இருப்பதினாலும் அந்நிகழ்த்துனர் அந்நிகழ்வு நடைபெறுகின்ற வட்டாரம், சாதி, சமயம் போன்ற பண்பாட்டுக் காரணிகளுடன் தொடர்புடையதானவொரு புதிய பனுவலை உருவாக்குதல் என்பது சாத்தியமாகின்றது. மேலும் அந்நிகழ்த்துனர் புதிய பனுவலினை உருவாக்கின்ற போது தன்னுடைய சடங்கு சூழ்நிலையிலிருந்து வழுவாமல் உருவாக்குவதால் அப்பனுவலுக்கான அர்த்தம் என்பது வேறுபடாமல் இருக்கின்றது. இங்கு நோக்கு என்னும் செயல்பாட்டின் மூலம் இடைப்பனுவல் உறவினால் புதிய பனுவல் உருவாக்கம் - பெறுவதனை அறியமுடிகின்றது.

மேற்கூறிய விளக்கங்களின் அடிப்படையில் பார்க்கின்ற போது தொல்காப்பியரின் நோக்கு பற்றியதானச் சிந்தனை இக்காலத் தலத்தில் நின்று கொண்டு விலாசப்படுத்தி பார்க்கும் அளவிற்க்கு உயர்ந்துள்ளது. என்பதனை அறிய முடிகின்றது. தொல்காப்பியரின் சிந்தனை வாய்மொழி இலக்கியம் எழுத்திலக்கியம் ஆகியவற்றிற்கு இக்காலம் மட்டுமல்லாமது எக்காலமும் பொருந்தும் திறனுடைத்து.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 21. மலையாளச் சிறுகதையில் உளவியல் போராட்டம்

**முனைவர் ச.கவிதா,**
நெறியாளர் (ம) துறைத்தலைவர்,
இந்தியமொழிகள் (ம) ஒப்பிலக்கியப்பள்ளி,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**த.தேவகி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
இந்தியமொழிகள் (ம) ஒப்பிலக்கியப்பள்ளி,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

DOI 10.5281/zenodo.10725367.

**Abstract :**

The essential reason for examining the short story from the point of view of psychology is to compare the characteristics of the female characters created in them, the personalities of the heroes, the psychological struggles and the underlying reasons for them with psychological theories. In that way, this article examines the psychological struggles of the female characters in the short stories translated from Malayalam to Tamil.

## அறிமுகம்

உளவியல் நோக்கில் சிறுகதையை ஆராய்வதன் இன்றியமையாத காரணம், அவற்றில் படைக்கப்பட்டுள்ள பெண் கதாபாத்திரங்களின் தன்மைகளையும், அப்பாத்திரங்களின் ஆளுமைகளையும், உளவியல் போராட்டங்களையும் அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களையும் உளவியல் கோட்பாடுகளோடு பொருத்தி பார்ப்பதாகும். அந்த வகையில் மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து வந்த சிறுகதைகளில் பெண்களின் கதாபாத்திரங்களின் மனப்போராட்டங்களை உளவியல் கோட்பாடுகளோடு பொருத்திப் பார்த்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

> **“பெண் கதாபாத்திரங்கள் அவர்களின் அலசல் முக்கியமாக இருப்பதால், இயல்பாகவே உளச்சித்தரிப்பு என்பது சமூகம் அளவாவியும் இருப்பதால், இச்செயற்பாட்டுக்கான காரணிகளும், இங்கே சித்தரிக்கப் பெறுவனவாகி விடுகின்றன”**

எனும் து.சீனிசாமியின் கருத்து இங்கு எண்ணத்தக்கதாகும்.

## உளப்போராட்டம்

உள்ளப் போராட்டம் என்பதில் உள்ளம் என்பது உணர்வு சார்ந்தது. போராட்டம் (Conflict) என்பது உணர்வு நிறைவேறாத தருணத்தில் உள்ளத்திடையே எழுவதாகும். மனக்கிளர்ச்சியால் உணர்வுகள் எழுகின்றன. இது ஆங்கிலத்தில் Emotion என்றழைக்கப்படுகிறது. இவ்உணர்வுகளுள் பாலுணர்ச்சி தலையாயதாகும். இந்த உணர்ச்சி திருப்தி அடைவதற்குத் தகுந்த சூழ்நிலை ஏற்படாவிட்டாலோ அல்லது தடைகள் ஏற்பட்டாலோ கிளர்ச்சியானது போராட்டமாக உருவெடுக்கின்றது. இதுவே உணர்வுப் போராட்டம் அல்லது உள்ளப் போராட்டம் என்று அழைக்கப்படுகிறது. இது பெரும்பாலும் சிறுகதைகளில் காணப்படுகின்றது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

ஒருவனது உள்ளம் சரியான முடிவெடுக்கும் நிலையில் இல்லாதபோது துயரத்தையும் மகிழ்ச்சியற்ற நிலையினையும் உண்டுபண்ணுகிறது. உள்ளத்தின் இந்த நிலை தனிப்பட்ட அவனுடைய செயலைத் தடுத்து நிறுத்துகிறது. மனப்போராட்டம் மனம் முறிவினால் ஏற்படுகிறது, மனப்போராட்டத்தினால் பாதிக்கப்படாதவர் எவரும் இல்லை எனலாம்.

தனிப்பட்டவனை மனப்போராட்டச் சூழ்நிலையில் ஆழ்த்துவது மனம் முறிவின் செயலே ஆகும். அது ஏற்படுவதற்குக் காரணம், ஒரு சமயத்தில் ஏற்படுகின்ற ஒப்பிட இயலாத துன்பங்கள் மீண்டும் மீண்டும் தோன்றும் தன்மையே ஆகும். ஒருவனுக்கு இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படுகின்றபோது மனப்போராட்டம் எழுகின்றது. உதாரணமாக, ஒருவன் கணிதம் மற்றும் இயற்பியல் ஆகிய இரண்டு படிப்புகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என வைத்துக்கொண்டால் தற்போது அவன் எந்தப் படிப்பைத் தேர்ந்தெடுப்பது என்பதில் போராட்டம் ஏற்படுகின்றது. இறுதியில் தேர்ந்து கொண்ட ஒரு படிப்பு மனநிறைவையும் மற்றது மனமுறிவையும் கொடுக்கின்றது. போராட்டத்திற்குரிய சிக்கல் (அ) இக்கட்டான சூழ்நிலைகளானது மன (அ) உள இறுக்கத்தையும் அமைதியற்ற மனநிலையையும் உருவாக்குகின்றது. ஒருவனுக்கு இக்கட்டான சூழ்நிலைகள் இருந்து கொண்டே இருக்குமானால் அதனால் அவனுக்கு மற்றவர்களின் ஆலோசனைகளும், அறிவுரைகளும் தேவையானதாக அமைகின்றன.

> “**உணர்வுப் போராட்டங்கள் வலிமையடையும் போதும் மனமுறிவு நிகழும் போதும் உள்ளத்தில் கவலை போன்ற உணர்ச்சிகள் உண்டாகுகின்றன.**” **(M.Carmey Zandis and Majore Bolles, Atest Book of Abnormal Psychology,p.4344)**[1]

போராட்டங்களுக்கு மையமாகப் பெரும்பான்மையும் பாலுணர்வு காரணமாக அமைகின்றது. பாலியல்பால் தோன்றும் காதல் உணர்வுடன் வேட்கைத் தணிப்பு, சமூக அங்கீகாரம் பெறுதல், குடும்பம் அமைக்கும் ஆர்வம் போன்ற தூண்டுதல்கள் சார்ந்து அமைகின்றன. இத்தகைய தூண்டுதல்கள் இயல்பாக போதுமான அளவில் நிறைவேறவில்லை எனில், அல்லது தடைபடுமெனில், விரக்தியும் அதனால் போராட்டங்களும் ஏற்படும் என்று ’**கேரட்**’ எனும் மேலைநாட்டு அறிஞர் கூறும் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

உளப் போராட்டம் என்பது ஃப்ராய்டியத்தின் அடிப்படைக் கருத்தாக்கங்களில் ஒன்றாகும். உள்ளத்தில் பல போராட்டங்கள் நிகழ்ந்தாலும் பாலுணர்ச்சிக்கு எதிரான போராட்டமே முதன்மையாகக் கருதப்படுகிறது. அனைத்துப் போராட்டங்களைப் போல் பாலியல் போராட்டத்திற்கும் முரண்பாடு (Contradiction) காரணியாகிறது. **(J.Loplanche and JB.Pontalis,The Language of psycho-Analysis, P.360)**[2] இரண்டு பிரிவுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் போராட்டத்தை ஏற்படுத்துகின்றன. ஃப்ராய்டியத்தி படி பாலுணர்ச்சிக்கு முரண்பட்ட பண்பாட்டு உணர்ச்சி உளப்போராட்டத்தில் பங்கு கொள்கின்றது. இவ்விரு உணர்ச்சிகள் (emotions) இயல்பிலேயே முரண்பட்டிருப்பதால் ஒற்றுமைக்கு வாய்ப்பின்றி

ஒன்றை மற்றொன்று ஆளுகைக்கு உட்படுத்துவதில் முனைப்பாகச் செயல்படும். இதில் தத்தமது வலிமையைக் காட்டத் தீவிரமாகப் போராடுகின்றன. இவ்விரண்டும் வலிமையானவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஃப்ராய்டின் தொடக்க கால நரம்பு நோய் முதலிப் (aetiology) பற்றிய ஆய்வில் நரம்பு நோய்களுக்கு உளப்போரட்டமே முழுமுதற் காரணி என்பதைக் கண்டார். **(தி.கு.இரவிச்சந்திரன், சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல்,பக்.159-160)**[3] குறிப்பாக இசிப்பு நோய்ப்பற்றிய ஆய்வில் (Studies on hysteria) நரம்பு நோய்க்குறி உருவாக்கத்திற்கு உளப்போராட்டத்தின் கணிசமான பங்களிப்பை விவரிக்கிறார்.

**உள போராட்டம் வரையறையும் வகைகளும்**

வலிமையுடைய ஊக்கம், நிறைவுற இயலாது தடைபடுமானால் உள்ளமுறிவு ஏற்படுகின்றது. தடைபடுவதற்கான காரணங்களை உளவியல் பேராசிரியர் ஒருவர் மூவகைப்படுத்துகிறார். **(தா.ஏ.சண்முகம், உளநலவியல்,ப.39)**[4]

1. சூழ்நிலைப் பொருள்களும் பிற மனிதரும் முதல் காரணம் ஆகும்.
2. இரண்டாம் காரணம் உள்ள உடல் உறுப்புகள் குறைவு, திறன் குறைவு, நாட்டுக் குறைவு முதலியவைகள் ஆகும்.
3. மூன்றாம் காரணமாக உள்ளப் போராட்டம் (Conflict) குறிப்பிடப்படுகிறது.

இக்கோயிலில் ஸ்ரீ வெங்கடரமணப் பெருமாள் ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் வீற்றிருக்கிறார். தெய்வம் ஆறடி உயரம் மற்றும் அவரது உடல் 'நவபாஷாண'த்தால் ஆனது. இது சமபங்காவுடன் அமர்ந்துள்ளது, அதன் இரண்டு மேல் கைகளுடன் சங்கு மற்றும் சக்கரம் மற்றும் கீழ் இடது கை மடிப்பு வடிவத்தில் உள்ளது மற்றும் கீழ் வலது கையில் அபய முத்திரை உள்ளது. தலையில் மகுடம் தாங்கி, உடல் முழங்கால் வரை ஆடை மற்றும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீதேவி மற்றும் பூதேவியின் தலைகள் கிருத மகுடத்துடன் உள்ளன மற்றும் அவர்களின் கைகளில் பத்மங்கள் உள்ளன. இரு தெய்வங்களும் அமர்ந்த கோலத்தில் கண்டிகை, ஆரம் மற்றும் பல ஆபரணங்களை அணிந்துள்ளனர். இறைவன் காதில் மகரகுண்டலத்தை அணிந்துள்ளார். வெங்கடரமணன், ஸ்ரீதேவி மற்றும் பூதேவி ஆகியோரின் உலோகச் சின்னமும் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. அர்த்தமண்டபத்தில் மகாவிஷ்ணு அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். அவருக்கு அருகில் ராமானுஜர், கோதண்டராமர் மற்றும் கலிங்கனார்த்தன் உருவங்கள் காணப்படுகின்றன. மகாமண்டபத்தில் ஜெயன், விஜயன் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் ஏறக்குறைய ஐந்தடி உயரத்தில் மூலவரை நோக்கியவாறு உள்ளனர். அவர்கள் நீண்ட மகுடத்தை உடையவர்கள் மற்றும் அவர்களின் கைகள் சங்கு, சக்கரம் மற்றும் கதாயுதத்தைத் தாங்கியுள்ளன. காதுகளில் பழங்கால வகை குண்டலங்கள் உள்ளன. தூண்களில் அஞ்சலி முத்திரையுடன் கூடிய மிக எளிமையான உடையில் ஆண் மற்றும் பெண் உருவங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

**கருவள்ளூர் வீர ராஜேந்திர ஈஸ்வரமுடையார் கோவில்**

ஸ்ரீ கங்காதீஸ்வரர் மற்றும் கமலாம்பிகை கோவில் வீர ராஜேந்திர ஈஸ்வரமுடையார் கோவில் என்று பிரபலமாக அறியப்படுகிறது. இங்கு இறைவன் ஐந்து தலை பாம்பின் கீழ் லிங்க வடிவில் அமர்ந்துள்ளார். வீர ராஜேந்திரன் காலத்தில் சிவ வழிபாடு உச்சத்தில் இருந்தது. இவரது ஆட்சியில் பல சிவாலயங்கள் கட்டப்பட்டன. இக்கோயில் பல்வேறு சிறப்புகளுக்கு பெயர் பெற்றது. மகா மண்டபத்தில் உள்ள துவாரபாலகமும், நந்தி சிற்பமும் பழமையானது. தேவகோஷ்டத்தின் பக்கத்தில் தட்சிணாமூர்த்தியின் சிற்பம் காணப்படுகிறது. அவர் ஜடாபரையும் யஜ்ஞோபவிதையையும் மார்பின் குறுக்கே வைத்துக்கொண்டு விராசன தோரணையில் அமர்ந்திருக்கிறார். மூன்று கண்கள் மற்றும் நான்கு கைகள் கொண்ட மூன்று அடி உயரம். அவனது ஒரு கால் முயலக வடிவில் அனவ அடக்குகிறது. அவரை விட சிறந்த குரு இல்லை. இந்த கோவிலில் பிரம்மா மற்றும் விஷ்ணுவின் உருவங்கள் அவர்களின் பெருமையை மீட்டெடுத்து, நெருப்புத் தூண்களாக காட்சியளிக்கின்றன. சிவனைத் தலைவராகக் கருதி, பிரம்மாவும் விஷ்ணுவும் சிவனை வழிபடுவதைக் காணலாம். சிவபெருமானுக்கு அருகில் பிரம்மா ஸ்வான் வடிவிலும், மகாவிஷ்ணு வராக வடிவிலும் காட்சியளிக்கிறார். தூணிலிருந்து வெளியே வரும் இறைவன் கிட்டத்தட்ட செதுக்கப்பட்டுள்ளது. தலத்தின் மேற்குப் பகுதியில் மகாவிஷ்ணுவின் சிற்பம் சங்கு மற்றும் சக்கரத்துடன் சுஹாசன தோரணையில் காணப்படுகிறது. அன்னை துர்க்கை அம்மன் அர்த்தமண்டபத்தில் வடக்கு நோக்கி அமர்ந்துள்ளார். இக்கோயிலில் அவள் மேல் கைகளில் பத்மாஸுடனும், கீழ் வலது கரத்தில் அபயமுத்திரையுடனும், கீழ் இடது கை மடங்கிய தோரணையில் அமர்ந்திருக்கிறாள். சிற்பம் இரண்டடி உயரம் கொண்டது. அவள் நெற்றியில் ஒரு கண்.

மூலவர் சன்னதியில் அம்பாள் கமலாம்பிகை வீற்றிருக்கிறாள். அவளது வெவ்வேறு வடிவங்களின் நிவாரண படங்கள் விமானத்தில் காணப்படுகின்றன. முதல் தலத்தின் தெற்குப் பகுதியில் அன்னை மீனாட்சியாக காட்சியளிக்கிறாள். க்ரீவகோஷ்டத்தில் சுஹாசன தோரணையில் பார்வதியாக காட்சியளிக்கிறாள். கொங்குநாட்டில் அம்பாள் சுறும்பர் பூங்குழி, பெரியநாயகி, முயங்கு பொன்முளைவல்லி, அம்பிகை எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறாள்.

இக்கோயிலில் விநாயகப் பெருமான் தனி சன்னதி கொண்டுள்ளார். விநாயகரின் தும்பிக்கை ஓம்காரத்தைக் குறிக்கிறது என்றும், வயிறு போன்ற பானை பிரபஞ்சம் என்றும் கருதப்படுகிறது. கணபதி சிற்பத்திற்கு அருகில் பஞ்சபூதங்களின் உருவங்கள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட சிற்பங்களுடன் நவக்கிரகங்களுக்கு தனி சன்னதி உள்ளது. சனிபகவானின் வாகனத்துடன் கூடிய சிற்பம் கோயிலில் உள்ளது. கிழக்குப் பிராகாரத்தில் மூலவரை நோக்கியவாறு சூரியனுக்கும் சந்திரனுக்கும் சன்னதிகள் உள்ளன.

**விஜயமங்கலம்- கரியமாணிக்கப் பெருமாள் கோவில்**

கரிமாணிக்கப் பெருமாள் கோயில் வீர ராஜேந்திர மன்னன் ஆட்சியின் போது கட்டப்பட்டது. இக்கோயிலில் பைலஸ்டர்கள் கொண்ட தேவகோஸ்தர்கள் உள்ளனர். நான்கு பக்க தூணில் கலச இடாழ் மற்றும் பலகை தனித்தனி அளவீடுகளுடன் பொறிக்கப்பட்டுள்ளன. தேவகோஷ்டத்தின் மேற்குப் பகுதியில் காணப்படும் தோரணங்கள் எளிமையுடன் உருவாகின்றன. மகாமண்டபத்தில் காணப்படும் நான்கு தூண்களும் பத்துத் தூண்களும் ஏறக்குறைய இடைவெளியில் நிறுவப்பட்டு விதானத்தைத் தாங்கி நிற்கின்றன. முகமண்டபத்தில் ஆறு அடி சுற்றளவுடன் பதினைந்து அடி உயரத்தில் பத்து தூண்கள் உள்ளன. கோவிலின் சில அமைப்பு மற்றும் அத்தகைய கோவில்களில் உள்ள சிற்பங்கள் பற்றிய விளக்கம், கொங்குநாட்டு மக்களிடையே தனது ஆட்சியின் போது மத உணர்வை இணைப்பதில் மன்னனின் பங்கைக் காட்டுகிறது.

**திருமுருகன்பூண்டி- அம்பாள் சன்னதி**

வரலாற்றில் புகழப்பட்ட திருமுருகன்பூண்டி வடபரிசார நாட்டில் அமைந்துள்ளது. கோவை திருப்பூர் நெடுஞ்சாலையில் அவிநாசிக்கு மிக அருகில் உள்ளது. திருமுருகன்பூண்டி திருமுருகப்பெருமானுக்கு சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடல் ஒன்று பாடப்பட்டுள்ளது. தவிர அவர் தேவாரம் இயற்றிய இடம். எனவே, இந்த இடம் மிகவும் குறிப்பிடத்தக்கது. திருமுருகன்பூண்டி வரலாற்று ரீதியாக ஒரு பெரிய நகரம். இத்தலத்தை 'மா-நகர்' என்று இலக்கியங்கள் பேசுகின்றன. தேவாரத்தில் பூண்டி மாநகர் எல்லையம் கவிராயர் என்று அவிநாசி புராணத்தை எழுதியவர் திருநகர் என்றும் ஞானபூமி என்றும் குறிப்பிடுகிறார். அருணகிரிநாதர் திருப்புகழில் கொங்குராஜபுரம் என்று குறிப்பிடுகிறார். திருமுருகநாதர் மேற்கு நோக்கி அமர்ந்துள்ளார். கோனேரின்மைகொண்டான் திருப்புவன சக்கரவர்த்தி வீரராஜேந்திர சோழன் அம்பாள் சந்நதியைக் கட்டினான். சாக்தம் வளர்ச்சிக்காக அவர் அளித்த நன்கொடைகளில் இதுவும் ஒன்று.

**கண்டீஸ்வரம் ஸ்ரீ கருணாம்பிகை அம்பாள் ஆலயம்**

கந்தீஸ்வர மற்றும் கருணாம்பிகை கோயில் வீர ராஜேந்திர சோழன் காலத்தில் கட்டப்பட்டது. இக்கோயில் வீர ராஜேந்திர சோழனின் மகன் கந்தியதேவன் என்ற நச்சினார்க்கினியர் பெயரில் கட்டப்பட்டது. இக்கோயில் கொங்கு சோழர்களின் கலை அம்சங்களைக் கொண்டுள்ளது. கந்தீஸ்வர பகவான் கோவில் திராவிட கலை பாணியை தாங்கி, ஆறு கூறுகளை தன்னகத்தே கொண்டு சென்றது. அவற்றுள் உபபிதா, அதிஷ்டான, பாத, பிரஸ்தாரா, க்ரீவா, சிகரம் மற்றும் ஸ்துபி. கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், வாகனமண்டபம் மற்றும் த்வீபஸ்தம்பம் ஆகியவை ஆகமங்களின்படி செதுக்கப்பட்டுள்ளன.

ஜகதி, அழகான தேவகோஷ்டத்தை செதுக்கிய கட்டிடக்கலை வல்லுநர்கள் தகுந்த பிரஸ்தாரத்தை திறமையாக செதுக்கியுள்ளனர். பிரஸ்தாரக்கூடு, அதன் அழகு, இதன் கீழ் பத்மம் மற்றும் மேற்கே வயல உருவங்கள் கருவலூர் கோவில் பாணியை

நினைவூட்டுகின்றன. பிரஸ்தார குடுக்கள் மலர் அலங்காரம். பிரஸ்தாராவிற்கு அடுத்ததாக முதல் தல, சிகரம் மற்றும் ஸ்துபி ஆகியவை பிற்காலத்தில் ஸ்டக்கோ கைவினைத்திறன் ஆகும். கந்தீஸ்வர கோவிலின் தெய்விமனையில் பல கிரிவகோஷ்ட சிற்பங்கள் உள்ளன. கர்பக்ருஹா மற்றும் அர்த்தமண்டபம் போன்ற மகாநாசி அம்சங்களுடன் கூடிய சிகர அமைப்பு. அவற்றுள் அதிஷ்டானம், பாதம், பிரஸ்தாரம் ஆகியவை முக்கிய அங்கங்களாகும். மகாமண்டபத் தூண்களிலும் வெட்டுப்பொதிகை பொறிக்கப்பட்டுள்ளது.

அதிஷ்டானம் ஏறக்குறைய ஏழு அடி உயரமும், பாதம் ஒன்பது அடி நீளமும் கொண்டது. அனைத்து பிரஸ்தாரா கூடுகளும் ஒரே மாதிரியான கட்டிடக்கலை அமைப்புகளைக் கொண்டுள்ளன. கற்பக்ருஹம் கிட்டத்தட்ட பதினைந்து அடி உயரமும், அர்த்தமண்டபம் இருபது அடி உயரமும் கொண்டது. கர்ப்பக்ருஹத்தை அடுத்துள்ள மண்டபத்தின் உள்பகுதியில் கொங்கு சோழர்களை நினைவுபடுத்தும் நான்கு தூண்கள் உள்ளன. பாதபாண்ட அதிஷ்டானத்தில் ஜகதி, திரிபட்ட குமுதா, கந்தா, பதிக, வேதிகை ஆகியவை காணப்படுகின்றன. உபபீடத்தில் ஏறக்குறைய ஐந்து அடி அதிஷ்டானம் கட்டப்பட்டு மற்ற உறுப்புகளை ஆதரிக்கிறது.

அலங்கார அம்சத்தை விட அளவீட்டுக்கு மிக முக்கியமானது கொடுக்கப்பட்டுள்ளது. பாதப் பகுதியில், ஏழு அடி மற்றும் தேவஸ்தானங்கள் கொண்ட தூண்கள் செதுக்கப்பட்டுள்ளன. கண்டீஸ்வர கோவிலில் கற்பக்ருஹ தேவகோஷ்டமும், அர்த்தமண்டப தேவகோஷ்டமும் காணப்படுகின்றன. இக்கோயிலின் பிரானாலா கொங்கு சோழர்களின் தாக்கத்தால் உருவானது.

**முடிவுரை**

முதல் இரண்டு தலங்களான கிரிவா, சிகரம் மற்றும் ஸ்துபி ஆகியவை ஸ்டக்கோ வேலைப்பாடு ஆகும். தல கோஷ்டங்களும் கிரிவகோஷ்டங்களும் நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளன. தாலாக்கள் தவிர, ஸ்டக்கோ வடிவங்களின் பைலஸ்டர்கள் பல எண்ணிக்கையில் காணப்படுகின்றன. சாலா மற்றும் கர்ணகூடு ஆகிய இரண்டும் கட்டமைக்கப்பட்டுள்ளன மற்றும் சாலா பகுதி மாதிரி கலசங்களில் பல எண்ணிக்கையில் காணப்படுகின்றன. வாகனமண்டபம் தற்காலத்திற்குரியது. வாகனமண்டபத்தில், எட்டு தூண்கள் ஸ்டக்கோ வடிவில் செய்யப்பட்டுள்ளன. பாலிபிதா, நந்தி, சூரியன் மற்றும் சந்திர உருவங்கள் மிகவும் பழமையானவை. புஸ்பபோதிகையுடன் கூடிய தூண் கவனிக்கத்தக்க அம்சமாகும். தூண்களில் அஸ்வபாதம், கம்பு, மலஸ்தானம், தாடி, இடாழ் மற்றும் பலகா ஆகியவை கல்லால் ஆன தூணின் முறையில் பொறிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ கருணாம்பிகை அம்பாள் சந்நதியின் விமானம் கட்டை கற்களால் அலங்கரிக்கப்பட்டு உறுப்புகள் செதுக்கப்பட்டுள்ளது. பாதப் பகுதியில் தேவகோஸ்தர்களும், சிற்பங்களும் உள்ளன. கல் மற்றும் ஸ்டக்கோ வேலைகள் அடிப்படையிலான அலங்காரங்கள் காணப்படுகின்றன. ட்விட்டலா வகையைச் சேர்ந்த விமானத்தில் நான்கு பக்க சிகரமும் உள்ளது. விமானத்தில் பத்மம், நாசிகூடம் மற்றும் கலசங்கள் உள்ளன. ஸ்ரீ கருணாம்பிகை

சன்னதியில் கர்ப்பக்ருஹம், அர்த்தமண்டபம் மற்றும் மகாமண்டபம் உள்ளது. முகமண்டபத்தில் ஸ்டக்கோ வடிவங்களின் நான்கு தூண்கள் மற்றும் பலிபடங்கள் உள்ளன. தூண்கள் கல்லால் ஆன தூண்கள் போல் ஸ்டக்கோ வேலைப்பாடுகளாக இருந்தாலும், மலஸ்தானம், தாடி, இடல் மற்றும் பலகை ஆகியவை வட்ட வடிவில் உள்ளன. இதனால், மன்னன் வீர ராஜேந்திர சோழன் தனது ஆட்சிக் காலத்தில் நிலவிய கோவில் கட்டும் பணிகளில் தன் ஈடுபாட்டைக் காட்டினான்.

**குறிப்புகள்:**

1.1887 முதல் இந்திய தொல்லியல் துறையின் கல்வெட்டு பற்றிய வருடாந்திர அறிக்கைகள்.

2.ஆவணம், தமிழ்நாடு தொல்லியல் கழகத்தின் இதழ், தஞ்சாவூர், தொகுதி 10

3.தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையின் இதழ், 1970.

4.எபிகிராபியா இண்டிகா, இந்திய தொல்லியல் துறை, 1888 முதல்.

5.மேற்கின் கல்வெட்டுகள்.கங்காஸ், (எட்), கே.வி.ரமேஷ், ஐ.சி.எச்.ஆர்.1984.

6.மைசூர் தொல்லியல் அறிக்கைகள், பெங்களூரு, 1905 முதல்.

7.தென்னிந்திய கல்வெட்டுகள், (எட்) டி.என். சுப்பிரமணியம், 3 தொகுதிகள்,

8.அரசு ஓரியண்டல் கையெழுத்துப் பிரதி நூலகம், சென்னை, 1957.

# 30. புறநானூறு காட்டும் தொழில்கள்

**முனைவர். ப.சக்திவேல்,**

தமிழ்த் துறைத்தலைவர்,

ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டமலை - சாத்தூர்.

DOI 10.5281/zenodo.10725738.

**Abstract :**

People of ancient times used to do many occupations necessary for their life. The literature also mentions the names of their occupations such as carpenter, blacksmith, commeer, vannar, potter. There was no disparity in castes during the Sangam era, the moral person was considered superior and the immoral person was considered inferior. It seems that they got rid of caste discrimination due to morality and education. From Kurava citizens to King citizens, many of them excelled in education. Vennikkuyatiyar Kuramas like Ilaveini were famous for their education. The world will know the pride of Panar clan. Our forefathers are the ones who have shown that if you do your job well, you can live a happy life, and the purpose of this article is to explore the above mentioned professions.

## முன்னுரை

பண்டைய கால மக்கள் தம் வாழ்க்கைக்குத் தேவையான பல தொழில்களைச் செய்து வந்தனர். அவர்களை தச்சர், கொல்லர், கம்மியர், வண்ணார், குயவர் என அவர்கள் செய்த தொழில் பெயர்களையும் இலக்கியங்கள் குறிப்பிடுகிறது. சாதிகளில் உயர்வு தாழ்வு என எவ்வித ஏற்றத்தாழ்வும் சங்க காலத்தில் இல்லை, ஒழுக்கம் உடையவன் உயர்ந்தவனாகவும் ஒழுக்கம் இல்லாதவன் தாழ்ந்தவனாகவும் கருதப்பட்டான். ஒழுக்கம், கல்வி அறிவினால் சாதிவேறுபாட்டைக் களைத்தனர் எனலாம். குறவர் குடியினர் முதல் மன்னர் குடியினர் ஈறாகப் பலரும் கல்வியில் சிறந்திருந்தனர். வெண்ணிக்குயத்தியார் குறமகள் இளவெயினி போன்றோர் கல்வி அறிவால் பெருஞ்சிறப்புற்று இருந்தனர். பாணர் குலத்து அவ்வையாரின் பெருமையை உலகே அறியும். தனக்கு உண்டான தொழிலை சிறப்பாக செய்தால் வாழ்வில் இன்பமாக வாழலாம் என்று வாழ்ந்து காட்டியவர்கள் நம் பழந்தமிழர்கள், அவர்கள் மேற்கண்ட தொழில்களை புறநானூறு வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## உலோகத் தொழில்

பழந்தமிழர் இரும்பின் பயனை நன்கு அறிந்திருந்தனர். இரும்பை உருக்கி படைக்கலன்களும், வேளாண்கருவிகளும் பிறவும் செய்யும் திறன் பெற்றிருந்தனர். யானை மூச்சுவிட்டது போல் கை கோப்புப் பொருந்திய உலையின் வாயினை,

**பிடியுயிர்ப் பன்ன கைகவ ரிரும்பின்**
**நோவுற லிரும்புறங் காவல் கண்ணி** (புறம் 345, 8-9)

என்று குறிப்பிடுகிறது என்பதிலும் உலோகத் தொழில் நுட்பத்;தில் பழந்தமிழர் தேர்ச்சிப் பெற்றுள்ளமை தெளிவாகிறது. இதன் வழி எஃகு தாதினைக் கண்டறியவும் அதனைப்

பிரித்தறியவும், அதிலிருந்து உலோகப் பொருள்களை வடித்தெடுக்கவும், ஆற்றலையும் தொழில்நுட்பத்தினையும் பழந்தமிழர் கைவரப்பெற்றிருந்தனர் என்பது உய்த்துணரப்படுகிறது.

**கைவினைப் பொருள்கள் உற்பத்தி**

பழந்தமிழரின் ஏற்றுமதிப் பொருள்களில் கைவினைப் பொருள்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பொன்னாலும், மணியாலும், முத்தாலும், பவளத்தாலும் செய்யப்பெற்ற மாலைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்வகைப் பொருள்கள் கிடைத்த இடங்களையும், அவற்றை ஒன்று சேர்த்து மாலையாக்கிய செய்தியையும்,

**பொன்னுந் துகிரு முத்து மன்னிய**

**மாமாலை பயந்த காமரு மணியும்**

**இடைப்படச்சேய வாயினும் தொடைபுணர்ந்து**

**அருவிலை நன்கல மனமக்குங் காலை** **(புறம் - 218, 1-4)**

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் காட்டுகின்றன.

**வேளாண் சார்ந்த தொழில்கள்**

பழந்தமிழகத்தில் மக்களின் தலையாய தொழிலாக உழவுத்தொழில் விளங்கியது. உழவும் உழவு சார்ந்த தொழில்களும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயித்தன. அனைத்துத் தொழில்களும் உழவை மையமிட்டதாகவே அமைந்திருந்தன. உழைக்கும் மக்களாகிய களமர், உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் என்று அழைக்கப்பட்டனர். ஆறு, குளம், ஏரி முதலிய நீர்நிலைகளில் இருந்து உழவர்கள் வயலுக்கு நீர் பாய்ச்சினர். உழுது சேறாக்கித் தொளி கலக்கினர். பரம்படித்துப் பண்படுத்தினர். நாற்று நட்டனர். களை பறித்தனர். நீர் பாய்ச்சினர். பறவைகளும் விலங்குகளும் பயிரை அழித்து விடாமல் பாதுகாத்தனர். நெல்லறுத்துப் போரடுக்கினர். பிணையல் அடித்துப் பொலி தூற்றினர். நெல்லை மலைப்போலக் குவித்தனர். குவித்த நெல்லை நிலக்கிழார்களின் மனைகளில் இருந்த நெற் கூடுகளில் இட்டு நிரப்பின நீர் நிறைந்த வயல்களில் ஏர்கள் உழுதமை குறித்தும் மனைகள், நெல்லால் நிறைந்தமை குறித்தும் அவர்கள் வாழும் தெருக்கள் பொன்னால் நிறைந்தமை குறித்தும்

**ஏர்பரந்த வயல் நீர்பரந்த செறு**

**நெல்மலிந்த மனை பொன்மலிந்தமறுகு** **(புறம் - 338)**

என்று புறுநானூறு காட்சிப்படுத்துகின்றது.

**பொருளாதாரம் சார்ந்த தொழில்கள்**

**அ. வணிகம்**

பொருளாதாரம் சார்ந்த தொழில்களில் முதன்மை நிலையினைப் பெறுவது வணிகத் தொழிலாகும். ஒரு நாட்டின் வணிகத் தொழில் மேம்பாட்டின் அடிப்படையிலேயே

அந்நாட்டின் பொருளாதார வளம் கணக்கிடப்படுகிறது. பழந்தமிழர் வணிகத்தை, உள்நாட்டு வணிகம் மற்றும் வெளிநாட்டு வணிகம் என இருவகையாகக் காணலாம். உள்நாட்டு வணிகம் பெரும்பாலும் நிலம் சார்ந்த பொருள்களையும், தொழில்களையும் அடிப்படையாகக் கொண்டும், வெளிநாட்டு வணிகம் இயற்கைப் பொருள்கள் மற்றும் கைவினைப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டும் நடைபெற்றன. கடல்வழிப் போக்குவரத்து வெளிநாட்டு வணிகத்திற்கு ஏற்றதாக அமைந்திருந்தது. இருவகை வணிகங்களும் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்று வந்தன. பழந்தமிழர் பண்டமாற்று முறையிலும் கடல்வழி வணிகத்திலும் சிறப்புற்று விளங்கியதற்கு ஒரு சான்றாக,

**மீனொடுத்து நெற்குவைஇ**
**மிசையம்பியின் மனைமறுக்குந்து**
**மனைக்குவைஇய கறிமூடையாற்**
**கலிச் சும்மைய கரைகலக்குறுத்து கலந்தந்த பொற்பரிசம்**
**கழித்தோணியாற் கரைசேர்க்குந்து**
**மலைத்தாரமுங் கடற்றாரமும்**
**தலைப்பெய்து வருநர்க்கீயும்** **(புறம் 343: 1-8)**

என்ற பாடலடிகள் அமைகின்றன. இதில் மீனுக்கு நெல் மாற்றாகப் பெறப்பட்டதும், ஏற்றுமதிக்காய் மிளகு மூட்டைகள் கரையோரம் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததும், இறக்குமதிப் பொருள்களாகிய பொற்பரிசங்கள் கலங்களில் இருந்து தோணிகளில் கரை சேர்க்கப்பட்டதும், மலையில் விளைந்த பொருள்களும், கடலில் விளைந்த பொருள்களும் நிறைந்திருந்தமையும் காட்சியாக்கப்பட்டுள்ளது. இப்பாடல் பண்டைத்தமிழர் வணிகச் சிறப்பைக் காட்டும் மிகச் சிறந்த சான்றாக அமைகிறது. இவையில்லாமல், வெளிநாட்டிலிருந்து பொருள்களை ஏற்றி வந்த கலன் கரையொதுங்க அதிலிருந்த பொருள்களை மீனவர்களும் உப்பு விளைவிப்போரும் எடுத்துச் செல்வதால் பொருள்கள் சிதறிக் கிடந்த காட்சியையும் (புறம் 30: 11-15) யவனநாட்டில் இருந்து மது இறக்குமதி செய்யப்படட் செய்தியையும் (புறம் 56: 18) புறநானூறு காட்டுகிறது.

**ஆ. கால்நடை வளர்ப்பு**

பண்டைத் தமிழர் கால்நடைகளின் பயனை நன்கு உணர்ந்திருந்தனர். சமுதாய வளமையைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாகக் கால்நடைகளின் எண்ணிக்கை இருந்து வந்துள்ளது. கால்நடை வளர்ப்பு ஆண்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தாலும் பால்கரத்தல் முதல் பால்படுபொருள்களைப் பண்டமாற்றுதல் வரை பிற செயல்பாடுகள் பெண்களிடம் காணப்படுகிறது. கால்நடைகளை மூலதனமாகக் கொண்டு குடும்பத்தையும், சமூகத்தையும் மேம்படுத்தியுள்ளனர்.

**காடு சார்ந்த தொழில்கள்**

**தேனெடுத்தல்**

தேனீக்கல் உயர்ந்த மலைகளில் தேனைத் திரட்டிக் கூடுக்கட்டியிருந்தன. கானவர் அத்தேனை எடுக்க முயன்றனர். நிலை பேறுண்டாகக் கட்டியமைத்த கண்ணேணி வழியாக ஏறிச் சென்று அத்தேன் கூட்டை யழித்துத் தேனெடுத்தனர். அதனால் எழுந்த மகிழ்ச்சியால் ஆரவாரித்தனர். அந்த ஆரவாரம் மலையெங்கும் எதிரொலித்தது. கண்ணேணியாவது கணுக்களிலே அடிவைத்து ஏறிச் செல்லும்படி அமைந்துள்ள மூங்கில் ஏணியாகும்.

**'மால்புடை நெடுவரைக் கோடு'** (புறம் - 105)
**தறவுப் பிழிந்திட்ட கோதுஜமச் சிதறல்**
**வாரசும் பொழுது முன்றிற்**
**தேர்வீசிருக்கை நெடியோன் குன்றே** (புறம் - 114)

என்ற பாடல்களில் மூலம் அறிய முடிகின்றன.

**உடும்பு வேட்டை**

எயினர் வேட்டையாடிக் கொன்ற விலங்குகளில் உடும்பும் ஒன்றாகும். உடும்புகளை எயினர் விரும்பி வேட்டியாடினார். ஊருக்கு அண்மையில் இருந்த மருக்கரையில் இருந்து உடும்புகளை எயினச் சிறார் பிடித்து வந்த செய்தியை புறநானூற்றில் காண முடிகின்றன.

**ஊர் அருமிளையதுவே மனைவியும்**
**வேட்டைச் சிறாஅர் சேட்புலம் படராது**
**படுமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்**
**விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் விதவை**
**யாணர் நல்லவை பாணரொடொராங்கு**
**வருவிருந்தயரும் விருப்பினள்** (புறம் - 326)

என்ற பாடல் மூலம் உடும்புகளை எயினர்கள் வேட்டையாடியதனை அறிந்து கொள்ள முடிகின்றன.

**முயல் வேட்டை**

உடும்பைப் போலவே முயலும் ஒரு சிறிய விலங்குதான். மக்கள் இன்றும் அதனை விரும்பி வேட்டையாடுகின்றனர். பண்டைய நாள் போலவே இன்றும் உணவுக்காகவே முயல் வேட்டையாடப்படுகிறது. எயினர் முயலை மிகுதியாக வேட்டையாடினர். வேட்டுவர் குடிசைகளில் முயல்கறி முக்கிய உணவாக இருந்தது.

**படலை முன்றிற் சிறு தினையுணங்கள்**
**புறுவமிதலு மறவு முண்கெனப்**
**பெய்தற் கெல்லின்று பொதேயதனால்**

**முயல் சுட்ட வாயினும் தருவேம் புகுதந்**

**தீங்கிருந்தீமோ முது வாய்ப்பாண’** (புறம் - 319)

எயினரது மனைக்குப் பாணனாகிய விருந்தினர் தன் சுற்றத்தாருடன் ஞாயிறு மறைந்த மாலைப்பொழுதில் வந்தபோது, முற்றத்தில் சிதறிக்கிடக்கும் தினையரிசியை உண்ண வரும் புறாவையும், முயல் கறியையும் சமைத்து மனைத்தலைவி பாணரை உபசரித்த, செய்தி புறநானூற்றில் காணமுடிகின்றன.

**பன்றிவேட்டை**

திணைப்புனத்தில் தினைக் கதிர்கள் நன்கு விளைந்து முற்றிய காலங்களில் பன்றிகள் இரவுப்பொழுதில் வந்து அத்தினைக் கதிர்களை மேய்ந்து அழிக்கும். அதனைத் தடுப்பதற்காக வேட்டுவர் தினைப் புனங்களில் பன்றிகள்வரும் பாதையில் பெரிய கற்பொறிகளை அமைத்து வைத்திருப்பார்கள். அப்பொறி அடார் என்று அழைக்கப்பட்டன. தினைக்கதிரைத் தின்ன வரும் பன்றியை வீழ்த்துவதற்காக வேட்டுவன் மாட்டி வைத்த பெரிய கற்பொறியாகிய அடார் என்பதில் வலிமை மிக்க புலி அகப்பட்டுக் கொண்ட செய்தியை,

**‘இரும்புலி வேட்டுவன் பொறிஅறிந்து மாட்டிய**

**பெருங்கல் அடாரும் போன்ம்’** (புறம் - 19)

என்ற பாடலின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றன.

**மான்வேட்டை**

பண்டைக் காலத்தில் தோல், இறைச்சி ஆகியவற்றிற்காக மான் வேட்டையாடப்பட்டது. வேள்வி செய்யும் காலத்தில் பார்ப்பனர் மான் தோலைப் பச்சையாகத் தோளில் போர்த்திக்கொண்டு யாகச் சடங்குகளைச் செய்தனர் என்பதை

**வினைக்கு வேண்டி நீபூண்ட**

**புலப்புல்வாய்க் கலைப் பச்சை**

**அவற்பூண் ஞான் மிசைப்பொலிய’** (புறம் - 166)

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றன.

**நெசவுத் தொழில்**

ஆடை என்பது மனிதனை பிற உயிர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் ஒன்றாகும். அவை நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. அவை தட்பவெப்ப நிலைகளைப் பொறுத்து வேறுபடுகின்றன. பருத்தி, கம்பளி, பட்டு என்ற ஆடைகள் இருந்தாலும் காலச் சூழலுக்கு ஏற்றாற் போல் அவை பயன்படுத்தப்பட்டன. பண்டைக் காலத்தில் கைத்தொழிலாக இருந்தது.

**'பருத்தி பெண்டின் பனுவல்' (புறம் - 125)**

பெண்டிர் தமது சுயமுயற்சியால் நூற்ற நூல் ஆடைகளாக மாற்றம் பெற்றன. நூல் பருத்தி என்ற பஞ்சு அல்லது பருத்திச் செடி மூலம் கிடைக்கின்றன. பண்டைய தமிழர்கள் பருத்திச் செடியை விளைவித்தனர் என்ற செய்தியை (புறம் -299,324,326,393) புறநானூறு மூலம் அறியமுடிகின்றன.

**கட்டுமானத் தொழில்**

எலி வளை ஆனாலும் தனி வளை என்பதற்கு ஒப்ப தனக்கென ஒரு வீடு வேண்டும் என மனிதன் நினைக்கின்றான். மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று வீடு. இதனை உணவு, உண்டி, உறையுள் என்ற சொல்லடுக்கின் வாயிலாகவும் உணரலாம். ஒரு நாட்டில் மன்னர் மாளிகைகள், அரசவை, அரசியின் அந்தப்புரம், கோபுரவாயில், கோட்டை வாயில்கள், மதில்கள், பிற இல்லங்கள் என எண்ணற்ற தன்மையில் இருப்பதைக் காணமுடிகின்றன. புறநானூற்றில் கட்டிடங்களின் அமைப்புகளைப் பற்றிய செய்திகளைக் காண முடிகின்றன.

**மதில்கள்**

ஒரு நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வது வீரர்கள் மட்டுமல்ல அந்நாட்டின் உறுதியான கட்டிடங்களும் கோட்டைச் சுவர்களும் தான். எதிரிகளின் மதயானைகள் உடைத்து விடாத தன்மையில் மதில்கள் அமைத்து இருந்ததனை புறநானூறு வெளிக்காட்டுகின்றது. சங்க காலத்தில் மதில் அவர்களுக்கு கூட இரும்புக் கம்பிகளுக்குப் பதிலாக செம்புக் கம்பிகளை ஊடமைத்துக் கட்டினர். இத்தகவலை,

**'செம்பு உறழ் புரிசைச் செம்மல் முதூர்' (புறம் - 37, 11)**
**'செம்பு புனைந்தியற்றில் சேணெடும் புரிசை' (புறம் - 201)**

என்ற புறநானூறு பாடல்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றன.

**தூண்**

வீட்டு முற்றத்தில் தூண்கள் நாட்டப்பட்டு இருந்தன. தூண்கள் வீட்டுக் கூரையின் முற்பகுதியைத் தாங்கி நிற்கின்றன. தூண்கள் கட்டிடத்தின் உறுதியை நிலைநாட்டுகின்றன. அவ்வாறான தூண் பற்றிய தகவலை,

**'சிற்றில் நல்தூண் பற்றி நின் மகன்**
**யாண்டு ஊனோ? என வினவுதி' (புறம் -86)**

என்ற பாடலின் மூலம் அறிய முடிகின்றன.

**புலவர்கள் மேற்கொண்ட தொழில்**

புலவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு குலத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பாடல் இயற்றுவதைத் தன் தொழிலாகக் கொண்டு மன்னனை அடைந்து அவனின் புகழ், வீரம், கொடை, சிறப்பு போன்றவைகளை பாடி அதன் மூலம் கிடைக்கும் பரிசில்களைக்

கொண்டு தன் வாழ்க்கை தேவைகளை நிறைவு செய்தனர்கள். பரிசில்களை தானே வைத்துக் கொள்ளாமல் பிறருக்கும் கொடுத்து இன்பமடைந்ததை காணமுடிகின்றன. இவர்கள் பாடல் இயற்றுவதனையே முதன்மைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தார்கள்.

**முடிவுரை**

சங்ககால மக்கள் வெவ்வேறு தொழில்களை செய்து வந்தாலும் தனக்கு கிடைத்த பொருட்களை பங்கிட்டு வாழ்ந்த தன்மையைக் காணமுடிகின்றன. மக்கள் தான் செய்த தொழில்களில் உண்மை, உழைப்பு, நேர்மை போன்றவற்றை கடைபிடித்து வாழ்ந்தார்கள். பல செல்வங்களைச் சேர்த்தாலும் பிறரின் கண்ணீரையும், பாவத்தையும் சேர்த்தது இல்லை. இவ்வாறான வாழ்க்கையை தற்காலத்தில் நாம் கடைபிடித்தால் இக்காலமும் பொற்காலமே.

# 31. கவிதைகள் பேசும் சமத்துவச் சிந்தனைகள்

**முனைவர் கே .இரா. கமலாமுருகன்,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை

இராணிமேரிகல்லூரி (தன்னாட்சி), சென்னை - 04.

ORCID ID : JTTPS://ORCID.ORG000-002-0215-6855

DOI 10.5281/zenodo.10725766.

**Abstract :**

Even though there are thousands of living beings in the world, only in the human race, different activities and various rights related to the use of the sixth sense, various rights and fundamental relationships to be created in the structure of love have been highlighted by various creators and social thinkers over time. In this way, this article highlights the ideas related to equality spoken by Tamil poetry.

உலகில் பல்லாயிரம் உயிர்கள் தோன்றி வாழ்ந்தாலும், மனித இனத்தில் மட்டுமே ஆறாம் அறிவின் பயன்பாட்டினை ஒட்டி மாறுபட்ட பல்வேறு செயல்பாடுகளும் உரிமைக்குரியதான பல்வேறு சிந்தனைகளும் அன்பின் கட்டமைப்பில் உருவாக்க வேண்டிய அடிப்படை உறவுகளையும் மிகுதிப்படுத்தி அதற்கான சிந்தனைகளை முன்னிலைப்படுத்தியும் பல்வேறு படைப்பாளர்கள் சமுதாய சிந்தனையாளர்கள் காலம் காலமாக எடுத்துணர்த்தி வருகின்றனர். அவ்வகையில் தமிழ்க் கவிதைகள் பேசும் சமத்துவம் தொடர்பான சிந்தனைகளை ஒட்டிய கருத்துக்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

### பல்வகை மனிதர்கள்

**'பறவைகள் பலவிதம்'** என்று நாம் கேட்டதுண்டு. ஆனால் மனிதர்கள் பலவிதம் என்பதனை முதலில் உணர்ந்தால்தான் பின்னர் அவர்களை இணைத்த சமதர்ம சமுதாயம் உருவாக்க இயலும். கவிப்பேரரசு வைரமுத்து பலவகை மனிதர்கள் பட்டியலை,

**"மனிதர்களில் குதிரைகள் உண்டு**
**தம்நிழல் கண்டு தாமே அஞ்சும்**
**குதிரை மனிதர்கள்**
**மனிதர்களில் விட்டில்கள் உண்டு**
**பூத்துக் குலுங்கும் பூக்கள் அழைத்தாலும்**
**பூக்களில் வாயூன்றித் தேன் குடிக்கத் தெரியாமல்**
**இலைகளைத் தின்னும் விட்டில் மனிதர்கள்**
**மனிதர்களில் குரங்ககள் உண்டு**
**தங்கக் கிண்ணத்தில் அப்பம் கிடைத்தாலும்**
**அப்பம் கவர்ந்து கொண்டு தங்கள் கிண்ணத்தைத்**
**தரையில் எறிந்து விடும் குரங்கு மனிதர்கள்"** (தண்.தே.ப. 28)

என்று பட்டியலிட்டுக் கூறுகின்றார். இத்தகைய குணங்கள் சிலநேரம் மன்னிப்படலாம். ஆனால் பல்வேறு சாதிய அடிப்படையிலும், தொழில்முறை அடிப்படையிலும் இன்றைய காலங்கள், பணத்திமிர், பதவித்திமிர் போன்ற காரணங்களாலும் மனிதர்களில் பல்வகையான வேறுபாடுகள் காட்டப்படுவதுடன் அதனால் பல்வேறு துன்பங்களும் சமுதாயச் சீரழிவுகளும் தூண்டப்படுகின்றன.

இவற்றைத் தகர்த்திட ‘**சமதர்ம சமுதாயம்**‘ செழித்திட அவசியமான மாற்றத்தைச் செய்திட வேண்டியது தம் அவசியம் என்பதனையும் படைப்பாளர்கள் உணர்ந்து எடுத்துரைத்துள்ளனர். ‘சாதியில்லை என்று கூறுவதுதான் எங்கள் நாகரீகம்‘ என்று பாவேந்தர் கூறுகின்றார்.

**சமத்துவம்**

**“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்“** (குறள். 972)

என்ற அடிகளில் உயிர் நோக்கம், இங்கு வாசிக்கும்போது சிலர் எழுத்துப் பிழையாக உயர்நோக்கம் என்பது உயிர் நோக்கம் என்று தட்டச்சுப் பதிவாகிவிட்டதா என்று எண்ணக்கூடும். ஆனால் நான் உயிர் நோக்கம் என்ற பொருண்மையிலேயே எழுதியுள்ளேன். காரணம் மனிதனாகத் திகழ்வதின் உயர்பண்புகளில் ஒன்று இதுவே ஆகும். எனவேதான் இராம காதையில் இராமன் கங்கைக் கரையில் சந்திக்கும் குகனின் சிறப்பு இராமனுக்கு சகோதரனாக உயர்த்தப்பட்டு வலியுறுத்தப்படுகிறது. இராமனைக் காண தேனும் மீனும் கொண்டு வந்த குகனின் அன்பு கேலிக்குரியதன்று. எனவே, இராமன் ஏற்றோம் என்று கூறிய ஒற்றைச் சொல்லில் நிறைவு பெறாத உணராத பல உள்ளங்களுக்கத் தெளிவாக எடுத்துரைக்கவே பலநூறு பாடல்கள், பல்நூறு மைல்கள் கடந்த பின் பேசும் வார்த்தையில் கூறும் வாக்கில் ‘**குகனொடு ஐவரானோம்**‘ என்று எங்கோ பேசுவது யாவர்க்குமான வேதச் சொல்லாகும். அதனோடு மட்டுமின்றி,

‘**வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்**‘ என்ற வள்ளலாருக்கும் வழிகாட்டுவதாய் இராமன் சுக்ரீவனையும் சகோதரனாக ஏற்றுக்கொண்ட செயல்பாடு இங்கு இன்னும் உற்றுநோக்கிடத் தக்க உணர்வாகும். இவர்களுக்கான நீதியாகவே காந்தியடிகள் `**எல்லா மனிதர்களும் சமம் என்றபோது ஏன் இந்த உயர்வு தாழ்வு**‘ என்று வினவுகின்றார்.

வள்ளல் பெருமான் இத்தகைய உணர்வின் உச்சத்தினையே,

**“எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல்**
**ஒத்தவுரிமை உடையவராய் உவக்கின்றார்**
-------------------------------------------------------------------
**சிந்தைமிக விழைந்த தாலோ“** (திருவருட்பா, 5298)

என்ற பாடலடிகள் ஒட்டுமொத்த உயிர்களின் ஒத்தவுணர்வின் வாழ்வில் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை நெறிப்படுத்துகின்றார். புறம்,

**“யாதும் ஊரே யாவரும் கேளீர்“**

என்று தெளிவுபடுத்துகின்றது. மேலும், அதன் விளக்கமாகவே,

**“பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே“**

என்று தெளிவுபடுத்துகின்றது.

இறைவன் படைப்பில் எவ்வித வேறுபாடுகளையும் அடியவர்களானவர்களிடம் வெளிப்படுத்தவில்லை. இறைவன் எல்லோரையும் ஏற்றுக் கொள்கிறான். உயர்ந்த அன்பும் அருளும், கருணையும் மட்டுமே நம் தகுதிகளை நிர்ணயிக்க வேண்டும் என்பதும் இறைவனின் எண்ணமாகவே இருந்துள்ளது என்பதனையும் இரண்டு பெரிய சமயங்களாக நம் தமிழ் உலகம் போற்றும் மரபில் வந்தவர்களும் தெரியப்படுத்தியுள்ளனர். தேவாரம் தந்த மூவருள் நாவுக்கரசர்,

**“சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து**
**தரணியொடு வானாளத் தருவரேனும்**
**மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் மல்லோம்**
**---------------------------------------------------------**
**அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே“**

என்று எடுத்துரைக்கின்றார்.

வைணவத்திலும் இச்சிந்தனை வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதனை திருப்பாணாழ்வாரின் வாழ்வியல் நிகழ்வு நமக்கு எடுத்துரைக்கின்றது. திருவரங்கத்தின் உள்சென்று எம்பெருமான் நாராயணன் திருவருளைப் பெறத் தடையான சாதியம் தவிர்த்து இறைவன் லோக சாரங்காச்சாரியரின் தோளிலேயே ஏறி வந்துத் தம்மைக் கண்டு மகிழும்படியான நிகழ்வினை அமைத்து அவருக்கு மோட்சமும் அளித்துச் சிறப்பித்தார் என்னும் செய்தி வலியுறுத்தியுரைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதனை இன்று வரை அந்தச் சமூகத்தினர் உணர்ந்தனரா. சமரச உணர்வில் செயல்படுகின்றனரா என்பதில் பெரும்பான்மை கேலியாக தொண்டரடிப்பொடியாரும்,

**“பழுது இலாஒழுகல் ஆற்றுப் பல சதுப்பேதிமார்கள்**
**இழிகுலத்தவர்களேனும் எம் அடியார்கள் ஆகில்**
**தொழுமின் நீர், கொடுமின், கொள்மின், என்று நின்னோடும் ஒக்க**
**வழிபட அருளினாய் போல் மதில் திருவரங்கத்தானே“**

**(தொண்டரடிப்பொடி. திருமாலை, 42)**

என்று பாசுரம் சாதியம் கடந்த சமவுணர்வு பக்தி உலகில் இறைவனால் ஏற்கப்பட்டதனை வலியுறுத்துகின்றது.

**"அந்தச் சேரிக்**
**கூரை ஓலைகள் படபடக்க**
**எழும்ஓர் அவலக் கூக்குரல்**
……………….
**கண்ணீர் என்னும்**
**வெப்ப வளையங்களுக்குள்**
**சேரி வெந்து கொண்டிருந்தது"** (ப. 189)

என்ற கவியையில் தமிழன்பன் கீழ்வெண்மணி நிகழ்வின் துன்பத்தினைப் பதிவு செய்ததுடன் கண்விழித்து சமநிலை காண வேண்டும் என்பதனையும்,

**"ஆதிக்க வெள்ளத்தில் அடியிலே கிடந்தாலும்**
**பாதிக்கப்படாதவனே! பாஸ்பரசே கண்விழிப்பாய்"** (ப. 114)

என்றும் உணர்வெழுச்சி ஊட்டி சமநிலை காண விழைகிறது.

மற்றும் உணர்வின் வெளியீடாக,

**"எரிந்த பிணத்தில்**
**இருக்கிற சாம்பல் வாடையில்**
**உதிர்ந்த குருதியில்**
**வீசும் கவுட்சி நாற்றத்தில்**
**புதைந்த உடலின்**
------------------------!
**முதலும் வட்டியுமாய் சேர்ந்தே தர**
**திமிறி எழுகிறது**
**'தலித்' எனும் அடையாளம்"** (புதிய கோடாங்கி, நவம். 2000)

என்ற கவிதை அமைந்துள்ளது.

சமுதாயச் சூழலை மக்கள் உணர திரைப்படங்களும், திரைப்படப் பாடல்களும் கூட எடுத்துணர்த்தப்பட்டன சமூக ஆர்வலர்களால்.

நல்லதம்பி என்ற பெயரில் 1949 இல் உடுமலை நாராயணகவி எழுதிய பாடல்கள் சமதர்மத்தை போதித்தன. இதற்கு உரை வசனம் எழுதியவர் நம் பேரறிஞர் அண்ணா. நடித்தவர் என்.எஸ். கலைவாணர்.

**"கிந்தன் சரித்தமே கிண்டல் - அல்ல**
**அல்லவே அல்ல"**

என்று பாடலுடன் தான் கருதத் துவங்கியது. கடைசியில் வேதியரான ஆசிரியரே வென்று வந்த கிந்தனை அணைத்து, அன்பு பாராட்டி,

**"கிந்தா நீ திட சிந்தன் - உன்னைக்**
**கிண்டல் செய்தேன் அந்தோ நானொரு பித்தன்"**

என்ற வரிகளில் சமதர்மம் தொலைத்து சாதியம் பேசி மற்றவனைத் தாழ்த்த நினைக்கும் அனைவரும் பித்தர்களே என்பது உணர்த்தப்படுகின்றது.

கலைஞர் கவியுரையில்,

**"என் பாதை சுயமரியாதைப் பாதை**
**தமிழன் நலம் காக்கும் பாதை**
**தமிழ்மொழி காக்கும் பாதை**
**பெரியார் பாதை, அண்ணாவின் பாதை**
**அமைதிப்பாதை, ஜனநாயகப் பாதை,**
**படையே தயார் என்று பயமுறுத்தினாலும்**
**அந்த பாதையிலிருந்து மாறமாட்டேன்"**

என்று தமது 91ஆம் வயதிலும் (திடை. 2014) முழங்கியதை நினைவு கூர்வோம். எனவேதா் வாலி அவர்கள் கலைஞரின் சமத்துவ உணர்வின் சிறப்பு செயல்குறித்து,

**"சாதிக்கும் சாதிக்கும் சண்டைகள் வராமல்**
**சாதிக்கும் நீசமைத்த சமத்துவ புரங்கள்; அவை**
**வன்பகை தீர மன்பதைக்க - நீ**
**வழங்கிய வரங்கள் இனிஇங்கு**
**கூன்பிறையும் கோதண்டமும் கைகுலுக்கும்**
**சிலுவையும் அவற்றைச் சினேகிக்கும்" (கலைஞர் காவியம், )**

என்று சிறப்பித்துரைக்கின்றார்.

**"சாதிபேதம் சொல்லிக்கிணு - கிழச்**
**சாத்திரம் சொல்லி ஏச்சிக்கிணு**
**நீதி மறந்த தேசத்திலே - அவர்**
**நியாயம் கேட்க அஞ்சலே - அந்த**

**அம்பேத் காரு ஏத்திவச்ச - தீப**
**அகலு நமது நெஞ்சிலே“** (588)

என்ற கவிதை சேரி ஓரச் சூரியன் என்ற தலைப்பில் அடித்தட்டு மக்களை உயர்த்திட வந்த தலைவனாகிய அம்பேத்காரினைப் போற்றியது.

‘**பண்புடையார் பட்டுண்டு உலகம்**‘ என்று வள்ளுவம் வழி நடத்துவதும் இக்கருத்தினையே ஆகும். யார் நிலைமை என்று மாறும் என்பது எவருக்கும் தெரியாதபோது ஏன் இத்தனை பாகுபாடுகள். கவிஞர் வாலி அவர்கள் பொதுவாக ‘அடக்கமாகும் வரை அடக்கமாக இரு‘ என்று கூறுகிறார். ‘**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலும்**‘ இந்த சமத்துவக் கொள்கையின் விரிவே ஆகும். புதுமைக் கவிஞர் பாரதியார் இச்சிந்தனையின் வடிவமைப்பையே,

**“வெள்ளை நிறத்தொரு பூனை**
**எங்கள் வீட்டில் வளருது கண்டீர்“**

என்ற பாடலின் கருத்தாக வடிவமைத்து ‘சாதிகள் இல்லையடி பாப்பா‘ என்றும் தெளிவுபடுத்தியுரைத்துள்ளார்.

**நிறைவுரை**

**“மனிதனாக வாழ்ந்திட வேண்டும்**
**மனதில் வையடா“**

என்ற பட்டுக்கோட்டையின் வரிகளுக்கிணங்க நாம் வாழும் வாழ்வில் ஆயிரம் சிக்கல்கள் நம்மைப் பிரிக்கக் காத்திருந்தாலும் நெளியும் ரேகைகளுக்கும், வளையும் கரங்களில் இணைந்த விரல்களாய் ஒன்றுபட்டு நின்றால்உண்டு வாழ்வு என்பதனை சமத்துவ வாழ்வு, சமத்துவப் பொங்கல் என்று எத்தனையோ எடுத்துரைத்தாலும் நாம் உணர்தலும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும் அடுத்த தலைமுறையினருக்கு உணர்த்தலும் அவசியமாகும்.

**உணர்வோம்! உணர்த்துவோம்!**

**துணைநின்ற நூல்கள்**

1. கம்பராமாயணம்
2. கலைஞர் காவியம்
3. தண்ணீர் தேசம்
4. தமிழன்பன் ஆயிரம்
5. தினமலர்
6. திருக்குறள்

7. திருவருட்பா
8. தேவாரம்
9. நாலாயிர திவ்வியபிரபந்தம்
10. பாரதிதாசன் கவிதைகள்.
11. பாரதியார் கவிதைகள்
12. புறநானூறு.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 32. பெண் சுதந்திரம் - உண்மையா?

**முனைவர் பெ. சுவாதி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
காமராஜ் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, விருதுநகர்.

DOI 10.5281/zenodo.10725795

**Abstract :**

Man and woman are not lazy. She is currently growing like a man in all respects. No one can deny this, but the confusion arises as to what percentage it is. An important hypothesis that everyone is talking about in this era is that today women have a foothold in all fields, so what is it that they want freedom alone. Even if we take this as an important point, we can infer whether the freedom for her has truly been achieved or not only by the percentage of women in it. How many countries in the world today? How many countries have women in leadership? If we look at this percentage, we can tell the extent of women's freedom.

ஆணுக்குப் பெண் சளைத்தவள் இல்லை. எல்லா நிலைகளிலும் அவள் தற்போது ஆணுக்கு நிகராக வளர்ந்து கொண்டு இருக்கின்றாள். இதை யாராலும் மறுப்பதற்கில்லை ஆனால் இது எத்தனை சதவிகிதம் என்பதில் தான் குளறுபடி ஏற்படுகின்றது. இக்காலகட்டத்தில் அனைவராலும் பேசப்படுகின்ற ஒரு முக்கியமான கருதுகோள் என்னவென்றால் இன்று பெண்கள் எல்லா துறைகளிலும் கால் பதித்து இருக்கின்றனர், பிறகு இதில் என்ன அவர்களுக்குத் தனியாக சுதந்திரம் வேண்டி இருக்கின்றது என்பதுதான். இதை நாம் ஒரு முக்கியப் புள்ளியாக எடுத்துக் கொண்டாலும் இதில் எத்தனை சதவிகிதம் பெண்களின் எண்ணிக்கை இருக்கின்றது என்பதில் தான் அவளுக்கான சுதந்திரம் உண்மையாக கிடைத்திருக்கின்றதா இல்லையா என்பதை நம்மால் அனுமானிக்க முடிகின்றது. இன்று உலக நாடுகள் எத்தனை? அதில் பெண்கள் தலைமைப் பொறுப்பில் இருக்கின்ற நாடுகள் எத்தனை? இந்த ஒரு சதவீதத்தை நாம் கவனித்துக் கொண்டாலே பெண் சுதந்திரம் எந்த அளவிற்கு இருக்கின்றது என்பதை நம்மால் கூற முடியும்.

**"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"**

என்று இருந்த வழக்கம் இன்று, பெண் இப்படிச் செய்தால் எப்படி மழை பெய்யும்? இப்படி ஆடை அணிந்தால் எப்படி மழை பெய்யும்? என்றெல்லாம் பெய்யும் மழைக்குப் பெண்ணைக் குற்றம் சொல்கின்றோமே தவிர நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை என்ற வாக்கை மறந்து விட்டோமே ஏன்? நாம் நல்லவர் தாமே நம் வீட்டில் உள்ளவர்களும் நல்லவர்கள் தாமே. உங்களின் பொருட்டு பெண்களுக்கும் பாவம் மழை பெய்து விட்டுத்தான் போகட்டுமே.

**நம்பிக்கை :**

சமீபத்தில் கேள்விப்பட்ட ஒரு சம்பவம். தனது ஆண் நண்பர்களுடன் சென்ற ஒரு பெண்ணை அவர்கள் மயக்க மருந்து கொடுத்து பாலியல் வன்புணர்வு செய்து இருக்கின்றனர்.

இச்சம்பவத்தை கேள்விப்பட்ட யாரும் பலரும் ஆணுடன் முதலில் ஒரு பெண் வெளியில் செல்லலாமா? அவ்வாறு சென்று இருந்தால் எவ்வளவு தைரியம் இருந்திருக்கும். அவளுக்கு அது தேவைதான் எனக் கருத்து தெரிவிக்கின்றனர். ஒரு பெண் ஓர் ஆணை நம்புகிறாள் என்றால் அந்த நம்பிக்கையை ஏன் உடைத்தாய் என்று ஆணை இந்தச் சமூகம் குற்றம் சொல்லத் தயாராயில்லை. அவனை நம்பி ஏன் போனாய் என்றுதான் முதலில் கேட்குமே தவிர உன்னை நம்பி வந்த பெண்ணை ஏன் ஏமாற்றினாய்? என்று ஆணை இந்தச் சமூகம் முதலில் கேள்வி கேட்காது. இங்கு பெண்ணைச் சுதந்திரமாக வளர வைத்த பெற்றோரைக் குற்றம் சொல்வார்களேத் தவிர ஆணைத் தறுதலையாக வளர்த்த அவர்களுக்கு எந்தக் கேள்வியும் கிடையாது. இதற்குக் காலம் காலமாக நாம் கூறுகின்ற ஒரு பதில் "முள்ளில் சேலை விழுந்தாலும் சேலையில் முள் விழுந்தாலும் சேதம் சேலைக்கு மட்டும்தான்."

**ஆடை :**

தனது மனைவியும் சகோதரியும் என்ன மாதிரியான உடை அணிய வேண்டும் என்பதைக் கூட ஓர் ஆண்தான் தீர்மானிக்கின்றான். ஆனால் அதற்கு அவன் செல்லும் காரணம் நான் உங்களைப் பாதுக்காக்கிறேன் என்று. யார்? யாரிடம் இருந்து யாரைப் பாதுக்கிக்கின்றார்கள் என்பது இன்று வரை புரியாத புதிராகவே உள்ளது. யாரோ ஒரு வீட்டில் மகனாக, மருமகனாக, பேரனாக இருக்கும் ஒருவன் தான் அப்பகுதியைச் சேர்ந்த மற்றவர்களால் பொறுக்கி என்று அடையாளப்படுத்தப் படுகிறான்.

ஓர் ஆணின் ஆடையை ஒரு பெண் போடும் போது நாகரீகமாக ஆடை அணிகின்றாள் என்று சொல்கின்றோம். அதுவே பெண்ணின் உடையை ஆண் அணிந்தால் கேவலமாகப் பார்க்கின்றோம். ஆக ஒரு ஆணைக் கேவலப்படுத்துவதற்கு இந்த சேலையைக் கட்டிக்க என்ற வார்த்தையே போதுமானதாக இருக்கின்றது. காலம்காலமாக அதே உடையைத்தான் பெண்கள் அனைவரும் கட்டுகிறோம். அதில் எங்கிருந்து அவமானம் வந்து சேர்கின்றது.

கிராமப்புறங்களில் ஆற்றிலும் குளங்களிலும் பாவாடையை மட்டும் கட்டிக்கொண்டு குளிக்கின்ற பெண்களை இப்போதும் பார்க்க முடிகின்றது. அவர்களின் ஆடைக்கும் நவீன ஆடைகளுக்கும் என்ன பெரிய வித்தியாசம் இருந்து விடப் போகின்றது. இரு சக்கர வாகனத்தை இயக்கும்போது சேலை கட்டிக்கொண்ட பெண்களின் கால்களும் சிறிது தெரியத்தான் செய்யும். இதைத் தவறாகப் பார்க்கின்ற ஜென்மங்கள் இக்காலத்திலும் இருக்கின்றனர். ஆடையை ஆடையாகப் பார்த்தால் தவறு தோன்றாது. புடவையையும் தவறாகப் பார்த்தால் அதன் சிறு இடைவெளி கூட நமக்கு தவறாகத்தான் தோன்றும்.

பெண்களுக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டதால் அவர்கள் மோசமான ஆடைகளை அணிகின்றனர். அதனால் இளைஞர் சமுதாயம் அவர்களைத் தவறாகப் பார்க்கின்றது என்று கூறுகின்றனர். சமீப காலங்களில் நடந்த பலாத்கார வழக்குகளைக் கணக்கெடுத்தால் பத்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை அதில் கணிசமாக இருக்கின்றது. குழந்தைகளின் ஆடைகளில் உள்ள வக்கிரம் என்ன என்று யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இரவு 8 மணிக்கு மேல் ஒரு பெண் வெளியே செல்லக்கூடாது என்று சொல்லும் பெற்றோர்கள், அதுவே பத்து மணிக்கு மேல் யாரோ ஒரு வீட்டின் ஆணால் பிரச்சனை வரும் என்று பயப்படுகின்ற பெற்றோர்கள் தங்கள் வீட்டின் ஆண் பிள்ளையை இதே கண்டிப்போடு வளர்த்தால் அடுத்த வீட்டில் பெண்ணைப் பெற்றவர்கள் பெண்களை வெளியே அனுப்ப ஏன் பயப்படப் போகின்றனர். பெண்ணுக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது என்கின்றனர் ஒரு சிலர்; இல்லை இல்லை கிடைக்கவில்லை என்கின்றனர் ஒரு சிலர்; சுதந்திரத்தைப் பெண்கள் தவறாகப் பயன்படுத்துகின்றனர் ஒரு சிலர்; ஆனால் உலகக் கணக்கெடுப்பின்படி பல வளர்ந்த முன்னேறிய நாடுகளில் கூட இன்னும் பெண் சுதந்திரம் குறித்த போராட்டங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. சமூகத்தாலும் கணவனாலும் கட்டுப்படுத்தப் பட்டவர்களாகவே பெண்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். பெண்கள் கல்வி அறிவு பெற்றுவிட்டனர்; சுய தொழில் செய்கின்றனர்; வேலைக்குச் செல்கின்றனர்; இப்படிப்பட்ட பெண்களின் எண்ணிக்கை ஒரு கணிசமான அளவிற்கு இருக்கின்றது என்று கணக்கெடுப்பு நடத்துகின்றோம். ஆனால் எந்தப் பெண்ணும் சும்மா வீட்டில் இருக்கின்றார் என்று ஒருவரால் கூறிவிட முடியுமா? இல்லத்தரசி என்ற பெயரில் வீட்டு வேலைகள் அனைத்தும் அவர்கள் மீது சுமத்தப்படுகின்றது. இதற்கு அவர்கள் சொல்லும் காரணம், இது உன் வீடு; உன் வீட்டை நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் வீட்டில் பார்க்கின்ற வேலைகள் மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதுவே பணிபுரியும் பெண்கள் என்றால் அவர்கள் நிலை இன்னும் மோசமாக இருக்கின்றது.

பெண்களுக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டதால் இல்லத்தில் அவர்கள் கொடுங்கோல் ஆட்சி செய்கின்றனர். ஆகவே பெண்களிடம் இருந்து ஆண்களைப் பாதுகாக்க ஆண்கள் பாதுகாப்புச் சங்கம் வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றனர் ஒரு சாரார். இது ஒரு சில இடங்களில் மட்டுமே நடக்கிறது. இங்கு பெரும்பான்மை நடப்பதையே அனைவரும் ஒரு சில நொடிகளில் கடந்து சென்று விடுகின்றனர்.

தற்பொழுது இருபது, முப்பது ஆண்டுகளாகத்தான் பெண்கள் சற்று தைரியமாக வெளியே வருகின்றனர். ஆனால் அதையும் இச்சமூகத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகவே இளம் வயதிலேயே அவர்களைக் காதல் எனும் வலையில் வீழ்த்தி அவர்களின் சிந்தனைகளைச் சீரழிக்கின்றனர். இப்போது பெண்களின் பெற்றோர்கள் மீண்டும் குழந்தைத் திருமணத்திற்கு ஆதரவு கொடுக்கின்ற நிலை காணப்படுகின்றது. திருமணம் முடிந்தால் இந்த மாதிரியான சிக்கல்களைச் சந்திக்கத் தேவையில்லை என்று. கிராமங்களில் மட்டும் இல்லாமல் நகரங்களிலும் பதினெட்டு வயதுப் பெண்களுக்கு மட்டுமல்லாது அதற்கும் குறைந்த பெண்களுக்குச் செய்து வைப்பது தொடர்கதை ஆகவே மாறிவருகின்றது. நிர்பயா சம்பவத்தில் இருந்து எட்டு மாதம், ஆறு வயது, எட்டு வயது, எண்பது வயது என்று வயது வித்தியாசம் பார்க்காமல் ஆண்களின் கோரப் பசிக்கு பெண்கள் இரையாகிக் கொண்டு இருக்கின்றனர். இதில் வேதனைப்பட வேண்டிய, வெட்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால் உலகிலேயே பெண்களுக்கு ஆபத்தாக உள்ள நாடுகளின் வரிசையில் இந்தியா ஒன்பதாவது இடத்தில் உள்ளது என்பது. சுதந்திர தினத்தையும் மகளிர் தினத்தையும் கொண்டாடுவதற்கு நாம் தயாராவோம்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 33. திருக்கோவிலூர் வீரட்டனேஸ்வரர் கோயில் - ஒரு ஆய்வு

**மா.தமிழ் செல்வம்,**

இரண்டாம் ஆண்டு, வரலாற்றுத்துறை

அருள்மிகு கலசலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,கிருஷ்ணன் கோயில்..

DOI 10.5281/zenodo.10725547.

**Absract :**

Thirukovilur is a town situated on the south bank of the river Panna. The town is located about 24 miles (40.23 km) from Villupuram in Tamil Nadu. The town is considered sacred by Vaishnavas and Saivas. It was earlier called Tirukovilur by the Malayaman chieftains, the town has been popular since the Sangam period, surrounded by 2,000 villages and its capital was called Maladu. Called Koval (short for Kovalur), it is closely related to the Vaishnava Alvars – Poikayalvar, Bhoothathalvar and Beyalvar. The local Vishnu temple is in the western part of the city, and the name of Vishnu is known as Trivikrama.

திருக்கோவிலூர் பெண்ணை ஆற்றின் தென் கரையில் அமைந்துள்ள ஒரு ஊர் ஆகும். தமிழ்நாட்டின் விழுப்புரத்திலிருந்து சுமார் 24 மைல் (40.23 கி.மீ) தொலைவில் இந்த ஊர் அமைந்துள்ளது. இந்த ஊர் வைணவர்கள் மற்றும் சைவர்களால் புனிதமானதாக பார்க்கப்படுகிறது. இது முன்னர் மலையமான் தலைவர்களால் திருக்கோவிலூர் என்று அழைக்கப்பட்டது, இந்த ஊர் சங்ககாலத்திலிருந்து பிரபலமாகவுள்ளது, அதைச் சுற்றி 2,000 கிராமங்கள் உள்ளது அதன் தலைநகரம் மலாடு என்று அழைக்கப்பட்டது. கோவல் (கோவலூருக்கு சுருக்கமாக) அழைக்கப்படுகிறது, இது வைணவ ஆழ்வார்கள் - பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் மற்றும் பேயாழ்வார் ஆகியோருடன் நெருக்கமான தொடர்புடையது. உள்ளூர் விஷ்ணு கோயில் நகரத்தின் மேற்குப் பகுதியில் உள்ளது, விஷ்ணுவின் பெயர் திரிவிக்ரமர் என்று அழைக்கப்படுகிறார்.

திருக்கோவிலூரின் கிழக்குப் பகுதியில் சிவன் கோயில் உள்ளது, இதைப்பற்றியதே தற்போதைய ஆய்வு ஆகும். தலைமை தெய்வம் கிலூரின் கோவல் வீரட்டனேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார் (சுருக்கமாக திருக்கோவிலூரின் கிழக்கு பகுதி). அப்பர் மற்றும் சம்பந்தர் (7 ஆம் நூற்றாண்டு) இருவரும் இந்த இறைவன் மீது பாடல்களைப் பாடியுள்ளனர்.

சிவன், தீய செயல் செய்பவர்களை அழிப்பவராக பார்க்கப்படுகிறார், தீய செயல் செய்த எட்டு பேரை எட்டு வெவ்வேறு இடங்களில் அழித்தாக கூறப்படுகிறது, மேலும் இதுபோன்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் வேறு வடிவத்தை ஏற்றுக்கொண்ள்ளார். சிவனின் இந்த செயல்களுடன் தொடர்புடைய இடங்களை அஷ்ட வீரட்டானம் (அல்லது எட்டு விரட்டானம்) என்று அழைக்கிறார்கள். கிலூரில் உள்ள வீரட்டனேஸ்வரம் சிவன் அந்தகாசுரன் என்ற அரக்கனை அழித்த இடமாக கருதப்படுகிறது.

ஆரம்பகால சோழர் கலைக்கு இந்த கோயில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, இது ஒரு திருசுற்றுக்குள் இணைக்கப்பட்ட ஒரு எளிய கோவில் அமைப்பாகும். முக்கிய இடங்களாக விமனம், கர்பகிரஹம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தேவகோஷ்டங்கள், பரிவர-

தேவதைகள், தேவிக்கு ஒரு தனி ஆலயம், சண்டிகேஸ்வரருக்கு மற்றொரு ஆலயம் மற்றும் சோழர் காலங்களின் சிற்ப்பங்கள் உள்ளன.

வீரட்டனேஸ்வரர் கோயில் மேற்கு நோக்கி உள்ளது. அடித்தளம் 5 அடி (1.52 மீ) உயரம் கொண்டது. இது ஒரு யாலி மற்றும் தாமரை அமைப்பு கொண்டுள்ளது. பிரதான கோயில் மேற்கிலிருந்து கிழக்கே 48 அடி (14.63 மீ) மற்றும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி 21 அடி 8 அங்குலம் (6.60 மீ). அர்த்தமண்டப வடக்கிலிருந்து தெற்கே 21 அடி 6 (6.55 மீ) மற்றும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி 17 அடி 6 (5.33 மீ) அளவிடும். அதன் நுழைவாயிலில் இரண்டு துவாரபாலகர்கள் உள்ளனர்.

கோயில் மணற்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இது வழக்கமான திராவிட கட்டடக்கலையின் சிறிய இரண்டு மாடி சதுர அடிப்படையிலான விமனம் ஆகும். முதல் தலம் (அடுக்கு) நான்கு கர்ணகுடங்கள் மற்றும் நான்கு பத்ராசலங்களின் ஆராவைக் கொண்டுள்ளது. இரண்டாவது தலம் (அடுக்கு) மூலையில் உள்ள ஆராக்கள் நந்திகள் உள்ளன. அதிஸ்டான அலங்காரங்கள் மற்றும் மேல் கிரானைட் ஸ்லாப் ஆகியவற்றைக் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. பரந்த அடிப்படையிலான தூண் தளங்கள் அடித்தளம் அதிக மர ஆதரவைப் பெற்றுள்ளது.

சன்னதி சுவர்களின் மேலேயுள்ள தோரனாங்களுடன் (தேவகோஷ்டங்கள்) உள்ளது. தெற்கே உள்ள தேவகோஷ்டம் தட்சிணாமூர்த்தி வடிவத்தைக் கொண்டுள்ளது, வடக்கு மற்றும் கிழக்கில் பிரம்மா மற்றும் விஷ்ணுவின் உதவியாளர்களுடன் சிவனின் வடிவங்கள் உள்ளன.

அர்த்தமண்டபத்தில் தேவகோஷ்டர்கள் உள்ளன. தேவகோஷ்டங்களில், பிரம்மா, லிங்கோத்பவர் ஆகிய சிலைகள் உள்ளன. வடக்கு பக்கம் துர்காவின் உருவம் உள்ளது, அதே சமயம் தெற்கு பக்கம் கஜலட்சுமியின் உருவம் உள்ளது.

**கல்வெட்டுகள்**

கல்வெட்டுக்களின் முதன்மை நோக்கங்கள் பெரும்பாலும் ஆட்சியாளர்கள் மற்றும் பிரபுக்கள் மற்றும் பொது மக்களால் இந்த கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலங்கள், பணம், வழிபாட்டுப் பொருட்கள் மற்றும் பலவற்றைப் பரிசாகப் பதிவு செய்வதாகும். இந்த மானியங்கள் நிரந்தரமாக விளக்குகளை ஏற்றி வைப்பது, பூஜை பொருட்களை வாங்குவது, திருவிழாக்கள் நடத்துவது போன்ற பொது நோக்கங்களைக் குறிக்கின்றது. கோயிலின் பல பகுதிகளை நிர்மாணித்தல் போன்றவை இதில் அடங்கும்.

இந்தக் கோயிலுக்கு ஒரு விளக்கு எரிப்பதற்காக 15 கலஞ்சு தங்கம் தந்தார் வனகோவரையரின் எஜமானி (போஜியார்), மாணிகத்தாரின் மகள் கொன்னக்கண்ணர் என்று அழைக்கிறார். மேலும் கிராமத்தின் வணிகர் - கில்ட் (நாகரம்) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திருக்கோவிலூரின் இந்த நாகரம் எனும் சொல் நிருபதுங்கனின் கல்வெட்டுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்குள்ள ஆரம்பகால சோழக் கல்வெட்டு பராகேசரிவர்மனின் 5 வது ஆண்டுகளில் ஒன்று எனத்தெரிகிறது, இது நிரந்தர விளக்குக்காக 15 கலஞ்சு தங்கத்தை பரிசாகக் குறிக்கிறது - இளதைகலின் மகள் மற்றும் வனகோவரையர் ராணியான நங்கை குலமாணிக்கத்தார் பெருமணாடிகல். மேலும் இந்த இடத்தின் நாகரத்தார் விளக்கை பராமரிக்க ஒப்புக் கொண்டார், மேலும் இது தொண்டு மகேஸ்வரர்களின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது.

முதலாம் ராஜராஜன் இந்த கோயிலுக்கு அவரது ராணி உலோகா மகாதேவியரின் தாயார் குந்தவை அமிர்த வள்ளி ஆழ்வாரின் தொகுதியாக ஒரு விளக்கு வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கோயிலின் தோற்றம் பிந்தைய பல்லவர்களின் காலங்களுக்குட்பட்டிருந்தாலும், விஜயாலயனின் கல்வெட்டுக்கள் இருந்தபோதிலும், கிலூரில் உள்ள வீரட்டனேஸ்வரர் கோயிலின் தற்போதைய கட்டமைப்பை முதலாம் பரந்தகன் காலத்திற்கே ஒதுக்க முடியும். இது கூட பின்னர் பழுது காரணமாக மாற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம்.

**வெண்கல சிற்பங்கள்**

வெண்கல சிற்ப்பங்கள் பல தென்னிந்திய கோயில்களின் பெருமை வாய்ந்த உடைமைகளாகும். இத்தகைய உலோக சிற்பங்கள் நாடு முழுவதும் செய்யப்பட்டிருந்தாலும், குப்தர் காலத்திலிருந்து, தென்னிந்திய வெண்கல சிற்பங்கள் கலை உலகில் தங்களுக்கு என ஒரு பெயரை நிலபடுத்தியுள்ளன. இந்த தென்னிந்திய வெண்கல சிற்பங்களில், மிகச்சிறந்த மாதிரிகள் முற்கால சோழர் காலத்தில் செய்யப்பட்டவை. இந்த உட்பொருள் தங்கம், வெள்ளி, தாமிரம், பித்தளை மற்றும் தகரம் ஆகிய ஐந்து உலோகங்களின் கலவையாக இருந்தது.

சிவன் கோயில்களில், பெரும்பாலும் கல் லிங்கம் கர்ப்பகிருகத்தில் வைக்கப்படுகிறது. இது நிலையான சிலை என்று அழைக்கப்படுகிறது. வெண்கலங்கள் உற்சவ சிற்பங்கள் ஊர்வல சின்னங்களாக இருக்கின்றன. இந்த உலோக சின்னங்களின் வடிவங்களும் அவற்றின் அளவீடுகளும் சிற்பங்கள் குறித்த பல இடைக்கால சமஸ்கிருத படைப்புகளில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. இந்த குறிப்புகளில் சுப்ரபதகம, விஷ்ணு தாமோதரம், மானசரா மற்றும் பலவற்றைச் சொல்லலாம்.

வீரட்டனேஸ்வரர் கோவிலில் பல்வேறு அளவுகள் மற்றும் எடை கொண்ட பதினோறு வெண்கல சிற்பங்கள் உள்ளன. இந்த சிற்பங்களை மூன்று முறையின் கீழ் வகைப்படுத்தலாம் - கடவுள்கள், தெய்வங்கள் மற்றும் பக்தர்கள். கடவுளிடையே, பின்வருபவை மிக முக்கியமானவை. அஸ்திரதேவர், சந்திரசேகர், நடராஜர், விநாயகர், சுப்பிரமண்யர், நந்திகேஸ்வர், சோமஸ்கந்தர் மற்றும் மகாவிஷ்ணு. தெய்வங்களில், சிவாகம சுந்தரி, பிடாரி மற்றும் கமலாம்பிகை பற்றி குறிப்பிடப்பட வேண்டியவை ஆகும்.

**அஸ்திரதேவர்**

கடவுள்கள், தெய்வங்கள் மற்றும் பக்தர்களின் சிற்பங்களைத் தவிர, வாகனங்கள் (தெய்வீக வாகனங்கள்) மற்றும் ஆயுதங்கள் ஆகியவற்றிற்கான சின்னங்களை உருவாக்கும்

பாரம்பரியம் உள்ளது. ஆயுதங்கள் அவற்றின் வடிவத்தில் அல்லது மானுட வடிவத்தில் குறிப்பிடப்படுகின்றன. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு, சக்கரத்தை விஷ்ணுவின் புகழ்பெற்ற ஆயுதம் ஒரு சக்கரமாக அல்லது பல ஆயுதங்கள் மற்றும் ஜ்வாலா-மகுடம் கொண்ட ஒரு மாறும் மனித உருவமாக உருவாக்குவது. சிவனின், கோயிலில் அஸ்திரதேவர் என்பது சிவபெருமானின் திரிசூலத்தை குறிப்படும் வடிவம் அல்லது மானுட வடிவத்தில் குறிக்கிறது. திருக்கோவிலூரில் திரிசூலத்தின் வடிவத்தில் அஸ்திரதேவி உருவம் குறிப்பிடப்படுகிறது.

**நந்திகேஸ்வர்**

நந்திகேஸ்வர் அல்லது அதிகாரனந்தி என்பது காளையின் உருவமாகும், இது சிவனின் விருப்பமான வாகனமாகும். அவர் ஒரு காளை அல்லது ஒரு அதிகாரநந்தி (மனித பிரதிநிதித்துவம்) வடிவத்தில் குறிப்பிடப்படலாம். வீரட்டனேஸ்வரர் கோயிலில், அவர் சிவனின் உதவியாளர்களில் ஒருவர்.

**விநாயகர்**

விழாவின் தொடக்கத்தில் முதல் இறைவனான விநாயகர் அழைக்கப்படுகிறார். உத்கலபுராணத்தில் கணபதியின் 32 வடிவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த கோவிலில் விநாயகரின் அழகிய, அமர்ந்த உருவம் காணப்படுகிறது. விநாயகர் தனது இரண்டு தந்தங்களையும் வைத்திருக்கிறார். இந்த விநாயகர் பழைய விநாயகர் என்று வேறு இடங்களில் சொன்னது போல - மகாபாரதத்தைப் பற்றி எழுதுவதற்கு முன்பு உள்ள விநாயகர் ஆவார் (ஆகவே அவரது தந்தங்கள் அப்படியே உள்ளன). அவர் மகுடம் அணிந்துகொண்டுள்ளார், கீழ் வலது கையில் தாமரையையும், கீழ் இடதுபுறத்தில் ஒரு மோதகத்தையும் (ஒரு இனிப்பு அரிசி பந்து) வைத்திருக்கிறார். அவரது மேல் வலதுபுறத்தில், அவருக்கு ஒரு ஆடு உள்ளது மற்றும் மேல் இடதுபுறத்தில், அவருக்கு ஒரு பாசம் எனும் ஆயுதம் உள்ளது. அவர் சரஸ்வதி மற்றும் கமலாம்பிகை ஆகியோரால் சூழப்பட்டிருக்கிறார்.

**சந்திரசேகரர்**

சந்திரனை சிவன் தனது தலையில் ஆபரணமாகக் கொண்டிருப்பதன் பிரதிநிதித்துவம் இது. இந்த உருவத்தில் இரண்டு வகைகள் உள்ளன - சிவனை மட்டும் குறிப்பிடப்படும்போது சந்திரசேகரன் என்றும், உமா தேவி பக்கத்தில் இருக்கும்போது உமாஷஹிதராகவும் உள்ளார். இந்த கோயிலின் சந்திரசேகர சிற்பம் பிந்தைய கால வகையைச் சேர்ந்தது. இங்கே, அவர் சமபாத நிலை கால் கொண்ட ஒரு பீடத்தில் நிற்கிறார்; இடது மற்றும் வலது பின்புற கைகளில் முறையே ஒரு மான் மற்றும் கோடரியைப் பிடித்துக் கொண்துள்ளார், அதே நேரத்தில் அவர் அபய முத்திரையை தனது கீழ் வலதுபுறத்திலும், வரதா முத்திரையை கீழ் இடதுபுறத்திலும் காட்டுகிறார். அவர் ஒரு நீண்ட ஜாதமகுடம் மற்றும் அமைதியான முகம் கொண்டவராகவுள்ளார். சிவனின் இடது பக்கத்தில் வலது கை மற்றும் இடது கை ஆகியவற்றைக் கொண்டு உமாவை குறிப்பிடப்படுகிறார்.

**சுப்பிரமண்யர்**

இந்த கோவிலில் சுப்ரமண்யரின் சிலை நான்கு கைகள் மற்றும் உயரமான மணி மகுதத்துடன் நிற்கும் தோரணையில் உள்ளது. அவர் தனது மேல் வலது கையில் ஒரு சக்தியாயுதத்தையும், மேல் இடது கையில் ஒரு வஜ்ராயுதத்தையும் கொண்டுள்ளார், அவரது கீழ் இடது வரத தோரணையையும், கீழ் வலதுபுறம் அபயமுத்திரையும் காட்டுகிறது. முழு உருவமும் மிகவும் அலங்காரமானது மற்றும் தாமரை பீடத்தில் சமபங்க தோரணையில் காட்டப்பட்டுள்ளது. அவருக்குப் பின்னால் ஒரு மயில் காட்டப்பட்டுள்ளது.

**சோமஸ்கந்தர்**

இது சிவனின் பழமையான வடிவங்களில் ஒன்றாகும், இது கிட்டத்தட்ட அனைத்து பல்லவ கோயில்களிலும் காணப்படுகிறது, இது பின்புற சுவரில் உள்ளபடி சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த குறிப்பிட்ட வடிவத்தில், சிவனும் பார்வதியும் சுகாசனத்தில் விரிவான பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். வீரட்டானேஸ்வரர் கோவிலில், பார்வதி சிவாவின் வலதுபுறத்தில் உள்ளார் (வழக்கமாக அவர் இடதுபுறத்தில் இருப்பார்). சிவன் தனது மேல் வலது கையில் ஒரு கோடரியையும், இடது மேல் ஒரு மானையும் வைத்திருக்கிறார். அவரது கீழ் வலதுபுறம் அபயமுத்திரையும் இருக்கிறது இந்த இரண்டிற்கும் இடையில், குழந்தை கந்தர் தனது இடது காலை வளைத்து நின்று தரையில் உறுதியாக வைத்து வலது கால் தூக்கி அமர்ந்துள்ளார். பல சிவன் கோயில்களைப் போலவே, இந்த கோவிலிலும் இந்த சிலை உற்சவர் மற்றும் பண்டிகைகளின் போது அனைத்து ஊர்வலங்களுக்கும் எடுத்துச் செல்லப்பயன்படுகிறது.

**நடராஜர்**

சிவனின் நிருத்யா அல்லது நடன வடிவம் இந்தியாவின் கலை வரலாற்றில் மிகவும் சுவாரஸ்யமான ஒன்றாகும். இது உலகம் முழுவதும் அறியப்பட்ட வெண்கல சிற்பமாகும். இங்கே நடராஜரின் வெண்கல உருவம் சிறந்த படைப்பாக உள்ளது. பதினொன்றாம் நூற்றாண்டு திருவலங்காடு கோவிலை சேர்ந்தது என்று விமர்சகர்கள் நம்புகின்றனர். இப்போது அது சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

திருகோவிலூரின் நடராஜர் மற்றும் திருவலங்காடு நடராஜர் இரு சிற்பங்களும் சிறந்த ஒன்றாகும். இது நான்கு ஆயுதங்கள் மற்றும் மூன்று கண்கள் கொண்ட உருவ அமைப்பு ஆகும், இடதுபுறத்தில் காற்றில் எழுப்பப்பட்ட வலது காலால் நடனமாடுவது போல் காட்டப்படுகிறது. ஒவ்வொரு தோளிலும் இரண்டு கைகள் உள்ளன. வலது முன் கை அபயமுத்திரையும், ஒரு நாகம் முன்கையை சுற்றி சுருண்டுள்ளது. பின்புற வலது கை இரண்டாவது விரலுக்கும் கட்டைவிரலுக்கும் இடையில் ஒரு கெண்டி உள்ளது. பின்புற இடது கை சுடரைப் பிடிக்கிறது; உடல் முழுவதும் நீட்டிய கையை வைத்து முன் இடது கை இடது பாதத்தை நோக்கிச் செல்கிறது. முடி மேலே ஒரு முடிச்சுடன் கட்டப்பட்டுள்ளது. முழு உருவமும் தீப்பிழம்புகளுடன் ஒரு நீள்வட்ட ஆரம்போல் (பிரபா-மண்டலம்) சூழப்பட்டுள்ளது. முழு உருவமும் நடனத்தின் யோசனைகளைக் காட்டும் உடல் அழகிய நெகிழ்ச்சித்தன்மையைக் கொண்டுள்ளது. முகத்தில் ஒரு ஆன்மீக அமைதி நிலவுகிறது, இது

ஒரு விசித்திரமான புன்னகை ஆகையால் பெரிதும் ஈர்க்கிறது, இறைவன் தான் கவனிக்கும் பக்தர்களுடன் பெருமளவில் தொடர்புகொள்கிறார். இந்த வடிவத்தை உருவாக்கியவர் இறைவனின் இந்த புன்னகையை தக்ஷிணாமூர்த்தியின் சின்முத்ரை எதைக் குறிக்கிறது என்பதைப் பயன்படுத்தியுள்ளார். சிவனின் நடராஜர் வடிவத்துடன் ஒரு சிறப்பு இணைப்பைக் கொண்டிருந்தவர் அப்பர் தனது புகழ்பெற்ற தேவர பாடல்களில் சிவனின் புன்னகை பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**சண்டிகேஸ்வர்:**

நந்திகேஸ்வரர் மற்றும் சண்டிகேஸ்வரர் ஆகியோர் சிவபெருமானின் இரண்டு முக்கிய உதவியாளர்கள். நந்திகேஸ்வரர் சிவனின் விருப்பமான வாகனம், சண்டிகேஸ்வரர் அவரது தனியார் செயலாளரானார், வீரட்டனேஸ்வரர் கோயிலில் உள்ள சண்டிகேஸ்வரரின் உருவம் உயர்ந்த பீடத்தில் சுகசன தோரணையில் உள்ளது. அவர் தனது வலதுபுறத்தில் ஒரு கோடரியைக் கொண்டு செல்கிறார், இடது தொடையில் கையை வைத்துள்ளார்.மேற்கூறிய விஷயங்கள் திருக்கோவிலூரில் உள்ள வீரட்டனேஸ்வரர் கோயிலின் முக்கியத்துவத்தையும் சுவாரஸ்யமான அம்சங்களையும் வெளிப்படுத்துகின்றன.

கல்வெட்டு ஆதாரங்களைப் பொறுத்தவரை, இந்த கோவிலில் கிடைக்கக்கூடிய முதல் தகவல் தகவல்களின் ஆதாரங்கள் இந்த கோயிலின் குறிப்பிடத்தக்க அம்சங்களை நமக்குத் தருகின்றன. வீரட்டனேஸ்வரர் கோயிலின் தோற்றம் பிற்கால பல்லவர்களின் காலம் என கூறப்பட்டாலும், இந்த கோயிலின் முக்கிய கட்டமைப்பானது ஆரம்பகால முதலாம் பரந்தக சோழன் காலத்திற்குக்தப்பட்டது என்று கூறப்படுகிறது, இது கர்பகிரஹத்தின் நேர்த்தியான கட்டிடக்கலை மற்றும் கல்வெட்டு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது கருவறை சுவர். பல்லவர்கள், சோழர்கள் மற்றும் விஜயநகர ஆட்சியாளர்களின் காலத்தில் பொறிக்கப்பட்ட பல்வேறு கல்வெட்டுகள் இந்த கோயிலின் வரலாறு குறித்து போதுமான ஆதாரங்களை தருகிறது., அவர்களின் சமகால அரசியல், சமூக பொருளாதார மற்றும் கலாச்சார நிலைமைகளைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

இந்தக் கோயிலின் கட்டடக்கலை அம்சங்கள் இந்த கோயில் 10 ஆம் நூற்றாண்டு முதல் படிப்படியான வளர்ச்சியால் அது தற்போதைய பெருமையை அடைந்துள்ளது என்பதை தெளிவாகக் காட்டுகிறது, மேலும் சோழர்கள், பாண்டியர்கள் மற்றும் விஜயநகர ஆட்சியாளர்களுக்குக் கூறப்பட்ட திராவிட கட்டிடக்கலைகளின் பல்வேறு பாணிகளை வெளிப்படுத்துகிறது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 34. சித்தர் இலக்கியங்களில் சமத்துவ, சகோதரத்துவச் சிந்தனைகள்.

(Thoughts of equality and fraternity in Siddha literature.)

**முனைவர் த. மோகன்தாஸ்,**

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை -5.

ORCID ID :https:// orcid-org/0009-0000-4808-669x

DOI 10.5281/zenodo.10725967.

**Abstract:**

Although Tamil social thought formation of freedom, equality and fraternity can be seen in a few songs in Sanga literature, it emerges as a voice of rebellion in Siddhar literature. The Siddhas thought that just as medical methods are needed to improve the body, the mind should be improved and a great change should be made in the society. The Siddhas have realized the superstitions, reverse constructions, women degradation and religious issues prevalent in the Tamil society and have thought about the reasons for that. Thoughts are manifested in Siddhar literature as riot, alternative literature, equality and general fraternity thought. This article tries to approach and explain this concept from a sociological perspective.

**Keywords:** Siddha literature - rebellion - equality - fraternity - principle - way of poetry - social reform;

**முன்னுரை:**

மானிடம் மனிதநேயத்தை மறந்து காயப்பட்டு கிடக்கிறது. மதங்களாலும் சாதிகளாலும் மனிதர்கள் பேதப்பட்டு போகிறார்கள். சார்ந்து வாழ வேண்டும் என்று சொல்லிக் கொண்டே சரிந்து வாழ்வதும் . கூடி வாழ வேண்டும் என்று முழங்கிக் கொண்டே ஒருவரை ஒருவர் சாடி வாழ்வதும் மனிதனிடத்தில் பார்க்கலாம்.மனித மனத்தின் இயல்புகளை கூற வந்த பட்டினத்தார் அங்காடி நாய் போல் அலைகின்ற மனமே என்பார். மானிடப் பிறப்பின் நோக்கம் சிதிலமடைந்து போவதை இதயம் உள்ள எவர் தான் சகித்துக் கொள்ள முடியும்.மனிதனின் மன உணர்வுகளைப் பக்குமடையச் செய்வதற்கான முயற்சித் தொடக்க காலத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சித்தர்கள் ,அறிஞர்கள், ஞானிகள், உளவியல் நிபுணர்கள் எனப் பலரும் அம்முயற்சியில் ஈடுபட்டு இருக்கின்றனர். மானுடம் தழைக்க வேண்டும் எனில் அன்புவழிப்பட்ட மனித மனதின் தளங்கள் வலுவடைய வேண்டும் என்பது அவர்களது விழைவு.

மனிதனிடத்தில் உள்ள இறுக்கம் தளர்ந்து இரக்கம் மிகுந்து சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் வளர்ந்தால்தான் மானிடப் பிறப்பின் நோக்கம் நிறைவுறும். மடி நிறையப் பொருள் இருந்தும் மனம் நிறைய இருள் இருந்தால் ஆக்கத்தை விட அழிவுதான் மிஞ்சும். இருள் தரும் அழிவிலிருந்து மனிதனை மீட்க சித்தர்கள் தம் கவிதைகளின் வழி முயன்றிருக்கிறார்கள். அவை, அவர்தம் கவிதைகளில் சமத்துவ, சகோதரத்துவச் சிந்தனைகளாக வெளிப்படுகின்றன.அவற்றை உணர்த்த இயற்கையை, நிலையாமையைக் காட்டி நயம்பட உரைத்திருக்கிறார்கள்.

**உலகச் சிந்தனை மரபு.**

சிந்தனை என்பது சிக்கல்களுக்கானக் காரணங்களை நன்கு புரிந்து கொள்வது. பகுப்பாய்வு செய்வது, மதிப்பீடு செய்வது, அச்சிக்காலுக்கானச் சரியானத் தீர்வை கண்டறிய முயல்வது,நியாயமான முடிவுகளை அடைவது,ஆகியவை சிந்தனையின் வெளிப்பாடாகும்.

அதாவது செயல்முறைகளைத் திறம்பட செய்ய பயன்படுத்தப்படும் அறிவாற்றல் திறன்களின் தொகுப்பை உள்ளடக்கியது எனலாம்.

உலகச் சிந்தனை மரபில் பல்வேறு காலகட்டங்களில் புரட்சிகரமானச் சிந்தனையாளர்கள் தோன்றி சமூகத்திற்கு, மானுட மேன்மைக்கு சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் குறித்து வாழ்நாள் முழுக்க பேசியும் எழுதியும் செயல்படுத்தியும் வந்துள்ளார்கள்.அவர்களுள் அரிஸ்டாட்டில், கிளர்ச்சி விதை சாக்ரடீஸ், பிளாட்டோ, லெனின், காரல் மார்க்ஸ், லிட்மன், ரூசோ, கரிபாலிடி, பிஸ்மார்க் ,சன்னியாட்சென், மாசேதுங், சேகுவாரா போன்றவர்களைக் குறிப்பிடலாம்

**இந்தியச் சிந்தனை மரபு**

இந்தியாவின் நீண்ட நெடிய வரலாற்றில் இரண்டு சிந்தனை மரபுகள் இருந்தன1.சனாதனச் சிந்தனை மரபு, 2)சனாதன மரபுக்கு எதிராக எழுந்த சமத்துவச் சிந்தனை மரபு. சனாதன சிந்தனை மரபு தமக்கான ஆட்சி அதிகாரங்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இந்தியச் சமூகத்தின் மேல், கீழ் என்ற கட்டுமானங்களை உருவாக்கியது. சாதி முறையிலான சமூகக் கட்டமைப்பு என்பது பல்வேறு வர்க்கங்களோடும் பொருளாதாரத் தன்மையோடும் நீக்கமற கலந்துள்ளது. மக்களிடத்தில் ஏற்றத்தாழ்வுகளைக் கடைபிடித்து தீண்டத் தகாதப் பண்பாட்டை வலியுறுத்தியது. மனிதர்களை பல்வேறு சாதிப்படி நிலைகளாகப் பிரித்து வைத்து ஒருவருக்கு ஒருவர் தொடுவதோ, உறவு முறைகள் பேணுவதோ கூடாது. என்ற சிந்தனையை மக்களிடத்தில் நீண்ட நெடுங்காலமாக கடைப்பிடிக்க வைத்தது. ஆனால் சமத்துவச் சிந்தனை மரபோ இவற்றை எதிர்த்து அனைவரும் சமம், உயர்வு தாழ்வு இல்லை,பிறப்பால் அனைவரும் சமம், சாதி பாகுபாடு இல்லை,யாரும் யாருடனும் உறவு முறைகளைப் பேணலாம், யாரும் எங்கும் வசிக்கலாம், அனைவருக்கும் சம உரிமை உண்டு. அதாவது சுதந்திரமான, சமத்துவமான, சகோதரத்துவமான, மாற்றுச் சிந்தனைகளைக் கொண்டு இயங்கியது. இத்தகய சிந்தனை மரபு இந்திய மரபில் இதற்கு முந்தைய நிலையில் அறவே இல்லை எனலாம்.

இவை இந்தியாவில் புத்தர் வழியில் உருவாக்கப்பட்ட மாற்றுச் சிந்தனையாகும்.இத்தகைய மாற்றுச் சிந்தனைகளை அசோகர், சாவித்திரிபாய், ஜோதி ராவ் பூலே, அம்பேத்கர், காந்தி ஆகியோரால் தொடர்ச்சியாகக் கடைபிடிக்கப்பட்டது. இந்தச் சிந்தனைமரபு தென்னிந்தியாவை உள்ளடக்கியதாகவும் இருந்தது.

**தமிழ்ச் சிந்தனை மரபு:**

சிந்தனையாளர் வால்டேர் அவர்கள் "நீ சொல்லக்கூடிய ஒவ்வொரு சொல்லில் இருந்தும் நான் வேறுபடுகிறேன் ஆனால் அதை சொல்வதற்கு உனக்கு இருக்கக்கூடிய உரிமையை என் கடைசி மூச்சு வரை பாதுகாத்துக் கொண்டிருப்பேன்"(சிந்தனையாளன்-2017,பக்.49)என்னும் கூற்றுக்கேற்ப தமிழ்ச் சிந்தனை மரபிற்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு. வாய்மொழி இலக்கியக் காலந்தொட்டு இன்றுவரை மானுட வாழ்க்கைக்குத் தேவையான

வாழ்வியல் சிந்தனைகளைக் எடுத்துரைத்து வந்துள்ளன.உலகிலேயே தலைசிறந்த வாழ்வியல் அறிவை வழங்கிய சங்க இலக்கியங்கள்,திருக்குறள், சித்தர் இலக்கியங்கள், வள்ளலாரின் பாடல்கள், அயோத்திதாசர், பெரியாரின் சிந்தனைகள்போன்றவற்றை சான்றாகக் குறிப்பிடலாம். வாழ்வைச் செம்மையாக வாழ துணை புரிவது வாழ்வியல் அறிவு ஆகும். மண்ணுலகர்க்கு பிறந்த மாந்தன் தன் வாழ்வைச் செம்மையாக வாழ்ந்தே தீர வேண்டும் அப்பொழுதுதான் உலக வாழ்வு நலமுடையதாய் இருக்கும் தீங்கின்றி நடைபெறும். அத்தகைய வாழ்வியலுக்கு வழிகாட்டியாக அமைந்து மானுட நேயம் போற்றி அனைவரும் சமம் என்ற சமத்துவ சிந்தனையைவூட்டி. எப்பொருளும் யாவருக்கும் என்னும் பொதுமைச் சார்ந்தசகோதரத்துவச் சிந்தனையைப் போற்றி வருகிற மரபு தமிழர் மரபாகும். யாதும் ஊரே யாவரும் கேளிர், பிறபொக்கும் எல்லா உயிர்க்கும், யாவருக்கும் உணவு இடுவதே அறம், உண்பது நாழி, உடுப்பவை இரண்டே, பெரியோரைப் போற்றுவதும் சிறியோரை இகழ்வதும் இல்லை..

இவ்வாறான சமூகச் சிந்தனையோடு வாழ்ந்தவன் தமிழன். தமிழர் மேற்கொண்ட அறம், பொருள், இன்பம், இறுதியாக சேர்க்கப்பட்ட வீடுபேறு ஆகிய நான்கு வகை உறுதிப் பொருட்களும் சமஸ்கிருதச் சிந்தனையிலிருந்து மாறுபட்டது.இவற்றை வடவர் தர்ம, அர்த்த, காம, மோட்சா என்பர்.

இதில் அவர்கள் சொல்லுகிற தர்மம் மனுதர்மமே, அதாவது பிறப்பில் வேறுபாடு உண்டு எனும் மனுதர்மமே, தமிழரின் தர்மம் பிறப்போக்கும் எல்லா உயிர்க்கும் என்பதே.அர்த்தா என்பதற்கு பொருள் எனப்படும். பொருளைச் சம்பாதிக்கின்ற வழி அர்த்தசாஸ்திரமாகும். ஆனால் தமிழனின் பொருளியல் சிந்தனை என்பது பொருள் ஈட்டிசகோதரத்துவச் சிந்தனையோடு பிறருக்குக் கொடுத்தல் (செல்வத்தின் பயனே ஈதல்)என்பதாகும். அதுபோல 'காம'என்பதைக் காமம் என்பர்.அதாவது பெண்கள் மீதான மோகத்தையே அவர்கள் 'காம'என்றுக் குறிப்பிடுவர். ஆனால் தமிழர்களின் காமம் என்ற சொல் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையே.

மோச்சா என்பதை வடவர் துறவு மேற்கொண்டு உயிர் விடுவது, மற்றும் நோய்வாய்ப்பட்டு உயிர் விடுவதையே குறிப்பிடுவர் ஆனால் தமிழர்கள் மானம் இழக்க நேரின் உயிர் விடுவதையே வீடுபேறு என்பர். சான்றாக (தண்ணீர் காலந்தாழ்ந்து கிடைத்தமையால் - சேரமான் கணக்கால் இரும்பொறையும், தன் பிள்ளைகள் தன்னிடம் முரண்பட்டு நின்றதால்- கோப்பெருஞ்சோழனும் உயிர் நீத்ததைக்குறிப்பிடலாம். சித்தர் இலக்கியங்களும் தமிழரின் தனித்துவமான அதாவது சமத்துவ, சகோதரத்துவச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றது.

**பிறப்பில் சமத்துவம்:**

சமத்துவம் என்பது சமூக அல்லது கலாச்சார வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் மக்களை சமமாக நடத்துவது ஆகும். அனைவரும் சமம் எல்லோருக்கும் சம வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்னும் கொள்கையெ சமத்துவம் எனப்படும்.விட்டுக் கொடுத்தல், உதவி

செய்தல்,பொறுத்துக் கொள்ளுதல், பிறரை மதித்தல், பிறருக்கு இரங்கல், பிறருக்காகவும் உழைத்தல், அனுபவத்தை, அறிவைப் பகிர்தல் போன்றவை சமூகத்தின் அடிப்படையாய் அமைகின்றன. இவற்றில் முரணும் சுயநலமும் வருகிற பொழுது சிக்கல்கள் எழுகின்றன.

தமிழ்ச் சமூகத்தைப் புற்றாக அரித்துக் கொண்டிருக்கும் ஒரு வினைச்சொல் சாதி.சாதி என்பது தனியாக இல்லை. அது மக்கள் மனங்களில் ஒரு கோட்பாடாய் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அவர்களின் உளவியலோடு இரண்டறக் கலந்திருக்கிறது. சாதிப் பிரிவினையால் மானுடத்திற்கு சீரழிவே தவிர பெருமையல்ல. அது சமத்துவத்திற்கும் சகோதரத்துவத்திற்கும் நேர் எதிரான வினையை ஆற்றுகிறது. இவ்வாறான சாதியத்தை ஒழிக்காமல் இங்கு சமதர்மத்தை நிலை நாட்ட முடியாது.

தமிழகத்தில் சாதிகளுக்கு எதிரான கலகக்குரல் சித்தர்கள் காலத்திலேயே தொடங்கிவிட்டது என்கிறார்கள். அதற்கானச் சான்றுகள் சித்தர் பாடல்களில் ஏராளமாகக் கிடைக்கின்றன.

சிவவாக்கியர் தம் பாடல்களில் பிறப்பில் சமத்துவம் பேண வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். சாதியாவது ஏதடா, சலந்திரண்ட நீரல்லோ, பூதவாசல் ஒன்றல்லோ, சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ,(சிவ.47) சக்தியேது சம்பு வேது சாதி பேதம் அற்றது (சிவ.45) சக்தியற்றது சம்பு அற்றது சாதி பேதம் அற்றது (சிவ.46)

அழுக்கு அழுக்கு என்கிறீர் அழுக்கு இருந்தது அவ்விடம் அழுக்கில்லாதது எவ்விடம் (சிவ.215) கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர் (சிவ-05) பிறந்தவுடன் பிறந்தது பிறங்கு நாள் சடங்கெல்லாம் (சிவ.46) அணிகின்ற அணிகலன்கள் பலவாக இருந்தாலும் பொன் ஒன்றே தான், ஏரி, குளம், கிணறு, ஆறு பல வகையாக இருந்தாலும் நீர் ஒன்றேதான். அதுபோல மனித சாதியில் வேற்றுமை இல்லை. (சிவ.44) அகப்பேய்ச் சித்தரும் தம் பாடல்களில் சாதி பேதம் இல்லை, தானாகி நின்றவர்கள், சமயம் ஆறுமடி தன்னாலே வந்ததடி,(அகப்.22 ) சாதி பேதம் இல்லை தானவன் ஆனவர்க்கே (அகப்-68) பாம்பாட்டிச் சித்தரும் தான் பாடல்களில் சாதிப் பிரிவை கடுமையாக சாடுகிறார்.

சமய பேதம் பலவான சாதி பேதங்கள் சகத்தோர்க்கே (பாம்.99) "சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம், சந்தை வெளியில் கோல் நாட்டுவோம் (பாம்-123). அதாவது மனிதர்களுள் பிரிவுகள் இல்லை. பிறப்பால் அனைவரும் சமமே, என்பதை ஊர் முழுக்க பறைசாற்றுவோம், ஊர் நடுவெளியில்(ஊர் அம்பலம்) இதை உறுதி செய்கிற அளவுக்கு அனைவருக்கும் உணர்த்த கோல் நாட்டுவோம் என்று குறிப்பிடுகிறார்.

கொங்கணச் சித்தர், குதம்பைச் சித்தர், காகபுசுண்டர், பத்திரகிரியார் வால்மீகிச் சித்தர், திருமூலர், போன்றவர்களும் பிறப்பில் அனைவரும் சமம் எனும் கொள்கையைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சாதி பேதம் சொல்லுகிறீர், தெய்வம் தானென்று ஒருடல் பேதம் உண்டோ (கொங்-95) சாதி ஒன்றில்லை சமயம் ஒன்றில்லை (குத-394)காணப்பா சாதிக்குலம் எங்கட்கில்லை, சாதி பேதம் சொல்லுவான் சுருக்காகச் சுருண்டு போவான்,

வீரமுடன் பிறந்ததடா உயிர்கள் எல்லாம்-(காகபு-3)சாதி வகை இல்லாமல் சஞ்சரிப்பது எக்காலம் (பத்தி-125) தொல்லுலகில் நாற் சாதி யனேகஞ் சாதி தொடுத்தார்கள் அவரவர்கள் பிழைக்க தானே (வால்-08) அன்போடு உருகி அகம் குழைவார்குக அன்றி என்போன் மணியினை எய்த ஒன்னாதே (திரும-08) ஒன்றே குலம் ஒருவனே தேவன் (திரும-2104) கடுவெளிச் சித்தர் தம் பாடல்களில் பொய்யானப் பேதத்தைப் பார்க்கக் கூடாது(கடு.24) பிறர் தாழும்படி எந்த செயலும் செய்யக்கூடாது(28) வேம்பு போல் கசந்த உணர்வை உலகில் யாருக்கும் உண்டாக்கக் கூடாது(கடு.27) பல சாதிகள் யாவும் ஒன்று என நினைக்க வேண்டும்( கடு-32) சாதிமதி என்னும் தாகவிடாய் தானடங்கு(அழு.110) என சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதை தம் பாடல்களின் வழி வெளிப்படுத்துகிறார்.

விளையாட்டுச் சித்தர் என்பவர் ,மேலாஞ் சாதி பாரடா வெட்டவெளியைத் தேரடா, நாலாஞ்சாதியாகாது நமக்குப் பருப்பு வேகாது(விளையா-38) பட்டினத்தாரும் தம் பாடல்களில் சாதியில் கூட்டுவாரோ? சாத்திரத்திற்கு உள்ளாமோ?, சாதியில் கட்டுவாரோ சமயத்தார் எண்ணுவாரோ, பேதித்து வாழ்நாளெல்லாம் பேய்க்கிடமாச்சுதடி, சாதி பேதங்கள் தனை அறிய மாட்டாமல் வாதனையில் நின்று மயங்கினேன் பூரணமே, குலம் ஒன்றாய் நீ படைத்த குறியை அறியாமல் நான் பல பண்டத்துளிருந்து மயங்கினேன், எந்த சாதியிலும் இரக்கத் துணிந்தேன் (பட்டினத்தார்-342) பட்டினத்தாரின் பாடல்களில் உடல், பெண் சார்ந்த கருத்தாடல்கள் கடுமையாக வெளிப்படும் குறிப்பாகப் பெண்களின் அங்கங்கள் அருவருக்கத்தக்கது என வெறுத்து ஒதுக்கி இருப்பர். ஆனால் சாதி என்கிற கருத்து உருவாக்கத்தில் அனைவரும் சமம் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார். சாதியம் அது சார்ந்த சமய சடங்குகள் யாவும் அறிவுக்கு ஒவ்வாத செயல்களாகும் எனவும் சாதி ஒழிந்தால் தான் சமத்துவம் சகோகரத்துவம் பிறக்கும் அப்பொழுதுதான் மானுட வாழ்க்கை மேன்மையடையும் என்பதையும் மேற்கண்ட சித்தர் பாடல்கள் விளக்குகின்றன.

**பாலினச் சமத்துவம்:**

மனித குலத்தில் இருக்கும் சாதி வேற்றுமைகளை ஒழிக்க நினைக்கின்ற சமூகச் சீர்திருத்தாளர்கள் கூட, மக்கள் தொகையில் சரிபாதியாக இருக்கின்ற பெண்களின் அழிவை, பாதிப்பை, தாழ்வை, அடிமை நிலையைக் கண்டு கொள்வதில்லை. ஆனால் "சமூகச் சீர்திருத்தம் என்பது பெண்ணுரிமையும் உள்ளடக்கியது தான் என்று பெரியார் தெளிபடக் கூறியுள்ளார்"(மஞ்சை வசந்தன்-1998, பக்- 74) சமூக மதிப்பில் ஆண் என்றுமே முதலிடம் பெறுகிறான். அத்தகைய ஆணை முதல் பாலினம் என்றும் இரண்டாம் நிலையில் இருக்கும் பெண்ணினத்தை இரண்டாம் பாலினம் என்றும் இரண்டுமற்ற நிலையில் மூன்றாவதாக இருப்பவர்களை மூன்றாம் பாலினம் என்றும் அழைக்கின்றனர் இதுகூட ஒரு வகையில் பாலின வேறுபாடே. இச்செயல் சமத்துவமற்ற செயல்,."கேட் மில்லட் பாலின அரசியல்(sexual politics -1979) எனும்தம் நூலில் ஆளும் பால் ஆண்பாலாகவும் ஆளப்படும் பால் பெண்பாலாகவும் இருக்கின்றன. ஏதாவது ஒரு புள்ளியில் தனது அதிகாரத்தை செயல்படுத்துதல்/ நிறுவுதல் என்ற நிலையில் அல்லாமல் அனைத்துப் புள்ளிகளும் இந்த

அதிகார பராமரிப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது" (விஜயலட்சுமி-2020,பக.37) என்பார். அவரைப் போலஹெலன் சிக்சு என்பவர் "ஆண்கள் தங்களது சுயலாபத்திற்காக பெண்களைத் தங்களது எதிரிகளாகப் பெண்களே கருதும்படியாகவும் பெண்களின் மகத்தான ஆற்றலைப் பெண்களுக்கு எதிராகவும் திசை திருப்பிய நயவஞ்சகச் செயலை வன்மையாக செய்து முடித்துள்ளார்கள் என்கிறார். (மேலது-பக்.40) மேலும் சீமோன் தி பூவா (the second sex- 1949/ 1979), ஜேன் ஆங்கர்,(Her production of women ) ,மேரி எல்மான்(thinking about women), ரோபின் லேகா,(language and womens place), ஜான் ட்டூரட் மில்,(the subjection of women -1869) போன்றவர்களும் பெண்களுக்கான இருப்பு பாலின சமத்துவம் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள்.

சித்தர் பாடல்களில் பெண்ணை இழிவுபடுத்தல். சார்ந்த கருத்துக்கள் காணாப்பட்டாலும் (அது தனி ஆய்வுக்குரியது) பெண் ஆணுக்கு நிகரானவள், ஆணைக் காட்டிலும் மேன்மையுற்றவள், தாய் போற்றுதற்கு உரியவள் எனப் பெண்ணைப் போற்றும் கருத்து நிலையிலும் பாடியுள்ளார்கள். சிலர் ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்தினையும் உள்வாங்கிப் பாடியுள்ளார்கள். சிவவாக்கியர் தம் பாடல்களில் மாதர் தோள் சேராததேவர் மாநிலத்தில் இல்லையே, மாதர் தோள் புணர்ந்தபோது மனிதர் வாழ்வு சிறக்குமே,(சிவ.529) பெண்ணும் ஆணும் ஒன்றல்லோ பிறப்பதற்கு முன்னெல்லாம், (சிவ.43) பறைச்யாவது ஏதடா, பணத்தையாவது ஏதுடா பறச்சி போகம் வேறதோ பணத்தி போகும் வேறதோ, இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டு இருக்குதோ (சிவ.40) சாதி பேத வன்மையும் தயங்குகின்ற நூல்களும் வேதம் வேதம் ஆகியே பிறந்து உழன்றிருந்ததே (சிவ.475) நாதமேது வேமேது நாற்குலங்கள் எதடா (சிவ.136) மேலும் மகளிர் மாதவிடாயைத் தீட்டு(சிவ.478) புலால் புலால் என்று பேதங்களைப் பேசுகிறீர் புலாலை விட்டு எம்பிரான் பிரிந்து இருந்தது எங்கனே (சிவ -159) உதிரமான பால் குடித்து ஒக்கநீர் வளர்ந்ததும் மாமிசப் புலால் என்கிறீர் மூடரே (சிவ-150) என்று பாடியுள்ளார். அவரைப் போலவே பத்திரிகிரியாரும் தம் பாடல்களில் பேய் போல் திரிந்து பிணம் போல் கிடந்த பெண்ணைத் தாய் போல் நினைத்துத் தவம் முடிப்பது எக்காலம் (பத்திர-08) அதாவது எல்லா பெண்களையும் தாய் போல் கருதி தவமாகிய விரதத்தினை முடிப்பது எக்காலம் என்று கூறுகின்றார்.

வள்ளலாரும் பெண்ணினுள் ஆணும் ஆணினுள் பெண்ணும் அண்ணுற வகுத்த அருட்பெருஞ்சோதி, பெண்ணியல் மனமும் ஆணியல் அறிவும் அண்ணுகிற வகுத்த அருட்பெருஞ்சோதி (அகவல்-703) என்கிறார். பத்தினிமார்களைப் பழித்துக் காட்டாதே (கடு-26)மாதராகும் நீலி கங்கை மகிழ்ந்த கொண்டான் ஈசனே (சிவ.529) குதம்பைச் சித்தரும் ஆண் சாதி பெண் சாதி யாவரும் இரு சாதி, வீண் சாதி மற்றவெல்லாம் (குதம் -390) திருமூலரும் ஆண் பெண்ணாய் அலியாகி அடியும் ஆகி (திருமந்-8) கொங்கணச் சித்தரும் தம் பாடல்களில் 'மண்ணும் இல்லாமலே விண்ணுமில்லை, கொஞ்சம் வாசம் இல்லாமலே பூவுமில்லை, பெண்ணும் இல்லாமலே ஆணுமில்லை, இது பேணிப்பாரடி வாலைப் பெண்ணே (கொங்-72) ஆனும் பெண்ணும் கூடியனதலோ அற்றோரு வித்தாச்சு (கொங்.77) பாலினங்களில் ஆண் பெண் என்பது அறிவியலாளர்கள் கூறுவது போல உடல் அமைப்பில் வேறுபாடே தவிர பிறவற்றில் வேறுபாடு அல்ல . பெண் புனிதமானவள், உடலும் புனிதமானது, அது தீட்டும்

அல்ல. சமூகத்தில் ஆணுக்கு எவ்வளவு முக்கியத்துவம் தரப்படுகிறதோ அதே முக்கியத்துவம் பெண்ணுக்கும் தரப்பட வேண்டும் என்னும் ஆண், பெண் பாலினச் சமத்துவத்தை வலியுறுத்துகிறார்கள்.

**சகோதரத்துவச் சிந்தனை:**

சகோதரத்துவம் என்பது அன்பு மற்றும் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டது. சகோதரத்துவம் மனித கண்ணியத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் வலியுறுத்துகிறது. ஜனநாயக அமைப்பை நிலை நிறுத்த, அமைப்பாய்த் திரள, ஒவ்வொரு நபரின்ஆளுமையும் விலைமதிப்பற்று என்பதை ஏற்படுத்துகிறது. நீதி சுதந்திரம் சமத்துவம் ஆகியவற்றின் பொருள் பற்றிய தகவல்களை உள்ளடக்கியது. வகுப்புவாதம், சாதிவாதம், பிரிவினைவாதம் உள்ளிட்ட தடைகளை அகற்றி அனைவரையும் ஒன்றிணைய வைப்பது தான் அதன் நோக்கம். மானுடப் பிறப்பில் அனைவரும் சமம். எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகளாக உணர்ந்து ஒன்றுபட்ட வாழ்வியலை முன்னெடுக்க வேண்டும். நமக்குள் சாதி, மொழி, இன வேறுபாடுகள் இருக்கக் கூடாது. அவ்வாறு இணக்கமாக வாழ்ந்தால்தான் கோடி நன்மைகிட்டும் . பொதுவுடமையோடு சார்ந்த சகோதரத்துவச் சிந்தனையை சித்தர்கள் மிக விரிவாக எடுத்துரைக்கின்றார்கள். சித்தர்களில் திருமுலர் தான் மிக அதிகமாக சகோதரத்துவச் சிந்தனையை வலியுறுத்துகிறார்.

"யான் பெற்று இன்பம் பெறுக இவ்வையகம் (திருமந்-85) ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின், பார்த்திருந்துண்மின், பழம் பொருள் போற்றன்மின், வேட்கையுடையீர் விரைந்துதொல்லை உண்ணன்மின், காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே(திருமங்.250) அதாவது எல்லோருக்கும் கொடுங்கள் பழம் பொருளைப் போற்றுங்கள் வரும் விருந்தினருக்கு சிறிதளவே உணவாயினும் காக்கை இனத்தைப் போல சகோதரத்துவ உணர்வோடு பங்கிட்டுக் கொடுத்துப் பின் உண்ணுங்கள் என்கிறார். மேலும் யாவருக்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி, யாவருக்கும் இன்னுரை (திரும-419) நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில் படமாடக் கோயில் பகவர்க்கு ஒன்று ஆமே(திருமந்-1857) மேலும் திருமூலர், நடுநிலைமை குறித்தும் பாடி இருக்கின்றார்.நடுவு நின்றார் வழி நானும் நின்றேன்,(திரும-340 ) நடுசெய் வல்லான் பகுத்துண்பான் (திரும- 554) யாக்கை நிலையாமை, நல்குரவு என்னும் பகுதிகளில் பிறர்பொருளை கவராதீர் என்பதை "வெவ்வியனாகிப் பிறர் பொருள் வவ்வன்மின்(திரும-196) வயிற்றை நிரப்ப வழி தேடு பிறவி நீக்க வழித் தேட வேண்டாம் (திரும.211) வறுமையாளர்களுக்கு உலக வாழ்வு இல்லை, சுற்றத்தார் விலகி ஓடுவர் (திரும-210) யான் என்பது அகப்பற்று, எனது என்பது புறப்பற்று,(திரும-237) திருமந்திரத்தில் தானச் சிறப்பு என்னும் பகுதியில் பதினைந்து பாடல்கள் பொதுவுடைமைச் சார்ந்த சகோதரத்துவச் சிந்தனைகளைப் பேசுகின்றன

தம்மிடம் கிடைத்ததை யாவருக்கும் கொடுங்கள் அதில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று பார்க்காதீர்கள். பகுத்துண்டு உண்ணுங்கள் (திரும-250) இல்லை என்னாது ஈவது நன்மை தரும்(251) யாவருக்கும் இறைவன் (120) அற்றாக்கு ஒன்று ஈவதே முக்தி.(259) வேண்டுவார்க்கு வேண்டுவதைத் தானே அறிந்து ஈதல் (திரும-276) பகைக்கு உரியார் இல்லை (திருமந்-1868).

எனத் திருமூலர் கூறுவது வியப்பளிக்கின்றது. கொங்கணச் சித்தரும் தம் பாடல்களில் சகோதரத்துவச் சிந்தனைக்கான வாழ்வியல் கூறுகளை அழகுற எடுத்துரைக்கின்றார்.

"யாரையும் மௌனமாகவும் வையாதே, அவர் மனதை நோகவும் செய்யாதே, கூடிய பொய்களைச் சொல்லாதே, பொல்லாக் கொலை களவுகள் செய்யாதே" (கொங்-89,92) சங்கிலிச்சித்தர் என்பவர் தம் பாடல்களில்"எல்லாப் பொருள்களும் எங்கிருந்து வந்தென்று நான் உற்று அதை பார்க்கையிலே நல்லதோர் மண்ணில் உற்பத்தி என்று பின் நன்றாய்த் தோணுதே"(சங்கிலி-159) சகல பொருள்களும் மண்ணாய் இருப்பதைப் சற்று நிதானித்துப் பார்க்கையிலே (சங்கிலி-23) உயித்தோர் பாண்டம் ஆகச் சுட்டுபின் உலகோர்க்குதவு (சங்கிலி-22) மண்ணில் பிறந்தது அழிந்து விடும், பார்த்து வைத்த பொருள்களும் அழிந்து விடும் (சங்கிலி-24) என வாழ்க்கை, பொருள், நிலையாமையையும் சகோதரத்துவ உணர்வோடு யாவருக்கும் உதவ வேண்டியதின் தேவையையும் பாடியுள்ளார்.

திரிகோணச்சித்தர் என்பவர் சிறியன், பெரியன், சிவப்பன், கறுப்பன், குறியன், நெடியன் எனக் கூறாதான் (திரி-168) எனச் சகோதரத்துவத்தை வலியுறுத்துகின்றார். பாம்பாட்டி சித்தரும் பொருளாசை விலகல் (பாம்-188) எனவும் விளையாட்டுச் சித்தர் என்பவரும் "கண்டு பொருள் தேடுவதும் விளையாட்டே, கோடி பணம் தேடுவதும் அதை வெட்டிப் புதைப்பதும் தேடி அலைவதும் மனம் தேறுதலாய் திரிவதும் விளையாட்டே (பாம்-18). எவ்வுயிரும் எவ்வுலகும் என்றும் புறம்பாய் அவ்வுயிரும் அவ்வுயிருமாகியும் நின்ற (பாம்-9)எனப் பாடுகின்றார். இவ்வாறு சித்தர்கள் பாடியுள்ளார்கள்.பொருள் நிலையில்லாதது அதைத் தேடி அலைவது தேவையற்றது. தம் கையில் பொருள் இருக்கும் பொழுதே பிறருக்கு கொடுத்து உதவுவதே அவற்றின் பயன். அதன் மூலம் மானுட வாழ்வில் சகோதரத்துவ உறவைப்பெருக்கிக் கொள்ள வேண்டும் அப்பொழுதுதான் இந்த தமிழ்ச் சமூகம்சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த்தாகக் காணப்படும்என்னும் பொருண்மையில் மேற்கண்ட சித்தர் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**முடிவுரை:**

சித்தர்கள் சாதி சமய சழக்கில் சிக்காதவர்கள். எங்கும் எதிலும் எந்த வேறுபாடும் அறியாதவர்கள். சமூக நலமே, மனித நல வாழ்வே குறிக்கோளாகக் கொண்டவர்கள்.சாதி பாகுபாடு என்பது மக்களைக் குழப்பி அடையும் சுயநலம். மனித அறவின்மையின் உச்சம் .இவை உலக அழிவுக்கு வழிவகுக்கும் என்பதை சித்தர்களின் பாடல்கள் விளக்குகின்றன.

சித்தர் பாடல்களில் பாலின சமத்துவம், உயர்வு தாழ்வு அற்ற பிறப்பில் சமத்துவம், போன்ற சமூக நல்லிணக்கச் சிந்தனைகள் காணப்படுகின்றன.இவை பெரும் கலகக்குரலாக வெளிப்படுகின்றன.தமிழ்ச் சமூகத்தில் மிகப்பெரும் மாற்றத்தை உருவாக்க எண்ணிய சித்தர்கள் தம் பாடல்களில் சமத்துவம், சகோதரத்துவம், ஆகிய கருத்துகளைப் பின்பற்றவும் அற வாழ்வின் தேவைக்கான உணர்வை ஏற்படுத்தவும் முயன்றிருக்கிறார்கள். அதில் வெற்றியும் பெற்றுள்ளார்கள்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

**துணைநூற் பட்டியல்:**

1. அறிவொளிஅ. (உ.ஆ)- 2008, சித்தர் பாடல்கள் (தொ.1.) வர்த்தமான் பதிப்பகம் .
2. கோவிந்தன் த. (ப.ஆ) -2000,பதினெண் சித்தர் பாடல்கள் - சங்கர் பதி, சென்.49.
3. சிந்தனையாளன்- 2017,பொங்கல் மலர் சென்னை 53.
4. சோமு.மீ.ப.-1988,சித்தர் இலக்கியம் (தொகு1,2.அண்,.பல், கழகம், சிதம்பரம்.
5. மஞ்சை வசந்தன், 1998,இவர்தான் பெரியார், திராவிட கழக வெளியீடு சென்னை.7.
6. விஜயலட்சுமி. த-2020, பெண்,பெண்ணியம்,பெண்நிலை,,காலசகம் பதி,நாகர்கோ.

**MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL**
**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்**
**E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1**
**MARCH – 2024**

# 35. "அறியப்படாத சுதந்திரப் போராட்ட ஆளுமையில் வாழும் கலைமாமணி - கிருட்டிணம்மாள் செகந்நாதன்"

**திருமதி.மு.சண்முகவடிவு .எம்.ஏ., எம்.எட்., யு.சீ.சி- நெட்.,டி.எப்.ஏ.,டி.சீ.டி., எப்.எச்.எல்.சி.**
தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்,
நாடார் மகாஜன சங்கம் சேர்மத்தாய்வாசன் மகளிர் கல்லூரி மதுரை-12

DOI 10.5281/zenodo.10726030.

**Abstract :**

Today we are living a pleasant life. There are innumerable freedom struggle personalities who have been the root of this and guided us. They did not live for themselves but for the unity of the world and for everyone to live a healthy life, they sacrificed their body, material and spirit for the liberation of the country. This study explains the news about unknown personalities among them.

**முன்னுரை:**

இன்று நாம் இனிமையான வாழ்வை வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். இதற்கு ஆணிவேராக இருந்து நம்மை வழிநடத்திய சுதந்திர போராட்ட ஆளுமைகள் எண்ணிலடங்காதவர்கள். இவர்கள் தங்களுக்காக வாழாமல் உலக ஒற்றுமைக்காகவும் அனைவரும் நலமான வாழ்வு வாழ வேண்டும் என்ற அவாவினாலும் தங்கள் உடல் ,பொருள் ,ஆவி அனைத்தையும் நாட்டின் விடுதலைக்காகக் ஈந்தனர்.இவர்களில் அறியப்படாத ஆளுமைகள் குறித்த செய்திகளை விளக்குவதாக இந்த ஆய்வு உள்ளது. **ஆளுமையின் அகல்விளக்கு:**

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரண்பட்டிக்கு அருகாமையிலுள்ள அய்யங்கோட்டையை பூர்வீகமாகக் கொண்டவர் கிருட்டிணம்மாள் செகந்நாதன்.இவர் 1926 ஆம் ஆண்டு இராமசாமி நாகம்மாள் இணையர் ஈன்றெடுத்த மாற்றுக் குறையாத தங்கம்.ஏழைப் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றிட அரும்பாடு பட்ட சாதனை சிற்பி.தனது பதினோராம் வயதில் தந்தையை இழந்து அன்னையின் அரவணைப்பில் வளர்ந்த இவர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்திருந்தாலும் வறுமை தன்னை வாட்டினாலும் தொடர்ந்து கல்வி கற்று சமுதாயத்தை மாற்ற வேண்டும் என்று கருதினார்.தனது தாய் அன்றாடம் படும் துயரங்களை பார்த்தபோது தான் ஒரு போதும் திருமணம் செய்து கொள்ள போவதில்லை என நினைத்து மதுரையில் தட்டிப் பள்ளியில் சேர்ந்து படித்தார்.மேல்நிலைப் படிப்பை சௌந்தரம்மாள் உண்டி உறைவிடப் பள்ளியில் பயின்றார்.மதுரை அமெரிக்கன் கல்லூரியில் கல்லூரி படிப்பை முடித்த முதல் பெண் சிங்கம் இவரே.ஆசிரியர் பயிற்சியை சென்னையில் பயின்றார்.தனது கடின உழைப்பால் கல்லூரி வரை படித்து முடித்தார். "கல்வியால் தான் சமத்துவத்தை அடைய முடியும்" -1என்ற சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பொன்மொழியை உண்மையாக்கிய பேரொளி.

**நினைத்ததை முடிக்கும் குணம்:**

அம்மையார் அவர்கள் காந்தியக் கொள்கையால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். சௌந்தரம் அம்மாவும் இவரும் இணைந்து சிறு வயதிலேயே திருமணம் செய்து இளம் விதவைகளான பெண்களை மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு கொடுத்தனர்.அவர்களுக்கென்று ஒரு ஆசிரமத்தை உருவாக்கினார்கள். அவர்களுக்கு அன்றாடம் இரவு பாடங்களையும் கைத்தொழில்களையும் கற்றுக் கொடுத்து மறுவாழ்வு அளித்த மகத்தான தெய்வம் இவர்கள். நான்காம் வகுப்பு வரை படித்தால் ஆசிரியர் அல்லது செவிலியர் ஆகலாம் இதை மனதில் வைத்து அவர்களுக்கு கற்பித்தார். குடியினால் பல குடும்பங்கள் சீர்கேடு அடைந்ததை இவரால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. 1930 ற்கு பிறகு சுதந்திர போராட்டம் இந்தியா முழுவதும் பரவியது தொடர்ந்து இதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அம்மையார் 1942 ல் ஒத்துழையாமை இயக்கம்,மது விலக்கு,வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டு பாதயாத்திரை சென்றார்.இதனால் ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.இந்தியா விடுதலை பெறும் வரை நான் திருமணம் செய்து கொள்ள போவதில்லை என்று உறுதியோடு இருந்த அம்மையாருக்கு இவரை போலவே உறுதிமிக்க காந்தியவாதி வசதியான குடும்பத்தில் பிறந்தாலும் எளிமையான முறையில் வாழ்ந்து வந்த சங்கரலிங்கம் செகந்நாதன் ஐயா அவர்களின் அறிமுகம் கிடைத்தது.இருவர் மனமும் ஒன்றிணைந்தது." நாம் மண்பாண்டங்களாகவே இருக்க வேண்டும் எதற்கும் ஆசைப்படக் கூடாது."நாம் ஓர் இருப்பிடத்தை விட்டு வேறு இடத்திற்கு செல்ல வேண்டும் என்றால் எதையும் எடுத்து செல்ல வேண்டிய அவசியம் இல்லை.மண்பாண்டங்கள் என்றால் உடைத்து விட்டு போற இடத்தில் புதிது வாங்கிக் கொள்ளலாம் என்றும் எனது கொள்கை உனக்கு பிடித்திருந்தால் நாம் இருவரும் கைகோர்க்கலாம்"-2 என்று கூறினார்.இறைவனின் திருவருளால் சுதந்திரத்திற்குப் பின் 1950 வது வருடம் எளிமையான முறையில் திருமணம் நடைபெற்றது.திருமணத்திற்குப் பின் பல வருடங்கள் ஒன்றாக வாழும் சூழல் அம்மையாருக்கு கிடைக்கவில்லை ஆனாலும் மற்றவர்கள் வாழ்வில் ஒளியூட்டும் ஆதவனுக்கு மகழ்விற்கு குறை ஒன்றும் இல்லை என்றே கூறலாம்.

**பூமிதான இயக்கப் போராளி:**

நிலமற்ற விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு அதிக அளவில் நிலம் வைத்துள்ளவர்கள் தாமே முன்வந்து நிலங்களை கொடுக்க வேண்டும். இதுவே பூமிதான இயக்கத்தின் கொள்கைகள்.இதன் தந்தையாகிய ஆச்சார்யா வினோபாபாவே1942 ல் நிலமற்றவர்களுக்கான பாதயாத்திரை போராட்டத்தை உருவாக்கினார்.அம்மையார் அதில் கலந்து கொண்டு சிறை சென்றார்."நாள் முழுவதும் வெயிலில் பாடுபடும் ஏழை விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் நிலமாவது ஒரு காணியாவது சொந்தமாக இருக்க வேண்டாமா?"-3 என்ற வினாவினைத் தொடுத்து உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று முழங்கி அதனைப் பெற்றும் கொடுத்தார்கள்.இதற்காக பல காத தூரம் நடைபயணம் மேற்கொண்டு கடுமையான போராட்டங்களையும் சந்தித்தார்கள்.உழவர்கள் மிகவும் பல கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.இதனை எதிர்த்து பூமிதான இயக்கம் உருவாக்கப்பட்டு இதில் அதிக நிலம் வைத்திருப்பவர்கள் தங்களுடைய நிலங்களை குறைந்த விலையில்

கொடுக்க வேண்டும் என்று போராடி நிலங்களை பெற்று உழவர்களுக்கே கொடுத்தார். 1968 ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம் கீழவெண்மணி கிராமத்தில் உழவர்கள் கூலியை உயர்த்திக் கேட்க கொடுக்க மறுத்த ஆதிக்ககாரர்கள் 44 பேரை அவர்களை ஒரே குடிசையில் வைத்து நெருப்பிட்டு கொளுத்தி படுகொலை செய்தனர்.இதனை அறிந்த அம்மையார் உள்ளம் துடித்து அந்த ஊருக்கே சென்று அங்கேயே தங்கி நிலவுடைமைக்காரர்களிடம் போராடி கட்டாயம் நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று கூறி அவர்களுக்கு அதை பெற்றுக் கொடுத்தார்.1981 ல் Land for the Tillers freedom லாபிட்டி -'நிலத்தை உழும் உழவனுக்கே நிலம் சொந்தம்' என்ற கொள்கையின்படி நாகப்பட்டினத்தில் 19 கிராமங்களில் 1112 ஏக்கர் நிலங்களை வங்கியின் மூலம் கடன் பெற்று நிலவுடைமைக்காரர்களிடமிருந்து வாங்கி 1112 குடும்பங்களுக்கும் கொடுத்தார்.குறைந்த அளவு பணத்தை வங்கியில் செலுத்திக் கொண்டே வந்தால் கடன் முழுவதும் நிறைவடையும் தருவாயில் நிலம் சொந்தமாகிவிடும்.தனது பெயரில் நிலம் இருப்பதை ஒவ்வொருவரும் தனக்கு கிடைத்த வரமாகவே கருதினர்.அந்த வரத்தைக் கொடுத்த தெய்வம் அம்மையாராவார்.1982 முதல்1986 வரை 175 நில உரிமையாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி 5000 ஏக்கர் நிலத்தை 5000 குடும்பங்களுக்கு கொடுத்து அவர்களுக்கு பத்திரமும் பதிந்து கொடுத்தார்.

**கிருட்டிணம்மாள் செகந்நாதனின் நிகரற்ற சேவைகள்:**

காந்தியக் கொள்கையாலும் பூமிதான இயக்கத்தாலும் எளிமையான வாழ்க்கை முறையை பின்பற்றியதாலும் 1950 இல் இணைந்தது இரு உள்ளம்.கலப்பு திருமணம் செய்து கொண்டு உலகிற்கே ஒரு விடியலை ஏற்படுத்திக் கொடுத்த இணையர் இவர்கள்.இணைந்தே பல போராட்டங்களில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். பூமிகுமார்,சத்யா என்ற இரு வரங்களை பெற்றெடுத்த புண்ணியவான்கள்." விதை ஒன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும் "-4 என்ற முதுமொழிக்கு ஏற்ப தாய் தந்தை போலவே இவர்கள் இருவரும் தொண்டுள்ளத்தோடு அரசு மருத்துவர்களாகி இவர்கள் ஏழை மக்களுக்கு பல சேவைகளை செய்து வருகின்றனர்.

அடிப்படை உரிமைகளாகிய உணவு,உடை ,உறைவிடம் இவை அனைத்தும் உழைக்கும் மக்களுக்கு மிகவும் அவசியம் என்பதை அம்மையார் உணர்ந்து "தன்மானத்துடன் வாழ்வதற்கு ஒரு மனிதனுக்கு வீடு அவசியம்" ஒரு தரமான வீடு இருந்தால் அவன் வாழ்வில் பாதி சிரமங்கள் குறைந்துவிடும்"-5 என்று எண்ணி "இந்த நாட்டினுடைய உரிமையாளன் என்றால் அவனுக்கு ஓட்டுரிமை இருக்கு ஆனா வீடு இல்லை"-6 இதை நீக்க வேண்டும் என நினைத்த அம்மையார் 50 விழுக்காடு வீட்டின் உரிமையாளரும் 50 விழுக்காடு அரசாங்கமும் கொடுக்க வேண்டும் ."வீட்டின் பத்திரம் பெண்கள் பெயரிலேயே பதிய வேண்டும் வீடு கட்டி முடிக்கும் வரை மது அருந்த மாட்டேன் என்று குடும்ப தலைவர் சத்தியம் செய்து தர வேண்டும்"-7 என கூறி 50 வீடுகளுக்கு அடித்தளம் இட்டார் .இன்று 2500 வீடுகள் கட்டுவதற்கு உறுதுணையாக இருந்துள்ளார் அம்மையார்.

இறால் பண்ணைகளை ஒழிக்க நடந்த போராட்டத்தில் தனது கணவர் செகந்நாதன் கடுமையான உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். போராட்டத்தை கைவிடக்கோறி ஆங்கில அரசு கேட்டுக் கொண்டது. ஆனால் அதற்கு மறுத்து விட்டதால் கடுமையாக தாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு சரியான மருத்துவமுறைகள் அவருக்கு கொடுக்க இயலவில்லை. உடல்நிலை மிகவும் மோசமடைந்த நிலையிலும் தனக்கு அனைவருக்கும் கொடுக்கும் மருத்துவத்தையே தனக்கும் கொடுத்தால் போதும் என்று கூறினார் .இதனால் இறால் பண்ணைகள் நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக கூறி இவரை விடுதலை செய்தனர்.ஒரு இறால் பண்ணை என்பது பத்து ஏக்கர் நிலப்பரப்பளவை பாதிப்புக்கு உள்ளாக்கக்கூடியது. விவசாயம் செய்ய இயலாமல் போய்விடலாம்.மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் எந்த திட்டமும் செயல்முறை படுத்தக் கூடாது என்பதில் இணையர் இருவரும் உறுதியாக இருந்தனர். கடற்கரைகளையும் பாதுகாத்தார்கள் .நம்மை வாழ வைக்கும் இயற்கையை எப்போதும் நேசிக்க வேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டவர்கள்.

**விருதுகளின் விருட்சம்:**

தன்னிகரற்ற சேவைகள் பல செய்துகொண்டே இருக்கும் நமது அம்மையார் அவர்களுக்கு அவர்களின் சேவை மென்மேலும் சிறக்க பல விருதுகளை வழங்கி சிறப்பித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

- 1989 -ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது
- 2008-ஆம் ஆண்டு வாழ்வுரிமை விருது ஸ்வீடன் நாட்டில் வழங்கப்பட்டது.
- 2013-ஜமன்லால் விருது, ஒபஸ் விருது
- 2020- ஆம் ஆண்டு பத்ம பூசண் விருது
- 2020- ஆம் ஆண்டு அமெரிக்க பல்கலைக்கழகம் "ரைட் லைவ்லி"நோபல் பரிசுக்கு இணையானது

இவை அனைத்தும் அம்மையார் அவர்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளில் குறிப்பிடத்தக்க விருதுகள் ஆகும்.எண்ணிலடங்காப் பல்வேறு விருதுகளை பெற்றாலும் அம்மையாருக்கு அதில் எல்லாம் பெருமையில்லை அனைவருக்கும் அனைத்தும் சமமாக கிடைப்பதில் உள்ள மகிழ்வு தான் விருது என்கிறார்.இந்தப் பேப்பரில் என்ன இருக்கிறது என்று கேட்டு 95 வயதை கடந்த போதிலும் அதே உற்சாகத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.கஜா புயலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயற்கை இடர்பாடுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்று இன்றும் பல திட்டங்களையும் அதற்கான செயல் முறைகளையும் அம்மையார் அவர்கள் கூறினார்கள்.

**முடிவுரை:**

வாழும் கலைமாமணி கிருட்டிணம்மாள் செகந்நாதனின் சேவைகளை ஓர் ஆய்வு கட்டுரையில் உள்ளடக்கி விட இயலாது.ஒவ்வொன்றும் ஒரு வரலாற்று பெட்டகம் மகாத்மா காந்தி, கர்மவீரர் காமராசர்,பி.கக்கன் இவர்கள் இன்று உயிரோடு இருந்திருந்தால் மிகுந்த ஆர்வம் கொண்டு எத்தனையோ கிருட்டிணம்மாள் செகந்நாதன்களை உருவாக்கியிருப்பார்கள். சாதிமதம் ஒளிந்திருக்கும் அனைவரும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று வாழும் சூழல் ஏற்பட்டு இருக்கும்.அம்மையார் அவர்கள் நூறு ஆண்டுகள் கடந்தும் வாழ வேண்டும் என்று மனம்நிறைந்து வணங்கி மகிழ்கின்றோம்.இன்றும் காந்திய வழி ,வினோபா வழி, மார்ட்டின் லூதர் கிங் வழி, பாம்பாட்டி சித்தர், பாரதியார் என்று அனைவருடைய வழியையும் பின்பற்றி அனைவரையும் வாழ வைக்கும் ஆதவனஐ போற்றுவோம்.

**பார்வை நூல்கள்:**

1. சுதந்திரத்தின் நிறம்- லாரா கோப்பா -இத்தாலி : தமிழில் பி.ஆர்.மகாதேவன்
2. விக்கிப்பீடியா செய்தி தொகுப்பு
3. தொலைக்காட்சி பதிவுகள்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 36. புறநானூறு காட்டும் தேசிய ஒருமைப்பாடு

முனைவர் தி. மல்லிகா
உதவிப்பேராசிரியர்,தமிழ் உயராய்வு மையம்,
மன்னர் திருலை நாயக்கர் கல்லூரி,மதுரை- 04

DOI 10.5281/zenodo.10726114

**Abstract :**

People's integration and unity of minds are essential requirements for peace in the world today and for the flourishing of an equal society, and the people of the country are the main reason for the country to be a good country and rich in wealth. If there is unity, there is life, today it is low. Unity is the guiding light for success in all fields. No action can be accomplished by a mob that is at odds with one another and praises enmity.

## முன்னுரை

இன்று உலகில் அமைதி நிலவுவதற்கும் சமமான சமுதாயம் மலர்வதற்கும் மக்களின் ஒருங்கிணைப்பும் மனங்களின் ஒருமைப்பாடும் இன்றியமையாத தேவைகள், நாடு நன்னாடாகவும் வளத்தில் பொன்னாடாகவும் திகழ்வதற்கு முழுமுதற் காரணமாக விளங்குபவர்கள் அந்நாட்டு மக்களே ஆவர். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, இன்றேல் தாழ்வுதான். எல்லாத் துறையிலும் வெற்றிக்கு வழிகாட்டும் வெளிச்சம் ஒற்றுமைதான். ஒருவர்க்கொருவர் முரண்பட்டுப் பகைமை பாராட்டும் கும்பலால் எந்தச் செயலையும் நிறைவேற்ற முடியாது.

## ஒருமைப்பாடு இலையேல் உலகம் இல்லை

நாடு என்பது பல்வேறு குணநலன்கலையும் வேறுபட்ட உழைக்கும் திறனையும் கொண்ட மக்களால் பின்னப்பட்டது. ஆயினும் அவர்கள் அனைவரையும் தேசியம் என்ற இணைப்பு நூலால் ஒருங்கிணைத்து ஒரே நாடாக உருவாக்குவதுதான் தேசிய ஒருமைப்பாடு. ஒருமைப்பாடு இல்லையேல் உலகம் இல்லை. இந்த உண்மை தற்காலத்திற்கும் மட்டுமின்றி முற்காலத்திற்கும் எக்காலத்திற்கும் பொருந்திவருவது. இந்த ஒருமைப்பாட்டு நிலையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கியமான புறநானூற்றில் நம் தமிழன் பேசியுள்ளான்.

## ஒருமைப்பாடு

சமூகத்தில் மக்களை ஒருங்கிணைப்பதற்கு உதவும் கருவிகளாக இனம், மொழி, மதம், சமயம் ஆகியவற்றை உருவாக்கினர் நம் முன்னோர். ஒருமை என்ற சொல்லிற்கு இறையுணர்வு - ஒற்றுமை - ஒரே தன்மை, மனம் ஒன்றுதல் - மனம் ஒருமித்தல் என்று பொருள். ஆங்கிலத்தில் ஐவெநபசயவழைெ என்ற சொல்லிற்கு முழுமையாக்கம் ஒருமைப்பாடு. பல்வேறுபட்ட சமுதாயத்தை ஒரே முழு அமைப்பாக பகுத்தமைக்கும் செயல் என்று பொருள் தரப்படுகிறது.

**நாட்டு எல்லைகள்**

இமயம் முதல் குமரி வரை பரவியுள்ள பூமியே பாரதம் என்று விஷ்ணு புராணம், மகாபாரதம், பாகவதம் ஆகிய நூல்கள் கூறுகின்றன. சங்க நூல்களிலும் நம் எல்லை பற்றியத் தெளிவான கருத்தைப் பல இடங்களில்

**"தென்குமரி, வடபெருங்கடல்,**
**குண குட கடலா எல்லை"** (புறம் 17)
**"வடா அது பனிபடு நெடுவரை வடக்கும்**
**தெனா அது உருகெடு குமரியின் தெற்கும்**
**குணா அது கரைபொரு தொடுகடற் குணக்கும்**
**குடா அது தொன்று முதிர் பௌவத்தின் குடக்கும்"** (புறம் 5)

என்று புறநானூறு அடிகளும்

**"தென்னங் குமரியொயாயிடை"** (பதிற்றுப்பத்து - 11)
**"நெடுவரை வடதிசை எல்லை இமயமாகத்**
**தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்"** (பதிற்றுப்பத்து-43)

என்று பதிற்றுப்பத்து அடிகளாலும் பண்பாட்டால் ஒன்றுபட்டிருந்த நாடு, பல அரசர்களால் ஆளப்பட்ட தென்றாலும் அதை ஒவ்வொரு அரசனும் தன் ஆளுகைக்குக் கீழ்க் கொணர முயற்சித்து வெற்றி பெருவதைப் பெருமையாகக் கொள்வது வழக்கம் என்றும் அறிகிறோம்.

**புறநானூற்றில் பண்பாட்டு ஒருமைப்பாடு**

புறநானூற்றில் சங்க கால மக்களின் மறு பிறப்பு,உலக நம்பிக்கையை வலியுறுத்தும் பாடல்

**"தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்**
**மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்"** (புறம் - 27)
**"உயர்ந்த வேட்டத்து உயர்த்த சினோர்க்கு**
**செய்வினை மருங்கின் எய்தல் உண்டு எனின்**
**தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்**
**தொய்ய உலகத்து நுகர்ச்சியும் இல் எனில்**
**மாறிப் பிறப்பின் இன்மையுங் தரும்"** (புறம் 214)

என்கின்ற புறநானூற்று அடிகளால் சங்க காலத்தில் பாரத பண்பாட்டின் அடிப்படையான மறுபிறப்பு நம்பிக்கையும், வினைப்பயன் பற்றிய எண்ணமும் இருந்தது என்பது புரிகிறது.

உலகம் முழுக்க செஞ்சிலுவைச் சங்க அமைப்பு உண்டு. இதனை நிறுவியவர் ஹென்றி டூணாண்ட் என்ற சுவிஸ் நாட்டு அறிஞர். மனித குலத்திற்கு எவ்வகையில் துன்பம் நேர்ந்தாலும் உடனே அங்கு சென்று முதலுதவி செய்து அம்மக்களின் மறுவாழ்வு வரையிலும் உதவி, செய்யும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் இது. இரு நாடுகளுக்கிடையே ஏற்படும் போராக இருந்தாலும் பூகம்பமாக இருந்தாலும், ஆழிப் பேரலையாக இருப்பினும், எரிமலை வெப்பமாக இருப்பினும், தீவிரவாதத் தாக்குதலாக இருப்பினும், மக்கள் பாதிப்பிற்கு ஆளாகும் போது உடனே சென்று உணவு, உடை, தங்குவதற்குத் தேவையான சூழல்கள் போன்றவைகளை மனிதாபிமான முறையில் உதவி புரிகிறது. இதற்கு நாடு, இனம், மொழி பாராமல் இப்பணி தொடர்கிறது. இச்செயலை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் செஞ்சிலுவைத் சங்கத்தைவிடப் பெரிய அளவில் உதவி புரியும் நோக்கில் சேரமான் பெருஞ்சோற்று உதியன் செயல் புரிந்துள்ளார். இவர் ஆட்சி புரிந்ததோ தென்னிந்தியாவைச் சேர்ந்த அக்காலத் தமிழகம். பாரதப் போர் நடைபெற்றதோ வட இந்தியாவில் குருக்ஷேத்திரம். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் படை வீரர்களுக்கும், போரில் காயம்பட்டவர்களுக்கும் உணவு அளித்து மகிழ்ந்தான் என்ற செய்தியைப் புறநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

**“அலங்குளைப் புரவி ஐவரோடு: சினைவி**
**நிலந்தலைக் கொண்ட பொலம் பூந்தும்பை**
**ஈரைம் பதின்மரும் பொழுது களத்து ஒழியப்**
**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்”**

உணவு அளிப்பது என்பது ஒரு கொடை செயல்தான் என்றாலும் ஒருமைப்பாட்டின் அடிப்படையில் இச்செயலைப் பார்க்கமுடிகிறது. போர்க்களத்தில் மன்னன் உணவு அளித்தது வேறு எந்த உள்நோக்கம் கருதியதாக பாடலில் சான்றாதாரம் இல்லை. எனவே இம்மன்னனின் உதவி கைம்மாறு கருதாத மாண்புறும் பண்பு என்று அறியலாம்.

உலக நியதிப்படி நாம் செல்ல வேண்டும் என்பதை

**“நாடா கொன்றோ ; காடா கொன்றே**
**அவலா கொன்றோ ; மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்,**
**அவ்வழி நல்லை, ; வாழிய நிலனே!** (புறம் 187)

வீட்டிற்குப் பெண்ணும் நாட்டிற்கு ஆணும் என சமூகம் அமைந்த காலகட்டத்தில், ஆடவர் ஒழுக்கமே உலக மேன்மைக்கு அடிப்படை எனப் பகர்வது இச்செய்யுள்.

**ஒற்றுமைக் கொள்கைகள்**

உலக இனம் ஒற்றுமையுடனும், மகிழ்ச்சியாகவும் இருப்பதைத்தான் விரும்புகிறது. ஆனால் இடையில் மதம், இனம், நாடு, மொழி என்ற பிரிவினைவாத நோய் மக்களை

ஆட்கொண்டு விட்டது. இதிலிருந்து விடுதலை அடைய வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் சமூகம் உயர்ந்த நிலையை அடைய முடியும். இதனைக் கருத்தில் கொண்டுதானோ என்னவோ பழந்தமிழ்ப் புலவன், உலக ஒற்றுமைக்கு முதன் முதலில் வித்திட்ட உலகப் புலவன் கணியன் பூங்குன்றனார்

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**

**தீதும் நன்றும் பிறர்தர வாரா** (புறம் - 192)

என்ற பொன்னெழுத்துக்களால் இன்று உலக மனித நேய ஒற்றுமைக்கு வித்திட்ட ஒப்பற்றவன் என்பது புலனாகிறது. அனைவரும் நம் உறவினர். நாம் அனைவரும் ஒரே நாட்டைச் சார்ந்தவர் என்று மக்களிடத்தே வலியுறுத்தும் கொள்கைகள் ஆகும். இதனை அடியொற்றியே வெண்டல் வில்கி என்ற அமெரிக்க அரசியல் அறிஞர் எழுதி வெளியிட்ட “ஓர் உலகம்” எனும் நூலில் வருங்காலத்தில் நம் சிந்தனை உலகளாவிய முறையில் பரந்திருத்தல் வேண்டும் என்ற கருத்தை ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற வழியிலிருந்து எடுத்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சோழ மன்னர்களாகிய நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவரும் பகைவர்கள், நலங்கிள்ளியின் நாட்டிலிருந்து நெடுங்கிள்ளி ஆட்சி செய்யும் உறையூருக்கு இளந்தத்தன் என்னும் புலவர் வருகிறார். பகை நாட்டிலிருந்து வந்தால் இளந்தத்தனை ஒற்றன் எனக் கருதி நெடுங்கிள்ளி அவனை கொல்ல முற்பட்டான். இதனைக் கேள்வியுற்ற கோவூர்கிழார் அவ்விடம் சென்று

**“வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிந் போகி நெடிய**

**என்பது**

**சுரம்பல கடந்து.................**

**......................வரிசைக்கு வருந்தும் இப்பரிசில்**

**வாழ்க்கை பிறர்க்குத் தீதறிந்தன்றோ”** (புறம் 47-1-7)

எனப் பாடினார். இளந்தத்தனை விடுவிப்பது நல்லது. இல்லையேல் உங்களுக்குள் போர் தொடங்குவதை யாரும் தடுக்க முடியாது என்று கூறி அவனை விடுதலை செய்ய வைத்து இருவரையும் சேர்த்து வைத்து ஒற்றுமைக் கொள்கையை வெளிப்படுத்தியுள்ளார்.ஒரு வேளை உணவு இல்லாமல் வாழ்கிறார்கள் என்று ஐ.நா. கணக்கெடுப்புக் கூறுகிறது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தான் புறநானூற்றில் புலவர்களும், மன்னர்களும் பாடல்களாக உலகமக்களுக்குத் தந்து சென்றுள்ளனர். வறுமையுற்ற நிலையில் பெருஞ்சித்திரனார் என்ற புலவன் பொருள் தேடி பரிசில் பெறச் செல்கிறான். புலவனின் குடும்பச் சூழலோ மிகவும் பரிதாபத்திற்குரியதாக உள்ளது. குமணனிடன் சென்று தன் குடும்ப வறுமையை எடுத்துரைக்கிறார். மன்னனும் பொன்னும் பொருளும் பரிசாகத் தந்து அனுப்பி வைக்கின்றான். வந்தவன் தான் மட்டும் அப்பரிசுப் பொருளை அனுபவிக்காமல் தன் மனைவியிடம் கூறும் பாங்கு உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் உரைக்கும் ஒற்றுமைப் பண்பை குறிப்பிடுகிறார்.

**"நின்னயந் துறைநர்க்கும் நீநயந்துறை நர்க்கும்**
**பன்மான் கற்பினின் இளைமுதலோர்க்கும்**
**கடும்பின் கடும்பசி தீர யாடி நின்நெடுங்குறி**
**யெதிர்ப்பை நல்கிலோர்க்கும் இன்னோர்க்**
**கென்னது என்னேடுஞ் சூடியது வல்லாங்கு**
**வாழ்து மென்னது நீயும் கொடுமதி மனைகிழவோயே……"(புறம்** 173)

என்று உண்ண விரும்பியவர்க்கும், நீ விரும்பியவர்க்கும் உன் உற்றார் உறவினர்களுக்கும், பிறகு வாங்கிக் கொள்ளலாம் என்று முன்பு உனக்குக் கொடுத்தவருக்கும். கொடுமையாக கொடும் பசிதீர எல்லோருக்கும் இன்னார்க்கும் என்று இல்லாமல் என்னிடமும் கேளாமல் இப்பொருளை வைத்துக் கொண்டு வளமாக வாழ்வோம் என்று எண்ணாமல் மன்னர் கொடுத்த பரிசினை எல்லோருக்கும் கொடு என்று தன் மனைவியிடம் கூறும் பெருஞ்சித்திரனாரின் கருத்து உலக மக்களுக்குச் சொல்லப்பட்டவையாக அமைந்துள்ளன.

கடையெழு வள்ளல்கள் என்று அழைக்கப்படுகின்ற பாரி, காரி, ஓரி, ஆய் அதியமான், பேகன், நள்ளி போன்றவர்களில் ஒருசிலர் பிற உயிர்களுக்கும் மனித நேய அடிப்படையில் உதவிகள் செய்துள்ளனர். முல்லைக் கொடிக்குத் தேர்க் கொடுத்த பாரி மன்னன் பற்றி படர்வதற்கு ஒரு கொழுக்கொம்பு இல்லை என்பதை பார்த்த பாரியின் மனம் துனுக்குற்று உடனே தான் ஏறி வந்த தேரைக் கொடிபடர்வதற்கு விட்டு விட்டு வந்துள்ளான்.

மயில் குளிரில் நடுங்குவதாக எண்ணி அதற்குப் போர்வைத் தந்த மன்னன் பேகன். பிற உயிர்களிடத்தும் மனிதன் எப்படி மனித நேயத்தோடு நடந்து கொள்ள வேண்டும் என்ற கொள்கையைப் புறநானூறு படம் பிடித்துக் காட்டியுள்ளது. உலக இனம் தழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக புலவர்களும் அரசர்களும் சிறந்து விளங்கினர். உலகப் போரிலும் இச்சண்டையாலும் மாய்ந்து விடும் இல்லையென்றால் அழிந்து விடும். இதனைத் தடுக்கும் வகையில் உலக மக்களிடம் மனித நேயத்தையும் ஒற்றுமை உணர்வையும் வளர்ப்பதற்கு இவ்வகைப்பட்ட செயல்களைச் செய்து நாட்டை வளம் பெறச் செய்தனர். உலக உய்விற்காக சுயநலமின்றி ஒவ்வொரு தனி மனிதனும் தன் கடமையைச் செய்து பிரதி பலன் எதிர்பாராது பிறருக்கு உதவும் உயர்ந்த உள்ளம் கொண்டவனாக ஒற்றுமை உணர்வோடு செயல்படுவதால் இயற்கை அளிக்கும் சிறப்பை விட மேன்மையான புகழை அடைய முடியும். இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் புறநானூற்றில் கடலூர் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற பாண்டிய மன்னர், இந்த உலகம் இன்னும் அழியாது. நிலைபெற்று இருக்கிறது என்றால்

**"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்**
**அழிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத்**
**தமியர் உண்டலும் இலரே" (புறம்** 182 : 1-3)

தேவர்கள் உண்ட அமிழ்தே தனக்குக் கிடைத்தாலும் அதனைத் தானே உண்ணாமல் பிறருடன் கூடி ஒற்றுமையாக உண்ணுவதாலும்,

**“தமக்கென முயலா நோன்தான்**
**பிறர்கென முயலுநர் உண்மையானே”** (புறம் 182 : 8-9)

தன்னலம் கருதாது பிறர்கென உழைக்கும் உண்மையான இயல்புடைய மாந்தர்கள் இன்னும் இந்த உலகில் இருப்பதால்தான் இவ்வுலகம் சிறப்புடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறது எனச் சுயநலம் பெரிதாக என்னாது, தன்னைப் போல் தன்னைச் சுற்றியுள்ளோர், சிறப்புடன் வாழவேண்டும் என ஒற்றுமை உணர்வை வலியுறுத்துவதாகும்.

**முடிவுரை**

சங்கத் தமிழர்கள் மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்றும் மனிதருக்குள் உயர்வு தாழ்வு என்பது இல்லை என்பதை உலகிற்கு உயர்த்தி அதன்படி வாழ்ந்து காட்டியவர்கள். ஒவ்வொரு மனிதனிடமும் அடிப்படை ஒற்றுமை பண்பு இருந்தால் மட்டுமே உலக நாடு ஒற்றுமை சரியாக அமையும். ஒற்றுமை உணர்வானது காலம், காலமாக ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் மக்களை நன்னெறிபடுத்தி வந்துள்ளது. ஐ.நா. மனித உரிமை குழு எனப்பல நிறுவனங்கள் உலக ஒற்றுமைக்காக இன்று உழைத்து வருகின்றனர்.

**துணை நின்ற நூல்கள்**


- புறநானூறு மூலமும், உரையும், டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர்
- தமிழ் இலக்கியங்களில் காணலாகும் மனித நேயமும் மத நல்லிணக்கமும், தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி திருச்சிராப்பள்ளி
- புறநானூறு ஆய்வுக் கோவை தொகுதி ஒன்று, இரண்டு, மூன்று சங்க இலக்கிய ஆய்வு மையம் - மதுரை
- காலந்தோறும் தமிழ்ப்பண்பாடு - ஆய்வுக்கோவை

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 37. 'முதுமை குறித்தும் முதியவர்கள் குறித்தும்' இஸ்லாம் இயம்பும் கருத்தியல்கள் - ஓர் பார்வை

**முனைவர் கா.மைதீன்,**
உதவிப்பேராசிரியர் & துறைத்தலைவர்,
இஸ்லாம் (ம) இஸ்லாமியத் தமிழியல் துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 21.

DOI 10.5281/zenodo.10726168

**Abstract :**

Man evolves little by little from birth. After reaching a certain age, he is reduced to a child-like state. Old people become children in every step, sight, speech, action. It can be seen that the Lord has recorded such a physical change in the Holy Quran. Therefore, this review aims to highlight Islamic ideologies regarding aging and the elderly.

## முகவுரை

மனிதர்களுக்கு முத்தான மூன்று பருவங்கள் உண்டு. அவைகளாவன,

1. குழந்தைப்பருவம் 2. இளமைப்பருவம் 3. முதுமைப்பருவம்

என்பனவாகும். இவற்றில் இளமைப்பருவம் என்பது சுயமாக இயங்கும் ஆற்றல் உள்ள அபார சக்திமிக்க அழகான பருவமாக அமைந்திருக்கிறது. மற்ற இரண்டு பருவங்களான குழந்தைப் பருவமும் முதுமைப் பருவமும் பிறரைச் சார்ந்திருக்கிறது. முதியோர்கள் ஒருவகையில் குழந்தைகளைப் போன்றவர்கள் என்று இறைவசனம் நயமாக எடுத்துரைக்கிறது. "நாம் எவரையும் அதிக நாட்கள் உயிருடன் வாழ்ந்திருக்கும் படி செய்தால் அவருடைய நிலைமையைத் தலைகீழாக்கி (சிறிய குழந்தையைப் போல் ஆக்கி) விடுகின்றோம். இதனை, அவர்கள் அறிந்துகொள்ள வேண்டாமா" (திருக்குர்ஆன். 36:68)

மனிதன் பிறந்தது முதல் சிறிது சிறிதாக பரிணாம வளர்ச்சி அடைகின்றான். ஒரு குறிப்பிட்ட வயோதிகப் பருவத்தை அடைந்த பிறகு குழந்தையைப் போன்றே நலிந்த நிலைக்கு தள்ளப்படுகின்றான். நடையில் பார்வையில் பேச்சில் செயலில் ஒவ்வொன்றிலும் முதியவர்கள் குழந்தைகளாக மாறிவிடுகிறார்கள். இத்தகைய உடல் மாற்றத்தை இறைவன் திருக்குர்ஆனில் பதிவு செய்துள்ளதை காணமுடிகிறது. எனவே, முதுமை குறித்தும் முதியவர்கள் குறித்தும் இஸ்லாம் இயம்பும் கருத்தியல்களை எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

## முதுமை

ஒருவரின் உடலிலுள்ள கலங்களிலும் தொகுதிகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு அவரது செயற்பாடுகளில் படிப்படியாக தேய்வு ஏற்படுவதே முதுமை எனப்படும். அதாவது, சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த உடல் அங்கங்களில் படிப்படியாக தோய்வும் பலவீனமும் ஏற்பட ஆரம்பிக்கின்றது.

- மூளையின் செயற்பாட்டின் நிலை குறைவடைதல்
- மூட்டுக்களில் தசைகளில் பலவீனம் ஏற்பட்டு மூட்டுக்களில் தேய்வு ஏற்படுதல்.
- நரம்புகளில் தளர்ச்சி ஏற்படுதல்.
- தசைகள் மெலிதல்.
- தோள்கள் சுருங்குதல்
- மயிர்கள் உதிர்தல் மற்றும் நரை ஏற்படுதல்
- புலனுறுப்புகளில் குறைபாடுகள் ஏற்படுதல்
- நோய் எதிர்ப்புச் சக்திகள் குறைந்து தொற்றுநோய்கள் ஏற்படுதல் போன்றவை காணப்படுதல் போன்றன முதுமையின் இயல்பான செயல்பாடுகளாகும்.

"ஐ.நாவின் கூற்றுப்படி 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் முதியோர் ஆவர். இன்றைய நவீன மருத்துவ வளர்ச்சியின் காரணமாக முதியோர் தொகை அதிகரித்து வருகின்றது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி ஒவ்வொருவரும் உயிர் வாழ்வதற்கான வயதெல்லை சராசரியாக 20 வருடங்களாக அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. 2020 இல் இருந்து முதியோர் வயது 73 ஆக அதிகரித்திருக்கிறது என்றும் கூறப்படுகின்றது. இன்று முதியோரிகளில் பெரும்பாலானவர்கள் கைத்தொழில் அதிகம் மேற்கொள்ளும் நாடுகளிலேயே வாழ்கின்றதாகச் சொல்லப்படுகிறது. 2020 ஆண்டில் உலகில் முதியோர் தொகை ஒரு பில்லியனாகி விட்டது. இவர்களில் 700 மில்லியன் பேர் வளர்முக நாடுகளில் வாழ்கிறார்கள் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

1998 ஆம் ஆண்டு உலக மக்கள்தொகை நிதியம் மேற்கொண்ட மதிப்பீட்டின்படி இப்பொழுது ஒவ்வொரு பத்து பேருக்கும் ஒருவர் முதுமை அடைந்தவராக இருக்கின்றார்கள். இத்தொகை 2050 ஆம் ஆண்டில் ஐந்து பேருக்கு ஒருவர் என்ற படியும், 2150 ஆம் ஆண்டு மூவருக்கு ஒருவர் என்ற படியும் மாற்றமடையும் எனக் கணித்திருக்கிறார்கள்.

**இஸ்லாம் - (இளமை - முதுமை)**

"அல்லாஹ் உங்களை (ஆரம்பத்தில்) பலவீனமான நிலைமையில் உற்பத்தி செய்கிறான். அந்தப் பலவீனத்திற்குப் பின்னர் அவனே (வாலிப) பலத்தையும் கொடுக்கிறான். அந்த பலத்திற்குப் பின்னர் வயோதிகத்தையும் பலவீனத்தையும் கொடுக்கிறான். (இவ்வாறெல்லாம்) அவன் தான் விரும்பியவாறு உங்களை ஆக்குகிறான். அவன் (அனைத்தையும்) நன்கறிந்தவனும் மிக்க ஆற்றலுடையவனாகவும் இருக்கின்றான்" (திருக்குர்ஆன் 30:54)

"உங்களைப் படைத்தவன் அல்லாஹ்தான். பின்னர் அவனே உங்களை மரணிக்கச் செய்கிறான். கற்றறிந்திருந்தும் ஒன்றுமே அறியாதவர்களைப் போல் ஆகிவிடக்கூடிய பலவீனம் தரும் முதுமை வரையில் வாழ்ந்திருப்பவர்களும் உங்களில் உண்டு. (உங்களில்

யார் யாரை எவ்வளவு காலம் விட்டுவைக்க வேண்டுமென்பதை) நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனும் (அவ்வாறு செய்ய) மிக்க ஆற்றலுடையவனாகவும் இருக்கிறான்” (திருக்குர்ஆன் 16:70)

**முதுமையை மதிக்கும் இஸ்லாம்**

முதியவர்களுக்கு ஏற்படும் உடல் மாற்றங்கள் மற்றும் ‘நரைமுடி’ ஏற்படுவது போன்றவை அனைத்தும் கண்ணியத்தின் அறிகுறிகளாகும். அவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதின் குறியீடுகளாகும். “நபி (ஸல்) அவர்கள் நரைமுடிகளைப் பிடுங்குவதைத் தடுத்தார்கள். மேலும் ‘அது இறைவிசுவாசியின் ஒளி’ என்றும் கூறினார்கள்”. (அறிவிப்பாளர்: அமர்பின்ஜீப் (ரலி) திர்மிதி) “நம்மில் பெரியவர்களை கண்ணியப்படுத்தாதவரும் சிறியவர்கள் மீது இரக்கம் காட்டாதவரும் என் சமுதாயத்தைச் சார்ந்தவரல்லர் என நபி (ஸல்) கூறினார்கள்”. (அறிவிப்பாளர் : உப்பாதாபின் ஸாமித் (ரலி) அஹ்மது)

**முதியோர்களை முதன்மைப்படுத்தும் இஸ்லாம்**

நன்மை - தீமை, இலாபம் - நட்டம், இன்பம் - துன்பம், உயர்வு - தாழ்வு, வெற்றி - தோல்வி போன்ற வாழ்வின் அனைத்து கட்டங்களிலும் முதியோர்களிடம் முதன்மையாக ஆலோசனை கேட்கவேண்டும். முதியோர்கள் ஒரு சமூகத்தின் விலைமதிக்க முடியாத நட்சத்திரங்கள். பழுத்த அனுபவங்களைக் கொண்டவர்கள். அவர்களுக்கு அனைத்து காரியங்களிலும் முதல் மரியாதை கொடுக்க வேண்டும்.

‘அப்துல்லாஹ் பின் ஸஹ்ல்இ (ரலி) அவர்களும் முஹய்யிஸா பின் மஸ்ஊத் (ரலி) அவர்களும் கைபர் பிரதேசத்தை நோக்கிச் சென்றார்கள். அன்று அங்கு (முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்குமிடையே) சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. (கைபருக்குச் சென்றதும்) அவர்களிருவரும் தனித்தனியாகப் பிரிந்துவிட்டனர்’. “அப்துல்லாஹ் பின் ஸஹல் கொல்லப்பட்டு ரத்த வெள்ளத்தில் மிதந்தபடி விழுந்து கிடக்க அங்கு முஹய்யிஸா வந்தார்கள். பிறகு அவர்களை அடக்கம் செய்தார்கள். இதன்பிறகு கொல்லப்பட்டவரின் சகோதரர் அப்துர் ரஹ்மான் பின் ஸஹ்ல் முஹய்யிஸா அவரது சகோதரர் ஹீவைய்யிஸாவும் நபியவர்களிடம் வருகை புரிந்தார்கள். அப்துர் ரஹ்மான் பின் ஸஹல் அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் பேசிக்கொண்டே சென்றார்கள். நபி (ஸல்) அவர்கள் ‘பெரியவர்களைப் பேசவிடு பெரியவர்களைப் பேசவிடு’ என்று கூறினார்கள். அந்த மூவரில் அப்துர் ரஹ்மான் பின் ஸஹல் (ரலி) வயதில் சிறியவராக இருந்தார்கள். உடனே அவர் (வாய் மூடி) மௌனமானார். பிறகு முஹய்யிஸாவும், ஹீவைய்யிஸாவும் நபியிடம் அப்துல்லாஹ் பின் ஸஹ்ல் (ரலி) கொல்லப்பட்டது குறித்து பேசினார்கள்” (அறிவிப்பாளர் : ஸஹ்ல்பின் அபீ ஹஸ்மா (ரலி) புகாரி : 3173)

“நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், நான் கனவில் பல் துலக்கும் குச்சியைக் கொண்டு பல் துலக்குவதாக என்னைக் கண்டேன். என்னிடம் இருவர் வந்தனர் இருவரில் ஒருவர்

மற்றொருவரை விட பெரியவராக இருந்தார். எனவே, நான் அந்தக் குச்சியை சிறியவருக்கு வழங்கிவிட்டேன். அப்போது எனக்கு 'பெரியவரிடம் கொடுப்பீராக' என்று கூறப்பட்டது. நானும் அவ்விருவரில் பெரியவருக்கு அதை வழங்கிவிட்டேன்". (அறிவிப்பாளர் : இப்னுஉமர் (ரலி) நூல் : முஸ்லிம்)

"ஒரு கூட்டத்துக்கு தலைமையேற்று தொழுகை நடத்தக்கூடியவர் யாரென்றால் அவர்களில் மிக அதிகமாக திருக்குர்ஆனை ஓதியவராக இருக்க வேண்டும். இந்தத் தகுதியில் அனைவரும் சரி நிகரானவர்களாக இருந்தால், அடுத்து அவர்களில் மிக அதிகமான நபிமொழிகளை தெரிந்தவராக இருக்கவேண்டும். அதிலும் அனைவரும் சரி நிகரானவர்களாக இருந்தால் அவர்களில் முதன்முதலாக ஹிஜ்ரத் (நாடு துறந்து செல்வது) புரிந்தவர் ஆவார். அதிலும் அவர்கள் அனைவரும் சரிசமமானவர்களாக இருந்தால் அவர்களில் வயதில் மூத்தவர் தலைமையேற்று தொழுகை நடத்தட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்" (அறிவிப்பாளர் : அபூமஸ்ஊத் (ரலி) நூல் : முஸ்லிம்)

பெரியோர்களிடம் நடந்து கொள்ளும் முறை குறித்து ரபீஉ (ரஹ்) கூறுவதாவது, 'எனது ஆசிரியப் பெருந்தகை இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் என்னை பார்த்துக் கொண்டிருக்கும் போது நான் தண்ணீர் அருந்தத் துணியமாட்டேன்' எனும் பணிவடக்கத்தை தெரிவிக்கிறார். மக்கா வெற்றியின்போது நபித்தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களின் தந்தை தூய இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்றுக்கொண்டு நபி (ஸல்) அவர்களை தரிசிக்க வரும்போது நபி (ஸல்) அவர்கள் அந்தப் பெரியவரைப் பார்த்து 'நீங்கள் ஏன் என்னைப் பார்க்க வரவேண்டும்' நீங்கள் உங்கள் வீட்டிலேயே இருந்திருக்கலாமே. நாங்கள் வந்து உம்மை தரிசித்திருப்போமே' என்று பணிவுடன் கூறினார்கள்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) கூறுவதாவது, 'நான் எனது ஆசிரியப் பெருந்தகை இமாம் மாலிக் (ரஹ்) அவர்களுக்கு முன்பு அமர்ந்து புத்தகம் படிக்கும்போது புத்தகத்தின் ஒரு பகுதியை திருப்பும்போது மெதுவாக திருப்புவேன். ஏனென்றால் அதன் சப்தத்தின் தொந்தரவு அவர்கள் கேட்கக்கூடாது என்பதற்காக' என்கிறார். இவ்வாறு இஸ்லாமிய மார்க்கம் முதியோர்களை அதிகம் மதிக்கிறது. முதியோர்களின் நலனை அதிகம் பாதுகாக்கிறது. குழந்தைகளை விழுந்து விழுந்து மனமுவந்து ஆசைஆசையாய் கவனிப்பது போன்று முதியோர்களையும் கவனிக்கும்படி தூண்டுகிறது.

**பெரியோர் உரிமையும் சிறியோர் கடமையும்**

'குழந்தைகள் பெற்றோருக்குச் செய்யும் உரிமை போன்று சிறியவர்கள் மீதும் பெரியோருக்குச் செய்யும் உரிமை கடமையாக உள்ளது' என்பது நபிமொழியாகும். "ஒரு வாலிபர் வயது முதிர்ந்தவருக்கு மரியாதை செலுத்தும் போது வாலிபர் வயோதிக பருவத்தை அடையும்போது அவருக்கு மரியாதை செலுத்தும் ஒருவரை இறைவன் ஏற்படுத்தாமல் விடமாட்டான் என நபி (ஸல்) கூறினார்கள்" (அறிவிப்பாளர் : அனஸ் (ரலி) நூல் : திர்மிதி)

"அபிவிருத்தி என்பது முதியோர்களுடன் உள்ளது என நபி (ஸல்) கூறினார்கள்" (அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி) நூல் : ஹாகிம்) அந்திம காலத்தில் அனைத்தையும் இழந்து பரிதாபமாக நிற்கும் முதியோருக்கு இளையோரும் அவரின் குடும்பத்தினரும் ஆதரவுக்கரம் நீட்டவேண்டும். அவர்களை முதியோர் இல்லத்தில் சேர்க்காமல் தமது இல்லத்திலேயே வைத்து கண்ணின் இமைபோன்று அவர்களை பாதுகாக்க வேண்டும். அவர்களின் உணவு உடை உறைவிடம் மருத்துவ வசதி போன்றவற்றிற்கு குழந்தைகள் மனதார பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு செய்தால் பெரியோர்களின் அபிவிருத்தியும் பிரார்த்தனையும் அவர்தம் குடும்பத்தாருக்கும் கிடைக்கும் என்பது நிதர்சனமான உண்மை.

**முதியோரை மதிக்கும் இஸ்லாம் (தாய் தந்தை - மகன் மகள்)**

உங்கள் தாய் தந்தையர்களில் எவரேனும் முதுமை அடைந்து விட்டால் அவர்களிடம் கடிந்து பேசாதீர்கள். 'சீ' என்று கூட சொல்லாதீர்கள். மென்மையாக கடந்து கொள்ளுங்கள்' என திருக்குர்ஆன் எடுத்தியம்புகின்றது. முதியோர் இல்லங்கள் பெருகிவரும் இன்றைய உலகில் மேற்கூறிய இறை வசனம் கூறும் கருத்து எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறியமுடிகிறது. நபி (ஸல்) ஒருமுறை 'சிறியோர்களுக்கு இரக்கம் காட்டாதவரும் முதியோருக்கு மரியாதை செய்யாதவரும் நம்மை சார்ந்தவன் அல்ல' என்றார்கள். பெரியவர்கள் சிறியவர்களுக்கு இரக்கம் காட்டவேண்டும். சிறியவர்கள் பெரியவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்ற இரண்டுமே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில், மனித சமுதாயத்தில் இருபெரும் பிரிவுகள் என்பன இவை இரண்டும் தான்.

மேற்கூறிய நபிமொழி என்பது இருபிரிவினருக்கும் இடையே ஒரு பாலம் போல அமைக்கிறது. முதியவர்களுக்கு உரிய மரியாதை சிறியவர்கள் கொடுக்கும் போது சிறியவர்களுக்கு காட்டவேண்டிய இரக்கத்தை முதியவர்கள் காட்டுவார்கள். நபி (ஸல்) அவர்களுடைய தாய் தந்தை அவர்கள் சிறு வயதில் மரணித்து விட்டனர். நபி (ஸல்) அவர்களுக்கு பால் புகட்டிய ஹலீமா (ரலி) அன்னையார் அவர்கள் ஒருமுறை நபி (ஸல்) அவர்களின் திருச்சமூகத்திற்கு வந்தார்கள். அப்பொழுது நபிகளார் எழுந்து சென்று தன் மேல் போத்தியிருந்த துண்டை எடுத்து கீழே விரித்து அதில் தனக்கு பாலூட்டிய ஹலீமா (ரலி) அவர்களை அமரச் செய்தார்கள். இது தான் தாய்க்கு செய்ய வேண்டிய கண்ணியம்.

ஒருவன் தன் தந்தைக்கு எல்லாமே தெரியும் என்று நினைப்பது 10 வயதிற்கு முன்னும் 40 வயதிற்கு பின் மட்டுமே. ஆனால் அப்பொழுது அதைத் தெரிந்து ஒரு பயனும் இருக்கப் போவதில்லை. நாம் நம் பெற்றோர்களை நம் பிள்ளைகள் முன்பு மரியாதைக்குறைவாக நடத்தக்கூடாது. அது அவர்களது மனதில் பதிந்து விடும். அவர்கள் நாளை நம்மையும் நம்முடைய முதுமையின் பொழுது இப்படித்தான் அழைக்கப் போகிறார்கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்க போவதில்லை.

முதுமை என்பது தள்ளாமையின் வயது. அவர்களால் எதுவும் செய்யஇயலாது. சிறுசிறு விழாக்களின் போது குடும்பத்தில் உள்ள பெரியவர்களை சந்தித்துப்பேசி அன்பையும் பரிசுகளையும் பரிமாறிக்கொண்டு அவர்களை மகிழ்விக்க நாம் முயற்சிக்க வேண்டும். பிள்ளைகள் செய்யும் நூறு தவறுகளை பெற்றோர் மன்னிக்க தயங்குவதில்லை. ஆனால்

பெற்றோர் தெரியாமல் செய்யும் ஒரு தவறைக்கூட பிள்ளைகள் மன்னிக்க தயாராவதில்லை. என்ன விந்தை இந்நிலை மாறவேண்டும்.

நபி (ஸல்) சொன்னார்கள், ஒரு கூட்டத்தில் இருக்கும் முதியவர் அவர்களுக்கு ஒரு தீர்க்கதரிசியை போன்றவர். இதனை எப்பொழுது நாம் புரிந்து கொள்கிறோமோ அப்பொழுது நம்மீது இறையருள் மழை பொழியும்'. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் கூறியதாக அழகான முறையில் கூறிக்காட்டுவார்கள். 'நீங்கள் உணவளிக்கப்படுவது எல்லாம் உங்களில் பலகீனமானவர்களைக் கொண்டு தான்' என்றார்கள். முதியோர்கள் தான் பலகீனமானவர்கள் என்பதிலே இருவேறு கருத்திற்கு இடமிருக்க முடியாது. நாம் நாமாக சம்பாதிக்கிறோம் என்று நினைத்துக் கொள்கிறோம். ஆனால் இறைவனோ உங்களுடைய அத்தியாவசிய தேவை முதல் ஆடம்பர தேவை வரை அனைத்தையும் நிறைவேற்றுவது பலகீனமானவர்கள் மூலமாகத்தான் என்கிறார்.

அன்று உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் மழை பொய்த்தது. அப்போது உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு பிரார்த்தனை செய்தார்கள். 'இறைவா, எங்களுக்கு நீ நபிகளாரின் தந்தையின் சகோதரரான அப்பாஸ் (ரலி) அவர்களின் பொருட்டினால் மழையை பொழியச்செய்வாயாக' என்றார்கள். மழையும் பொழிந்தது. காரணம் அன்னார் முதியவர் என்பதுதான் என்பதனை வரலாறுகளின் வாயிலாக நாம் காணமுடிகின்றது.

மேலும், நம்முடைய சமுதாயத்திற்கு முந்தைய சமூக மக்கள் பாவம் செய்த உடனேயே அழிக்கப்பட்டார்கள். ஆனால் நாம் செய்யும் பாவத்திற்கு கொஞ்சமும் குறைவில்லை. ஆனால் நாம் அழிக்கப்படாமல் இருக்கின்றோம். அதற்கு காரணம் என்னவென்று நாம் சிந்தித்ததுண்டா. ஆம், அதற்குக் காரணமும் முதியோர்கள் தான் என்பார்கள். ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் 'உங்களில் கூன் விழுந்த முதியோர்கள் மட்டும் இருந்திராவிட்டால் உங்கள் மீது வேதனை கூடியிருக்கும்' என்றார்கள்.

நாயகத்தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களின் தந்தை தன் தள்ளாமை வயதில் நபி (ஸல்) அவர்களை பார்க்கவேண்டும் என பேராவல் கொண்டார்கள். அந்த பேராவலை நிறைவேற்றும் பொருட்டு அவர்களும் தன் தந்தையை நபியின் திருச்சமூகத்திற்கு தூக்கிக்கொண்டு வந்தார்கள். இதைக்கண்ட இரக்கமே உருவான இறைவனின் திருத்தூதர் 'என்ன அபூபக்கரே! இப்படிச்செய்து விட்டீர்! நீர் சொல்லியிருந்தால் உங்கள் தந்தையைப் பார்க்க நானே வந்திருப்பேனே' என்றார்களாம். வலது புறத்திலிருந்து தான் எதையும் ஆரம்பிக்க வேண்டும் என்பது இஸ்லாம் காட்டும் வழிமுறை. அது செருப்பு அணிவதாயினும் சரி தலைமுடி சீவுவதாக இருப்பினும் சரி. ஆனால் முதியவர் ஒருவர் இடப்புறம் அமர்ந்திருந்தால் அவருக்கு முன்னுரிமை தரவேண்டும் என்பதும் இஸ்லாம் நமக்கு காட்டும் வழிமுறையாகும். இஸ்லாம் காட்டும் வழிமுறைகளை நாம் அனைவரும் முழுமையாகப் பின்பற்றினால், அல்லாஹ் அனைத்து நிலையிலும் நமக்கு உதவி புரிவான் என்பதே நபிகள் வாக்கு.

**நிறைவுரை**

உலகிலுள்ள ஒவ்வொருவரும் நம்மை பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய நமது பெற்றோர்கள் முதுமையை அடையும்போது அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளையும் அவர்களது நிலைமைகளையும் நாம் அறிந்துகொள்ள கடமைப்பட்டுள்ளோம். குழந்தையாக,

சிறுவர்களாக, வாலிபர்களாக நாம் இருக்கும்போது நமது பிரச்சினைகளையும் நிலவரங்களையும் நன்கு கவனித்து நம்மை வளர்த்து ஆளாக்கியவர்கள் நமது பெற்றோர்கள். ஒவ்வொரு பருவத்திலும் ஒரு வகையான பிரச்சினையை நாம் சந்திக்கின்றோம். அது போலவே பெற்றோரும் முதுமையிலும் பிரச்சினைகளை சந்திக்கின்றார்கள். அவர்களது பிரச்சினைகளையும் மனோ நிலைகளையும் பிள்ளைகள் அறிந்து அன்புடன் நடத்தவேண்டிய கடமைப்பாடு உள்ளது. முதுமைப்பருவம் என்பது குழந்தைப்பருவத்தை விடவும் சிக்கலானது. இப்பருவத்திலுள்ள நமது பெற்றோரை பாதுகாப்பதும் பராமரிப்பதும் அல்லாஹ்வின் திருப்தியையும் அன்பையும் பெற்றுத்தரக் கூடிய காரியமாகும். அது மட்டுமன்றி பெற்றோரை பராமரிப்பது பிள்ளைகளின் கடமையுமாகும். இன்று பெற்றோர் முதுமையை அடைகிறார்கள். நாளை நாமும் முதுமையை அடையக்கூடியவர்களாக இருக்கின்றோம். எனவே, முதுமை பற்றியும் முதுமையில் ஏற்படக்கூடிய உளவியல் பிரச்சினைகள் பற்றியும் அறிந்துகொள்வது கட்டாயமானதாக இஸ்லாம் வழிநின்று இக்கட்டுரை விளக்க முற்பட்டுளளது.

**துணைபுரிந்த நூல்கள்:**


- அப்துற் - ரஹீம் - ‘இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்’ தொகுதி 1,2,3. யுனிவர்ஸல் பிரிண்டிங் ஹவுஸ், 11 சுல்தான் தெரு, சென்னை. முதற்பதிப்பு - 1979
- அப்துல் ரகூப் பாகவி.ஆர் (மொழிபெயர்ப்பு ஆசிரியர்) - ‘அண்ணல் நபி’ இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், 78 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12, முதற்பதிப்பு - 1995
- ‘திருக்குர்ஆன் மூலமும் தமிழ் விளக்கவுரையும்’ ஆறாம் பதிப்பு (பாகம் 1,2) 1995 இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், 78 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
- எஸ்.எம்.ஹனிபா. இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி. தமிழ் மன்றம், கண்டி, 1982.
- எஸ்.ஏ.செய்யிது ஹஸன் மௌலானா. இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள். அரசு வெளியீடு, கொழும்பு, இலங்கை, முதற்பதிப்பு 1968.
- எஸ்.எம்.ஹனிபா. இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி. தமிழ் மன்றம், கண்டி, 1982.
- பி.ஜைனல் ஆபிதீன் - மனிதனுக்கேற்ற மார்க்கம், நபீலா பதிப்பகம், முதற்பதிப்பு 2019.
- பி.ஜைனல் ஆபிதீன் - திருமறையின் தோற்றுவாய் (அல்ஹம்து சூரா விளக்கம்) நபீலா பதிப்பகம், முதற்பதிப்பு 2020.
- பி.ஜைனல் ஆபிதீன் - மாமனிதர் நபிகள் நாயகம், நபீலா பதிப்பகம், 2018.
- மௌலவி நூஹ் மஹ்ழரி - முன்மாதிரி முஸ்லீம் இளைஞன் இஸ்லாமிய அறக்கட்டளை நிறுவனம் வெளியீடு, முதற்பதிப்பு 2019.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 38. இலக்கியங்களின் பெண்ணியச் சிந்தனைகள்

**திருமதி மு. கற்பகச்செல்வி ,**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர் ,
ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மேட்டமலை, சாத்தூர்,

DOI 10.5281/zenodo.10726225.

**Abstract :**

During the period when women fell into the mire of slavery, some nobles appeared. They put knowledge in the hands of women and went ashore. Father Periyar and National Poet Bharati are notable among them. Their patriotism, language devotion, religious unity, abolition of female slavery, intermarriage, workers' welfare, etc., were praised as motherhood and sovereignty. Now we will see about the way women have fought against the hardships they have faced in their lives and the main purpose of feminism. When we look at the lines "Women are the eyes of the nation" it can be said that women are respected at all levels of the nation.

## முன்னுரை

பெண்கள் அடிமை சேற்றில் விழுந்த காலத்தில் சில பேராண்மையாளர்கள் தோன்றினர். பெண்களின் கையில் அறிவு கோழை தந்து கரையேற்றினர். அவர்களில் தந்தை பெரியார், தேசிய கவி பாரதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் தேசப்பற்று, மொழி பற்று, மத ஒற்றுமை, பெண் அடிமை ஒழிப்பு, கலப்பு மணம், தொழிலாளர் நலம் என்று அனைத்திலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட திருவிக பெண்மையை தாய்மையாக, இறைமையாக நினைத்துப் போற்றினர். பெண்கள் தங்கள் வாழ்வில் அடைந்துள்ள துன்பங்களை எதிர்த்துப் போராடிய விதத்தை பற்றியும் பெண்ணியத்தின் முக்கிய நோக்கத்தை பற்றியும் இனி காண்போம் "பெண்கள் நாட்டின் கண்கள்" என்ற வரிகளை நோக்கும் போது தேசத்தின் எல்லா நிலைகளிலும் பெண்களை மதிக்கப்படுகின்றனர் என்று கூறலாம்.

## பெண்ணியம்

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்க்கு உரிய என்ப"** என்றும்
**"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அறுமையும் பெண்பாலன"** என்றும்

பெண்மையின் குணநலன்களை உரைக்கிறது தொல்காப்பியம். இத்தகைய பெண்களை பாடாத புலவர்களும் இல்லை, படைப்பாளர்களும் இல்லை, படைப்புகளும் இல்லை எனலாம். கவிதையையும் கற்பனையையும் பிரிக்க முடியாதது போல பெண்களையும் படைப்புகளையும் பிரிப்பது என்பது அரிது. சமூகத்தின் ஆதிக்க தலைகளின் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு பெண்கள் தங்களிடையே உரிமைகளுக்காக போராடும் தன்மையை பெண்ணியமாகும். ஆணை போலவே பெண்ணும் தன் எண்ணங்களுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப சுதந்திரமாக வாழும்

வாழ்வியல் முறையை பெண்ணியமாகும். பெண்ணியமானது அடிமைகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு விழிப்புணர்வையும் சுதந்திர வேட்கையும் மூட்டுகிறது. பெண்ணியம் என்பது பெண் ஒருத்தியின் சிக்கல்களை மட்டும் ஆராயாமல் ஒட்டுமொத்த பெண்ணியத்தின் சிக்கல்களையும் ஆராய்கிறது.

**சங்க இலக்கிய மகளிர் விறலியர்**

பெண்ணியம் தொடர்பான சித்தாந்தங்கள் பேசும் இக்கால சூழலில் ஒரு பெரும் தமிழ் இலக்கிய வரலாற்றின் பெண் கவிஞர்கள் இன்னும் சரியாக பதிவாகாத நிலையில் எந்த சித்தாந்தங்களும் தோன்றாத அக்கால கட்டத்திலும் உருப்பெற்ற தமிழ் இலக்கியங்களிலுள்ள பெண்பாற் புலவர்களின் நிலை கண்டிப்பாக இரட்டிப்பாகத் தான் இருந்திருக்கும் என்பது கண்கூடு. சங்க இலக்கிய மேன்மைகளில் இதுவும் ஒன்றாக பறைசாற்றுவது நகைக்குரியது. சங்க இலக்கியங்களை வாசிக்கும்போது குறிப்பிட்ட எண்ணிக்கையின் பெண் கவிஞர்கள் இருந்தபோதிலும் மகளிர் நிலை பல்வேறு கூறுகளின் கேள்விக்குறி விடயங்களை தனக்குள் கொண்டுள்ளன என்பது விளங்கும்.

சங்ககால மகளிர் நிலை என்பது பெண்பாற் புலவர்கள், பெண் மாந்தர்கள் என்ற இரு தன்மைகளில் வெளிப்படுத்துகின்றன. சங்க கால பெண்பாற் புலவர்கள் குறித்த எண்ணிக்கையில் பல கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன என்பதை ஆராய்ந்து நாம் முருகேசப்பாண்டியன் பெண் கவிஞர்களின் எண்ணிக்கை குறித்து தமிழர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன என்கிறார். பெண் கவிஞர்களின் எண்ணிக்கையினை

- உ வே சா 38 எனவும்
- எஸ் வையாபுரி பிள்ளை 30 எனவும்
- ந சஞ்சீவி 25 எனவும்
- அவ்வை நடராசன் 41 எனவும்

குறிப்பிடுகின்றனர்.

**சங்க இலக்கியங்களின் பெண் கல்வி**

வேத காலத்தைப் போலவே சங்க காலத்திலும் ஆண் பெண் இருபாலரும் கல்வி கற்று இருந்தனர் என்பதற்கு பெண்பாற் புலவர்களும் அவர்தான் பாடல்களுக்கு சான்றாகும். இதிலிருந்து சங்க காலப் பெண்கள் கல்வி சுதந்திரமும் படைப்பு சுதந்திரமும் பெற்றிருந்தார்கள் என்பது தெரிய வருகிறது.

அவ்வையார், வெள்ளிவீதியார், காக்கை பாடினியார், குறமகள் இளவெயினி, பாரி மகளிர், ஆதிமந்தி ஆகிய பெண்களின் பாடல்களை நாம் இலக்கியங்களில் அறிந்து இருந்தாலும் ஓதலின் பிரிவு ஆண்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தது என்பதை இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது.

**தொல்காப்பியர் காட்டும் பெண்கள்**

தொல்காப்பியம் தமிழ் மொழியின் அமைப்பையும் தொன்மையையும் எடுத்து கூறும் பலம்பெரும் நூலாகும். வேறு எந்த மொழியிலும் இல்லாத பொருள் அதிகாரத்தை தன்னகத்தை கொண்ட பெருமையுடையது இந்நூல். தொல்காப்பியம் காட்டும் பெண்களின் இயல்பானது தலைவியின் தன்மை, தோழியின் அறிவுத்திறம், செவிலியின் செயல், நற்றாய் மற்றும் பரத்தையர் ஆகியோரின் பண்புகள் ஆகியவற்றை தெளிவு படுத்துகிறது.

**தொழில்துறையில் பெண்கள்**

பெண்கள் ஆணுக்கு நிகராக பல தொழில்களை செய்து முன்னேற்றம் அடைந்து வருகின்றன. **"வெற்றிப்பாதையில்"** எனும் தொடர்கட்டுரையில் பெண்கள் தங்களது தொழில் முன்னேற்ற நிலையை அவர்களே கூறுவது போன்று இடம் பெற்றுள்ளன. இன்றைய சமுதாயத்தின் பலதரப்பட்ட துறையில் பெண்கள் புதிய வேலைகளில் ஈடுபடுகின்றனர். விற்பனை பெண்கள், குடிகளை சிறைபிடிக்கும் காரிகைகள், பெண் காவலர்கள், ஆண்களுக்கு மட்டும் உரிய கதகளியைத் தொழில் ரீதியில் நிகழ்த்தும் பெண்கள், திரைக்கதை அமைத்து இயங்கும் பெண்மணி, திரைப்பட வசன கர்த்தா, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர், பயிற்சி சிகிச்சையாளர்கள், வழிகாட்டிகள், தொலைபேசி இயக்குபவர், கிரிக்கெட் வீராங்கனைகள், ராணுவ பெண்மணிகள், கணிப்பொறித் துறை என்றும் பல்வேறு துறைகளில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

**பெண்ணின் தியாகம்**

பொறுமையின் வடிவாகியவர் பெண் துன்பப்பொறையில் விளைவது இன்பம் இவ் இன்ப நிலை பெற்றவர் அல்லோ எலும்பையும் அன்பால் பிறருக்கு அளிப்பவர். இத்தகைய பண்பு பெண்களுக்கு இயல்பாய் அமைந்துள்ளது. அவள் எப்பொழுதும் தனக்கென ஒன்றும் கொள்வதில்லை. பிள்ளைகளை வஞ்சிக்கும் தாய் கிடையாது. தன்னுயிர்க்கு என ஒன்று இருப்பின் அதை பிள்ளைகளுக்காகவே தாய் செய்யும் தியாகத்தை எழுத்தால் எழுத முடியாது. சுருக்கமாக சொன்னால் பெண் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவள் என்று கூறலாம். வெண்மையானது யாது? அடக்கம், பொறுமை, தியாகம், ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும். பெண்கள் மேல் இருக்கும் அடையாளம் தாய் என்ற புனைவு தான் பெண்ணை அடிமைப்படுத்த ஆண் கண்டுபிடித்த ஆயுதங்களிலேயே அது அற்புதமானது. இந்த தாய்மை என்று ஆயுதம் பெண் இதில் தான் முழுமை அடைகின்றாள். திருமணம் என்பது ஆயிர காலத்து பயிர், திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயப்படுகின்றன என்றெல்லாம் திருமண வாழ்வை பற்றி நம்பிக்கைகள் காலம் காலமாக இருந்து வருகின்றன. இதனை,

**"கல்யாண நேரத்தில் வீடு**
**வெள்ளியடிக்கப்பட்ட போது**
**விட்டத்தில் அவள்**
**சொருகி வைத்திருந்த கனவுகளுக்கும்**
**நிறம் மாற்றப்பட்டது"**

**E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1**
**MARCH – 2024**

என்ற கவிதையின் வழி விளக்குகிறார் கனிமொழி. பெண்ணின் மன உணர்வுகளை இதைவிட தெளிவாகப் படம் பிடித்துக் காட்ட முடியாது.

**முடிவுரை**

காலந்தோறும் மாறிவரும் உலகில் ஒவ்வொரு நிலையும் பல்வேறு விதமான துன்பங்களை இன்றும் பெண்கள் சந்தித்து வருகின்றனர். அவ்வாறு நோக்கும்போது பெண்களின் நிலையை உரிமைகளையும் நிலை நாட்ட பெண்ணியம் என்பது தேவைப்படுகிறது. பெண்களின் நிலையும், சமூகம் சார்ந்த நிலையும், சமூகத்தின் பெண்களின் நிலையும் மாற்றிக் கொள்ள வேண்டிய முயற்சிகளையும் இக்கட்டுரையில் சுட்டுகின்றது. அனைத்து வேலைகளையும் பெண்கள் செய்யலாம். அவளாக விருப்பப்பட்டு முன் வரும் நிலையின் கட்டாயத்திற்கு ஆளாகப்படும்போது அவள் உணர்வுகள் சிதைக்கப்பட்ட அடக்குமுறைக்கு ஆளாகப்படுகிறாள். அதை உடைத்து வெளிவரும் துணிவும் சூழலும் பெண்களுக்கு இல்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது. சுயமாக சிந்திக்க செயலாற்ற இன்றைய சமுதாயத்தில் இந்நிலை மாறலாம் என எதிர்பார்க்கலாம்.

**மேற்பார்வை பக்கங்கள் :**

- www.penniyam.com
- Www.singu.com

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 39.பன்முக நோக்கில் பெண் சுதந்திரம்

**ஊ.சந்தியா,**

முதுகலை ஆய்வு மாணவி,தமிழ்த்துறை,

திருவள்ளுவர் மகளிர் கலை கல்லூரி, சூலப்புரம்.

DOI 10.5281/zenodo.10726258.

**Abstract :**

The status of women in India was strongly linked to family ties. The condition that women should be dependent on men is created by men. Therefore, understanding the problems of women, Tamil literary scholars and poets voiced that women should get all the rights of men and live freely.

**முன்னுரை:**

இந்தியாவில் பெண்களின் நிலை குடும்ப உறவுகளுடன் வலுவாக இணைக் கப்பட்டது. பெண் என்பவள் ஆணை சார்ந்தே இருக்க வேண்டும் என்ற நிலை ஆண்களால் உருவாக்கப்படுகிறது. எனவே பெண்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு தமிழ் இலக்கிய அறிஞர்கள் மற்றும் புலவர்கள் ஆணுக்குரிய எல்லா உரிமைகளையும் பெண்களும் பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும் என்று குரல் கொடுத்தனர்.

**பெண் சுதந்திரம் என்றால் என்ன:**

பெண் சுதத்திரம் பற்றிய கேள்வி இன்றும் பலரிடம் இருந்துவருகின்றன. பெண்ணை பண்டைய தமிழ்ச்சமூகம் சம உரிமை உடையவளாக இலக்கணப் படுத்தியதோடு இலக்கியங்களும் சித்தரித்துள்ளது. இவற்றில் பெண் சுதந்திரம் என்பது (திருமணத்தில் பெண் சுதந்திரம், கல்வியில் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம்) வாக்களிக்கும் உரிமை, சொத்துரிமை, சட்ட உரிமைகள் ஆகியவற்றில் சிறப்புற்று விளங்குகிறார். இக்கட்டுரையின் மூலம் பெண் சுதந்திரம் பற்றி காண்போம்.

**பழங்காலம் மற்றும் நவீன காலம் - காலந்தோறும் பெண் சுதந்திரம்!**

பழங்காலத்திலிருந்து நவீன காலம் வரை இந்தியாவின் பெண் சுதந்திரத்திற்கு அதிக கவனம் செலுத்தினர். பெண் என்பவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களை கொண்டு இருக்க வேண்டும் என்ற விதியை தமிழ்ச்சமூகம் விதித்தது.

பொற்காலம் எனச் சித்தரிக்கப்படும் தமிழ் இலங்கியத்தில் சங்க கால பெண் புலவர்கள் ஆண் புலவருக்கு இணையான சுதந்திரமாக பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. சங்ககாலத்தில் புலவர்களில் பெண்பால் புலவர்கள் 32 பேர் எனக் குறிப்பிடப்படுகிறது. அவர்களின் பெயர்கள், அவர்கள் இயற்றிய அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, நற்றிணை, பொருநர் ஆற்றுப்படை போன்ற பிரிவுகளில் பாடல் இடம் பெறுகின்றன. சங்கப் பெண்பால் புலவர்களில் தலைமை பெற்றவர் ஔவையார் ஆவர்.

**திருமண வாழ்க்கையில் பெண் சுதந்திரம்** :

ஒவ்வொரு பெண்ணுக்கும் திருமணம் என்பது தவிர்க்க முடியாத நிலையாக இருக்கின்றது. பெண்களின் எதிர்பார்ப்புகள் தனக்கு வரும் கணவன் வீரம் உடையவனாகவும் தன்மீது நீங்காத அன்பு உடையவனாகவும் 'இருக்க வேண்டுமென விரும்புவாள்.தலைவன் தன் உற்றார் உறவினர்களிடம் தலைவியை விட்டு கொடுக்காமல் இல்லற வாழ்க்கை நடத்த வேண்டும்.இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை.'**இல்லறத்தில் வாழ்பவன் என்பவன், பிற அற இயல்பையுடைய முத்திறந்தார்க்கும் நல்வழியில் நிலையான துணையாவான்**".

"**காதல் வயப்பட்ட**
**ஒருவனும் ஒருத்தியும்**
**தம்முள் கலந்து**
**கூடி வாழ்தல்**
**இல்வாழ்க்கை என்பதாகும்**"
- **குன்றக்குடி அடிகளார்**

இவ்வாறாக இல்லற வாழ்க்கை பற்றி இல்லறத்தில் மனைவியோடு கூடி வாழ்தல் இல்வாழ்க்கை ஆகும்.இன்பமும், அறமும் இணைந்ததே இல்வாழ்க்கையாகும். பெண் என்பவள் தமக்கு எனர் தன்னலவாழ்வு வாழாமல் பிள்ளைகள், பெற்றோர், சுற்றம், கணவன், விருந்தினர், வறியர் முதலானோர்க்காக மேற்கொள்ளும் அறவாழ்வே குடும்ப வாழ்க்கை அல்லது இல்லறமாம்.

"**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்**".

இல்லற வாழ்வுக்கான சிறப்புகள் அனைத்தும் மனைவியிடம் இல்லையானால் அந்த இல்லற வாழ்க்கையில் எவ்வளவு சிறப்பு இருந்தாலும் அது நல்ல வாழ்வு ஆகாது.பண்டைய நூல்களில் திருமணத்தை, கரணம், வரைவு, கடாதல், கற்பு மணம், வதுவை சடங்கு, மன்றல், உடன் போக்கு மணம் என்ற சொல்களால் அழைக்கப்பட்டது.

**"கற்பெனப்படுவது கரணமொடு புணர" (தொல். பொருள் நூல் 140)**

திருமணம் என்று சொல்லப்படுவதே 'கற்பு' செறிந்து கொண்டு வாழும் வாழ்க்கையே என்கிறார் தொல்காப்பியர். உடன்போக்கு ஆண், பெண் இருவரும் பெற்றோர் ஒப்புதலின்றி காதல் புரிந்து செய்து கொள்ளும் திருமணம் என்ற வகையில் குறிப்பிடப்படுகிறது.திருமணம் சமூகத்தால் ஏற்று ஆண், பெண் உறவு நிலையைக் குறிக்கிறது ஒரு புதிய சந்ததி தோன்றுவதற்குரிய ஒருவித பிணைப்பு திருமணம் என்று சொல்லப்படுகிறது.

**கல்வியில் பெண்கள் !**

சமூகத்தில் பெண்கள் தலை நிமிர்ந்து நடக்க கல்வியில் வளர்ச்சிப்பெற்று இருக்க வேண்டும்.

"**பட்டங்கள் ஆள்வதும்**
**சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள்**
**நடத்த வந்தோம்**"என்று பாரதி பாடுகிறார்.

**மூடநம்பிக்கையின் பெண்ணடிமைத்தனம் ஏன்:**

இயல்பிலேயே பெண்கள் சிறப்புடையவள். எனவே சில மூடநம்பிக்கை உடையவர்களாக பெண்கள் அடக்கப்படுகிறார்கள். பெண்களை கல்வி கற்க கூடாதென கூறி அவர்களை சிறுவயதில் திருமணம் செய்து வைத்தல், கணவன் இறந்தவுடன் அவர்களுடன் உடன்கட்டை ஏற செய்தல் இதனால் பெண்கள் தமது கனவுகளை தொலைத்து வீட்டில் கண்ணீர் உடன் முடங்கியிருந்தனர்.

**பழமொழி ஒன்று**

**"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு".**

பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று தான் நீங்கள் நினைத்து இருப்பீர்கள். ஒரு பெண் கல்வி கற்றால் சமூகத்தில் சமத்துவம் வளர ஆரம்பித்துவிடுகிறது.

**சிறந்து விளங்கும் பெண்கள்:**

ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து, குடும்ப நெருக்கடிகளை எதிர்கொண்டு, தம்மை ஓர் இலக்கியவாதியாக அடையாளப்படுத்தியவர் மற்றும் தமிழில் எழுதிய பெண்களில் களத்திற்கு சென்று முதன்முதலில் மக்களிடம் செய்திகளைத் திரட்டி கதைகள் எழுதியவர்.இவர் புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள்,குறுநாவல், குழந்தை இலக்கியம், வரலாற்று நூல் என எழுத்துலகில் எல்லாம் களங்களிலும் தடம் பதித்தவர்.

வேருக்கு நீர் என்னும் புதினத்திற்கு "சாகித்திய அகாதமி விருது" பெற்ற பெருமைமிக்க எழுத்தாளர் ஆவர். இத்தகைய எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன்.

**கிருஷ்ணம்மாள் ஜெகநாதன்:**

மதுரையின் முதல் பட்டதாரி பெண்.நாட்டின் விடுதலைக்கு முன்பு கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் போராடி கற்றேன். இவர் கல்வியின் சிறப்பு பெற்று கல்லூரி பருவத்தில் காந்தியச்சிந்தனையில் கவரப்பட்டார்.

ஒத்துமையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், இவைகளில் பங்கு பெற்றார். இந்திய அரசின் தாமரைத்திரு விருது, சுவீடன் அரசின்

வாழ்வுரிமை விருது, சுவிட்சர்லாந்து அரசின் காந்திய அமைதி விருது எனப் பல உயரிய விருதுகளைப் பெற்று பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்தவர் ஆவர்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு பெண்கள், கல்வி கற்பது அவசியமான ஒன்றாகும். "பெண் சுதந்திரம் ஒவ்வொரு தளத்திலும், முன்னேற்றம் கண்டு வருகிறது. கல்வியில் பெருமளவு முன்னெற்றம் பெற்று சிறப்படைக்கின்றனர். வேலைக்குச் செல்லும் பெண்கள் பெருகியுள்ளனர்.

**"பாயர் பள்ளியும் பருவத்து ஒழுக்கமும்" (மாதவியின் கல்விச் சிறப்பு)**

**பெண்ணியம் பற்றி பாரதியின் கவிதை:**

பெண்மை வாழ்கவென்று
கூத்திடு வோமடா!
பெண்மை வெல்கவென்று
கூத்திடு வோமடா!

**வீரப் பெண்கள் :**

சங்க கால சமூகத்திற்கு பெண்கள் தலைமையாய் இருந்தனர். வீரத்தை பற்றி புறநானூற்றும் பாடல்கள்,

**"ஒரு மகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்க எனவிடுமே"**

அக்காலப் பெண்கள் போரை விருப்பமுடன் எதிர்கொண்டனர் என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை:**

பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் பெற்று சிறந்து விளங்க பெண்சுதந்திரம் இருக்க வேண்டும்.

**அடிக்குறிப்புகள் :**

- திருக்குறள் - குறள் எண் 41
- அதிகாரம்: இல்வாழ்க்கை
- தொல்காப்பியம் (1088)
- பராதியார் பாடல்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 40. அற இலக்கியங்களில் அரச சிந்தனைகள்

**திருமதி ச.சதா**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,மேட்டமலை, சாத்தூர்.

**முனைவர் ச.தனலெட்சுமி,**
ஆய்வு நெறியாளர் & உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் மகளிர்
கல்லூரி,சிவகாசி

DOI 10.5281/zenodo.10726301.

**Abstract :**

Literature is the mirror of time. Through literature we can learn about the civilization of the society. In this way, there are more than nineteen books of the literature of the Sangam Maru period which expound the principles. This article examines political virtues through such moral texts.

## முன்னுரை

இலக்கியங்கள் காலத்தை காட்டும் கண்ணாடி ஆகும். இலக்கியங்கள் வழி சமூகத்தின் நாகரீகம், பண்பாடு, கலாசாரம், போன்றவற்றை அறிந்துகொள்ள இயலும். அவ்வகையில் சங்கம் மருவிய கால இலக்கியங்களான பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் அறக்கருத்துகளை எடுத்துரைப்பவனாக அமைந்துள்ளன. அத்தகைய அறநூல்கள் வழி அரசியல் அறங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## அரசியல் தோற்றம்

தமிழ் இலக்கிய உலகில் அறம், பொருள், இன்பம் என்ற உறுதிப் பொருட்கள் மூன்றில் பொருளை அடிப்படையாகக் கொண்டு அமைவது அரசியல் ஆகும். மனிதன் தோன்றி காலத்தில் தனித்து வாழ்வதல் நிலையை மட்டும் அறிந்திருந்தான். அதன் பின் அச்சம். புகை போன்ற பலவிதக் காரணங்களால் குழுக்களாக வாழத் தொடங்கினான். அக்குழு வாழ்க்கை தங்களை வழிநடத்திச் செல்லவும், பாதுகாக்கவும் தங்களுக்குள் ஒரு தலைவனை தோற்றுவிக்க உந்தியது. இவ்வாறு தலைவன் தோன்றியதன் விளைவே அரசியல் தோற்றத்திற்கு முக்கிய காரணமாக அமைந்தது எனலாம். ஆதி கால மனிதன் குகைளிலும், காடுகளிலும் வசித்தபோது அவர்கள் கட்டுபாடின்றி அலைந்து திரிந்தனர். அவர்கள் இடம் விட்டு இடம்பெயர்ந்து நாடோடி வாழ்க்கை நடத்தி வந்தனர். நாடோடி வாழ்க்கைக் காலம் முடிந்து அவர்கள் ஓர் இடத்தில் நிலையாக வாழ ஆரம்பித்த பின்னரே அரசு தோற்றம் பெற்றிருக்கலாம் என வரலாற்று அறிஞர்களும் குறிப்பிடுகின்றனர்.

## அரசியல் - அறிஞர்கள் விளக்கம்

அரசியல் என்பது ஒரு சமூக கட்டமைப்பு ஆகும். அரசியல் குறித்து அறிஞர்கள் பல கருத்துகளை எடுத்துரைக்கின்றனர்.

“அரசியல் என்பது சட்டம் அமைப்போர் (**Legislature**) கருமம் ஆற்றுவோர் (**Executive**) நடுத்தீர்போர் (**Judiciar**) என்னும் முத்துரை அதிகார வகுப்புகளை உறுப்புகளாக கொண்டது.”[1] என்று தேநேயப் பாவாணர் குறிப்பிடுகின்றார்.

“அரசியல் என்பது வாழும்முறை (Way of life) அல்லது வாழ்க்கை முறை (Way of living)” என்று குறிப்பிடுகின்றார் சோயோன்.

“இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரிஸ்டாட்டில் மனிதனை ‘அரசியல் விலங்கு ’ (Political animal) அரசியல் மனிதன் (Homo Political ) என குறிப்பிடுகின்றார்.”[2]

**அகராதிகளில் அரசியல் விளக்கங்கள்**

அபிதான சிந்தாமணி தமிழ்க்கலைக் களஞ்சியம்,

“அரசியல் – படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண், அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப் பொருள், மறநிலைப் பொருள், அறநிலையின்பம்இ மறநிலையின்பம் என்பன. அறநிலையறம் - நான்கு வருணத்தவரும் தத்தம் வருணத்திற் பிறழாது காத்தல். மறநிலையறம் - ஆநிரை மீட்டலும், பகை வெல்லுதலுமாகிய செஞ்சோற்றுக்கடன் கழியாதாரைத் தண்டித்துக் கறைவுறச் செய்தல், அறநிலைப் பொருள் - நெறிவழிநின்று தத்த நிலையினால் முயன்று பெறு பொருளாம், மறநிலைப் பொருள் - பகைவர் பொருளும், திறைப்பொருளும, குற்றம் செய்தாரையொறுக்கும் பொருளும், சூதில் வெல்பொளுமாம், அறநிலையின்பம் - குலமும் ஒழுக்கமும், குணமும், பருவமும் ஒத்த கன்னிகையை மனஞ்செய்து, கொண்டு இல்லறத்தொழுகல், மறநிலையின்பம் - ஏறுதழுவலும், வில்லாக்க மெய்தலும், பொருள் கொடுத்துக் கோடலும், வலிந்து கோடலும்இ ஆகிய நெறியால் மணத்தலாம்”[3] என்று குறிப்பிடுகின்றது.

அரசியல் என்பதற்கு மெய்யப்பன் தமிழ் அகராதி “அரசாளும் முறை”[4] என்று பொருள் கூறுகின்றது.

**அரசன்**

பண்டையத் தமிழக ஆட்சியில் முழுமுதற் அதிகாரம் படைத்தவனாக அரசன் ஒருவனே திகழ்தான். அரசன் இடும் சட்டங்களைக் கொண்டே நாட்டின் குடிமக்களும் செயல்பட்டு வந்தனர். குடிமக்களும் அரசனை அடியொற்றியே இருந்தன என்பதற்க ‘அரசன் எவ்வழி அவ்வழி குடி’ என்ற தொடர் சான்றாக அமைகின்றது. அரசர்களில் சேர, சோழ, பாண்டியர்கள் பேரரசர்களாகவும், பிற குறுநில மன்னர்கள் சிற்றசர்களாகவும் விளங்கினர். அரசன் ஒருவனே உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்பட்டான் என்பதனை புறநானூற்று பாடல்,

“**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**”[5]

என்று குறிப்பிடுகின்றது.

**அறஇலக்கியங்களில் அரசர்கள்**

அறஇலக்கியங்களில் அரசன் என்ற சொல் அரசு, இறை, மன்னன், வேந்தன், கொற்றவன், காவலன், போன்ற சொற்களில் காணப்படுகின்றது. சங்கம் மருவிய காலங்களிலும் முடியாட்சி நிலவிமைக்கு சான்றுகள் உள்ளது.

"வழங்குவது உள்வீழ்ந்த கண்ணும் பழங்குடி

பண்பின் தலைபிரிதல் இன்று" (குறள் - 925)

என்ற திருக்குறளில் 'பழங்குடி' என்னும் சொல்லிற்கு பரிமேலழகர் தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கண் பிறந்த சேர, சோழ. பாண்டியர் என் உரை இயற்றியுள்ளார். இவ்வுரையின் வழி மூவேந்தர்கள் பழங்காலம் தொட்டே தமிழகத்தில் அரசாட்சி செய்து வந்துள்ள செய்தியை அறியமுடிகின்றது.

**மூவேந்தர்கள்**

மூவேந்தர்களாகிய சேர.சோழஇ பாண்டியர்கள் குறித்தச் செய்தி பழமொழி நானூற்றில் காணப்படுகின்றது. சேர மன்னன் செங்குட்டுவன் 'தொடுத்த பெரும்புலவன்' என்று சுட்டப்பட்டுள்ளதை,

**"தொடுத்த பெரும்புலவன் சொற்குற்றை தீர" (பழமொழி – 361:1)**

என்ற பாடலடிகளின் வழி அறியமுடிகின்றது.

சோழமன்னன் கரிகாற்சோழனின் மாளிகை பகைவர்களால் தீயால் கொளுத்தப்பட்டது. அப்போது தன் கால் கருகியும் விடாமுயற்சியால் அரசாட்சியை பெற்றுச் செங்கோல் ஆட்சி செலுத்தினான். இதனை,

**"சுடப்பட் டுயிருந்த சோழன்மகனும்**

**பிடர்தலைப் பேரானைப் பெற்றுக்கடைக்கால்**

**செயிரறு செங்கோல் செலீஇயினான், (பழமொழி–239:2-4)**

என்ற பாடலடிகளில் புலப்படுத்துகின்றது.

பல வெற்றிகளை உடைய பாண்டியர் குலத்திலே பிறந்த பொற்கைப் பாண்டியன்இ தான் செய்த குற்றத்திற்காகத் தன் கையைத் தானே துண்டித்துக் கொண்டான் என்ற செய்தி பழமொழி நானூற்றில் காணப்படுகின்றது.

**"தனக்குக் கரிஆவான் தானாய் தவற்றை**

**நினைத்து தன்கைகுறைத்தான் தென்னவனும் காணார்**

**(பழமொழி – 102::2-3)**

என்ற வரிகளின் வழி பொற்கை பாண்டியன் 'தென்னவன்' என்று குறிக்கப்பட்டுள்ளான்.

சிலப்பதிகாரக் கட்டுரைக்காதையில், கண்ணகி முன் தோன்றிய மதுரபுரி தெய்வம் பாண்டியர்களது செங்கோற் பெருமையை அவளுக்கு உணர்த்துங்கால் பொற்கைப் பாண்டியனின் வீரச்செயலையும் எடுத்துரைத்துப் புகழ்ந்துள்ள செய்தி காணப்படுகின்றது.

**"வச்சிரத் தடக்கை அமரர்கோமான்**

**ஊச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை**

**குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து".**

ஏன்ற அவ்வடிகள் பழமொழிநானுற்றுப் பாடல் அடிகளுக்கு ஏற்புடையதாக அமைந்துள்ளதை ஆராய்ந்து அறியமுடிகின்றது.

**அரசருக்குரியவை**

நாட்டில் ஆட்சி சிறப்பாக நடைபெற அரனுக்கு அமைச்சர் பெருமக்கள், பிறநாட்டை வெல்ல உதவும் படம், செல்வம் போன்றவை தேவையான காரணிகள் ஆகும். இவ்வாறு அரசருக்குரிய படை, குடி, உணவு, அமைச்சர், நட்பு, அரண், ஆகிய ஆறு உறுப்புகளும் முக்கியமானவை என்பதனை,

**“படைகுடி கூழ்அமைச்சு நட்பஅரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு”** (**குறள்** - 381)

என்ற குறள் புலப்படுத்துகின்றது.

**அரசனின் தகுதிகள்**

அரச பதவியை ஏற்பவன் இளமையிலேயே பல கலைகளையும், படைப்பயிற்சிகளையும் கற்றுத் தெளிய வேண்டும். வேட்டையாடுவதில் தேர்ச்சி உடையவனாக இருத்தல் வேண்டும். பலவித குணங்கள் தன்னகத்தை கொண்டு குடிமக்களின் நலநன மட்டுமே போற்றிப் பாதுகாப்வனாகவும் இருத்தல் வேண்டும்.

அரசனுக்குரிய தகுதிகள் பல அறஇலக்கியங்களில் காணப்படுகின்றன. அரசன் என்பவன் குடிமக்களை பாதுகாப்பவனாக இருத்தல் வேண்டும். குடிமக்களை வழி நடத்தும் நல்ல அமைச்சர்களையும், சிறந்த காவலையும் உடையவனாக இருத்தல் வேண்டும் என்தனை,

**“கோலஞ்சி வாழுங்குடியுங் குடிதழீஇ**
**ஆலம்வீழ் போலும் அமைச்சனும் - வேலின்**
**கடைமணிபோற் றிண்ணியான் காப்பும் இம்மூன்றும்**
**படைவேந்தன் பற்றுவிடல்”** (**திரி** - 33)

என்ற திரிகடுக பாடலடிகள் சுட்டுகின்றது. மேலும், அரசன் தான் நினைத்தவாறு அரசாளாமல் ஆட்சி செய்யத் தேவையான உயர்ந்த கருத்துகளை உள்ளத்தில் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்துச் செயல்பட வேண்டும். இவையே அரசாள அரசனுக்குரிய தகுதிகள் ஆகும். இதனை,

**“கண்ணோட்டம் இன்மைமுறைமை தெரிந்துஆள்வான்**
**உள்நாட்டம் இன்மையும் இல்”** (**நான்** - 9:3-4)

என்ற நான்மணிகடிகை பாடலடிகள் புலப்படுத்துகின்றது.

**செங்கோல் ஆட்சி**

திருவள்ளுவர் அரசன் முறையாக ஆட்சி செய்தல் என்பதற்கு ‘செங்கோண்மை’ என்ற தனி அதிகாரத்தையே அமைத்துள்ளார். உலக உயிர்கள் எல்லாம் மழைக்காக வானத்தை நோக்கி வாழ்வது போல குடிமக்கள் அரசனின் செங்கோல் ஆட்சி முறையை நோக்கி வாழ்வார்கள் என்பதனை,

> **“செங்கோலன் அல்லக்கால் சேர்ந்தாரும் எள்ளுவர்**
> **வேங்கோன்மை வேந்தர்கண் வேண்டாம் சிறிது**
> **எனினும்** (**பழமொழி –** 248:2-3)

என்ற பழமொழி நானூற்று பாடலடிகள் சுட்டுகின்றது.

**கொடுங்கோல் ஆட்சி**

நாட்டை நல்வழிப்படுத்திய அரசாளும் அரசன், செங்கோல் ஆட்சியில் இருந்து தவறினால் பல துன்பங்கள் நேரிடும், மக்களைத் துன்புறுத்தி ஆட்சி செய்யும் மன்னவனின் செயல் கொலை செய்வதைக் காட்டிலும் மிகவும் கொடுமையான செயல் ஆகும். இதனை,

> **“கொலைமேல் கொண்டாரில் கொடிதே அலைமேற்கொண்டு**
> **அல்லவைசெய்து ஒழுகும் வேந்து”** (**குறள்** - 551)

என்ற குறளின் வழி அறியலாம்.

**முடிவுரை**

தொடக்க காலத்தில் தனித்து வாழ்ந்த வந்த மனிதன் அச்சம்,பகை.போன்ற காரணங்களால் குழுவாக வாழத்தலைப்பட்டமையும், அக்குழுவை நன்முறையில் வழிநடத்த ஒரு தலைவனை உருவாக்கியமையும் அரசு தோற்றம் பெற்றமைக்கான அடிப்படை காரணம் என்பதனையும் அறியமுடிகின்றது. சங்க காலத்தை போலவே சங்கம் மருவிய கால முடியாட்சியிலும் அரசர்கள் உயர்ந்த நிலையில் வைத்து போற்றப்பட்டுள்ளனர். நாட்டை ஆளும் அரசனுக்குத் தேவையான தகுதிகளையும், ஆட்சிமுறைகளையும், அற இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1.தேவநேய பாவாணர், பழந்தமிழர் அரசியல் கோட்பாடுகள், ப.19

2.பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல்,ப.550

3.ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி தமிழ்க் கலைகளஞ்சியம்,ப.98

4.ச.வே.சுப்பிரமணியன்,மெய்யப்பன் தமிழ் அகராதி,ப.54

5.புறம் - 186-2

6.சிலம்பு கட்டுரை காதை 50-52

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 41. அறியப்படாத சுதந்திரப் போராட்ட ஆளுமைகள்

**செல்வி செ.பிரியதர்ஷினி,**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டமலை, சாத்தூர்.

DOI 10.5281/zenodo.10726387

**Abstract :**

When we think of freedom fighters, the memories of Rajaji, Vallabhbhai Patel and Abul Kalam Azad do not come to mind. They are hidden as traces of Gandhi. In this article we can see the fighting ability of the hidden traces and the way other leaders have praised them.

## முன்னுரை

ஒரு மனிதன் வாழ்ந்த காலத்தில் அவரைப் பற்றி அதிகமாக எழுதப்படலாம்! ஆனால் அவர் மறைந்த பின்பும் மிக அதிகமாக எழுதப்படுகிறதே! என்ன அதிசயம்! அந்த அதிசயப் பிறவி தான் அண்ணல் காந்தி. இத்தகைய பெருமைக்குரிய அண்ணல் காந்தியுடன் இணைந்து போரிட்டு இன்றளவும் சுவடுகளாக விளங்கக்கூடிய போராளிகளின் ஆளுமைகளையும் அவர்களின் கீர்த்தியையும் இக்கட்டுரையில் காணலாம்.

## அறியப்படாத சுவடுகள்

"அகிம்சை" எனும் வன்முறையற்ற மாபெரும் மந்திரத்தை உலகிற்கு வித்திட்ட உன்னத மனிதற்கு உற்ற துணையாக இருந்து அரும்பாடுபட்டவர்களுள்,

- பண்டித ஜவஹர்லால் நேரு
- வல்லபாய் பட்டேல்
- அபுல்கலாம் ஆசாத்

இவர்களின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தகுந்ததாகும்.

## பண்டித ஜவஹர்லால் நேரு

இருபதாம் நூற்றாண்டின் இந்தியாவின் உயர்வுக்கு வழி வகுத்த தலைவர்களில் பண்டித ஜவஹர்லால் நேரு எல்லோராலும் பெரிதும் நேசிக்கப்படுபவர். இந்திய தேசத்தின் குழந்தைகள், இளைஞர்கள், மாணவர்கள், மகளிர், முதியவர், படித்தவர், படிப்பறிவற்றோர், விளிம்பு நிலை மனிதர்கள் என அனைவராலும் இதய பூர்வமாக நேசிக்கப்படுபவர்.

"பாம்பு பிடிக்கும் கைகள் அல்ல எங்கள் கை, கணினியைக் கையாளும் கைகளே இந்தியர்களின் கை" என்று கூறி விதியை மட்டுமே நம்பி வாழ்ந்த இந்தியர்களுக்கு விஞ்ஞான ரீதியான கல்விக்கு வித்திட்டவர். இந்திய இளைஞர்களுக்கு கணினி உலகின் கதவுகளைத் திறந்து வைத்த முதல் பிரதமர் பண்டித நேரு.

“மேற்கத்திய நாடுகளுக்கு நாங்கள் இனி மனுப்போட்டு உதவி கேட்க மாட்டோம், எங்கள் தலைவிதியை நாங்களே நிர்ணயித்துக் கொள்வோம்” என்று 1947ல் மார்ச்-ஏப்ரலில் நடைப்பெற்ற ஆசிய நாடுகளின் இணைப்பு மாநாட்டில் பேசிய நேரு ஆசிய நாடுகளுக்கு தலைமை தாங்கும் தகுதியைப் பெற்று தந்தார்.

“எனக்கு பின் என் வாரிசு நேருவே” என்று அண்ணல் காந்தி அறிவித்தற்கு பட்டேலை விட நேரு வயதில் இளையவர், மக்கள் செல்வாக்கு பெற்றவர் என்னும் கருத்தை விட உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை உயர்த்தும் தகுதி படைத்தவர் நேருவே என்று கருதியதும் ஒரு முக்கிய காரணமாகும்.

பண்டித ஜவஹர்லால் 44 ஆண்டுகள் பொது வாழ்க்கையில் பயணித்தவர். அதில் 27 ஆண்டுகள் இந்திய விடுதலைக்கானப் போராட்டம், 12 ஆண்டுகள் சிறைவாசம். மேலும் அறிவாற்றல், அர்ப்பணிப்பு உணர்வு, தியாகம், தேசபக்தி, மனித நேயப் பண்பு, உலகளாவிய பார்வை என இவற்றின் ஒட்டு மொத்த உருவமாகவே காட்சியளித்தார் நேரு.

**கீர்த்திகள்**

- **தத்துவமேதை டாக்டர் ராதாகிருஷ்ணன்**

  நமது தலைமுறையில் மிகப்பெரிய தலைவர்களில் ஒருவர், நவீன இந்தியாவின் சிற்பி, மனித சமுதாய விடுதலைக்காகவும், உயாவுக்காகவும் தன் வாழ்வை அர்ப்பணித்தவர் பண்டித ஜவஹர்லால் நேரு.

- **முன்னாள் அமெரிக்க அதிபர் ஐசன் ஹோவர்**

  உலக அமைதிக்காக பண்டித ஜவஹர்லால் நேரு ஆற்றிய பணி வரலாற்றில் இடம்பெறத்தக்கது.

- **ரஷ்யாவின் முன்னாள் பிரதமர் குருச்சேவ்**

  உலக அமைதி, அனைத்து நாடுகளும் இணைந்து வாழ்தல், அணிசேரா அணுகுமுறை இவை தான் ஜவஹர்லால் நேரு என்னும் மாமனிதரின் சிந்தனையாகவும் செயலாகவும் இருந்தது.

- **லார்ட் மௌண்ட்பேட்டன்**

  “வரலாற்றில் மிக உயர்ந்த தலைவர்களில் ஒருவராக நேருவை நான் நேசிக்கிறேன், மதிக்கிறேன், போற்றுகிறேன்”

- **தத்துவமேதை பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்**

  மனித சமுதாயத்திற்கு நேருஜி ஆற்றிய பணி மகத்தானது.

- **எகிப்து அதிபர் நாசர்**

  “சிறந்த சிந்தனையாளர், செயல்வீரர், மிகச் சிறந்த மனிதாபிமானி”

- **வினோபாபாவே**

 காந்திஜியின் முதன்மைச் சீடர் நேரு அவரது வழியே மனித சமுதாயத்தை உய்விக்கும்.

இந்திய மக்கள் எண்ணத்தில் ஜனநாயகம் என்றும் நிலைத்து நிற்கும் அது குன்றாது, குறையாது என்று கூறி இந்திய மக்களுக்கு ஜனநாயக உணர்வை ஊட்டிய பெருமகன் நேரு ஆவார். அவர் நெஞ்சார நேசித்த ஜனநாயகம் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி, மதச்சார்பின்மை, சுயச்சார்பு ஆகிய இலட்சியப் பாதையில் இந்திய தேசம் தொடர்ந்து பயணிக்க வேண்டும்.

**வல்லபாய் படேல்**

ஓயாத உத்வேகம், என்றும் சாயாத துணிவு, மாறாத தன்னம்பிக்கை, மலை போன்ற ஆற்றல் ஆகியவற்றின் ஒட்டு மொத்த வடிவமாக நாடியாத் என்னும் சிறிய நகரத்தில் அவதாரம் எடுத்து வந்தவர் வல்லபாய் படேல். அண்ணல் காந்தியை விட 6வயது இளையவர். பண்டித நேருவை விட 14 வயது மூத்தவர். 1857ல் நடைபெற்ற முதல் சுதந்திரப் போரின் போது வீராங்கனை ஜான்சிராணியின் போர்ப்படையில் சேர்ந்து பங்கு பெற்று பின் சிறைவாசம் அனுபவித்த தியாகத் திருமகன்.

ஆரம்பக் காலத்தில் அண்ணல் காந்தியின் சித்தாந்தத்தில் ஈர்ப்பும் இல்லை ஈடுபாடும் இல்லை என்பதை விட, அது கதைக்கு உதவாத ஒன்று என விமர்சனமும் செய்தார் பட்டேல். ஒருமுறை ”கோதுமையில் கல் பொறுக்கினால் சுதந்திரம் வந்துவிடும் என்று சொல்கிறார் காந்தி, அதை நம்புவதற்கு நான் என்ன பைத்தியக்காரனா?” எனக் கேட்டவர் பட்டேல். பின் காந்தியின் காந்த சக்தியால் ஈர்க்கப்பட்ட பட்டேல் “இவரே என் குருநாதர்” என்று சரணடைந்து எவருக்கும் கட்டுப்படாத பட்டேல் காந்திஜிக்கு கட்டுப்பட்டார். 1917ல் ஏற்பட்ட இந்த உறவு, நட்பு, பிணைப்பு காந்தி 1948ல் மறையும் வரை சுமார் 31 ஆண்டுகள் வரை நீடித்தது.

உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கி வெள்ளையனே வெளியேறு இயக்கம் வரை காந்திஜி அறிவித்த அனைத்துப் போராட்டங்களையும் முன்னின்று நடத்தி காந்தியுடன் சிறைவாசம் மேற்கொண்டார். சிறைவாசத்தின் இறுதியில் “பட்டேல்” என் தாயைப் போல பாசத்தோடு என்னைக் கவனித்துக் கொண்டார். பட்டேலின் இந்த பரிமாணத்தை நான் இப்பொழுது தான் பார்த்தேன்” என நெஞ்சி நெகிழ்ந்து பாராட்டினார் காந்திஜி.

சுதந்திர இந்தியாவில் பண்டித நேருவின் தலைமையில் அமைந்த அரசில் துணைப்பிரதமர் பொறுப்பேற்றார் பட்டேல். “ரஷ்யாவை நண்பனாகக் கொள்ளலாம் என்பார் நேரு. மேற்கத்திய நாடுகளை நம்பலாம் என்பார் பட்டேல்” இப்படி இருவேறு எண்ணங்கள் கைக்குள் தன் சட்டைப் பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டவர் காந்தி மகான். இருவரையும் இணைந்து செயல்பட வைத்தது காந்தியின் மகத்தான சாதனை. இருவருமே தியாகிகள், தேசப்பக்தர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், மக்கள் நலன் நாடுபவர்கள், மகாத்மாவின் சீடர்கள்.

**கீர்த்திகள்**

- **பண்டித ஜவஹர்லால் நேரு**

  “புதிய இந்தியாவை வடிவமைத்தவர், வலுப்படுத்தியவர் பட்டேல். விடுதலைப் போராட்ட வீரர்களின் மாபெரும் தளபதி அவர். தடுமாறும் நெஞ்சங்களுக்குத் தன்னம்பிக்கை தந்து வழி நடத்திய நம்பிக்கை நட்சத்திரம் அவரே”

- **அண்ணல் காந்தியடிகள்**

  “என் மிகுந்த நம்பிக்கைக்குரிய உறுதி வாய்ந்த அஞ்சா நெஞ்சம் கொண்ட துணிவு மிக்க என் அன்புக்குரிய சகா அவர்” எனப் பாராட்டினார்.

- **வினோபாபாவே**

  “அண்ணல் காந்தியின் உண்மையான சீடர். அவரின் தலைமைத் தளபதி அவரின் போராட்டங்களுக்கு வெற்றி தேடித் தந்த துல்லியமான வில்லாளி. எடுத்த காரியத்தில் பின் வாங்குதல் என்பது அவர் அறியாத ஒன்று”

- **மான்செஷ்டர் கார்டின் (புகழ்பெற்ற ஆங்கிலப் பத்திரிக்கை)**

  “படேல் இல்லை என்றால் காந்திஜியின் இலட்சியங்களை நிறைவேற்றுவதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கும். நேருஜியின் சித்தாந்தங்களை நிறைவேற்றுவதில் வாய்ப்புகள் குறைந்திருக்கும் இருபெரும் தலைவர்களின் எண்ணங்களைச் செயல்படுத்துவதில் துணை நின்ற தலைவர் அவர்” என்று மான்செஷ்டர் கார்டின் என்னும் புகழ்பெற்ற ஆங்கிலப் பத்திரிக்கை பாராட்டியது.

- **அபுல்கலாம் ஆசாத்**

  “மன உறுதியில் உடைக்க முடியாத உருக்கு அவர்”

- **மவுண்ட்பேட்டன்**

  “தனி மனித எல்லைப் படையாக இருந்து நாட்டைக் காத்தவர் அவர்”

- **வெல்லெஸ்லி பிரபு**

  “மாறுபட்ட கலாச்சாரங்களை உள்ளடக்கிய பரந்து விரிந்த தேசத்தில் சிதறிக்கிடந்த 565 சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைத்தது, ஜெர்மனியை உருவாக்கிய பிஸ்மார்க்-கின் சரித்திரச் சாதனைக்கு சமமானது” எனப் பாராட்டினார்.

- **மௌண்ட் பேட்டன்**

  “சமஸ்தானங்கள் இணைப்பு முயற்சியில் நீங்கள் காட்டிய விவேகம், வேகம், உறுதி - என்னை வியக்க வைத்தது. அந்த முயற்சியில் நீங்கள் தோற்று இருந்தால் அதன் விளைவு இந்தியாவுக்கு அழிவைத் தந்திருக்கும்” எனப் பாராட்டினார்.

சொல்லாலும் செயலாலும் வெல்ல முடியாதவராக வாழ்ந்த வல்லபாயின் 75-ஆவது பிறந்தநாள் அஹமதாபாத்தில் கோலாகலமாக கொண்டாடப்பட்ட போது மக்கள் புகழ் மாலை

சூட்டினார்கள். அதற்கு பதில் உரைத்த பட்டேல் “நான் ஒரு சாதாரண விவசாயி, சாதாரண காங்கிரஸ் தொண்டன், காந்திஜியின் தொண்டன், நேருவின் தோழன், மக்களின் சேவகன் உங்கள் புகழுரைகள் எனக்கு உரியதல்ல மக்களுக்கு உரியது” என்றார்.

தேசபக்தி, தியாக உணர்வு, உள்ளஉறுதி, எடுத்த காரியத்தை முடிப்பதில் விவேகம், விட்டு கொடுக்கும் மனப்பாங்கு ஆகியவற்றின் ஒட்டு மொத்த வடிவம் வல்லபாய். இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர், சீக்கியர், பௌத்தர் என்ற எவ்வித மதபேதம் பார்க்காமல் அனைவரையும் இந்தியராகப் பார்த்தவர் படேல். “ஓயாத உழைப்பாலும் உளப்பூர்வமான ஒற்றுமையிலும் தான் வளர்ச்சியும் வெற்றியும் அடங்கியிருக்கிறது. வீண் கோசங்களை மூட்டை கட்டி ஏறியுங்கள், உருப்படியான வேலைகளை பாருங்கள், அதுவே உயர்வுக்கு வழி” என்பார் வல்லபாய்.

**அபுல்கலாம் ஆசாத்**

ஆசாத் மிக பெரிய இஸ்லாமிய அறிஞர், சிறந்த பேச்சாளர், மார்க்க அறிஞர்கள் பரம்பரையில் வந்தவர். ஓர் விடுதலைப் போராட்ட வீரர், தியாகி, தேசபக்தர், புரட்சிகரமான எழுத்தாளர், சமூக சீர்த்திருத்தவாதி, சமூக ஒற்றுமைக்காகவும், சமய நல்லிணக்கத்திற்காகவும் போராடிய பெருமகன், ஈடுஇணையற்ற கல்விமான். ஒன்றுபட்டு இந்தியாவைக் காப்பதையே தன் இலட்சியமாக கொண்டவர். இவ்வாறு பல்வகை பரிணாமங்களில் பிரகாசிப்பவர், பரிணமிப்பவர். அவரது பேச்சும், எழுத்தும், செயல்பாடும், பரந்து விரிந்த உலகளாவிய பார்வையும், காங்கிரஸ் பேரிலக்கியத்தில் அவர் கொண்டிருந்த ஈடுபாடும், காந்திஜி அவர் மீது வைத்திருந்த அன்பும், நம்பிக்கையும் மௌலானா ஆசாத்தை ஓர் தலைவராக உயர்த்தியது.

கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், உப்பு சத்தியாகிரகம், தனிநபர் சட்டமறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகிய அனைத்து தேசியப் போராட்டங்களிலும் முன்னின்று முனைந்து போராடியவர். விடுதலை வேள்வியில் குதித்து சிறையில் தவமிருந்த தியாகி. இளம் வயது முதல் இறுதி மூச்சு வரை இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக வாதாடியவர், போராடியவர்.

பிற இஸ்லாமியத் தலைவர்களை விட, இந்திய முஸ்லீம்களின் உண்மையான பிரதிநிதி மௌலானா ஆசாத்தே என்பர் வரலாற்று ஆய்வாளர்கள்.

மௌலானா ஆசாத்தின் பணியும், பங்களிப்பும் இந்தியாவின் வளர்ச்சியிலும் உருவாக்கத்திலும் அளப்பரியது. அரசியல் அமைப்புச் சட்ட உருவாக்க குழுவில் அவர் உறுப்பினர் ஆனார். அண்ணல் காந்தி, பண்டித நேரு ஆகியோரின் வேண்டுகோளை ஏற்று மத்திய அமைச்சரவையில் கல்வி அமைச்சர் ஆனார். ஆரம்பக் கல்வி முதல் உயர்நிலைக் கல்வி வரை வளரவும், சிறக்கவும், அடித்தளம் அமைத்த பெருமகன்.

**கீர்த்திகள்**

- **அண்ணல் காந்தியடிகள்**

  "ஆசாத் கல்விக்கு சக்கரவர்த்தி. பிளாட்டோ, அரிஸ்டாட்டில், பித்தகோரஸ் போன்ற பேரறிஞர்களுக்கு இணையாக மதிக்கப்பட வேண்டிய மேதை"

- **ஜவஹர்லால் நேரு**

  "ஆசாத் மிகப் பெரிய மனிதர், கற்றறிந்த மேதை, உயர் நுண்ணறிவாளர், பிரச்சனைகளை ஆராய்து அறிந்து அவற்றிற்கு சரியான தீர்வு சொல்லக் கூடிய ஆற்றல் படைத்தவர். அவரது மனம் பிரகாசமானது, ஒளிமயமானது, அவர் எனது துணைவன், தோழன், நண்பன், கூட்டாளி, தலைவன் - ஏன் வழிகாட்டும் ஆசிரியரும் ஆவான்" என்று புகழ்மாலை சூட்டுகிறார்.

- **மூதறிஞர் இராஜாஜி**

  "உலக மதங்கள் உலக நாகரிகங்கள், கலாச்சாரங்கள் பற்றி மகாநாடொன்று உலகின் எப்பகுதியிலும் நடைபெற்றாலும், அதிலே நான் கலந்துக் கொண்டால் அந்த மகாநாட்டுக்குத் தலைமை வகுக்கத் தகுதியானவர் என்று அபுல்கலாம் ஆசாத் அவர்களைத் தான் நான் பரிந்துரைப்பேன்" என்று புகழுரைத்தார்.

- **ஜான் கந்தர்**

  "காந்திஜி வழி நடத்தும் காங்கிரஸ் இயக்கத்திற்கு மௌலானா அபுல்கலாம் ஆசாத் மூளை, பண்டித நேரு அதன் இயக்கம், சர்தார் பட்டேல் அதன் செயல்படும் கைகள்"

உண்மையில் அபுல்கலாம் ஆசாத் ஓர் இலட்சியவாதி. உலக வரலாற்றில் விருதுகளும், கேடயங்களும் வெற்றி பெற்றவர்களுக்குக் கிடைக்கின்றன. தோற்றுப்போன இலட்சியவாதிகளை உலகம் மறந்து விடுகிறது. மௌலானா ஆசாத் போன்ற உயர்ந்த இலட்சியவாதிகள், தங்களின் இலட்சியத்தை நிறைவேற்ற முடியாமல் தோற்றுப் போயிருக்கலாம். அவர்கள் வென்றாலும் தோற்றாலும் அவர்களது இலட்சியம் உயர்ந்தது, சிறந்தது என்றும் போற்றத்தகுந்தது.

**முடிவுரை**

நாட்டின் சுதந்திரத்திற்கு காந்தியடிகள் தான் காரணம் என எண்ணிய நிலையில் காந்தியின் சுவடுகளாக மக்கள் மனதில் ஆழமாக பதியாத விடுதலைப் போராட்ட வீரர்களான பண்டித நேரு, வல்லபாய் பட்டேல், அபுல்கலாம் ஆசாத் போன்ற வீரர்களின் குறிப்புகளும், காந்தியுடன் இணைந்து அவருக்கு பக்கபலமாக இருந்து சுதந்திரத்திற்காக அரும்பாடுப்பட்ட வீரர்களின் செயல்திறன், அவர்கள் புகழப்படும் விதம் பற்றியும் இக்கட்டுரையில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 42. தமிழ் இலக்கியங்களில் பெண் சுதந்திரச் சிந்தனைகள்

**மு.வினிதா**
முதுகலைத் தமிழ்த்துறை
திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,சூலப்புரம்.

DOI 10.5281/zenodo.10730093

**Abstract :**

Auvaiyar was the most important literary poet of the Sanga period. He stopped the war between Atiyaman and Thondaiman by his skill of poetry. Honorable kings who are not forgotten even after death! The education of Katha Olavaiyar without destruction is also a credit to his performance in the field. Education is also the virtue that stands behind it. is essential.

**முன்னுரை:-**

**கருவறையில் தான் கருத்த இருட்டென்றால்**
**வெளிவந்தும் வெளிச்சமில்லையே**
**தழல் தகித்த போதும்**
**மழலைப் பருவத்தில் மயங்கிக் கிடந்தாய்**
**கைவிலங்களுக்குக் கட்டுப்பட்டே**
**வளர்ந்து வந்தாய்**
**கல்விக்கண்கள் காணாமல் போனதால்**
**வீட்டிற்குள்ளே முடங்கி கிடந்தாய்**
**மனிதம் போற்ற**
**மாற்று வீடு புகுந்தாய்**
**எழுச்சி கொண்டு**
**மடைமை விலங்குகளை விட்டெறிந்தாய்**
**பாரதி கண்ட**
**புதுமை பெண்ணாய் உலா வந்தாய்**
**அன்பில் தாயன்பே**
**புனிதமென்று உலகிற்கு உணர்த்தினாய்**
**பாரதம் போற்றும் புதல்வி நீ**
**என்றாலும் தாயாக தாலிடுவாய்.**
**அகிலத்தின் அனைத்து மொழிகளும்**
**அன்னை என உனைப் போற்றும்**

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

**பெண்ணே உனைப் பெற**

**பெருந்தவம் செய்தது இம்மண்ணே!!!**

இவ்வாறு பெண்ணின் பெருமைகளை நாம் பேசியும் பாடியும் மகிழ்கின்றோம். பெண்ணின் சுதந்திர சிந்தனைகளானது அக்காலந்தொட்டு இன்று வரை எப்பேற்ப்பட்ட வழிகளைக் கடந்து வந்தோம் என்று கண்போம்.

**சங்க காலத்தில் பெண்ணின் சுதந்திர சிந்தனைகள்:-**

சங்க இலக்கியங்களானவை நமக்கு அருளித் தந்த நூல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இன்ன பிறவும் ஆகும். இதில் எட்டுத்தொகையில் நெடுந்தொகையான அகநானூற்றில் கூறும் சில உண்மைகள்.

**தமிழர் தம் திருண நிகழ்ச்சி (86,** 136ஆம் பாடல்கள்)

மணவிழாவில் மணப்பந்தலில் வெண்மணல் பரப்பி விளக்கேற்றி, மணமகளை நீராட்டித் தூய ஆடை அணிகள் அணிவித்து இறைவழிபாடு நடத்தி திங்கள்,வாகை இலையோடு சேர்த்து கட்டப்பெற்ற வெண்ணூலை தலைவிக்கு காப்பாக சூட்டுவர்! நல் ஒழுக்கங்களை கூறும் 5 திணைகளை உள்ளடக்கிய அகநானூற்றிலேயே! மணமகளான (பெண்டிருக்கு) மங்கைக்கே! சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும் கடைபிடிக்க வேண்டிய சூழல் கட்டாயமாக்கப்படுகிறது. அவர்தம் சுயநிலைகளில் பங்கேற்கும் சுய விருப்பங்கள் நிறைவேற்றப்படுவதில்லை. அக்காலநிலையை கண்ணாடி போல் பிரதிபலித்துக் காட்டும் புறநானூறு வழி அறியப்படும் செய்திகள்.

**கைம்பெண்கள்**

கணவனை இழந்த பெண்கள் ஆணிகளை களைந்து கைம்மை நோண்பு நோற்றல்,உடன்கட்டை ஏறுதல் என்று

“**முறத்தால் புலியை விரட்டும் மகளிர்” (பாடல் எண் - 191)** எனப் பெண்மை பெருமை வீரம் பேசும் புறநானூறே கணவனை இழந்த எம் பெண்டிருக்கு நிலைக்கும் சதியாம் இவை.“கணவன் எனும் ஒருவன் இருந்தால் மட்டுமே எம் மனிதர் குல மாணிக்கத்திற்கு மதிப்பா?"

**அறநூல்களின் பெண் சுதந்திர சிந்தனைகள்**

அறநூல்களில் முதன்மையானது திருக்குறள், திருக்குறளை அருளித்தந்த எம் வான் போற்றும் வள்ளுவன் மனைவி கற்புக்கரசி வாசுகியானவள்,வள்ளுவனுக்கு பணி செய்து காலந்தாழ்ந்து உணவு பறிமாற வந்த காரணத்தினால் பிச்சைக்காரன் சினத்துடன் வாசுகியை நிமிர்ந்து பார்த்தான்! தன் சினத்தினால் வாசுகியை சுட்டெறிக்கும் நோக்கத்துடன்,

வாசுகிகூறியது!

**"கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா"**

அரண்ட பிச்சைக்காரன் கற்பின் வலிமை அறிந்து தூர ஓடினான். எனின் தன் அன்றாடப் பணிகளைச் செய்யும் பொருட்டு அடுத்தவர் சினத்திற்கு ஆளாக நேரிட்டது என்பதும் நம் பெண்மை சுமந்திரம் பறிபோனதாகவே நிகழ்கிறது.

**ஐம்பெருங்காப்பியங்களில்**

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான "சிலப்பதிகாரம்" நம் குடிமக்களின் காப்பியமானது. இக்காலம் வரையிலும் கற்பினின் பெருந்தெய்வமாய் கண்ணகியை நோக்க காரணமாயிருந்தது. இருப்பினும்,

**"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்"**

இவ்வாறு தெய்வமாய் நோக்கும் கண்ணகியையும் பிரிந்தானே கோவலன். எனினும், ஆடல்மகளாம் மாதவி இப்பிறப்பினில் தான் நெறி தவறாமல் ஒருவனுக்கு யாம் ஒருத்தியே எனும் அறம் நிகழ்த்திக் காட்டினாள். இவ்விரு பெண்டிருமே தம் அறம் தவறாமல் இருந்து அவர்கள் பெற்ற செல்வமோ துன்பத்தின் விளை நிளங்களே! அரசியானாலும், ஆடல்மகளிரானாலும், தம் அற்புதமான வாழ்வுதனில் ஐயமுற்று வாழ்ந்தனர்.

**மணிமேகலையில்,**

மாண்புடன் தான் துறவறம் பூண்டதை காப்பாற்றிக் கொள்ள அண்டை நாடு பல புகுந்து சென்றாள் மணிமேகலை,

இவ்வாறு, மகளிரானவர்கள் சுதந்திர விதைகளில்லை. மரமாகவே ஆகினும், அசைத்து அல்ல வேருடன் அறுத்துச் சாய்க்கும் சமூக நிலைமையும் நிலவிற்று என்பது மறுக்க. முடியாதது.

**சுதந்திரச் சிந்தனைகளைத் தூண்டும் இலக்கியங்கள்** :-

சங்ககால இலக்கியப் புலவர்களில் மிகவும் முக்கயமானவர் ஔவையார்.இவர் தம் பாட்டின் திறமையால் அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே நடக்கவிருந்த போரை நிறுத்தி பெருமை சேர்த்தார். உயிரே போயினும் மறம் மறக்காத மாண்புமிகு மன்னர்களையே! அழிவின்றி காத்த ஔவையாரின் கல்வியும், களத்தினில் நிகழ்த்திய பெருமைக்குரியதாகும். கல்வி என்ற ஒன்றும் அதன்பால் நிற்கின்ற அறமும். இன்றியமையாததாகும். மேலும் ஔவை எழுதிய ஆத்திச்சூடியானது, இன்றளவிலும் நாம் கேட்டுமகிழும் பெருமைக்குரியதாய் நிழ்த்திக் காட்டியவர் பெண்ணியச் சிந்தனை கொண்டவரே!

**புறநானூற்றில் கூறும் பெண்களின் பெருமைகள்**

போரில் இறந்துப்பட்ட தன்மகனை புறமுதுகு காட்டி இறக்காதே ! எனும் மகளிரின் மறம் பற்றி அழகாக எடுத்துரைப்பதாய் அமைகிறது. மேலும் பெண்களானவர் தம் குடும்பத்தையும் போரில் நம் நாட்டையும் காக்கும் வீரமகளிராய் திசழ்கின்றனர். புலியை முறத்தால் அடித்து விரட்டி சமூகத்தில் இன்றளவும் பேசப்படும் வீரமகளிர்

**நற்றிணையின் சான்று**

சலவை தொழில் செய்யும் நம் மகளிர் அவர்தம் தொழிலை சிறப்பாகச் செய்யும் அழகும் நலமும் பேசப்படுவது, மகளிர் அனைத்து தொழில்களிலும் சிறந்து விளங்கும் தன்மையைக் குறிக்கிறது.

**குறுந்தொகை** :-

**“பூவொடு புரையுங் கண்ணும் பேயென**

**விறல் வனப் பெய்திய தோளும் மறையென**

**மதிமயக் குறூஉநுதலும்"** (266 1-3)

என்பதானது உடலில் மெண்மையானவர் நம் மகளிர் ஆனால் உள்ளத்தின் அளவில் மிகவும் வலிமையானவர்கள். காட்டின் கண் இருக்கும் கொடிய மிருகங்களும் தம் குரல் இனிமையால் கட்டுப்படுத்தி வைத்து இருப்பதும் பெரிய காரியமே!

**மணிமேகலையில்**

நாடாளும் அரசனும் தன்னை மணமுடிக்க வற்புறத்தினாலும் தான் கொண்ட பிறப்பு துறவறத்திற்கே என்று உறுதி பூண்ட மணிமேகலையானவர், பெருமைக் குரியவர். "அமுத சுரபி” கொண்டு தன் தாய்மை நீரூபித்து பெண்ணின் சுதந்திர சிந்தனையை போற்றி காத்தவர் என்பது எம்கருத்து. ஆண்டாண்டு காலமாய் அடங்கும் வம்சம் அடிமை வம்சம் என்று பேறு பெரும் நாளில் பெண்ணில் நிலையில் உறுதி கொண்டால் நிச்சயம் முடிப்பாள் என்று செய்து காட்டியவர். “வித்தைகள் பல கற்று வித்தகி” ஆனவர்.

சங்ககாலங்களில் பெண்கள் கல்வியில் மட்டுமின்றி வீரதீர செயல்களிலும், குடும்பத் தொழில்களிலும், வேளாண் நிலங்களில் விளைச்சல்களிலும் பங்கேற்று சீரும் சிறப்புமாய் தம் திறமைகளை நிலைநாட்டி உள்ளனர். அடக்கம், மனவலிமை, நடுவுநிலைமை, நன்மை தீமை அறிகின்ற ஆற்றல் பெண்களுக்கு மட்டுமே உரித்தான உயர்வான குணமாக தொல்காப்பியர் (14)

**முடிவுரை**

எக்காலத்திலும் சூரியனின் ஒளியை கை வைத்து மறைத்தால் மறையாது என்பதிற்கினங்க மகளிரின் சுதந்திரங்களை கொடுக்கப்பட்டதாகவே உள்ளது. சுதந்திரம்

என்பது பெறப்பட்டவையோ கொடுக்கப்பட்டவையாகவோ இல்லாமல் அவர்களின் உரிமையாக இருக்க வேண்டும்.

**அகிலத்தின் ஆயிரம் மொழிகளும்**
**அன்னை என உனை போற்றும்**
**பெண்மை பெருமை என**
**பேசிப் பேசி வாழ்த்துப்பாடும்**
**பெருந்தெய்வம் நீதான் என**
**களிப்போடு வழிநடக்கும்,**
**பெண்ணே வாழ்க நீ**
**எந்நாளும்**

**அடிக்குறிப்புகள்** :-

- அகநானூறு கருத்து சங்க இலக்கிய பதிப்புரைகள் பாரதி புத்தக ஆலயம் பக்கம் 38
- புறநானூறு கருத்து சங்க இலக்கிய பதிப்புரைகள் பாரதி புத்தக ஆலயம் பக்கம் 24
- நற்றினை குறிப்பு - இந்து தமிழ் திசைக்குறிப்பு
- மணிமேகலை S.N கந்தசாமி, 1978 அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
- தொல்காப்பியம் பொருள் 14

# 43. நாவல்களின் வழி சமுதாயக் கட்டமைப்புச் சிந்தனைகள் .

**பெ செல்வி,**

பகுதி நேர முனைவர் பட்டம் ஆய்வாளர்,

பாரதிதாசன் உயராய்வு மையம்,

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 24.

DOI 10.5281/zenodo.10730101.

**Abstract:**

A society is a collective organization in which many people live together. It is based on - society - nature. Humans have devised a way of life for themselves in order to formalize society's faults and vices. As its foundation, the systems of marriage and family are practiced and a moral way of life is followed.

**Key Words :** Society – Women's Study – Novel – Post modernism

சமுதாயம் என்பது மக்கள் பலர் ஒன்றிணைந்து வாழும் கூட்டு அமைப்பாகும். அது தான் – சமுதாயம் - இயற்கை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு அமைகிறது. சமுதாயத்தின் தவறுகளும் சீர்கேடுகளையும் முறைப்படுத்தும் வகையில் மனிதர்கள் தங்களுக்கான வாழ்க்கை முறையை வகுத்தனர். அதன் அடித்தளமாகவே திருமணம், குடும்பம் என்ற முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு ஒழுக்க நெறியான வாழ்க்கை முறை பின்பற்றப்படுகிறது.

ஆனால் அத்தகைய கட்டுப்பாடுகள் பெண்களுக்கு மட்டுமே உரியதாக மாறி ஆணின் ஒழுக்கம் என்பது சமுதாயத்தின் பார்வையில் பெரிதாக கண்காணிக்க படாமல் பெரும்பாலும் அவை பெண்களின் மேலே திணிக்கப்படுள்ளது. அதற்கு மாறாக ஆண்களின் செயல்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளப் படுவதில்லை .

ச.தமிழ்ச்செல்வியின் ‘கண்ணகி’ நாவலில் கண்ணகி தான் விரும்பிய ஆண்மகனை வீட்டாரின் சம்மதம் இல்லாமல் திருமணம் செய்து கொள்கிறாள். அத்தை நாத்தனார் மகன் என்று வாழும் அவளின் வாழ்வில் கணவனின் இரண்டாவது மனைவி என்று ஒரு நபர் வருகையில் அதனை தடுத்து நல்வழிப்படுத்த அவனின் பெற்றோரோ உறவினரோ முயற்சி செய்யாமல் அவனின் ஆசைக்கிணங்க இரண்டாவது திருமணம் செய்து வைக்கின்றார்கள். சமுதாயம் என்பது பெண்ணின் ஒழுக்கத்தை மட்டுமே தலையில் சுமந்து கொண்டு இருப்பதை இந்நாவல் குறிப்பிடுகிறது .

### பெண்களின் சமுதாய சிக்கல்கள்

திருமணம் ஆன பின் கண்ணகி அவளின் விருப்பு வெறுப்புகளை மறந்து கணவனுக்காக வாழ்கிறாள். கணவன் வேறு திருமணம் செய்து கொண்ட பின்னும் இரண்டாம் மனைவிக்கு, தான் முதல் மனைவி என்று கூட தெரியாத வகையில் அவனின் குடும்பத்தார் உண்மையை மறைத்து இரண்டாம் மனைவியான சூடாமணியை கொண்டாடும் போதும்

அதனை ஏற்று தனக்கான உரிமையை கூட விட்டு கொடுத்து வாழ்கிறாள் என்பதை கண்ணகி நாவலில் நாம் உணர முடிகிறது.

ஆண்டாள் பிரியதர்ஷினியின் “விடியும் நேரம்” என்ற குறுநாவலில் **“விஜயா என்பவள் பெற்றோர்களால் கட்டாயப்படுத்தப்பட்டு பள்ளி படிப்பை நிறைவு செய்யாமலே திருமணம் செய்து குடும்ப வாழ்வை ஏற்கும் தருவாயில் கணவன் இறந்துவிட விதவையாக வாழ்வை தொடர்கிறாள்.**

**அவள் அதன்பின் துணிக்கடையில் வேலைக்கு சென்று குடும்ப பொறுப்பை ஏற்று தாய் தந்தையோடு வாழும் வாழ்க்கையிலும், பெற்ற தாய் தந்தையினராலேயே பல அவமானம், இன்னல்கள், துயரம் என கடுஞ்சொற்களுக்கு ஆளாக்கப்பட்டு நொடிந்து போகிறாள்.**

**பின் தன் வாழ்வை தொடர சுயமாக நிற்க யோசிக்கும் வேளையில் வயதான ஒருவருக்கு இரண்டாம் மணம் செய்து வைக்க விஜயாவின் பெற்றோர்கள் ஏற்பாடு செய்கின்றனர்”**[1] என்பதை பெண்ணை திருமணத்திற்காகவே பெற்று வளர்க்கும் சூழல் ஏற்படுகிறது என்பதனையும் அதனையே வாழ்வென கற்பிக்கும் சமூக சிக்கல்களையும் ஆசிரியர் எதிர்த்து நிற்கிறார் என்பதை தெறிந்துக்கொள்ள முடிகிறது.

சமுதாயமும் சரி, தனிமனிதனும் சரி பெண்களையும் அவர்களின் வாழ்வையும் திருமணம் என்ற கூண்டுக்குள் அடைக்கவே போராடிக்கொண்டிருக்கின்றனர்.

பெண் என்பதால் எப்போதும், எல்லோருக்கும், எல்லாவற்றையும் விட்டு கொடுத்து தனக்கென்று தனித்து இல்லாமல் தியாக மனப்பான்மையுடன் வாழ்கிறாள் என்பதை,

**"ஐந்தில் சிறியவள்**
**என்பதனால் தம்பிக்கு சாக்பீஸை**
**இருபதில் பெரியவள்**
**என்பதனால் கணவனுக்கு முதல் டிகாக்ஷனை**
**முப்பதில் பெரியவள்**
**என்பதனால் மாமியாரின் டிவி ஆசைக்காய்**
**என்னுடைய பிரிஜ் தேவையை**
**இப்படி விட்டுக் கொடுத்த நான்**
**ஏன் சரியான சமயத்தில்**
**சிறியவளாகவோ பெரியவளாகவோ**
**இருப்பதில்லை"**[3]

என “**வத்ஸலா**” தனது கவிதை நூலில் கூறியிருக்கிறார்.

**“ஒரு பெண் தன்னுடைய ஒவ்வொரு பருவத்திலும் பிறருக்காகவே வாழ்கிறாள். காரணங்கள் சொல்லப்பட்டே அவளின் சுயம் அழிக்கப்படுகிறது. பிள்ளைப் பருவத்தில் இருந்து வயது முதிர்ந்த மூதாட்டியாய் உடல் நடுங்கிப் போகும்வரை உடனிருப்போருக்காக தன் சுயத்தை ஒளித்துக் கொள்கிறது பெண்மை”**[4] என்று **ஆண்டாள் பிரியதர்ஷினி** எழுதிய **சூரசம்ஹாரம்** என்ற குறுநாவலில் பெண்கள் கற்பென்ற வளையத்தின் நரம்புகளால் விலங்கிடப்பட்டவர்கள் என்பதை வெளிக்காட்டுகிறார். பெண்களின் சமுதாயச் சிக்கல்களை எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டுகிறது.

**பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்**

தனியொரு பெண்ணாக தன் வாழ்வை நிர்ணயித்து முன்னேற நினைக்கும் கண்ணகிக்கு ஆதரவு தருவதாக வரும் திவ்யநாதன் அவளை தன் உடல் தேவைக்காக பயன்படுத்தி பின் கண்ணகி கருவுற்ற போதும் கண்ணகியின் வாழ்விலிருந்து விலகி செல்லும் நிகழ்வின் வழி இதை அறியலாம்.

**“கதையின் நாயகியாக வரும் பிரபா தன் குடும்பத்திற்கும் மாமியாருக்கும் கட்டுப்பட்டு அவர்களின் கொடுமைகளையும் அடிமைத்தனத்தையும் ஏற்று வாழ்ந்த போதும் மனதில் சாதிக்க வேண்டும். தன் கல்லூரி வாழ்வில் பேச்சாளராக வாழ்ந்த புகழை மீண்டும் சாதிக்க வேண்டுமென நினைக்கிறாள். அவளின் கனவுகளை வெளிச்சமாக்கும் வகையில் அவளின் கல்லூரி தோழி காயத்ரி என்கிற பிச்சையம்மாளை சந்திக்கிறாள். அவளின் நண்பர் ரிஷியின் மூலம் அவளின் வாழ்வு வளம் பெறுகிறது. இறுதியில் அதற்கு பிரிதிபலனாக ரிஷி பிரபாவின் மேல் தன் ஆசையை நிறைவேற்ற கேட்கிறான்”**[6] என்பதை **ஆண்டாள் பிரியதர்ஷினி** எழுதிய **சிகரம் சிலந்திக்கும் எட்டும் என்று குறுநாவலில்** பெண்கள் தங்களின் அறிவையும் திறமையையும் பயன்படுத்தி உயர் நிலையை அடைய கூட சமுதாயத்தின் துணை தேவைப்படுகிறது. அதற்காக அவளிடம் எதிர்பார்க்கப்படுவது அவளின் உடலை சார்ந்தே அமைகிறது என்பதை சுட்டிக்காட்டுகிறது.

**“இந்த சமுதாயமானது ஒரு பெண்ணிடம் கைமாறாக எப்போதும் அவளின் உடலையே எதிர்பார்க்கிறது. எந்த துறையாக இருந்தாலும் ஒரு பெண் முன்னேறவோ அல்லது பணியில் பயணிக்கவோ அவளின் இயலாமை அல்லது வறுமை ஏதோவொன்றை பயன்படுத்த நினைக்கிறது. இன்றளவும் இது போன்ற செயல்கள் பல நிறுவனங்கள் முதல் நிறைய இடங்களில் பெண்களை இச்சைப்பொருளாகவே பார்ப்பதை சமுதாய பார்வையில் ஆண்டாள் பிரியதர்ஷினியின் தகனம் நாவல் சுட்டிகாட்டுகிறார்”.**[7]

கண்ணகி நாவலில் கண்ணகி தன் வாழ்விற்காக தான் பெற்ற மகனையே விட்டு வெளிநாடு செல்ல ஆயத்தமாகிறாள். வெளிநாட்டு வேலை என்று நினைத்து சென்றவளுக்கு பெரும் ஏமாற்றமே. அங்கே அன்வரின் என்பவரின் ஆசைநாயகியாக மட்டுமே வாழ நேரிடுகிறது. நாடு திரும்பவும் அல்லது அவர்களை எதிர்த்து போராடவும் இயலாமல் தன்

வாழ்வை அன்வரோடு கழிக்கிறாள். வேறு வழி இல்லாமல் நாட்கள் செல்ல செல்ல அந்த வாழ்வை பழக்கி கொள்கிறாள்.

**சமுதாயக் கட்டமைப்பு**

**ஆண்டாள் பிரியதர்ஷினி** எழுதிய **கட்டில் மனசு** குறுநாவலில் **“குடும்பம் என்ற அமைப்பானது கணவன் மனைவி இருவரை சார்ந்தே உருவாகிறது. அதில் கணவனால் மனைவி ஒரு சதைப்பிண்டமாக மட்டுமே பெரும்பாலும் பார்க்கப்படுகிறாள் என்பதை வெளிக்காட்டுகிறார் ஆசிரியர்”.**[9]

கணவன் எப்படி இருந்தாலும் மனைவி என்பவள் அவரை தெய்வமாக வணங்க வேண்டும் என்றும் போற்ற வேண்டுமென்றும் சமுதாயம் கட்டமைத்துவிட்டது. புராணங்கள் இதிகாசங்கள் அனைத்தும் பெண்கள் மட்டுமே கற்புடன் வாழ வேண்டும் என்றும் கணவன் இன்னொரு பெண் மீது ஆசைப்பட்டால் கூட கற்புள்ள பெண் அவனுக்கு துணை நிற்க வேண்டுமென்றும் கதை கட்டி விட்டுள்ளதை அறிய முடிகிறது.

**“சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட கோவலன் கண்ணகி வாழ்வே இதற்கு சான்றாகும். கண்ணகி தன் கணவன் தன்னை விட்டு மாதவியோடு வாழந்த போதும் கணவனுக்காக செல்வங்கள் அத்தனையும் கொடுத்து நிர்கதியான பின் கோவலன் திரும்ப வருகிறான். அந்த நிலையிலும் கண்ணகி கணவனை வழிபட்டு ஏற்று புது வாழ்விற்காக தயாராகிறாள்.”**[10]

தனக்கு தீங்கு விளைவித்தவர் கணவனாக இருக்கும் போது சுயமரியாதையோடு தனித்து நின்று வாழ்வில் வெற்றி பெற சமுதாயம் பெண்களை வழிநடத்துவதில்லை. எத்தனை பெரிய துன்பம் அடைந்தாலும் கணவனை வணங்கி வாழவே இந்த சமுதாயம் பெண்களை வழிநடத்துகிறது.

**ஆணாதிக்கம்**

**கட்டில் மனசு** கதையில் வரும் **“காவேரி விபத்தில் சிக்கி உடல் அசைவின்றி படுத்த படுக்கையாகிறாள். அவள் நடமாட்டமாகவும் அழகோடும் இருந்த போது கொஞ்சி பேசிய கணவன் உடலின் அணுவை கூட அசைக்க முடியாத காவேரியை வார்த்தையாலும் உடலாலும் காயப்படுத்துகிறான். அவனின் உடல் சுகத்திற்காக வேறு பெண்ணை நாடுகிறான். இதனை விளைவால் மேலும் காவேரியை வதை செய்கிறான். அவளின் நிரம்பி வழிந்த சிறுநீர் பையை அகற்றாமல் அந்த சிறுநீரை அப்படியே காவேரியின் உடலிலே ஊற்றி வார்த்தைகளால் எரிக்கிறான். அவளை கொலை செய்துவிடவும் முயற்சிக்கிறான். இத்தனை இன்னல்களையும் பொறுத்து குணமாகி சாதிக்க நினைக்கிறாள் காவேரி.”**[11]

**பெண்ணின் கடமை**

சமுதாயத்தில் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வது சுய இன்ப துன்பங்களை பகிர்ந்து கொள்ளவே. பெண் ஒரு குடும்பத்தை சுமக்கும் அளவிற்கு ஆண்கள் சிரத்தை கொண்டு சுமப்பதில்லை என்பதே உண்மை.

கண்ணகி ஆசைத்தம்பியை திருமணம் செய்து கொண்ட காரணத்தினாலே அவனின் குடும்பத்தை தன் குடும்பமாக பார்க்கிறாள். அவள் கூலி வேலை, கொத்து வேலை, வயல் வேலை என்று தனக்கு கிடைத்த அனைத்து வேலைகளுக்கும் சென்று அவனின் குடும்ப சுமையை தாங்குகிறாள் என்பதை கண்ணகி நாவலில் காண முடிகிறது.

ஒரு நாள் உணவின்றி அவனின் உடன் பிறந்தவர்களும் அம்மா அப்பாவென அனைவரும் பசியால் சுருண்டு கிடக்கையில் இரவென்றும் பாராது நெடுந்தூரம் சென்று கம்பை உருவி வந்து இடித்து சமைத்து பசியாற்றுகிறாள். இப்படி தன்னையே கணவனின் குடும்பத்திற்காக தியாகம் செய்கையில் ஆசைத்தம்பி அவளை பொருட்படுத்தாமல் வேறொரு பெண்ணை நாடிச்செல்கிறான்.

இந்தச் சமுதாயமானது பெண்ணை இன்றளவும் ஆண்களின் கைப்பாவையாகவே கருதுகின்றது. கணவனின் விருப்பத்தை மீறி பெண்கள் தங்களுக்கான பாதையை உருவாக்கிகொண்டு சாதித்து புகழ் பெற்றாலும் அவளை நன்னடத்தை இல்லாதவளென பெயர் சுட்டிவிடுகிறது.

**பணத்தின் தேவைகள்**

"**கலைச்செல்வி**" எழுதிய "**சித்ராவுக்கு ஆங்கிலம் தெரியாது**" என்ற சிறுகதை தொகுப்பில் "**சூரியின் அம்மா**" என்ற தலைப்பிலான சிறுகதை சமுதாயத்தில் நடைபெறும் உண்மை தன்மையை வெளிக்காட்டுகிறது.

**"சூரியா என்ற சிறுவன் அம்மாவை பிரிந்து அப்பாவின் கைக்குள் வளர்ந்து வருகிறான். தாயைப் பற்றிய தவறான எண்ணங்கள் பலவும் அவனின் மனதில் விதைக்கப்பட்டு தாயை வெறுத்து பேசுகிறான். சூரியாவின் அம்மா அரசு வேலையில் பணி புரிகிறார். ஒரு பணத்தேவைக்காக மகன் சூரியாவை அவன் அம்மாவிடம் சென்று பணம் கேட்க தயார் செய்கிறார்கள் அப்பாவின் குடும்பத்தார். அம்மாவை வெறுக்கும் சூரியா அவளை அம்மாவென்று கூட அழைக்காமல் அம்மாவின் அலுவலகம் சென்று வெறுமனே பணம் வேண்டும் என்று மட்டும் கேட்கிறான். பெற்ற தாயின் அன்பு புரியாத போதும் அவள் பணம் கொடுக்க சம்மதிக்கிறாள். அப்போது அங்கே வரும் நபரிடம் இவன் தன் மகன் என்று பெருமிதமாக அறிமுகம் செய்கிறாள்"**[12] இதுவே அந்த சிறுகதை பெண் தன் குடும்பத்தோடு இல்லாமல் மீண்டும் தன் தாய் வீட்டிற்கே சென்றால் அவளை சமுதாயம் வார்த்தைகளால் கிழித்துவிடுகிறது. பெண் எங்கிருந்தால் தன் மகன் தன் கணவன் என்ற எண்ணம் மாறாமல் இருக்கிறாள் என்பதை இக்கதையில் அறிந்து கொள்ளலாம்.

கண்ணகி நாவலில் வரும் கண்ணகியின் மகன் தாயின் அன்பு தெரியாது வளர்ந்ததால் அவளை பணத்திற்காக மட்டுமே அவ்வபோது அணுகி தேவையை நிறைவேற்றி கொள்கிறான்.

சமுதாயம் என்பது ஆணுக்கொரு நியதியையும் பெண்ணுக்கொரு நியதியையும் கொண்டாடுகிறது. ஆண் எதை வேண்டுமானாலும் செய்யலாம். பெண் எதையும் செய்ய முடியாது அப்படி செய்ய வேண்டுவனவற்றை ஆணின் அனுமதியோடே செய்ய வேண்டும் என்பதை இக்கட்டுரை எடுத்திருக்கிறது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 44.கூலித் தமிழ் காட்டும் சமூகம் நூல் முன்வைத்து தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல்

**இரா. நந்தினி தேவி**
முனைவர் பட்ட ஆய்வாளர், நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்,தஞ்சாவூர்.

DOI 10.5281/zenodo.10741509.

**Abstract :**

In Tamil society, which is a landowning society, it can be seen that professions are defined based on the location and geographical environment of the people from the Sangam period to the present day. However, due to the different approach of nature and the oppression of the British, the people of Tamil Nadu have migrated from the plains to the various mountainous regions of the world in order to address their economic needs. A tragic history can be seen on all sides of the people who migrated. The position of women among them needs to be examined. In that way, this research paper seeks to investigate the women who migrated to Kerala region to take up tea picking, a new profession that they did not know, leaving behind their land and profession.

**Key Words :Society – Environment – Cooly Workers**

## முன்னுரை

நிலவுடமைச் சமூகமான தமிழ்ச் சமூகத்தில் மக்களின் இருப்பிடத்தையும் நிலவியல் சூழலையும் அடிப்படையாகக் கொண்டு தொழில்முறைகளானது வரையறுக்கப்பட்டுள்ளமையை சங்ககாலம் முதல் சமகாலம் வரை காண முடிகிறது. ஆனால், இயற்கையின் மாறுபட்ட அணுகுமுறையினாலும், ஆங்கிலேயர்களின் அடக்குமுறைகளினாலும் பொருளாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு சமவெளிப்பகுதிகளிலிருந்து உலகின் பல்வேறு மலையகப் பகுதிகளுக்குத் தமிழக மக்கள் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். அவ்வாறு புலம்பெயர்ந்து சென்ற மக்களை *அனைத்துப் பக்கங்களிலும் துன்பமிக்க வரலாற்றினைக் காண முடிகிறது. இவர்களுள்* பெண்களின் நிலைப்பாடு என்பது ஆராயப்பட வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில், தன் நிலம், தொழில் என அனைத்தையும் விட்டு அறிந்திறாத புதியதொரு தொழிலான தேயிலை பறிக்கும் தொழிலை மேற்கொள்ள கேரளா பகுதிக்குப் புலம் பெயர்ந்துச் சென்ற பெண்கள் குறித்து இவ்வாய்வுக் கட்டுரை ஆராய முற்படுகிறது. கூலி எனும் சொல் தோட்டங்கள் அடிமையாக வேலைப்பார்த்த மனிதர்களை குறிக்கும் சொல் கிறித்தவர்கள் மதம் பரப்புவர்களை கூலி மிசன் என்றும் அழைத்தனர். இந்த நூலின் அடிப்படையில் கேரளாவிற்கு இடம் பெயர்ந்த தோட்டத் தொழிலாளர்களைப் பற்றியும் குறிப்பாக பெண்களின் நிலையை பற்றியும் விரிவாக விவரிக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## இடம்பெயர்வு

“பதியெழு அறியாப் பழங்குடி”(சிலம்பு.) என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. பூம்புகார் நகர மக்கள் எந்த காரணத்திற்காகவும் தங்கள் ஊரைவிட்டு சென்றதில்லையாம். சொந்த வாழிடம் விட்டு இடம்பெயராக ஒரு வாழ்க்கையே மிகப் பெருமயாகக் கொண்டாடுகின்ற மன

நிலையை இந்த சொற்கூற்று விவரிக்கிறது. ஆனால், காலத்தின் தேவைக் கருதி ஒவ்வொரு காலகட்டத்திலும் மக்கள் தங்கள் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றி கொள்ள இடம்விட்டு இடம் பெயர்ந்து சென்று வாழ்ந்துள்ளனர். அத்தகைய புலம்பெயர்வில் ஏற்பட்ட சிக்கல்களை இலக்கியமாக எழுதியுள்ளதாக வரலாற்றின் வாயிலாக அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தில் வரும் ஆற்றுபடை இலக்கியம் புலம்பெயர் இலக்கியங்களுக்கு முன்னோடி எனலாம். தொடர்ந்து சிலப்பதிகாரம் போன்ற ஐம்பெரும் காப்பியங்களிலும் இதிகாசங்களிலும் மனிதர்கள் நிலபரப்பு முழுவதும் வாழ்வாதாரங்களைத் தேடி புலம்பெயர்ந்த்தை அறியமுடிகிறது.

இத்தகைய, புலம்பெயர் என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொல்லாகிய (DIASPEIRD) என்ற சொல் டையாஸ்பிர் (Diaspeir) கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததாகும். இச்சொல்லின் பொருள் "தூவுதல்" ஆகும். இச்சொல் தாவரவியலில் தாவரங்களின் விதைகள் தூவப்படுவதைக் குறிப்பதற்கு பயன்பட்டது. இப்பொழுது மனிதர்கள் உலகப்பரப்பு முழுவதும் சிதறித் துவப்படும் காட்சிகளைக் குறிப்பதற்குப் பயன்படுகிறது.

**கேரளத்தில் இடம்பெயர்வு**

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தனித்து விளங்கிய தமிழரின் வாழ்வாதார எல்லை இதுதான் என்று வரையறை செய்ய இயலாது.

**"வடவேங்கடம் தென்குமரி**

**ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்"** **(தொல்-சி.பா)**

தமிழ்மொழி வழங்கிய பகுதி வடக்கே வேங்கட மலைக்கும் தெற்கே குமரிக்கும் இடைப்பட்ட பகுதியாக இருந்திருக்கிறது. சங்க இலக்கியங்கள் கூறும் சேரநாடு இன்றைய கேரளம் ஆகும். கேரளாவில் தமிழர்கள் புலம்பெயர்வு பல்வேறு நிலைகளில் நிகழ்ந்துள்ளது.

தமிழகத்திலிருந்து கேரளவிற்கு, கோயில் கலைகளுக்காக சென்ற விஸ்வகர்மா இனக்குழுவினரை இன்றளவிலும் காணலாம். கேரளாவில் காணப்படும் கோவில் அழகு வேலைப்பாடுகள் இவர்களுடையதே, இவர்கள் அனைவரும் இன்று மலையாளிகள் என்றே தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர்.

18ம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தில் மிகப்பெரிய பஞ்சம் ஏற்பட்டது. அதற்கு தாது வருடப்பஞ்சம் என்று பெயர். விவசாயிகள் செல்வந்தர்கள் என அனைவரையும் பஞ்சத்தில் வாடினர். ஒரு வேளை உணவிற்குக் கூட வழியில்லாமல் வீதிகளில் அலைந்தனர்.

**"சொகுசான மகராச மக்களுக்கெல்லாம்**

**மழுக்கலாய் துட்டுக்கு புண்ணாக்கு வாங்கியே**

**மறைவுக்கு போவாரம் உண்பதற்கு**

**புழுங்கவரிசி சாதம் சேராதுன்னு சொன்ன**

**புண்ணிய மகராச மக்களுக்ளெல்லாம்**

**மலைக் கத்தாழை குறுத்தினைப் பிடிங்கியே**

**மந்திட்டு மறைவிலே மடுக்கிண்ணு கடிப்பாராம்"**

இந்த நாட்டுப்புறப் பாடல் பஞ்சத்தை எடுத்துரைப்பாதாக அமைந்துள்ளது. இந்நிலையைப் பயன்படுத்தி ஆங்கிலேயர்கள் அப்பாவி மக்களைக் கங்காணி எனும் தரகர்கள் மூலம் தேயிலைத் தோட்டத்தில் வேலைச் செய்தால் அதிக ஊதியம் கிடைக்கும் மருத்துவ வசதி, இலவச வீடு குறிப்பாக சாதிகள் பார்ப்பதில்லை என்றும், ஆசை வார்த்தைகள் கூறி பல மைல்கள் தூரம் நடத்தியே அழைத்துச் சென்றுள்ளனர். இவ்வாறே தமிழகத்தில் இருந்து கேரளாவிற்குத் தேயிலைத் தோட்ட தொழிலாளியாக குடும்பம் குடும்பமாக புலம் பெயர்ந்தனர்.

**கேரளாவில் தேயிலைத் தோட்டம்**

கேராவில் தேயிலை வேளாண்மை 1870 காலகட்டங்களில் தான் தொடங்கப்பட்டது. தேயிலை பயிரிடுவதிலும் அதன் வளர்ச்சியிலும் தமிழர்களே அதிக அளவில் ஈடுபடுத்தபட்டனர். திருநெல்வேலி, மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், ஈரோடு போன்ற மாவட்டங்களிலிருந்து கங்காணிகள் கூட்டம் கூட்டமாக தேயிலைத் தோட்டங்களில் வேலைக்குச் சேர்ந்தனர். இடுக்கி மாவட்டம் 1868 வயநாரு மாவட்டம் 1887, ஆனைமலை-1897 மத்திய திருவிதாங்கூர் போன்ற இடங்களில் தமிழர்கள் கொத்தடிமைகளாகப் பெருந்தோட்டப் பணிகளில் அமர்த்தப்பட்டனர்.

**தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்**

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் பணியாகப் பெண்கள் கொழுந்து எடுப்பதையே முக்கியப் பணியாக கொண்டனர். ஆண்கள், விறகு வெட்டுதல், மரங்களை வெட்டி காடுகளை விவசாயத்திற்கு ஏற்ற வகையில் மாற்றவது, சால் வெட்டுதல், மருந்து தெளித்தல் போன்ற பணிகளைச் செய்து வந்தனர். அதிகாலையில் குறிப்பிட்ட நேரத்தில் தன்னுடைய கூடாரத்திலிருந்து கங்காணி நிற்கும் இடத்திற்கு செல்ல வேண்டும். அங்கிருந்து கங்காணி தேயிலைக் கொளுந்தெடுக்கும் பகுதிகளைப் பிரித்துக் கொடுப்பார் வேலை முடியும் நேரத்தில் எடுத்த கொழுந்த்தின் எடைக்கு ஏற்றாற்போல் ஊதியம் பதிவு செய்வர். இதைத் தட்டிக் கேட்டால் சித்திரவதை செய்வர், சித்திரவதை தாங்காமல் தப்பி செல்ல முயற்சி செய்து காட்டிற்குள் ஓடி இறந்தவர்களதிகம். ஒவ்வொரு கூலிக்கும் ஒரு கம்பளி வழங்கப்படும். ஆண்களுக்கு ஏழுபடி அரிசியும் பெண்களுக்கு ஐந்துபடி அரிசியும் வழங்குவர். இதற்கானத் தொகை சம்பளத்தில் பிடித்துக் கொள்வர்.

**தேயிலைத் தோட்டத்தில் பெண்கள்**

தேயிலைத் தோட்டங்களில் பெண்கள் மிக மோசமாக நடத்தபட்டனர். பருவநிலை மாறுதல்களே அவர்களுக்குச் சவாலாக அமைந்தது. கொளுந்து எடுக்க செல்லும் போது பெண்கள் தங்கள் குழந்தைகளைக் குடில்களிலே விட்டுச் செல்ல வேண்டும் என்ற பரிதாப நிலை காணப்பட்டது. இதனிடையே காலரா, பெரியம்மை போன்ற கொடிய நோய்கள் ஏற்பட்டால் உரிய மருத்துவமனை வசதிகள் கூட இல்லாமல் பல தாய்மார்கள் இறந்துவிட்டனர். தாயின்றி குழந்தைகள் இறந்துவிட்டனர். தாயின்றி குழந்தைகள் வளர்க்கும் நிலை ஏற்பட்டது.

கொளுத்து எடுப்பதே பெண்களின் பிரதான பணி. பணிக்குச் செல்லும் முன் உடல் முழுவதும் கம்பளிச் சுற்றி புடவை முழுங்காலுக்குக் கீழே வராமல் புடவையை அணிந்துச் செல்வர். தேயிலைக் கொளுந்தெடுக்கும் கூடையை கயிறு மூலம் பின்பக்கம் தொங்கவிடுவர். தேயிலைக் கொளுந்தானது ஒரு கொளுந்தும் இரண்டு இலையும் ஒன்றாக இருப்பதை மட்டுமே பறிக்க வேண்டும். கொளுத்து மிகவும் சிறிதாக இருக்க கூடாது. ஒரு முறை பயிர்ச் செய்யபட்ட தேயிலைச் செடியிலிந்து எட்டு அல்லது ஒன்பது மாதங்களுக்குக் கொழுந்து எடுக்கலாம். அது போல கவாத்து செய்தல் என்பது பருவநிலைக்கு ஏற்ற நிலையில் தேயிலைச் செடியை வெட்டிவிடுதல் நிகழ்வு ஆகும். ஒருமுறை கவாத்து செய்தால் தேயிலை தளிர் வர 80 முதல் 90 நாட்கள் ஆகும்.

**பெண்களுக்கான துயரங்கள்**

தேயிலைக் கொழுந்தை இளம் தளிர் அல்லாத இலையை எடுத்தால் கங்காணி கெட்டவார்த்தையால் திட்டுவது, கம்பால் கங்காணியின் பாலியல் இச்சைகளுக்கு அடிபணியவில்லையெனில் அவர்களைக் துன்புறுத்துவது கொழுந்திற்கு ஏற்ற எடையை புத்தகத்தில் பதியாமல் இருப்பது. மேலதிகாரியிடம் குற்றம் சாட்டுவது போன்றவை மட்டுமல்லாது மழைகாலங்களில் அட்டைப்பூச்சி கடி, அட்டை பூச்சி கடிக்காமல் இருக்க புகையிலையை சோப்பில் கலந்து தேய்க்கின்றனர். இவர்கள் படும் துன்பத்தை,

**“மூணாறு சாலையியே**
**முள்ளடர்ந்த காட்டுக்குள்ளே**
**பொன்னான மேலியெல்லாம்**
**புளுதி பெறளுத்தம்மா…”**

தன் சொந்த ஊரில் இருந்த நிலையும் இப்போது காணபட்ட பெண்ணையும் நினைத்து வருத்தமளிக்கும் நிலையை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

**“மட்டஞ்சரியா போடு**
**மாரெடுத்து தூர போடு**

**வஞ்சிய அறுத்து போடு**
**வந்துடுவார் நம்ம துரை"**

மாரெடுத்து என்பது தேயிலைச் செடியிலிருந்து வெட்டியிடப்பட்ட குச்சினை, வஞ்சிய என்பது தேவையில்லாத குச்சினை குறிப்பதாக வெள்ளகார துரை தேயிலைத் தோட்டத்தை மேற்பார்வையிட வருவார் அவ்வாறு வரும் போது சரியாக வேலைச் செய்ய வேண்டும் என கங்காணி தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் பெண்களை கண்டிப்பதாக அமையும் பாடல்.

**தோட்டத் தொழிளார்களின் வழிபாடுகள்**

**"திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை"**

என்ற பழமொழிக்கு ஏற்றார் போல் தேயிலைத் தோட்டங்களில் சிறு தெய்வங்களை வழிபடுகின்றனர். வழிபாடுகள் நடத்துவதில் பெண்களே முன்மாதிரியாக திகழ்கின்றனர். சிறு தெய்வங்களுக்குப் பால்குடம் எடுத்தல், தீ மிதித்தல், முளைப்பாரி எடுத்தல் போன்ற நிகழ்வுகளில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கலந்து கொள்கின்றனர். முளைப்பாரி எடுத்தலில் பெண்கள் தமிழ்நாட்டில் உள்ளதை போன்றே இன்றும் நிகழ்த்துகின்றனர். அண்டை மாநிலமாக இருந்தாலும் பெண்கள் தங்கள் மரபைக் காப்பதிலும் போற்றுவதிலும் பெறும் பங்கு வகிக்கின்றனர்.

**"பொலியோ பொலி**
**மச்ச பொங்க**
**பால்பான பொங்க"**

இப்பாடல் காவத்து முடிந்து முதல் நாள் கொழுந்து எடுப்பர். அவ்வாறு கொழுந்து எடுக்க என்று சில சடங்குகளை செய்கின்றனர். தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து எடுக்கும் மூத்த பெண்கள் வழிபாடு செய்வர். தேயிலை மூட்டில் கருப்பசாமி வைத்து தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, கத்தி, அறிவாள் வைத்து வழிபடுகின்றனர்.

**தோட்டத் தொழிளார்களின் பண்பாடுகள்**

மரபு என்பது வழிவழியாகப் பின்பற்றி வருவதாகும். இச்செயலை புலம் பெயர்ந்து தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் பெண்களிடம் காணலாம். ஒரு மனிதனின் வாழ்க்கை என்பது கருவறை தொடங்கி கல்லறையில் முடிகிறது. இக்காலங்களில் ஒவ்வொன்றிற்கும் ஒரு சடங்கு முறைகள் காணப்படுகிறது. ஒரு பெண் கருவுற்றதை உறுதி செய்யப்பட்ட நாள் முதல் குழந்தை பிறக்கும் வரையே பல்வேறு சடங்குகளும் கட்டுபாடுகளும் காணப்படுகின்றன. இதன் நோக்கம் குழந்தை நல்ல முறையில் பிறப்பதே ஆகும். இவற்றில் காணப்படுவது தமிழரின் மரபு மற்றும் பண்பாடு. இத்தகைய மரபையும் பண்பாட்டையும் புலம் பெயர்ந்து தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் பெண்கள் இன்றளவிலும் தன்னுடைய பொருளாதார மரபையும் பண்பாட்டையும் பின்பற்றுகின்றனர்.

பிறந்த குழந்தைக்குக் குல தெய்வம் கோவிலில் காதுகுத்தல் நிகழ்ச்சி தொடங்கி திருமணம் வரை அனைத்துமே தமிழர் பண்பாட்டையே பின் பற்றுகின்றனர். ஏழ்மையில் இருந்தாலும் தமிழர் பண்பாட்டையும் மரபையும் வெளி மாநிலங்களில் முன்னிலைப் படுத்துவதில் தமிழகப் பெண்கள் முதன்மைப் பங்கு வகிக்கின்றனர்.

**முடிவுரை**

கூலித் தமிழ்காட்டும் சமூகம் நூலானது இலங்கைக்கு அடிமைகளாகச் சென்ற மலையக மக்களைப் பற்றி பேசுகிறது. ஆனால் இவ்வாய்வானது இந்நூலை முதன்மை சான்றாக வைத்து கேரளாவிற்கு இடம் பெயர்ந்த கூலி அடிமைகளாகச் சென்ற தோட்டத் தொழிளார்களையும் பற்றி பேசுகிறது. கொள்ளையர்களின் கைகூலிகளான கங்காணி அப்பாவி மக்களை நடத்திய விதம் பற்றி விவரிக்கிறது. தாது வருட பஞ்சம் காரணமாக புலம் பெயர்ந்த மக்களின் உணுவு திண்டாட்டம், ஏமாற்றம் சூழ்ச்சிகள் பற்றிப் பேசுகிறது. சங்க காலம் நிகழ்வுகளைக் கூட தொல்லியல் துறையினர் அகழ்வாராய்ச்சியில் நிரூபிக்கப்படுகிறது. ஆனால் காலணி ஆதிக்கத்தில் நடந்தவைப் பற்றி விளக்க எந்த வரலாற்று ஆய்வும் இல்லை. காலணிய ஆதிக்கத்தில் பாமர மக்களின் நிலையைப் பற்றி இந்நூல் விவரிக்கிறது.

**துணைநூற் பட்டியல்**

- ஆ. சிவசுப்பிரமணியன் - கூலித் தமிழ் காட்டும் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,சென்னை.
- ஆ. சிவசுப்பிரமணியன் - தமிழகத்தில் அடிமைமுறை, காலச்சுவடு, நாகர்கோவில்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 45. இலக்கியத்தில் நாட்டார் பாடல்களில் சமத்துவச் சிந்தனைகள்

மா.பிரதீபா,
முதுகலை இரண்டாம் ஆண்டு,தமிழ்த்துறை,
திருவள்ளுவர் கலை&அறிவியல் மகளிர் கல்லூரி,சூலப்புரம்.
DOI 10.5281/zenodo.10754883.

Abstract :

Oral songs and stories began to appear in every language before the appearance of writing. Such unique forms are like "Mother" who shares the concerns and joys of the country people who directly take life experiences. When doing hard work, people used to sing songs to avoid knowing the difficulty of that work. That's why "Adi Patin" If you work, you will not get bored."

**முன்னுரை:**

நாட்டார் என்ற சொல் அபிவிருத்தி என்கின்ற செயற்பாட்டுக்கு உட்படாத பிறரின் வாழ்க்கைக் கோலத்தோடு தன்னை ஒப்பிட்டு ஏற்றத்தாழ்வு கண்டறியாத பெரும்பாலும் கிராமப்புறங்களைச் சேர்ந்த பள்ளிப்படிப்பறியாத பாமர மக்களைச் சுட்டி நிற்கின்றது.

**சமத்துவம்:**

**"எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந்திய மக்கள் எல்லோரும் ஓர் நிறைய எல்லோரும் ஓர் விலை எல்லோரும் இந்நாட்டு மன்னர்"**

**[பாரத சமுதாயம், சரணங்ள் - 4]**

எனப் பாடுகிறார். இவற்றை போல இன்னும் நிறைய இக்கட்டுரை வழி நின்று காண்போம்.

**இலக்கியம்:**

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சி கொண்டு இவ்வுலகின் சிறந்த இலக்கியங்களில் ஒன்று வாழ்வின் பல்வேறு கூறுகளைத் தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன.

**சிற்றிலக்கியம்:**

முதன்முதலில் சிற்றிலக்கியம் என்பது பிரபந்தம் என்ற சொல்லால் வழங்கப்பட்டு வந்தது. பிரபந்தம் என்பது "சமஸ்கிருத மொழிச் சொல்" ஆகும். பிரபந்தம் என்ற சொல்லின் பொருள் "நன்கு கட்டப்பட்டது" ஆகும்.

**சிற்றிலக்கிய வகைகள்:**

நாட்டுப்புற மரபுகளும் எளிய மக்களின் ஆடல் பாடல்களும் பிற்காலத்தில் தனித்தனி இலக்கிய வடிவங்களைப் பெற்று வரலாறாயின.

தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, ஊசல், போன்றவை இவ்வகையில் அடங்கும்.

**பிள்ளைத்தமிழ் இலக்கியம்:**

இதனைப் **"பிள்ளைகள் கவி", " பிள்ளைப் பாட்டு"** என்றும் வழங்குவர் **தொல்காப்பியர்.**

**"குழவி மருங்கினும் கிழவதாகும்"**

**தொல்காப்பியம் (1030)**

என்று கூறுகிறது.

**தாலாட்டு பாடல்கள்:**

**"கணபுரத்தென் கருமணியே**
**என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ!"**

எனக் "குலசேகராழ்வார்" தாலாட்டும் போது படிப்போடும் தூங்கிவிடும் சந்த இனிமை உள்ளதை உணர முடியும்.

பெரியாழ்வார் **"கண்ணனைக் குழந்தையாகக் கண்டு"** தாலாட்டு பாடியதும் இதன் சிறப்பு தானே!

**நாட்டார் பாடல்கள்: நாட்டுப்புற பாடல்கள்:**

*__நாட்டுப்புற மக்கள்__ அக்காலத்தில் முறையான கல்வியைப் பெற்றிருக்கவில்லை இருந்தும் "வாழ்க்கைக்காக வாழ்க்கை மூலம் பெறப்படும் அனுபவமே கல்வி" எனும் கல்விக் கொள்கைக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டினர்.நாட்டுப்புற மக்கள் பாடிய நாட்டார் பாடல்கள் ஆரம்ப காலத்தில் வாய்வழித் தோன்றி செவி வழியாகப் பாய்ந்து உள்ளங்களில் தஞ்சமடைந்து உவகையூட்டின.

**கும்மி பாடல்கள்:**

கும்மிக்கு பல நிகழ்ச்சிகளும், உணர்ச்சிகளும் பொருளாக வரலாம். குத்து விளக்கேற்றி மங்கல விழாவில் பெண்கள் கும்மியடிப்பார்கள். நிலாக் காலங்களில் விளையாட்டுக்காக வும் கும்மியடிப்பதுண்டு.

**"கும்மியடி பெண்ணே கும்மியடி--இரு**
**பாதம் காணவே கும்மியடி**
**நம்மையாளும் காடவ ராஜனை**
**நாடிக் கும்மியடியுங்கடி"(நா.பா)**

**மழை வேண்டி பாடும் பாடல்:**

**மழை பொழியவில்லையே!**
**"ஒருநாள் பூசை செஞ்சேன்**
**நாராயணா, ஒரு**
**ஔவு பேயாமே நாராயணா மொளைச்ச**
**ஒருபயிரும் காஞ்சு போச்சே**
**நாராயணா!" (நா.பா)**

**நாட்டுப்புற பாடல்கள் என்பது,**

"நாட்டார் பாடல் " அல்லது நாட்டுப்புற பாடல் எனப்படுவது நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாட வாழ்விலும், தொழிற்களங்களில் பணிநேரத்தில் களைப்பைக் குறைக்கும் வகையிலும்,

விழாக்களிலும் பாடும் பாடல்களைக் குறிக்கும்.

நடுகை **(நடவு)** மற்றும் ஏற்றம் போன்ற கூட்டுப் பணிகளின் போது பணியாளர்களிடையே ஓரிசையை உண்டு பண்ணுவதிலும் இவற்றின் பங்கு உண்டு. இவை பெரும்பாலும் அந்தந்த காலக்கட்டத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளின் மீதான நாட்டார் கருத்தை எதிரொலிக்கும்.

**"ஜப்பானிய நாட்டுப்புறக் கதைகளில் இயல்பில்லாத புனைவுப் பாத்திரங்கள்"** மிகுதியாக காணப்படும்.

**"இசை"** என்பது அனைவராலும் விரும்பப்படுவதனால் நாட்டார் பாடல்கள் இசைக்கும் கருத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ஏடுகளில் எழுதப்படாத பாடல்களாகவே அதிகம் காணப்படுகின்றன.

**தோற்றம்:**

ஒவ்வொரு மொழிகளிலும் எழுத்து தோன்றுவதற்கு முன்னராகவே வாய்மொழி பாடல்களும் கதைகளும் தோன்ற துவங்கிவிட்டன.அவ்விலக்கிய வடிவங்கள் வாழ்க்கை அனுபவங்களை நேரடியாக எடுத்து கூறுகின்ற நாட்டுப்புற மக்களின் கவலைகளிலும் மகிழ்ச்சிகளிலும் உடனிருந்து தேற்றுகின்ற **"தாய்"** போன்றது.கடினமான வேலைகளை செய்யும் போது அந்த வேலையின் கடின தன்மை தெரியாமல் இருப்பதற்காக மக்கள் பாட்டு பாடும் வழக்கம் இருந்தது.அதனால் தான் "ஆடி பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது" என்று கூறுவார்கள்.

**வகைப்பாடுகள்:**

இந்த நாட்டார் பாடல்கள் பரம்பரை பரம்பரையாக கையழிக்கப்படுவதாக இருந்தது. எழுதியவர்களின் பெயர்கள் இருக்காது. மேலும் இலக்கண வரையரைகள் இல்லாதது. பேச்சு வழக்கில் இந்த பாடல்கள் அமைந்து இருக்கும்.

**இலங்கையை பொறுத்த வரையில்,**

| | |
|---|---|
| **தாலாட்டு பாடல்கள்** | **.வயற் பாடல்கள்** |
| **ஒப்பாரி பாடல்கள்** | **கடற்கரை பாடல்கள்** |
| **ஊஞ்சல் பாடல்கள்** | **தோட்டப்பாடல்கள்** |

காதல் பாடல்கள் எனவும் பலவகையான பாடல்கள் பல்வேறு வகையான களங்களை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றன.

**கலை வடிவம்:**

இந்த பாடல்கள் பிரதேசங்களுக்குரிய கலை வடிவங்களையும் வெளிப்படுத்துகின்றன. மலையாக மக்களின் நாட்டாரியல் பாடல்கள் தமிழகத்தில் இருந்து வந்து தேயிலை தோட்டங்களை வேலை பார்க்கும் மக்களின் வேதனை மிகுந்த வாழ்வியலை தத்ரூபமாக எடுத்து காட்டுகின்றன.

**மக்களின் வாழ்வியல்:**

**"ஆலையிலே சோலையிலே ஆலங்காடி சந்தையிலே கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுகி அடிக்க பாலாறு..."** என்ற பாடல் வரிகளானது அந்த மக்களின் பாரம்பரிய விளையாட்டின் கிட்டிப்புள்ளை கண்முன்னே நிறுத்துகிறது.

அவர்களது தொழில்களை வெளிப்படுத்துகின்ற பாடல்களான **"அரிவு வெட்டல் பாடல்"** உழவு தொழில் செய்யும் மக்களின் வாழ்வியலை புலப்படுத்துகிறது.

**"ஏலேலோ ஐலசா ஏலேலோ"** போன்ற பாடல் வரிகள் **"நாட்டார் பாடல்கள்"** மூலம் வெளிப்படுகிறது.

**சமத்துவச் சிந்தனை:**

மனிதர்கள் யாராயினும் அவர்கள் அனைவரும் சமம் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்பதில்லை என்ற நிலை உருவாக வேண்டும். **"சமத்துவம்"** நிலவ வேண்டுமென்றால் விடுதலை அடைய வேண்டும்.

அதனால் தான் விடுதலைக் கோட்பாட்டை அழுத்தமாகக் கொண்ட பாரதி சமத்துவத்தை நிலை நாட்ட வேண்டும் என்கிறார்.

**"ஏழைகளே இல்லாமல் செய்வது உசிதம்"**

ஒரு வயிற்று ஜீவனுக்கு வழியில்லாமல் யாருமே இருக்க லாகாது என்கிறார் பாரதி.

**"மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனி உண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி உண்டோ?**

**[பாரத சமுதாயம் ,சரணங்கள்]-1**

**தனிமனிதச் சமத்துவம்:**

உயர்ந்த குலம், தாழ்ந்த குலம் என்று ஏதுமில்லை எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந்திய நாட்டு மக்கள்; எல்லோரும் சமம் என்கிறார்.

எல்லோரும் மதிப்புடையவர்கள்; எல்லோருமே இந்நாட்டு மன்னர்கள் தாம். ஏனென்றால் விடுதலை பெற்ற மனிதன் யாருக்கும் அடிமையில்லை.

**உடம்பின் நிறம் அந்தந்த நாட்டின் தட்பவெப்ப நிலையைப் பொறுத்தது.** அதனால் நிற வேறுபாடு மனித வேறுபாட்டுக்கு இடமளிக்கக் கூடாது. இக்கருத்தை'முரசு'கவிதையில்

**வண்ணங்கள்**

**வேற்றுமைப் பட்டால்-அதில்
மானுடர் வேற்றுமையில்லை
எண்ணங்கள் செய்கைகள்**

**எல்லாம்-இங்கு**
**யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.**

**[முரசு17]**

**அறிவை வளர்த்திட வேண்டும்-மக்கள்**
**அத்தனை பேருக்கும் ஒன்றாம்**
**சிறியாரை மேம்படச் செய்தால்-பின்பு**
**தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்**

**[முரசு 28]**

**ஆண், பெண் சமத்துவம்:**

ஆண், பெண் சமத்துவத்தைப் பற்றிப் பல்வேறு இடங்களில் மிகவும் வற்புறுத்திக் கூறுகிறார் பாரதி.

'பெண்ணை அடிமை என்று கருதாதே ஆத்மாவும் சக்தியும் ஒன்று; ஆணும் பெண்ணும் சமம்' என்பார்.

இன்னொரு இடத்தில்'ஆண்களும் பெண்களும் ஸமானமான ஆத்ம இயல்பும் ஆத்ம குணங்களும் உடையோராதலால் பெண்களை எவ்வகையிலும் இழிந்தவராகக் கருதுதல் பிழை'என்று குறிப்பிடுகிறார்.

**"ஆணும் பெண்ணும் நிகரெனக்**
**கொள்வதால் அறிவில்**
**ஓங்கி வையம் தழைக்கும்"**

**[புதுமைப்பெண் 3]**

என்கிறார்.

**பாடல்கள்; (நாட்டார் பாடல்கள்)**

எ.கா **பஞ்சமும் மழையும்**
**ஆடு வித்து, மாடு வித்து**
**ஐயோ வருண தேவா!**
**அத்தனையும் கூட வித்து**
**ஐயோ வருண தேவா!**

**[நா.பா]**

**இல்லறம்:**

குடும்ப வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டே தனது கணவனையும் மகிழ்விக்கும் ஒரு பெண்ணைப் புகழ்ந்து அவள் கணவன் பாடுகிறான்.

**அரிசி முளப்போட்டு**
**அரமனயும் சுத்தி வந்தா**
**அரிசி மண மணக்கும்**
**அரமனையும் பூ மணக்கும்**

**பருப்பு முளப்போட்டு**
**பட்டணமும் சுத்தி வந்தா**
**பருப்பு மண மணக்கும்**
**பட்டணமும் பூ மணக்கும்**
**வரிசை மணாளளோடு**
**வாய் சிரித்துப் பேசி வந்தால்**
**வாழ்க்கை நெய் மணக்கும்**
**வாசநறும் பூ மணக்கும்.**

**[நா.பா]**

**சமையல்:**

சமையல் தெரியாதவள் படும்பாட்டை முன்னிரண்டு பாடல்களில் கண்டோம்.

**கான மிளகா வச்சு**
**கறிக்கு மசால் அரைச்சுக்கூட்டி**
**குழம்பு ஒரைச்சுதுண்ணு**
**கொல்லுதாரே கதவடைப்பு! [நா.பா]**

**முடிவுரை:**

- இன்று எத்தனையோ மாற்றங்களை நாம் கண்டிருக்கலாம் பல வகையான பாடல்கள் இன்று உருவாகி இருக்கலாம். ஆனால் **"ஆராரோ ஆரிராரோ"** என்ற குழந்தை பாரயத்தில் தாய் பாடுகின்ற தாலாட்டு அதற்கு நிகரான உணர்வை எதனாலும் தரமுடியாது.
- இவ்வாறு இலக்கியத்தில் "நாட்டார் பாடல்களில் சமத்துவச் சிந்தனைகள் பற்றி இக்கட்டுரையில் விரிவாகப் பார்த்தோம்.

**மேற்கோள் நூல்கள்:**

1.பாரதியார் :பாரத சமுதாயம், சரணங்கள்-4

2.இலக்கிய வகை :சிற்றிலக்கிய வகைகள்

3.குமரகுருபரர் :பிள்ளைத்தமிழ் இலக்கியம் தொல்காப்பியம் (1030)

4.பாரதியார் :பாரத சமுதாயம் சரணங்கள்-1

5.சமத்துவம் :முரசு 17,முரசு 28

6.சமத்துவச் சிந்தனை :புதுமைப்பெண், 3.

7.நாட்டார் பாடல்கள் :கும்மி, வறுமை, இல்லறம், சமையல், தாலாட்டு பாடல்கள்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238 SPL.ISSUE – 1
MARCH – 2024

# 46. சங்ககாலக் குடும்ப உறவுகளும் சமூக உறவுகளும்

சூ.வீரமணி
முதுகலை ஆய்வு மாணவி, திருவள்ளுவர் கலை அறிவியல் மகளிர் கல்லூரி
சூலப்புரம்.

DOI.10.5281/zenodo.10755572

**முன்னுரை:**

சங்ககாலத் தமிழகத்தின் சமூகவரலாற்றை அறிவதற்குச் சங்க இலக்கியம் தலைமை ஆதாரமாக அமைகிறது. குடும்ப சமூக உறவுநிலைகளைப் புறப்பாடல்களும் அகப்பாடல்களும். சித்தரிக்கின்றன. வீரயுகம் ஆகிய சங்ககாலத்தின் இவ்வுறவு நிலைகளைத் தெளிவாகத் புரிந்து கொள்ள வேறு காலகட்டத்தைச் சேர்ந்த இலக்கியங்களைத் துணை கொள்ள வழியில்லை.

**சமூகநலன் கருதிய செயல்பாடு**

பரதவர் சமூகத்தில் பொது நலன் கருதி கலங்கரை விளக்கு ஏற்றினார் இரவில் கடலில் வரும் நாவாய்களுக்கும் படகுகளுக்கும் கரை இருக்கும் திசையைத் தெரிவிக்க இது ஏதுவாயிற்று தாயங் கண்ணனார் அவ்விளக்கு இளஞாயிறு போல்ஒளி வீசியது என்கிறார்.

**பெற்றோர் மக்கள் உறவு**

தாயும் தந்தையும் ஒருசேரத் தம் மக்களாய் பாசத்துடன் வளர்த்தனர், குழந்தைக்கு உணவூட்டும் தாய் பற்றிய சித்தரிப்பு நன்றிணையில் உள்ளது. தன் குழந்தை பாலுண்ண மறுக்குங்கால் சிறு கோலாய் ஓச்சும் பாசமிகு தந்தையின் செயலைப் பொன்முடியார் வருணிக்கிறார்

மணமுடிக்கு முன் செல்லமகள் தந்தையிடம் நகை கேட்டுக் கொஞ்சுவது உண்டு. மகள் விருப்பபடி தந்தை நகை செய்து போட்டு மகிழ்வது உண்டு திருமணத்திற்குப் பின்னர் தந்தை தன் செல்லமகள் குடும்ப வாழ்வின் வறுமை நீக்க முற்படுவதும் உண்டு. ஆனால் மகள் அதை ஏற்றுக் கொள்ள மறுப்பதே செம்மாந்த பண்பு என்ற கொள்கை இருந்தது. மகளின் வாழ்விற்கும் பாதுகாப்பிற்கும் தந்தை பொறுப்பெடுத்தான். அவளது இல்லற அமைதிக்கு ஊறு நேரின் அதைத் தந்தை தட்டிக் கேட்பான் என்ற கருத்தும் காணக் கிடக்கின்றன. சங்கு வளையல் கேட்டு அழுத மகளுக்குத் தந்தை பொற்றொடி, செய்து, போட்டதாகவும், அது தலைவி தன் தலைவனைப் பிரிந்து இருந்தக்கால் புறந்தார் இவளது தோள் மெலிவை உணரா வகையில் உதவியது என்றும் நற்றங்கொற்றனாரின் பாடல் சித்தரிக்கிறது.

தலைவியின் தந்தையும் தமையன்மாரும் மிகுந்த நெஞ்சுரமும் வலிமையும் வலியையும் கொண்டவர். தம் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை ஒருவன் ஏமாற்றி விட்டால். அவர்கள் கொள்ளும் சினத்தையும் அதன் வினைவாகச் செய்யும் செயலையும் யாராலும்

தடுத்து நிறுத்த இயலாது. அந்தச் சூழலைப் புரிந்து கொண்டே களவுக்குப்பின் தலைவன் திருமணம் செய்து கொண்டான் இப்போது திருமணத்திற்குப் பின்னர் அவன் புறத்தொழுக்கம் கொண்டதால் தலைவி துன்புகிறான். இச்செய்தி அவள் தந்தைக்குத் தெரிந்தால் என்ன ஆகும்? என்று தோழி பேசுவதாகச் சீத்தலைச்சாத்தனாற் பாடுகிறார்.

**அண்ணன் தம்பி உறவு:**

முந்தைய நாள் போரில் அண்ணனை ஒருவன் கொல்ல மறுநாள் போரில் தன் அண்ணனுக்காகப் பழிவாங்கத் துடிக்கும் தம்பி பற்றி அரிசில் கிழார் சுட்டிக் காட்டுகிறார்.

இன்று என் அண்ணனைக் கொன்றவன் தம்பியை நான் நாளை அழிப்பேன் என்று வஞ்சினம் கூறுவதாகவும் பாடல் அமைந்துள்ளது.

சகோதர பாசத்தைப் போர் மேற்செல்லும் வீரரிடம் காண இயல்கிறது. சங்க இலக்கியம் வீரயுகப் பாடல்களின் தன்மை கொண்டது என்ற முனைவர் கைலாசபதியின் கருத்து வலுப்பெறுகிறது.

**குடும்ப அமைப்பும் உறவுமுறையும்**

பண்டைக் காலத்தில் கூட்டுக் குடும்ப அமைப்பே பெரிதும் இருந்துள்ளது. தலைவன் தலைவி தனித்து வாழும் குடும்ப அமைப்பும் அறியப் பெறுகின்றது.

“புறநானுற்றில் பெருஞ்சித்திரனாரின் குடும்பம் கூட்டுக் குடும்ப அமைப்பைச் சித்தரிக்கின்றது.

“என் தாய் கோல் கொண்டு மெல்ல நடப்பள்; சிலந்தி வலை போலச் சுருக்கம் மலிந்த முகத்தினள். என் மனைவி வறுமையில் மெலிந்தவள். என் குழந்தை தாயின் மார்பில் பால் பெறாது வருந்துவது (புறம், 159) எனக் கூறும்போது, தாயுடன் வாழும் கூட்டுக் குடும்ப அமைப்பு அறியப்படும்.

“ மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன் ஐ யானை களத்தொழிந்தனனே” (புறம்279) என்பதில் தந்தையும் குடும்ப உறுப்பினன் என்றறியப்படும். பாட்டான் உறவுமுறை கூறும் பகுதியும் அறியப்படுகின்றன.

“ நுந்தை தந்தைக் கிவன்தந்தை தந்தை எடுத்தெறி ஞாட்பின் இமையான் (புறம் 290) என்ப் போர் வீரர் குடியில், பாட்டான் தந்தை மகன் என்று மூன்று தலைமுறைகள் நடக்கக் காணலாம்.

**கணவன்-மனைவி உறவு:**

பழந்தமிழர் இலக்கியத்தில் கணவர்-மனைவி உறவு வேறு எம்மொழி இலக்கியங்களிலும் கூறப்படாத அளவு பிரிவில்லா ஒருமைப்பட்டுடன் விளங்குவதாகக் கூறப்படுகிறது.

"இம்மை மாறி மறுமை யாயினும் நீயாகியர் நின்நெஞ்சு நேர்பவளே குறுந்தொகை விளக்கிறது. என்று தலைவி எல்லாப் பிறப்புகளிலும் நாமே கணவனும் மனைவியும் ஆவோம், என உரைக்க காண்கிறோம். " நாம் இரண்டு பேராகப் பிறந்தோம். பூ இடைப்பட்டாலும் பல ஆண்டுகள் கழித்தாற் போலத் துயருறுகின்ற அன்றில் பறவைகளென வாழ்ந்தோம். நம் உயிர் எப்போதும் பிரிவின்றி இருந்து போதும் காலத்தில் ஒன்றாகப் போவோம். (குறுந்தொகை 57) எனத் தலைவி கூறுகிறான். பண்டைக் காலத்தில் தலைமக்களின் இல்லறம் பிறவி தோறும்தொடர்வதாகவே கருதப்பட்டது.

**இல்வாழ்க்கை:**

**"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவருக்கும்**

**நல்லாற்றின் நின்ற துணை" (குறள் 41)**

இல்லறத்தில் வாழ்பவன் என்பவன் பிற அற இயல்புடைய மூத்திரதாற்க்கும் நல்வழியில் நிலையான துணையாவான். (புலியூர்கேசிகன்) (திருக்குறள்-புதிய உரை)

இல்லறத்தில் வாழ்பவனாக சொல்லப்படுகிறவன் அறத்தின் இயல்பை உடைய மூவருக்கும் நல்வழியில் நிலைப்பெற்ற துணையாவான். (மூ. வரதராசன்).

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது"**

**விளக்கம்:**

கணவன், மனைவியறுக்குள் அன்பும், பிணைப்பும், அறநெறிப்படி நிகழ்ந்து வருவதே இல்லற வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும்.

**அன்பும், அறனும் பொருந்துபவர்களாகக்**

**கண்ணகியும் கேரவலனும் உள்ளனர்.**

எனவே தான் கோவலனுக்கு "இல்லோர் செம்மல்" என்ற பட்டம் உரியதானது. எனினும் அத்திருமான நிகழ்வின் பண்பினைக் கோவலன் மறந்ததால் அவர்களின் இல்லற வாழ்வு பயனற்றுச் சென்றதைச் சிலம்பு காட்டுகிறது. இல்லறத்தில் இணைவோர் அன்பிற்குரியவராகவும், அறச் செயல்களை மேற்கொள்பவராகவும் இருப்பதோடு பிறர்மனை நோக்கா பேராண்மைமிக்க பண்பினைப் போற்றுபவர்களாகவும் இருந்தால் தான் அவ்வாழ்க்கை பயனுடைய வாழ்க்கையாக அமையும் என்பதே இதன்வழி அறியலாகும், இல்லற நெறியாகும்.

**தனிக்குடித்தனம்:**

சங்க கால வாழ்வில் மக்கள் தனிக குடித்தனம் நடத்தியதற்கான பதிவுகள் இல்லை. சிலம்பு முதல்முதலில் தனிக்குடித்தனம் பற்றிய செய்தியினைத் தருகின்றது. தற்காலத்தில் கூறப்படுவதைப் போன்று அது அப்பொழுது பொருந்தாதே செயலன்று. இங்கு இவரின்

பெற்றோரும். இணைந்தே தனிக்குடித்தனத்திற்கு ஏற்பாடு செய்கின்றனர். அதற்கான காரணம் அவர்கள் இல்லறத்தின் இயல்புகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதோடு அவர்களுக்கான கடமைகளைச் செய்யவும், பொறுப்புணர்வு மிக்கவர்களாக மாற்றவும் எனப் புரிந்துகொள்ள முடிகின்றது.

**முடிவுரை:**

மேற்கண்ட தலைப்புகளில் நாம் சங்ககாலக் குடும்ப உளவுகளும், சமூக உளவுகளும் பற்றி விரிவாகவும், தெளிவாகவும் பார்த்துள்ளோம்.

**மேற்கொள் நூல்கள்:**

நற்றிணை, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, திருக்குறள்.

திருவள்ளுவர்
கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
சூலப்புரம், எழுமலை - 625 535,

E-ISSN : 2584-1238